www.tamilarangam.net

# யுத்தத்தின் இரண்டாம் பாகம்



சக்கரவர்த்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# யுத்தத்தின் இரண்டாம் பாகம்

சக்கரவர்த்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்தத்தின் இரண்டாம் பாகம்

சக்கரவர்த்தி

வெளியீடு

EXIL (Exil Idée Littérature)
B.P.204
92604 Asnieres Cedex
France.
E-Mail- exil-inba@infonie.fr

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | |
|---|---|
| வெளியீடு | : 2 |
| நூல் | : யுத்தத்தின் இரண்டாம் பாகம் (சிறுகதைகள்) |
| நூல் உரிமை | : சக்கரவர்த்தி |
| முதற்பதிப்பு | : யூன் 2000 |
| வெளியீடு | : எக்ஸில் (N° d'enreg: 13022670)<br>B.P.204<br>92604 Asnieres Cedex<br>France. |
| பக்கம் | : 176 |
| விலை | : ரூபாய் - 65/- |
| அட்டை வடிவமைப்பு | : ஓவியர் கருணா (கனடா) |
| அளவு | : டெமி 1/8 |
| அட்டைகளில் | : 03/09/90 – காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை |
| விற்பனை உரிமை | : யாதுமாகி<br>6, பருவத சிங்கராஜ தெரு<br>திருநெல்வேலி டவுன் - 627006<br>தமிழ்நாடு |

| | |
|---|---|
| Publication | : 2 |
| Subjet | : YUTHTHATHTHIN IRANDAM PAHAM (Short stories) |
| Copy Right | : SAKKARAWARTHI |
| 1st Edition | : June 2000 |
| Publication By | : Exil Publication (N° d'enreg: 13022670)<br>B.P.204<br>92604 Asnieres Cedex<br>France<br>E-mail: exil-inba@infonie.fr |
| No. of Pages | : 176 |
| Price | : Rs. 65/- |
| Size | : Demi 1/8 |
| Paper | : N.S. Maplitho 18.6 kg |
| Printing Point | : 11 pt. Laser |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள, தமிழ், முஸ்லீம்
இனவெறிகட்கு
பலியாகிப் போனோர்க்கு...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்கரவர்த்தியிடமிருந்து...

இது "யுத்தத்தின் இரண்டாம் பாகம்." எனது பத்து வருட புகலிட வாழ்வியல் காலத்தில்தான் இவை எழுதப்பட்டாலும், அதிக கதைகள் இலங்கையை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை எமது "வீரத்தின் மறுபக்கம்" எனவும் கொள்ளலாம். புகலிட இலக்கிய சூழலில், இங்கிருந்து வரும் ஒவ்வொரு சஞ்சிகைகளும், அவற்றில் பல கொண்டிருந்தது குறுகிய ஆயுட்காலங்கள் எனினும், அனைத்தினது இருப்பும் என்றும் பேசப்படவேண்டியவை. இவ்வகையில், இத் தொகுப்பில் அடங்கும் எனது சிறுகதைகளை பிரசுரித்து ஊக்குவித்த நான்காவது பரிமாணம், பனியும்பனையும், செந்தாமரை, மஞ்சரி, காலம், மூகரம், எக்ஸில் போன்ற இதழ்களுடன் எனது பல கதைகளின் தேவையறிந்து அவ்வக்காலங்களில் மறுபிரசுரம் செய்து வரும் சரிநிகர் பத்திரிகையையும் நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

எனது புகலிட வாழ்வின் தொடக்க காலங்களில் எனை ஊக்குவித்த டி.பி.எஸ்.ஜெயராஜ், தொடர்ந்து என்னை தீவிர இலக்கிய பரப்புக்குள் காலூன்ற காரணமாயிருந்த க.நவம் (நான்காவது பரிமாணம்), 1994இன் பின் சுமார் மூன்று வருடகாலங்கள் காரணமறியா காரணங்களால் காணாமற்போய் கொண்டிருந்த என்னை மீண்டும் இழுத்துவந்து எழுதவைத்த பொன்னையா விவேகானந்தன், அதேபோல் அடிக்கடி உற்சாகமளிக்கும் சேரன், இன்றுவரை எனக்கு உற்ற நண்பனாயும் இலக்கியப் பங்காளனாயும் உடனிருக்கும் ஓவியர் கருணா என்போரெல்லாம் என்றும் என்நன்றிக்குரியவர்கள்.

இலங்கை அரசியலில் மாற்றுக்கருத்தென்பது மரணத்தை எதிர் கொள்வது என்ற அச்சம் புகலிட மண்ணிலும் யதார்த்தமாகிப் போன சூழலில், நான் கொண்டுள்ள மாற்றுக்கருத்துக்காகவே என்னை மறுதலிக்கும் நண்பர்களிடையே, எனது கதைகளைத் தொகுத்து வெளியிட முன்வந்த எக்ஸில் நிறுவனத்தினர், எழுத்துச் சுதந்திரத்தின்பால் கொண்டுள்ள துணிவுக்கும் நேர்மைக்கும் நன்றிசொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அவ்வகையில் எக்ஸில் நண்பர்களான ஜெபா, இன்பவல்லி, கற்சுறா, எம்.ஆர்.ஸ்ராலின் போன்றோருக்கும் என் நன்றிகள்.

- பூச்சியம் பூச்சியம் ஆண்டு -

கனடா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்களுடன்...

தமிழ் எழுத்து இயக்கத்தில் அதிகம் பேசப்படாத பல விடயங்களுக்கும், அரசியல், பண்பாடு... என்ற புனிதங்களை மறுக்கும் அதுசார்ந்த விவாதங்களுக்கும் பூரண களம் கொடுத்து வருகின்ற எக்ஸில் இந்த மே மாதத்துடன் மூன்றாவது ஆண்டில் நிலை கொள்கிறது.

எமது நிறுவனத்தின் முதலாவது வெளியீடாக க.கலாமோகனின் நிஷ்டை சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டிருந் தோம்.

சஞ்சிகை போன்றே எமது வெளியீடுகளிலும் ஓரநிலைப் பேனாக்களை முன்னிறுத்திவரும் நாம், புகலிட இலக்கியச் சூழலிலும் மிகக்கவனமாக கட்டமைக்கப்பட்டு வருகின்ற “சைவ, வேளாள கருத்தியல்” வேலிகளுக்கு வெளியே திமிறி எழுகின்ற படைப்பாளி

www.tamilarangam.net

யான சக்கரவர்த்தியின் "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" எனும் அவரது முதல் சிறுகதைத் தொகுதியை கொண்டுவருகின்றோம்.

கிராமியப் பேச்சு வழக்குகளை தமிழில் கச்சிதமாகக் கொண்டுவரும் ஆற்றல் கொண்டவர் என்பதற்கு சக்கரவர்த்தியின் பல சிறுகதைகள் சாட்சியமாகும். கிழக்கிலங்கை மக்களில் பலருக்கே அந்நியமானதாகக் கருதப்படும் படுவான்கரை மக்களின் மொழியையும் வாழ்வியலையும் எழுத்தாக்கியதில் இவர் குறிப்பிடத்தக்கவர். இஸ்லாமியப் பேச்சுவழக்கை எழுத்தில் கொண்டுவருவதிலும் இவர் வெற்றிகண்டுள்ளார்.

போர், புனிதம் என்ற பெருங்கதையாடலுக்குள் காணாமல்ப் போய்விட்ட மானிட விழுமியங்களை தேடமுயலும் இவரது எழுத்துக்கள் அப்பாவி மக்களின் குரலாக ஓங்கி ஒலிக்கின்ற அதேவேளை துப்பாக்கிகள் எனப்படுபவை யார் கையில் இருப்பினும் அவை செலுத்தும் அதிகாரங்களை பாரபட்சமின்றி கேள்விக் குள்ளாக்குகின்றன.

இவ்வாறாக போர்எதிர்ப்பை இலக்காகக் கொண்ட இவரது படைப்பியக்கம் தமிழ் பாசிஸ்டுகளின் இனச் சுத்திகரிப்பின் போது முஸ்லீம்கள் மீது நடாத்தப்பட்ட விரட்டியடிப்புக்கள், பள்ளிவாசல் படுகொலைகள் என்று தமிழ்தேசியம் கடந்துவந்த நிஜங்களை இலக்கியமாக்கியுள்ளதோடு தமிழ்ச் சமூகத்தினது போலி ஒழுக்க வாதத்தின் நேரடி விமர்சனமாகவும் தன்னை இனம் காட்டுகிறது.

சக்கரவர்த்தி, தேசத்தில் இருந்து யுத்த வெறியர்களால் துரத்தப்பட்டவர். அவலம் நிறைந்த நாடோடி வாழ்வில் இவரது ஆண்டுகள் பல கழிந்ததுண்டு. இந்தப் பொழுதுகளில் எழுதப்பட்ட இவரது சிறுகதைகளான புளியமரம், தழும்பு, இடறல், உன்னையே நானறிவேன், தரையிலும் மேகம், நின்னைச் சரணடைந்தேன், உன்னையே கண்ணம்மா போன்றவை இத்தொகுதியில் இடம்பெற வேண்டியவை ஆயினும் முடியவில்லை. அவற்றின் கையெழுத்துப் பிரதிகள் கூட தொலைந்துவிட்டநிலையில் 1992 ல் இவர் எழுதிய படுவான்கரையும் அதன்தொடராக எழுதியவைகளுமாக பத்து சிறுகதைகளைத் தொகுத்திருக்கின்றோம். புகலிட வாழ்வின் எத்தனையோ நெருக்கடிகளுக்குள் இந்த யுத்தத்தின் "இரண்டாம் பாகத்தை" எமது இரண்டாவது தெரிவாக வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியே.

எக்ஸில் (புகலிடக் கருத்து இலக்கியம்)
EXIL (EXil Idée Littérature)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பொருளடக்கம்


- யுத்தமும்...அதன் இரண்டாம் பாகமும் .. 11
- படுவான்கரை .. 23
- எண்ட அல்லாஹ் .. 35
- நானும் ஒகஸ்டீனாவும் ஒரு பந்தயக் குதிரையும் .. 51
- ரூபம் .. 69
- ஆடு புலி புல்லுக்கட்டு .. 81
- மனசு .. 91
- பிசாசுகளின் வாக்குமூலம் .. 101
- முதிர்கன்னி .. 114
- இறகுகள் .. 132


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"இனச்சுத்தம் இனச்சுத்தம் எனச்சொல்லி**
**சோனகரை எல்லாம்**
**ஒற்றை நாள் இடைவெளியில்**
**நாட்டைவிட்டு நாம் விரட்டியடித்தோம்**
**நாமென்ன நாசிகளுக்கா பிறந்தோம்?**
**நம் பூர்விகம் என்ன ஜேர்மனியா?"**



# யுத்தமும்...

மனிதம் நாகரீகம் அடையத் துவங்கி விட்டதாக நம்பத் துவங்கிய காலகட்டம். இக்கால கட்டத்தில்தான் இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒட்டகச் சித்தர் (19ம் சித்தர்) விஜநகரத்தில் இருந்து படகேறி நல்லூர் இராசதானி வந்து தனது ஒட்டக இலேகியத்தை அறிமுகம் செய்தார். இலேகியத்தை மூன்று பொழுதும் உண்ட இராசர் அரிபுஜ பல பராக்கிரமம் பெற்று அதி உன்னத வீரமும் அடைந்து -அதனால் மகிழ்வுற்ற இராசர் ஒட்டகச் சித்தருக்காக வடமறவர் பிரதேசத்தில் ஒட்டகப்புலம் என்று ஓர் கிராமத்தை உண்டாக்கி இலேகிய உற்பத்திக்கு ஆவன செய்து கொடுக்கப்பட்ட அதே காலகட்டத்தில் எனக்கு நல்லூர் இராசதானியில் போர்ப்பணி செய்யப்பணிக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் ஒன்றும் போர் செய்யப் பிறந்த சத்திரியனோ அன்றி முக்குல வீரனோ கிடையாது வைரவன் கோயில் பூசாரியின் மகன். வைரவர் சாமி காட்டுச்சாமியாம்.

“காட்டுமிராண்டிகளும் பள்ளரும் பறையரும் பிணம் காவிகளும்தான் அதை கும்பிட வேண்டும். இராசாக்களும் அவரை அண்டி வாழ்வோரும் மற்றும் உயர்குல வேளாளரும் வணங்குவதற்கு வேறு கடவுள்கள் உள்ளன”

என்று காஞ்சிபுரத்தில் இருந்து நல்லூர் இராசதானிக்கு சமூகம் தந்த பங்கரச்சாரிய பெரியவர் வாய் மொழிய என் ஐயனுக்கு தொழில் இல்லாமல் போயிற்று. இருந்தாலும் இராசருக்கு அகன்ற பிரபஞ்சம் போல்பரந்த மனம். அப்பாவுக்கு ஆறுதல் சொல்லி என்னைப் படையில் சேர்த்துக்கொண்டார். படை என்றதும் உடலெங்கும் வியர்த்து - கிண்ணென்றோர் பீதி பற்றிக்கொண்டது மனதுக்குள்.

“அட மட மண்டு மகனே! நம் இராசன் எந்த நாட்டின் மீதுடா படை எடுத்தான். அல்லது நம் இராசன் மீதுதான் எவன் போர் தொடுத்தான். படை என்பது நம் தேசத்தைப் பொறுத்தவரை சும்மா ஒரு சம்பிரதாயத்துக்குத்தான். சும்மா ஒரு பாசாங்குக்காக இராசாவின் தோட்டத்தை காவல் இருக்கவும் - பருத்தித்துறையிலும்- பூநகரி முனையிலும் காவல் இருக்கவும்தான் போர் வீரன் என்பவன். நீ எதற்கும் கவலை கொள்ள வேண்டியதில்லை.”

ஐயன் சொல்ல கொஞ்சம் தெம்பு வந்தது. நான் கூட சிறிது சிந்தித்துப் பார்த்தேன். ஐயன் சொல்வது நிரம்பச் சரி. பரம்பரை பரம்பரையாய் முப்பாட்டன் - பாட்டன் - மகன் - பேரன் என்று இவர்கள்தான் ஆண்டு கொண்டு இருக்கின்றார்கள். சோம்பேறி இராசாக்கள். எந்த நாட்டின் மீதும் போர் தொடுப்பதில்லை.

வன்னி இராசன்கூட அநுராதபுரம் சென்று அவ்வப்போது சிங்கள இராசாக்கள் மீது போர் தொடுப்பது உண்டு என்று வன்னி நாட்டில் இருந்து நெல் வியாபாரம் செய்யவரும் வணிகர்கள் சமயங்களில் சொல்ல கேட்பதுண்டு. வேற்று தேசத்து இராசாக்கள்கூட, ஏன் எம் இராசன் மீது போர்தொடுப்பதில்லை என தெரியாது.

பனை மரக்காட்டையும் சுண்ணப்பாறைகளையும் ஏன் கட்டியாள வேண்டும் என நினைத்தார்களோ என்னவோ.

இராசாக்கள் என்றால் மண்ணாசையும் பெண்ணாசையும் தலைக்கேறி வெறிகொண்டு அலையவேண்டும் என்பது நியதியல்லவா? பெண்ணாசையில் எப்படியோ தெரியாது. மண்ணாசை என்பது எம் மன்னருக்கு சிறு மண் அளவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடக் கிடையாது என்பது உண்மைதான்.

எங்கள் இராசன் மீது எவரும் போர் தொடுக்கப் போவதில்லை. எங்கள் இராசனும் எவர் மீதும் போர் தொடுக்கப் போவதில்லை. பயமற்று படையில் சேர்ந்து கொள்ளலாம்.
மனம் முடிவு எடுத்து விட்டது.

எடுத்த எடுப்பில் இராசாவின் தோப்பிலதான் பணிசெய்யப் பணிக்கப்பட்டது. கையில் ஒரு ஈட்டியைக் கொடுத்து தோப்பின் பின்வாயிலில் - பதின்மூன்று காவலாளிகளில் நானும் ஒருவனாய் நிற்கவைக்கப்பட்டேன். நின்றேன்...
நிற்கும் போதுதான் சிந்தனை வந்தது... போர் வீரன் என்றால் அவனுக்கு போர் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் அல்லவா. எனக்கு மட்டுமேன் போர்ப்பயிற்சி வழங்கப்படவில்லை. பக்கத்தில் நின்ற பிற காவலாளியிடம் கேட்டேன். என்னை ஒரு காட்டெருமை பார்ப்பது போன்று வெறுப்பாய்ப் பார்த்துவிட்டு விறைப்பாய் நின்றான். மாலை நேரம் சுற்றுப் பார்த்து மாற்றுவதற்காக தளபதி வரவேண்டும் அல்லவா அவரிடம் கேட்டால் தெரிந்து போகிறது.

நாம்தான் போர் செய்யப்போவதில்லையே. போர் என்பதுதான் நம் சரித்திரத்தில் கிடையாதே. பின் எதற்கு போர்ப்பயிற்சி. அதுதானே... பயிற்சி அற்ற போர் வீரனும் எதற்காக? அதுதானே... அதுதான் ஐயர் சொன்னாரே, சும்மா ஒரு சம்பிரதாயத்துக்காக என்று...

சும்மா சும்மா எதற்காக மண்டையை போட்டு உடைக்கின்றேன் என்று புரியவில்லை. உச்சிவெயில் மண்டையை பிளந்தது. உச்சிவெயிலில் ஆடாமல் அசையாமல் நிற்பது எப்படி என்றாவது பயிற்சி அளித்திருக்கலாம். தலைக்கவசம் என்னும் போர்வையில் தலையில் கவிழ்த்துவிட்ட முண்டாசுக்குள் இருக்கும் மண்டைக்குள் கிண் கிண் என்று வலி எடுத்தது. என்ன நாசமாய்ப் போன உத்தியோகமடா இது. வேண்டாம் என்று விட்டு வேறு உத்தியோகமும் பார்க்கமுடியாது. இராச குற்றமாகிவிடும். தலையைக் கிலையைக்கொய்து வீசி விடுவார்களோ என்னவோ.

தோப்பின் உட்புறம் அரண்மனைக்குள் இராசர் இந்நேரம் எது செய்து கொண்டிருப்பார். மனைவிகளுடன் தாயக்கட்டை உருட்டி விளையாடிக் கொண்டிருப்பாரோ?

இராசர் என்றால் அவருக்கு எத்தனை பெரிய பொறுப்புகள் இருக்கும். நாட்டின் முன்னேற்றம் பற்றி மந்திரிகளுடன் விவாதிக்கக் கூடும். இராச தந்திரிகளுடன் தந்திரம் பேசக்கூடும். தளபதிகளுடன் வியூகம் வகுக்கக்கூடும். அவருக்கு எங்கே தாயக்கட்டை உருட்ட நேரம் இருக்கப் போகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோப்பின் பின் வாயிலின் எதிர்த்திசையில் வண்டிநிறைய நெல் மூட்டைகளை நிரப்பிக் கொண்டு- வியாபாரம் செய்து கொண்டு நின்றார்கள் வன்னி வணிகர்கள். ஒன்றிரண்டுபேர் வாங்கிக் கொண்டு போனார்கள். மற்றய நேரம் எல்லாம் தோப்பை நோக்கிக் கொண்டும் தங்களுக்குள் ஏதோ பேசிக் கொண்டும் நின்றார்கள்.

தலைக்கு முண்டாசும் முறுக்கிய மீசையுமாய் இருக்கும் வன்னியர்களை பார்க்க அழகாய் இருந்தார்கள். பாவம் எத்தனை காததூரம் கடந்து வந்து உத்தியோகம் செய்து சம்பாதித்து மனைவி பிள்ளைகளைக்காக்க வேண்டியிருக்கிறது.

அவர்களை வேடிக்கை பார்ப்பதில் என் நேரம் ஓடிக்கொண்டிருந்தது. வன்னி வணிகர்களைத் தவிர வேறு எதையும் என்னால் கவனிக்க முடிய வில்லை... மாடுகள் இரண்டையும் நிழல் வாகை மரத்தின் அடியில் மேயவிட்டு இருந்தார்கள். அவைகள் கூட கம்பீரமாகவும் அழகாகவும் இருந்தன. வைக்கோல்கூட வன்னியில் இருந்துதான் கொண்டுவந்திருக்கிறார்கள் போலும். சட்டி, பானைகள், குடம், விளக்கு போன்றன வண்டியின் அடிப்பாகத்தில் தொங்கிக் கொண்டு இருந்தது. வியாபாரம் முடிய வீதி ஓரத்திலேயே உணவு சமைத்து உண்பார்கள் போலும். இரவில் ஏதேனும் சத்திரத்தில்தான் தூக்கமாக்கும். இவர்கள் வணிகர்கள் இல்லையோ என்கின்ற எண்ணம் திடீரெனத் தோன்றிற்று... ஏன் அப்படி தோன்றியது என சட்டென புரியவில்லை. நெடுநேரமாய் அவர்களையே கவனித்துக்கொண்டிருப்பதால் ஏற்படுகின்ற மன அதிர்வின் வெளிப்பாடோ என்னவோ. காலையில் இருந்து மதியம் வரைக்கும் எங்கள் தளபதியார் மூன்று தடவைகள் அவர்களிடம் போய் சம்பாஷித்து விட்டு வேக வேகமாய் தோப்புக்குள் பதட்டப்பட்டுக்கொண்டு போனார். நல்லூர் இராசதானியின் தளபதிக்கும் அன்னிய நாட்டு வணிகர்களுக்கும் என்ன சம்பந்தம்? இவர்கள் வணிகர்கள் இல்லை. அவர்களை இன்னும் உற்று நோக்கினேன். வாய் பேசிக்கொண்டே இருந்தது. ஆயினும் அவர்கள் பார்வை தோப்பை நோக்கியதாகவே இருக்கின்றது. வியாபாரத்தைக் காட்டிலும் தோப்பையும் சுற்றுப்புறங்களையும் நோட்டம் விடுவதிலையே நாட்டமாக இருக்கின்றார்கள். இடுப்பை வேறு அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள்.

இல்லை...இல்லை... இல்லவேயில்லை...இவர்கள் வணிகர்களே இல்லை... வேறுயாரோ இவர்கள்...வணிக வேடமணிந்த வேறுயாரோ. யார் இவர்கள்..?

இவர்களுக்கும் தளபதிக்கும் என்ன சம்பந்தம்? மனசுக்குள் திகில் பற்றிக் கொண்டது.

இங்கு ஏதோ சதி நடக்கப்போகின்றது... வன்னியர்களுடன் சேர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நல்லூர் இராசதானியின் தளபதியுமாக சேர்ந்து, ஏதோ திட்டம் போடுகிறார்கள். எங்கள் இராசர்க்கு எதிராகவோ அல்லது எங்கள் இராசதானிக்கு எதிராகவோ கெடுதல் ஏதோ செய்துவிடப்போகின்றார்கள் என்பது தெளிந்து போனது எனக்கு. எது செய்வேன் நான்... என் தேசத்தை எப்படிக் காப்பேன்...

தெய்வமே எனக்கு வீரத்தைக் கொடு... எதிரிகளை அழிக்கும் பலத்தைக் கொடு... வீரம் கொடு..! பலம் கொடு..!

உடல் எங்கும் வீர இரத்தம் கொதித்து பாய்ந்தது.. கண்ணிமைப் பொழுதில் அபாய மணியை ஓங்கி அடி அடியென அடித்தேன்...

முதன் முதலாய் இப்போதுதான் இம்மணி ஒலிக்கின்றது போலும். துருவேறி கனத்து ஒலித்தது மணிதிசையெங்கும்..

வணிக வேடதாரிகள் அபாயம் புரிந்து உசார் ஆகத்தொடங்குமுன் பாய்ந்து சென்று - ஈட்டி கொண்டு இருவரையும் பலமாய்த்தாக்கினேன்... உடல் எங்கும் வீர இரத்தம் தொடர்ந்து கொதித்துப் பாய்ந்து கொண்டு இருந்தது.. பிறகாவலாளிகளுக்கு எதுவும் புரியவில்லை.

இராசர்: மந்திரிகள்: படைவீரர்கள் என எல்லோரும் அவ்விடத்தே கூடிவிட்டனர். தளபதியாருக்கு சம்பவம் தெளிந்துவிட்டது போலும். படைவீரர்களின் முன்னால் நிற்பதற்கு பதிலாய் - மந்திரிகளின் பின் பதுங்கிக் கொண்டு நின்றிருந்தார் - என்நேரமும் ஓடித்தப்புவதற்கு வசதியாய்...

“இராசரே... இராசரே... இவர்கள் சதிகாரர்கள். இந்த வன்னியர்களும் நம் தளபதியாரும் சேர்ந்து நம் நாட்டுக்கு எதிராய் சதி செய்யப்போகின்றார்கள்...” ஆவேசமாய்ச் சொல்லி இராசரை வணங்கி நின்றேன். இராசரின் கண்கள் கோப ஆவேசத்தால் சிவந்துபழுத்தது.

“சிறை பிடியுங்கள் இவர்களை”
கட்டளை கொல்லன் பட்டறை நெருப்பாய் தெறித்தது.

“உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த துரோகத்தளபதி எங்கே...”
உறுமிக்கொண்டே இராசர் மந்திரிகளைப் பார்த்தார்.
பார்க்கும் போதே... ‘அவுக்’ என்றோர் விநோதச் சத்தம் கேட்டது. தளபதியார் முட்டுக்கால் இட்டு மெதுவாய் தரையில் சரிந்து கொண்டு இருந்தார்..
தலை ஒருபக்கம் சரிந்து தொங்கியது..
கண்கள் மேற்திசையாய் செருகிக்கொண்டு போனது.
வலதுகை குறுவாளை இறுகப்பற்றி இருந்தது...
குரல்வளையில் இருந்து குபுக்குபுக் என இரத்தம் பாய்ந்து கொண்டு இருந்தது...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளபதியார் தற்கொலை செய்து கொண்டார்.

சிறை பிடிக்கப்பட்டவர்களின் நெல்மூட்டைகளை பரிசீலனை செய்த போது முழு உண்மைகளும் தெரியவந்தன: ஓலைகள் மூலம். வன்னியர்களுடன் எங்கள் தளபதியாரும் சேர்ந்து கொண்டு பெரும் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். எங்கள் இராசரைக் கொன்றுவிட்டு வன்னியர் பிரதேசத்தை விஸ்தரிக்கப் போவதாகவும்- அகன்ற இவ்வன்னியர் பிரதேசத்தின் முழுப்படைப் பொறுப்பும் - முக்கிய முதன் மந்திரிப் பொறுப்பும் எங்கள் தளபதியாருக்கு - எங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்காக வழங்க இருப்பதாகவும் சொன்னார்கள். பிடிபட்ட ஒற்றர்கள் பழுக்கக்காச்சிய இரும்பு மலவாயுள் புகுத்தும் போது இத்திட்டத்தை செயலாக்க பூநகரிமுனை ஊடாகவும் யானை இறங்குதுறை ஊடாகவும் நெல் வணிகம் செய்பவர்கள் போல் எழுபத்தி ஒன்பது ஒற்றர்களும்- நெல் மூட்டைக்குள் பதுக்கப்பட்ட வேல், ஈட்டி, வீச்சரிவாள், நான் முனை நீள் கூர்வாள் போன்ற அதிபயங்கர போர் ஆயுதங்களுடன் முன்னூறு போர் வீரர்களும் நாட்டுக்குள் ஊடுருவியிருக்கின்றார்கள் என்கின்ற சேதி தளபதியாரின் இடுப்பில் பதுக்கப்பட்ட ஓலையில் படித்ததும் இராசர் கதிகலங்கிப்போனார். எங்கும் ஒரே கொந்தளிப்பு. நாடு முழுவதும் பதட்டம்.

தளபதி இல்லாப் படையால் எது செய்வது என்று தெரியவில்லை. இராசர் என்னை அர்த்தமாய்ப்பார்த்தார். செய் ஏதாவது செய்... எம் தாய்மண்ணை வன்னியரிடம் இருந்து காப்பாற்று... என்பதாய் இருந்தது அப்பார்வையின் அர்த்தம். அந்நிய எதிரிகள் நாட்டுக்குள் ஊடுருவியிருக்கும் சேதி நாலாதிக்கும் தண்டோரா போட இராசர் முன் நான் கட்டளை இட்டேன். தண்டோரா போட மக்கள் உசாரானார்கள். மக்களும் போர்வீரர்களுமாய் சேர்ந்து பூநகரி முனையையும் யானை இறங்கு துறையையும் மறித்துக்கொண்டு தேசம் முழுக்கத் தேட அத்தனை வன்னியர்களும் சிறைபிடிக்கப்பட்டனர்...

யானை வந்து மாலை போடாமலேயே இராசர்க்கு நிகராய் ஆனேன் நான். நாட்டைக்காத்த புலி என்றும் மாவீரன் என்றும் நாடுமுழுக்க நான்பேசப்பட்டேன்.

தோப்புக்கு உடனே வரும்படி இராசர் எனக்கு சேதி அனுப்பினார். ஓய்வு நாளில் இருக்கும் எனக்கு எதற்காக இராசர் அழைப்பு விடுகின்றார் என தெளிவாகவில்லை. போர் வீரனுக்கு எதற்கு ஓய்வு? ஓடிச் சென்று இராசர் முன் நின்றேன். சபை கூடியிருந்தது. அர்த்தமில்லாத சமயத்தில் எதற்காக இராசர் சபையைக் கூட்டியிருக்கின்றார்? பிடிபட்ட வன்னி தேசத்து எதிரிகளுக்கு மரண தண்டனை கொடுப்பதைப்பற்றி விவாதித்துக் கொண்டு இருக்கின்றார்களோ என்னவோ?

“வாரும் தளபதியாரே..”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராசர் அரியாசனம் விட்டு எழுந்து நின்று எனை வரவேற்பது எனக்கு அந்நியமாகத் தோன்றியது. அசூசையாகவும் இருந்தது. நான் தளபதியா? இராசர் என்னை அழைத்தாரா?
திக்கித்திணறி, உமிழ்நீர் விழுங்கி தடுமாறி நின்றேன்.

"வாரும் தளபதியாரே."
இராசர் மீண்டும் அழைத்தார்.

இராசரையும் சபையோரையும் வணங்கி நின்றேன்.

"என்னை நீங்கள் தளபதி என விழித்து கேலிபேசுகின்றீர்கள்."
சபையோரையும் இராசரையும் பார்த்துப்பேசி வெட்கப்பட்டேன்.
"இல்லை நீங்கள்தான் இனி எம் நல்லூர் இராசதானியின் தளபதி."

இராசர் உறுதியாய்த்தான் சொன்னார். ஆனாலும் முதன் மந்திரி மட்டும் முகத்தை வேறுதிசை திருப்பிக்கொண்டு இருந்தார்.

எனக்குக்கூட தளபதியாவதில் சற்றேனும் ஒப்புதல் இல்லை. தளபதி என்பது பெரும் பொறுப்பு. ஹிருதயம் படபடத்து துரிதமாய் துடித்தது.

"நான் பயிற்சி அற்றவன். யுத்த தந்திரங்கள் கற்றறியாதவன். நான் எப்படி படையை முன் எடுத்துச் செல்வது? வெறும் படை வீரனாகவே இருந்து விடுகின்றேனே... இராசர் என்னை தயவு கூறவேண்டும்."
என்ன பயம் எனக்கு. பௌவியமாகச் சொல்லி கைகட்டி நின்றேன்.

இராசர் புன்னகைத்துக் கொண்டே அரியாசனத்தில் அமர்ந்தார். பின், இடிபோல சிரித்தார். தோப்பே ஆடி அதிர்ந்தது. சிரித்தார். சிரித்தார். நெடு நேரமாய் தோப்பதிர சிரித்தார். நெடுவினாடி கடந்து சிரிப்படங்க அரியாசனம் விட்டு எழுந்து வந்து என் தோள்களை தட்டிக் கொடுத்தார்.

"இதுதான்... இந்த அடக்கம்தான் தேவை மாவீரனுக்கு. தளபதியாரே நீர் எந்த பயிற்சி பெற்று வன்னிநாட்டு எதிரிகளை சிறைபிடித்து வன்னியனின் நயவஞ்சக சூழ்ச்சியை முறியடித்தீர்? எவ்விடத்தில் யுத்த தந்திரம் கற்று-கூட இருந்து குழிபறித்த எம் கூட இருந்த வஞ்சக நரியிடம் இருந்து எம் நாட்டைக் காத்தீர்? புத்தி...புத்திதான் தேவை. உடல் பலத்தைக் காட்டிலும் மூளை விவேகம்தான் முக்கியம். உம்மிடம் வீரமும் உண்டு விவேகமும் உண்டு. நீர்தான் இனி இவ் அகன்ற நல்லூர் இராசதானியின் முதன்மைத் தளபதி. இது இராச கட்டளை"

இறுதியாய் இராசர் உறுதியாய் குரலுயர்த்திச் சொன்னார். ராசரின் கட்டளையை எப்படி மீறுவது. நான் தளபதியானேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தளபதியான நான் முதற்கட்டமாய் யானை இறங்கு துறைக்கும் பூநகரி முனைக்கும் படைகளை கொண்டு குவித்து- எங்கள் தேசத்தின் நுழைவாயில் எல்லையை பலப்படுத்தினேன். சூட்டோடு சூடாய் ஒற்றர்களை வன்னியர் பிரதேசம் எங்கும் அனுப்பினேன்-ஊரில் உழாத மாடுகளை வன்னிக்கு கொண்டு செல்லும் உழவன் போர்வையில். இராசர் புளகாங்கிதம் கொண்டு எனை வாழ்த்தி பாடல் பாட புலவர்களுக்கு கூட பொன்முடி வழங்கினார். நாட்கள் செல்ல.. செல்ல ஒற்றர்களின் இரகசிய ஓலைகள் வர ஆரம்பித்தன...

* வன்னியன் அடிபட்ட புலியாக இருக்கின்றான். எந்நேரமும் எம்மீது யுத்த தர்மத்தை மீறிய பேடியுத்தம் நடத்தலாம்.

* இப்போதும் அவர்கள் நாகரீகம் அடையாமலேயே இருக்கின்றார்கள். காட்டு மிராண்டிகளாகவும் - உடல்கறுத்தும்-காட்டில் வாழ்வதால் யானைபலம் கொண்டும் இருக்கின்றார்கள். சில சமயம் ஒட்டகச் சித்தர் நல்லூர் இராசதானி வரும் முன்பு இங்கு இருந்திருக்கலாம்.

* இப்போதும் நாகபாம்பு, வைரவன், ஐயனார் போன்ற இழிசாதி தெய்வங்களைத்தான் தொழுகின்றனர். 'சாதிவேறுபாடு' தெரியாதும்- 'உயர்ந்தவன் தாழ்ந்தவன்' என்கின்ற வேறுபாடு தெரியாதும் அறிவிலிகளாக இருக்கிறார்கள்.

* நம் இராசரால் விரட்டியடிக்கப்பட்ட இழிகுல சனக்கூட்டம் வன்னியின் மேற்கு கரையோரமாய் செம்படவ தொழில் புரிந்து பிழைப்பு நடத்துகின்றார்கள்.

* சில ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கல்லில் இருந்து மத வியாபாரம் செய்ய வந்த வெள்நிறதோல்காரர்கள். நம் இராசர் கூட எம் தேசத்துக்குள் நடமாடக்கூடாது என தடை விதித்தாரே... அதே போர்த்துக்கேயர்கள் அவ் இழிகுல மக்களை கத்தோலிக்கர்களாக மதம் மாற்றிவிட்டார்கள்.

* நம் மதத்தை போல் அல்லாது அவர்கள் மதம்: எக்குலமக்களாயினும் ஆலயத்துக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். கத்தோலிக்கர்களின் தெய்வமான யேசுசாமியை இழிகுல மக்களும் தொட்டு தடவி வணங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

இராசரின் கண்கள் கோபத்தால் சிவந்து பழுத்ததாம். நான் ஒதுக்கி விரட்டியடித்த இழிகுல நாய்களும் - தடை செய்த வெண்நிற மாடுண்ணும் பறங்கியனும் கூட்டுச் சேர்ந்திருக்கின்றார்களா? இழிகுலத்தான் உயர் நிலை கொள்கின்றானா?
இராசர் கர்ஜித்தாராம் வெறி கொண்ட காட்டு இராசாபோல்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பூநகரிமுனையில் வன்னியர்களின் ஊடுருவலை கண்டறியவும் படையணியின் உசார் நிலையை பரிசீலிக்கவும் எல்லையில் முகாமிட்டிருந்த எனக்கு அவசர ஓலை வந்தது. காலம் தாமதியாது துரிதகதியில் தோப்புக்கு வரும்படி. இராசர் தன்கைப்பட எழுதியிருந்தார். என்ன அவசரமோ என எண்ணிக்கொண்டே அன்றைய தினமே தலை நகரம்போனேன்.

இராசர் கோபமாய் வாயிலை விறைத்துப்பார்த்துக்கொண்டு - கால்மேல் கால்போட்டுக் கொண்டு அரியாசனத்தில் அமர்ந்திருந்தார். காஞ்சிபுரத்தில் இருந்து விஜயம் செய்த பங்கரச்சாரிய பெரியவரும் ஓட்டகச் சித்தரும் இராசருக்கு அருகருகே சரியாசனத்தில் அமர்ந்திருந்தனர்.

இடது புறமாய் மந்திரிகளும் பிரதானிகளும் அமர்ந்திருக்க-வலது பக்கமாய் பூணூல் பூண்ட பிராமணர்களும் பிரமை பிடித்ததுபோல் அமர்ந்திருப்பது விநோதமாய்த் தோன்றியது. எங்கள் இராசரின் சபையில் பிராமணர்களுக்கு இடம் இல்லையே. பாரதகண்டத்தில் தானே பிராமணர்களும் இராசசபைக்குள் அனுமதிக்கப்படுவதும் இராசரால் மதிக்கப்படுவதும். காஞ்சிபுரப் பெரியவர் இராசருக்கு எதையும் புதிதாய் புகட்டினானோ! இராசருக்கு மரியாதை செய்து வணங்கி காத்து நின்றேன். இராசர் கோபமாய் எனைப் பார்த்துக் கொண்டே இருந்தார். மந்திரிகளும்கூட இறுக்கமாய் மௌனித்திருந்தனர். எனக்கேதும் புரியவில்லை. என் மீதுதான் ஏதேனும் தவறோ? நெடுவினாடிகள் கரைந்தோடியது. நான் அசையாது நின்றிருந்தேன்.

“வன்னியின் மேற்குக்கரையோரமாய் என்ன நடக்கிறது...?”
இராசர் உறுமினார்?

“இனச்சுத்தம் கருதி தங்களால் விரட்டியடிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சனக்கூட்டம் அங்கு மீன் பிடித்து வாழ்வதாக ஒற்றர்கள் சொன்னார்கள்.”

“அது மட்டும்தான் ஓலையில் உள்ளதா?”

“அவர்கள்: பறங்கியர்கள் சொல்கேட்டு கத்தோலிக்க மதத்தைத் தழுவி விட்டதாகவும் சமூகநிலை உயர் வடைந்து விட்டதாகவும்...”
முழுதாய் முடிக்காது பொருளுரை மட்டும் உரைத்து முடித்தேன்.

“அங்கு பாரும் தளபதியாரே...”
இராசர் அரியாசனத்தில் இருந்து எழுந்து நின்று சுட்டிக்காட்டிய திசையில் பிராமணர்கள் திருதிருவென விழித்துக் கொண்டு இருந்தார்கள். நான் பார்த்ததும் இராசர் மறுபடியும் அரியாசனத்தில் அமர்ந்து கொண்டார்.

“போர்த்துக்கேயரின்-கத்தோலிக்கர்களின் கொட்டம் தாங்கமுடியாமல் மனம் நொந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போய் இப்பிராமணர்கள் எம்மிடம் வந்திருக்கின்றார்கள். நாம் இவர்களுக்காக என்ன செய்யப்போகின்றோம். எம் மதத்தை எப்படிக் காப்போம்?"
இராசர் என்னிடம் கேட்டார்.

"தனக்கு அமைதியும் நின்மதியும் தரும் மதத்தை ஒருவன் தேர்ந்தெடுப்பது மனித உரிமைகளில் ஒன்று"
நான் சொல்ல இராசர் எனை வெறித்துப்பார்த்தார்.

ஒட்டகச்சித்தர் சடைபற்றிய தலைமுடியை ஒருகையால் உருட்டிக் கொண்டும் மறுகையால் சாடியில் இருந்து கருநிற வஸ்த்துவை சிறிது கிள்ளி எடுத்து சிறு உருண்டையாய் உருட்டி இராசரின் கையில் கொடுக்க - அதை வாங்கி கடைவாயுள் குதப்பிக் கொண்டு இன்னும் கோபமாய் இராசர் எனைப் பார்த்தார். காஞ்சிபுர பெரியவர் இராசரின் காதில் ஏதோ குசுகுசுத்தார். இராசர் தலையயாட்டினார். குசுகுசுப்பை ஆமோதிப்பதாய் இருந்தது இராசரின் உடல் மொழி.

"இழிகுலத்தான் உயர்குலத்துக்கான அந்தஸ்துப் பெறுவதும்- சமூகநிலை உயர்வடைவதும் மகாபாவம். கீதை ஒருபோதும் இதை அனுமதிக்காது என பெரியவர் கவலைப்படுகின்றார்."
எனைப் பார்த்தும், மந்திரிகளைப்பார்த்தும் இராசர் சொல்ல அத்தனை பிராமணர்களும் தலையசைத்து ஆமாம் என்றனர். மந்திரிகளின் அர்த்தமான மௌனமும் இராசரின் பேச்சுத்தோரணையும் விபரீதமாய் எதையோ உறுத்தியது. சபை ஏற்கனவே அசம்பாவிதத்துக்கான விடயத்தை தீர்மானித்துவிட்டது என்பது புரியலானது.

"தாழ்ந்திருப்பவன் உயர்வது பாவம் அல்ல வணக்கத்துக்குரிய இராசரே. கோபுரம் கட்டி வாழ்பவன் குப்பைமேட்டு ஆண்டியாவதும் - ஆண்டி அரசாட்சி புரிவதும் காலத்தின் தீர்ப்பு. இதில் நாம் ஆத்திரப்படுவதில் அர்த்தம் இல்லை."

"தளபதிவாள்! மனுவின் நீதி தெரியாமல் பேசுறேள்"
காஞ்சிபுர பெரியவர் முதற்தடவையாய் வாய்திறந்தார்.

"தளபதியாரே..."
இறுக்கமாய்... மென்குரலாய் எனை விழித்தார் இராசர். நேரியபார்வையாய் அவரை நோக்கினேன்.

"இராசசபை முடிவெடுத்து விட்டது, கத்தோலிக்க மதத்தைத் தழுவிய சகலரும் கொல்லப்பட வேண்டும் என இராசசபை ஏற்கனவே முடிவெடுத்துவிட்டது தளபதியாரே."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராசர் சொல்லச் சொல்ல என்னில் திகில் பற்றி எரிந்தது. ஹிருதயம் அறுந்து போகின்றது போன்று துடிதுடித்துக் கொண்டது. என்ன நியாயம் இது. போக்கணம் கெட்ட நீதியை எழுதிய மனு என்பவன் யார்? எந்தப் பாதகி பெற்றுப் போட்டாள் இந்த மனு நீதியை எழுதிய கொடும் பாதகனை. தான் எந்த சாமியைத் தொழவேண்டும் என்பதுவும் - அவன் உயர் நிலையை அடைவதும் எப்படி பாவம் ஆகிடமுடியும். நேற்று முன் தினம் வந்த ஒற்றன் சொன்னானே. குழந்தைகள்: பெண்கள்: முதியவர்கள் என்று மூவாயிரத்துக்கும் மேல் யேசுசாமியை வணங்குபவர்கள் இருக்கின்றார்களாமே. அத்தனை ஆயிரம் கத்தோலிக்கர்களையும் அரிந்து அரிந்து குவிக்க வேண்டும் என்பது என்ன கொடுமை. குழந்தைகள் மட்டுமே ஆயிரம் எண்ணிக்கை தாண்டுமே. கிறிஸ்தவக் குழந்தைகளின் கழுத்தை அரியப்போகும் சங்கிலியனின் வாள்களால் இந்துசமுத்திரம் சிவந்து போகப்போகிறதே.

“இராசர் மன்னிக்க வேண்டும். நாம் அவர்களுக்கு எதுவித சமூக உயர்வு கொடுக்காததும்- இந்துக்கோயில்களுக்குள் அவர்களை அனுமதிக்காததும் நம்குற்றம். அது மட்டுமல்லாது அவர்களை விரட்டியடித்ததும் நம்குற்றமே. அவர்கள்மேல் கோபமோ தாபமோ கொள்ள நமக்கு உரிமையில்லை என்பது என்பணிவான கருத்து.”

“தளபதியாரே...”

நான் சொன்னதைக் கேட்டு இராசர் உறுமினார். ஒட்டகச்சித்தர் இன்னோர் உருண்டையை உருட்டி இராசரிடம் கொடுத்தார்.

“நான் அப்போதே சொன்னேன்: முட்டாள்கள்தான் போரிடத்தேவை என்று. இராசர் என் பேச்சைக் கேட்கவில்லை.”

முதன்மை மந்திரி முணு முணுத்தார்.

“நீர் யாரிடம் உரைக்கின்றீர் என்று தெரிந்துதான் உரைக்கின்றீரா?”

இன்னோர் மந்திரியார் உணர்ச்சிவசப்பட்டார்.

இனியும் நாம் வாதம் செய்தால் தப்பானகாரியத்தில் வந்து முடிந்துவிடும். அதுமட்டுமன்றி இராச குற்றபட்டம் வேறு பரம்பரை பரம்பரையாய் வழிநெடுக வந்துவிடும்.

“மேன்மை பொருந்திய இராசரே. நான் ஒருபக்க நியாயத்தைச் சொன்னேன். அது தவறு என இராசரும் சபையோரும் பெரியோரும் உணர்ந்தால் மன்னிக்க வேண்டும். இராசரே... உங்கள் மைத்துணரான கனகராய முதலியார்தான் பிரான்ஸிஸ் சேவியர் என்கின்ற கத்தோலிக்க குருவுடன் சேர்ந்து இத்தனைபேர் மதம் மாறக் காரணம் என்று நேற்று வந்த ஒற்றன் வாய்வழியாய்ச் சொன்னான்..”

நான் சொல்ல மன்னர் சிறிது தடுமாறினார். இடது புறமாய் அமர்ந்திருந்த பிராமணர்களும் ஆமோதித்து தலையசைத்து விட்டு இராசரின் தடுமாற்றத்தைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்து இலேசாய்ப் பயந்தது போன்று இருந்தனர்.

தன்வீட்டுக்குள்ளேயே பேடி இருக்கின்றான் என்பது சகலருக்கும் தெரிந்துவிட்டது என்பதைத் தெரிந்த இராசர் சங்கடமாகித்தான் போனார்.

“அந்த பேடியை நான் இங்குவைத்தே கொண்டிருக்க வேண்டும். பறங்கியர்களுடன் உறவாடித்திரிகின்றான் என்பதைக் கேள்வியுற்றதும் கழுவில் ஏற்றியிருக்க வேண்டும். அவனுக்கு மன்னிப்பு வழங்கியது தவறென இப்போதுதான் புரிகிறது.” இராசர் உண்மையில் கவலைப்பட்டார்.

“மேன்மை பொருந்திய இராசரே... சொல்லுங்கள் எது செய்ய வேண்டும் கட்டளைக்கு காத்திருக்கின்றேன்.”
மன்னர் புன்னகைத்தார். அவர் முகம் வியர்த்திருந்தது.

மதம் மாறிய - உயர்நிலையடைந்த இழிகுலத்தோர் எல்லோரையும் சிறுபிள்ளை முதியவன் உட்பட சகலரையும் வாள்கொண்டும் ஈட்டி கொண்டும் கொன்றழிக்க வேண்டும். இது இராசகட்டளை”
இராசர் கட்டளை இட மந்திரிமார் எழுந்து நின்று உயரக்கை உயர்த்தி நின்றனர். இராசகட்டளை பிரஸ்தாபிக்கும்போது இப்படி செய்வது வழமையாக்கும்.

“இராசருக்கு முதலில் ஓர் சேதி தெரிவிக்கவேண்டும். போர்த்துக்கேயர்கள் துப்பாக்கி என்கின்ற - நெருப்பும் ஈயமும் துப்புகின்ற ஒருவித போர்க்கருவியை வைத்திருக்கின்றார்கள். போர்த்துக்கேயரின் காவல் இருக்கும் வரை நாம் அவர்களை நெருங்க முடியாது. அது போன்ற ஆயுதம் எமக்கு இல்லாத பட்சத்தில் நாம் அங்கு சென்று போரிடமுடியாது.”
நான் என் கவலையைச் சொல்ல இராசர் அர்த்தமாய்ப் புன்னகைத்தார்.

“ஒற்றனின் கடைசி சேதி உமக்கு கிட்டவில்லையா தளபதியாரே?”
கேட்டுவிட்டு விநோதமாய் இராசர் எனைப்பார்த்தார். சொற்பவினாடி மௌனத்தின் பின் தொடர்ந்தார்.

“யேசுவின் பிறந்தநாள் மார்கழியில் வருவதால் எல்லா பறங்கியரும் அந்தநாளை கொண்டாட கோவா நகருக்கும் போர்த்துக்கல் தேசத்துக்கும் சென்று விடுவார்கள்” இராசர் சொல்லி முடிக்கும் முன்பாகவே மனம் வியூகம் வகுக்கத் தொடங்கி விட்டது.

அர்த்த நடு நிசி...யேசுசாமி கோயில்... யேசுசாமியின் பிறப்பை வேண்டி எல்லோரும் கண்மூடி பிரார்த்தனையில் இருப்பார்கள்... மெழுகுவர்த்தி தவிர வேறு வெளிச்சம் இருக்காது... மார்கழி மாத கும்மிருட்டு... அந்நேரம் வாள் கொண்டும் ஈட்டி கொண்டும்... இராச கட்டளையை நிறைவேற்ற நடு நிசியும் வணக்கஸ்தலமும் உகந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உசிரோட எண்ட புள்ளய தந்திருங்க சாமிமாரே**
**உசிரும் மசிரும் ஒங்களுக்கு ஒண்டுதான்**
**எண்ட புள்ளதாண்டா பாதகனுகளே**
**எனக்கு உசிரு.**



# படுவான்கரை

மெலிதான காற்று மரங்களை அசைக்க இரைச்சல் எங்கும் எழுந்தது. நீண்டநேரத்திற்கு முன்பாகவே உஷ்ணம் சூழலை விட்டு வெளிநடப்புச் செய்திருந்தது. சொறி நாய் ஒன்று சும்மா சும்மா ஊளையிட்டு எரிந்த குப்பைமேட்டுச் சாம்பலுக்குள் ரோமங்கள் உதிர்ந்து போன உடலைப் புரட்டி சிலிப்பிற்று. கடத்தி கம்பிகளை காவுகொடுத்துவிட்டு நீட்டுநீட்டு கறுப்புப்பூதங்களாக மின்சாரக் கம்பங்கள். ஆக்காண்டி பறவை ஒன்று திசையைத் தொலைத்துவிட்டு அங்குமிங்குமாய் அவசரஅவசரமாய் பறந்து கத்திற்று. முகம் தெரியாத இருட்டு. ஊர் உறங்கி நெடுநேரமாகி இருந்தது.

சரசுவதி வேகமாய் ஓடி ஓடி நடந்தாள். அவளது கண்களுக்கு இருட்டு பழக்கப்பட்டிருந்தது. இதயம் சமநிலை தவறி வேகமாய்த் துடித்தது. அதைவிட சரீரம் அதிகமாய்ப் படபடத்தது. கைக்குழந்தை இடுப்பினில் நிகழ்வுகள் புரியாமல் தூக்கமும் விழிப்புமாகச் சிணுங்கியது. எட்டு மாதப் பிள்ளை வயிறு அதிகமாய் சுமை கொடுத்தது.

வேலியை இணைத்து மூடியிருந்த தகரக் கதவைத் திறக்க சத்தம் பலமாய் எழுந்தது. தாழ்வாரத்தில் மடுத்தோண்டி படுத்திருந்த வீமன் சத்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்டு பலமாய் உறுமியது.

“வீமா...”
சரசுவதி சத்தம் எழுப்பினாள்.

தனக்குப் பழக்கமான குரல் என்பதை புரிந்துகொண்டு உறுமலை அடக்கிக் கொண்டு முனகலுடன் ஓடிவந்து அவள் காலை உரசியது. ஒரு தடவை எம்பி அவள் மேல் தாவி விசுவாசத்தைக் காண்பித்தது.
சரசுவதி அதை ஒதுக்கிவிட்டு கதவைத் தட்டினாள்.

“அம்ம...!”
நிசப்தம்.

“அம்ம... அம்மேய்...”
வீட்டுக்குள் சரசரப்புக் கேட்டது.

“ஆரது...?”
தூக்கக் கலக்கமாய் குரல் கேட்டது.

“அது நான்தாங்கா சரசி! கதவ தெறகா...”
கதவு திறபட்டது. எண்ணைப் பசை இல்லாத பிணைச்சலில் உராய்வுச் சத்தம் இம்சையாய் எழுந்தது. கலைந்த தலையுடன் குலைந்த சேலையை இழுத்து இடுப்பில் செருகிக்கொண்டே குப்பி விளக்குடன் கிழவி கதவுக்கு வெளியே வந்தாள்.

“என்ன மெனை இந்த நடுஊத்தில? அதுவும் புள்ள வகுத்துக்காரி. புள்ளையயும் தூக்கித்து வந்திரிக்காய். எங்க புள்ளையிர அப்பன்?”
கிழவி முகத்தில் பரபரப்பு. படபடப்புடன் கேட்டாள்.

“புள்ளைய ஒள்ளம் புடிகா”

“வா மெனேய்”

கிழவி சரசுவதியின் இடுப்பிலிருந்த குழந்தையை தனது இடுப்புக்கு மாற்றிக் கொண்டாள்.சரசுவதி இடுப்பைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் பாரமாய் அமர்ந்தாள். கேவலுடன் அழுதாள்.
கிழவி திகைத்தாள்.

“என்ன மெனேய். ஏன் கொளறுறா வகுத்துக்க நோகுதா? புள்ளையிர அப்பனிட்ட சொல்லி அனுப்பியிரிக்கலாமே. நான் வந்திரிப்பன். உள்ளுக்க வா. சுடுதண்ணிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெச்சித்து நேசி மனிசிய போய்க் கூட்டித்து வாறன். அந்த நாசமறுவாளும் வாறாளோ தெரியாது. நேரத்தோடையே காச கேப்பாள்."
கிழவி சொல்லிக் கொண்டே இடுப்பிலிருந்த குழந்தையை படுக்க வைத்துவிட்டு சரசுவதியை கைத்தாங்கலாய் தூக்க முனைந்தாள்.

"எனக்கு ஒண்டுமில்லகா"
சொல்லிக்கொண்டே முந்தானைத் தலைப்பால் மூக்கில் ஊறிய நீரைத் துடைத்தாள்.

"அவரப் பொடியனுகள் புடிச்சித்து போறானுகள்." சொல்லிவிட்டு சரசுவதி பலமாய் அழுதாள். கிழவி விறைத்துப் போனாள். எதையுமே பேசமுடியாமல் திகைத்துப் போய் நின்றாள்.

"புள்ளையாக் கெழவா" பலமாய் கிழவி சத்தமிட்டாள்.

"காப்பாத்துப்பா...!"
தலைமேல் கை தூக்கி வேதனையாய் வேண்டினாள். பின் அவளும் அழுதாள். கிழவியின் அழுகை சரசுவதியை மேலும் பலயீனப்படுத்தியது. சரசுவதி இன்னுமின்னும் கவலையுடன் அழுதாள். கிழவி அனுபவசாலி. அதிகம் வாழ்ந்தவள். சரசுவதியின் நிலமை புரிந்து தன்னை சுதாகரித்துக் கொண்டு மெல்ல அடக்கினாள்.

"ஏனாம் மெனேய் புடிச்சித்துப் போறானுகள்?"

"எனக்கென்ன தெரியும். என்னவோ வெளங்கோணுமாம்!" விக்கிவிக்கி சரசுவதி சொன்னாள்.

"நாசமாய்ப் போவானுகள்"
கிழவி மண்ணை அள்ளி கிழக்கு மூலைப்பக்கமாய் வீசினாள்.

"இவனுகள் நம்மளை வாழவும் உடமாட்டானுகள். சாகயும் உடமாட்டானுகள்."
கோபமும் சோகமும் கிழவியை ஏகமாய்த் தாக்கியது.

வீமன் முதுகில் கடித்த தேள் ஒன்றை முன்பல்லால் கடித்தது. தேள் இடம் மாறிப் பலமாய்க் கடிக்க தரையில் ஒரு தடவை புரண்டு எழும்பியது. வேலிக்குள் எதுவோ சரசரக்க ஓடிப் போய் வேலி மட்டையை காலால் பிறாண்டியது. வேகமாய் ஓடிவந்து திரும்பவும் குந்திக் கொண்டது.

வீட்டின் பின் பக்கம் இருந்த கூமாமரத்தில் பறவை ஒன்று சலனம் எழுப்பியது. சில விநாடி மௌனத்தின் பின் ஆந்தை ஒன்று கூமாமரக் கிளையிலிருந்து பலமாய் அலறியது. கூமாமர ஆந்தையின் அலறல் கேட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கோ இருந்து இன்னொரு ஆந்தை விநோதமாய் அலறியது. சரசுவதியின் முகம் பயத்தால் வெளிறியது. ஊருக்குள் ஆந்தை அலறினால் அவசரமாய் ஒரு மரணம் நிகழும் என்னும் கிராமத்து ஐதீகம் உடனடியாய் மூளைக்குப் போயிற்று. சரசுவதிக்கு கண் இருட்டுவது போல் இருந்தது. வியர்த்தது. அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டாள்.
"என்ன மெனேய் ஊமத்தம் கோழி கத்துது."
சரசுவதியைவிட கிழவி அதிகம் பயந்தாள்.

"எனக்குப் பயமா இரிக்கி கா." சரசுவதியின் குரல் நடுங்கியது.

"அந்த நரகல் சும்மா கத்துது. அதுகளுக்கு இண்டைக்கு எரை கெடைக்கல்ல போல. அதுதான் ஊருக்குள்ள வந்து கத்துதுகள்."

கிழவி சரசுவதியை சமாதானப்படுத்த முயன்றாள். ஆனாலும் சரசுவதியைவிட அவள்தான் அதிகம் ஆந்தையின் அலறலால் கலவரம் ஆனாள். காக்கைகள் வாசலில் வட்டமிட்டாலே கஸ்டகாலம் என்று கலவரமடைபவள். ஆந்தை அலறினாலோ அதிகம் ஆடிப்போபவள். இப்போது அடக்கிக் கொண்டு தனக்குள் மட்டும் அல்லோலப் பட்டாள்.

இல்ல, நீ சும்மா சொல்றா. ஊமத்தக்கோழி ஊமுனா ஆக்கள் சாகிற எலுவா? எனக்குப் பயமா இரிக்கி. சொல்லிவிட்டு சரசுவதி பலமாய்ச் சத்தம் போட்டு அழுதாள்.

"நான் என்ன மெனேய் செய்ய?"

"கண்ணா காட்டுப்பக்கம்தான் கூட்டித்துப் போறானுகள். வாகா போய்ப்பார்ப்பம்." சரசுவதி அழைத்தாள். ஏக்கமாய், கவலையாய் கிழவியின் முகத்தைப் பார்த்தாள்.

"கொப்பனும் இல்ல. போடியாற்ர வெள்ளாமைக்கு காவலுக்குப் பெயித்தாரு. இந்தப் புள்ளய ஆரிட்ட உட்டுத்துப் போறது?"
கிழவியில் கவலை ஏறிக்கொண்டது.
சரசுவதி எழுந்து கிழவியை கையால் தள்ளி விலத்தினாள்.

"வெல நான் தூக்கிறன். நீ வா!" சொல்லிக் கொண்டே எதுவுமே உணராமல் தூங்கும் குழந்தையை சரசுவதி நெருங்கினாள்.

"இல்ல மெனேய் நீ புள்ளவகுத்துக்காறி. நான் தூக்கித்து வாறன்"
சரசுவதியைக் கிழவி தடுத்தாள்.

"ஒள்ளுப்பம் பொறு. அரிக்கன் லாம்ப பத்த வைச்சித்து வாறன். அதுக்குள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லாம்பெண்ணையும் இரிக்கோ தெரியாது"
சொல்லிக்கொண்டே கிழவி இருட்டுக்குள் போய்த்தடவினாள். பாரமான சட்டியில் கால் அடிபட்டது. கால் இடறி வலித்தது. சருவச்சட்டி தன் பங்குக்கு ஓசையை எழுப்பிவிட்டு மெல்ல அசைந்தது. கிழவி வலியை அடக்கிக் கொண்டு அரிக்கன் லாந்தரைத் தேடினாள். பழைய சாமான்களுடன் பறண் மேல் கிடக்க கையால் கண்டுகொண்டாள். லாந்தரை எடுத்து தூசிதட்டி பற்றவைத்தாள். திரி பற்றிக்கொண்டது. அடியில் கொஞ்சமாக எண்ணை இருந்தது.

"இன்னா லாம்ப புடி. நான் புள்ளைய தூக்கித்து வாறன்"
சரசுவதியிடம் அரிக்கன் லாந்தரைக் கொடுத்துவிட்டு கிழவி தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை தூக்கி இடுப்பில் வைத்தாள். தூக்கம் கலைய குழந்தை சிணுங்கியது.

"கத்தாத மெனேய்"
கிழவி சொல்ல அதை குழந்தை கிரகிக்க முடியவில்லை போலும். தொடர்ந்து சிணுங்கியது.

லாந்தருடன் சரசுவதி முன்னே செல்ல கிழவி இடுப்பில் பிள்ளையுடன் இளைத்து இளைத்து நடந்தாள். இவர்கள் போகும் இடம் புரிந்துகொண்டதாலோ என்னவோ தெரியவில்லை. வீமன் இவர்களுக்கெல்லாம் முன்னால் ஓடிக்கொண்டிருந்தது.

உறங்கிக் கொண்டிருக்கும் ஊர் பயங்கரத்தை தோற்றுவித்தது. இருக்கும் இடத்தை காட்டிக்கொள்ளாமல் சில்லுறுகள் கத்தியது. இருட்டின் எல்லாத் திசையிலிருந்தும் ஓசையை எழுப்பின. சரசுவதியின் மனம் பதறிக்கொண்டே இருந்தது. "புள்ளையாரே அவர காப்பாத்து. ஒனக்கு வாழக்கொல நேந்து உடுறன். ஒன்னட்ட வந்து பொங்கிறன். காவடி எடுக்கிறன். அவர அவனுகளிட்ட இருந்து எப்படியும் காப்பாத்து." கடவுளிடம் மனது வேண்டியது. நிஜமாகவே நெஞ்சுருக நேற்றிக் கடன் வைக்கப்பட்டது.

கண்ணாக் காடு இருட்டுக்காடாய் இருந்தது. நட்சத்திரங்களின் வெளிச்சமோ நிலவின் ஒளியோ அங்கு பயன் தருவதாய் தெரியவில்லை. ஊர் வெளிச்சம் தூரத்திலேயே தடைப்பட்டுப் போயிருந்தது.

ஆற்றிலும் சேற்றிலும் பட்டுவரும் காற்று உடலைப் பயத்துடன் சேர்த்து அதிகமாய் நடுங்கவைத்தது. புல்லும் வேளாண்மையின் அடிக்கட்டையும் சேற்றில் அழுகி நாறியது. காற்றோடு கலந்து சுவாசிக்க சுவாசிக்க குமட்டியது. தவளை இம்சையுடன் கத்தியது. அதுக்கு ஏதோ ஆபத்து போலும். பாம்பு ஒன்று அதனை விழுங்க எத்தனிக்கின்றது போலும். தவளையின் தலையைத் தவிர மற்றப் பாகம் எல்லாம் பாம்பின் வாயினுள் போயிருக்க வேண்டும். தவளை திரும்பவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தியது. சத்தம் தேய்ந்து வந்தது. சத்தம் முற்றாக மங்கிப் போனது. பாம்பு தவளையை விழுங்கிவிட்டதா? கண்ணாக்காடு உண்மையிலே படு பயங்கரமாய் தோன்றிற்று.

முன்னால் போய்க்கொண்டிருந்த வீமன் வேகத்தைக் குறைத்து தயங்கி நின்றது. சரசுவதி அதைத் தாண்டி முன்னேறினாள். கால் சேற்றில் முழங்கால் வரை புதைந்தது. புதைந்த காலை நிதானமாய் வெளியே எடுத்தாள். ஆனாலும் நிலை தடுமாறி குப்புற சாய்ந்தாள். வயிறு அடிபட குப்புற விழுந்தாள்.

“அம்மா...ஆ....”
வேதனையில் பலமாய் அலறினாள். கண்ணாப் புதர்கள் இவள் போட்ட சத்தத்தை ஒரு தடவை எதிர் ஒலிக்க வைத்தது. கிழவி பதறினாள். கலவரமடைந்தாள். “கடவுளே” சத்தமிட்டுக் கூவினாள்.

“கவனமாய் எழும்பு மெனேய். கைய கொண்டா. புள்ள வகுறுடாப்பா...” சொல்லிக் கொண்டே கிழவி ஒற்றைக்கையால் இடுப்புக் குழந்தையை இறுகப் பிடித்துக்கொண்டு மறு கையால் சரசுவதியை நிமிர்த்தினாள்.

சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. விழுந்த வேகத்தில் வயிறு அடிபட வயிற்றுக்குள் இருந்த பிள்ளைக்கு வலிக்க அது கையைக் காலை அசைத்தது. அது அசைவைக் கொடுத்ததும் சரசுவதிக்கு வயிற்றுக்குள் வலித்தது. வலியால் முனகினாள். இடுப்பைப் பிடித்துக்கொண்டு இம்சையால் அழுதாள். நிதானமாய் நிற்க முடியாமல் வரப்பு மேட்டில் அமர்ந்து கொண்டு துடித்தாள். உடலெங்கும் சேறாய் இருந்தாள்.

“ஆரது அங்க?”
இருட்டுக்குள் தூரத்திலிருந்து முரட்டுச் சத்தம் வேகமாய் வந்தது. அதைத் தொடர்ந்து துவக்குகள் உசாராகும் சத்தம் இருட்டில் எழுந்தது. வீமன் குரைத்தது இருட்டைப்பார்த்து.

“வீமா சும்மா இரி”
நாயை அதட்டினாள்.

“அது நாங்க”

“நாங்க எண்டால் ஆரு?”

“அரிசி குத்தி விக்கிற பொன்னிக்கெழவி”

“என்னயிறா இஞ்ச?”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இஞ்ச ஒள்ளுப்பம் வாங்க கிளி"
கிழவி இருட்டைப் பார்த்து கெஞ்சினாள்.

நிமிடங்கள் சில இருட்டில் கரைந்தது. சரசரப்பு நெருக்கத்தில் கேட்டது. சரசரப்பு நெருங்க நெருங்க இருட்டில் இரண்டு உருவங்கள் மங்கலாய் தோன்றியது. சர்வ ஜாக்கிரதையாய் அடிமேல் அடியெடுத்து இரண்டு உருவங்களும் முன்னேறி வந்து கொண்டிருந்தன.

சரசுவதி இடுப்பைப் பிடித்துக் கொண்டு வலியால் முனகிக்கொண்டே இருந்தாள். வீமன் இருட்டை உற்று உற்றுப் பார்த்தது. இரண்டு வேற்று உருவம் அதன் மோப்ப எல்லைக்குள் தென்பட உறுமியது. இரண்டு அடி முன்னால் வைத்தது. முன்னால் வைத்ததும்தான் பயங்கரம் உறைத்தது. நான்கு அடி பின்னால் ஓடி வாலை பின் காலிற்குள் சுருட்டிக் கொண்டு கிழவியின் பின்னால் பதுங்கிக்கொண்டது. இருட்டுக்குள் வந்துகொண்டிருந்தவர்கள் இவர்களை நெருங்கினார்கள். கிழவி அவர்களின் முகத்தைக் கவனித்தாள். இனங் கண்டுகொள்ள முடியவில்லை. முகந் தெரியாத இருட்டு.

"என்ன செய்யிறேயல் இஞ்ச?"
இரண்டு பேரில் ஒல்லியாய் குட்டையாய் இருந்தவன் கேட்டான். தனது குரல் முரட்டுத்தனமாய் இருக்க வேண்டுமென்பதில் அவனுக்கு பிரியம்போலும். முரட்டுத்தனமாய் முயற்சி செய்து கதைத்தான். ஆனாலும் அவன் குரலில் கிச்சுத் தன்மைதான் தென்பட்டது. இன்னும் வாலிப வயதை எட்டாத விடலைக் காலம். அவனது வயதையும் தோற்றத்தையும் மறைப்பதற்கு இருட்டு பெரிதும் உதவியது.

"இந்தப் புள்ளயிர அவர பொடியனுகள் புடிச்சித்து வந்தித்தானுகளாம் மெனேய்.."
சரசுவதியை காட்டி அந்தப் பெடியன்களிடம் கிழவி சொன்னாள்.

"பொடியனுகள் எண்டால் ஆரு?"
இரண்டு பேரில் உயரமாய் இருந்தவன் கேட்டான்.
உண்மையிலேயே அவன் குரல் படு பயங்கரமாய் இருந்தது. கிழவி பயந்தாள்.

"ஆரெண்டு தெரியாது. கண்ணாவுக்குள்ளதான் கூட்டித்து வந்தாங்க" சரசுவதி முனகி முனகி சொன்னாள்.

"அப்படி நாங்க இஞ்ச ஒருவரையும் கூட்டித்து வரல்ல"
பல்லைக் கடித்துக் கொண்டு கோபமாய் பதில் சொன்னான்.

"ஏன் மெனேய் கோவிக்கிறா? புள்ளத்தாச்சிக்காறி மெனேய் அந்தப் பொடியன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்டுடுங்க கிளி." கிழவி கெஞ்சினாள்.

"என்னப்ப?" சின்னவன் கோபமாய் கிழவியை நெருங்கினான். "இவடத்த நிக்க வேணா. இந்தப் பொட்டையையும் கூட்டித்துப் போ பாப்பம்... இல்லாட்டி..." சொல்லிக் கொண்டே துவக்கின் பின் பக்கத்தை ஓங்கினான்.
"அடிக்கப் போறயா...? அடி! எங்களுக்கொண்ணா. நாங்க போக மாட்டம். கொல்லுங்க... எங்க எல்லாரையும் கொல்லுங்க..." கிழவி தைரியமாய் சொன்னாள்.
வைராக்கியம் நெஞ்சில் ஏற வரப்புக் கட்டில் அமர்ந்துவிட்டாள். குழந்தை பீதியுடன் கிழவியை இறுக்க கட்டிக்கொண்டு பலமாய் அழுதது.

"நாங்கல்லாம் உசிரோட இரிக்கதாலானே இப்படிப் பாதகம் செய்யிறயல். எல்லாரையும் கொம குடுத்துப்போட்டு நீங்க மட்டும் இந்த சவக்காலையில வாழுங்க. கொல்லுங்க... கொல்லுடா..."
மார்பில் அடித்து அடித்து சரசுவதி சத்தம் போட்டு அழுதாள்.

"பொட்ட கத்தாத..." சின்னவன் அதட்டினான்.

"நான் கத்துவன். கத்தினா சுடுவெயா? சுடு..."

"பொட்டை நரகல் கத்தாத உண்ட புருசனுக்கு வெளக்கம் நடக்கிது. வெளங்கிப் போட்டு இப்ப உடுவானுகள்"
சரசுவதி அழுகையின் வேகத்தைக் குறைத்துக்கொண்டாள்.

"உண்ட புருசனில எங்களுக்கு சந்தேகம். எங்களப் பத்தி அவன்தான் 'ரிப்' குடுக்கிறான்."

"எண்ட கடவுளே...! என்ன பொய்யச் சொல்றா நீ"

"பொய்யா...? பொய்யா...? அதுதான் வெளக்கம் நடக்கிறது. யாழ்ப்பாணத்தில் இருந்து புதுசாய் இந்த ஏரியாவுக்கு பொறுப்பாளரு வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு காட்டிக்குடுக்கிறவனும் இரிக்க போடாது. மறுகா எங்களுக்குத்தான் கூடாத பேரு." சின்னவன் அழுத்தமாய் சொன்னான்.

தூரத்தில் கொட்டப்பாக்கன் குருவி ஒன்று விநோதமாய் சத்தம் எழுப்பியது. இரெண்டு பேரும் உசாரானார்கள். சின்னவனின் தோளைத்தட்டி "சிக்னல் குடு" என்றான் மற்றவன்.

"கீக்...கீச்ச்... கீச்ச்... கீக்..."
அசல் கொட்டப்பாக்கன் குருவி போலவே சின்னவன் சத்தம் எழுப்பினான். சில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வினாடி இடைவெளி விட்டு தூரத்தில் இருந்து அதேமாதிரிச் சத்தம் வந்தது.

கிழவியும் சரசுவதியும் விழி விரிய விரிய விநோதமாய் இவர்களைப் பார்த்தார்கள். நான்கைந்து உருவம் இருளிலிருந்து மெல்ல மெல்ல பிரிந்து முன்னேறி வந்துகொண்டிருந்தது. யாரோ வலியால் மெல்ல முனகும் ஓசை காற்றோடு சேராமல் தனியாகப் பிரிந்து வேறுபட்டு மெலிதாகக்கேட்டது. இருளிலும் உருவம் தெரியும் தூரம். நான்கைந்து பேர் ஆயுதங்களுடன். கூடவே கைத்தாங்கலாக இன்னொருவன். முகந்தெரியாத இருட்டுத்தான். இருந்தாலும் சரசுவதியால் இனங்காண முடிந்தது. கைத்தாங்கலாக அழைத்துவரப்படுவது தன் புருசன்தான் என. அருகில் வந்ததும் சத்தமிட்டு அழுதாள். கண்ணாக் காட்டுக்குள் சலசலப்புக் கேட்டது.

"ஆராக்கள் இவைய?"
வந்தவர்களில் ஒருவன் இருவரையும் பார்த்து கடுமையாக, சற்று வேகமாகக் கேட்டான்.

"இவண்ட பொஞ்சாதியும் மாமியும்" உயரமானவன் சொன்னான்.

"ஆரிஞ்ச உங்கள வரச்சொன்ன?"
சரசுவதியும் கிழவியும் அழமட்டும் செய்தார்கள்.

"இனி இந்த சேட்டை எல்லாம் வெக்காத... மறுகா தெரியும்தானே... தொம்பலுக்க தாட்டுப் போடுவன்."

சரசுவதியின் புருசனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை. தலை, நீரில்லாத முளைக்கீரை மாதிரி தொய்ந்து கிடந்தது. பிடித்திருக்கும் கையை விட்டால் அந்தக் கணமே தரையில் விழுந்துவிடும் நிலை. கொடூரமான செயல்களை சில நிமிடங்கள் மூளை கிரகிக்கும். அதன் பிறகு தற்காலிகமாய் மூளை தனது சிலசெயற்பாடுகளை நிறுத்திவிடும். முக்கியமாக உணர்தலை அது நிறுத்திவிடும். சரசுவதியின் புருசனால் இப்போது எதையுமே உணர முடியவில்லை.

"கூட்டிற்றுப் போங்க..."
சரசுவதியின் புருசனைத் தள்ளிவிட்டார்கள். உணர்ச்சி இல்லாமல் குப்புற விழுந்தான். முனகலைத் தவிர அவனில் இருந்து எந்த அசைவும் இல்லை. குப்புற விழுந்தவனை சரசுவதி ஓடிப்போய் நிறுத்தி தன் தோளில் அவன் சுமையை ஏலுமானவரை தாங்கி நடந்தாள். வயிற்றுவலி இப்போது இளகி இருப்பது போன்று இருந்தது. இளகிய வலி நிஜமா பிரமையா என்று இனம் கண்டுகொள்ள முடியாமல் மனது பூராக விதமான இம்மை வியாபித்திருந்தது.

கிழவி குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு முன்னே செல்ல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வீமன் அவள் பின்னால் ஓடிற்று. சரசுவதி தட்டுத்தடுமாறி புருசனுடன் அணைத்தபடி நடந்தாள்.

வீட்டுக்கு வந்ததும் குழந்தையை இறக்கிவிட்டு கிழவி பாயை விரித்து அதன்மீது நைந்துபோன நைலோன் சீலை ஒன்றை விரித்து, "இதுக்கு மேல படுக்க வை புள்ள" என்றாள் சரசுவதியிடம்.

சரசுவதி அவனை மல்லாக்க படுக்கவைத்தாள். முதுகு தரையில் அண்டமுடியாமல் முனகினான். சரசுவதி ஒருக்களித்து படுக்க வைக்க முயற்சி எடுத்தாள். எதிர்ப்பு இல்லாமல் உருண்டான். அவனது உடம்பில் இரத்தம் கண்டி நீல நிறக் கோடுகளாய் ஆங்காங்கு தெரிந்தது. மூக்கால் சுவாசிக்க முடியாமல் வாயால் சுவாசித்தான். வாய் அகலமாக விரிந்து கிடந்தது. அதிகமாய் மூச்சு வாங்கி வலியால் முனகினான்.

"பாதகனுகள்... ஒண்டும் தெரியாத ஆளப் போட்டு இப்பிடி அடிச்சிரிக்கானுகளே. இவனுகளெல்லாம் மனிசனுகளா? கண்ணழிஞ்சி போவானுகள்."
சரசுவதி கேவிக் கேவி அழுதாள். குழந்தை எதுவும் அறியாமல் சரசுவதியின் அருகில் அமர்ந்திருந்தாள்.

"மெல்ல கத புள்ள அவனுகள் வேலிக்கட்டைக்குள் நிப்பானுகள்."

"நிக்கட்டுமே... கேட்டுத்து வந்து எல்லாரையும் சுட்டுக் கொல்லட்டும் அரக்கனுகள்."

"மெனேய்... மெனேய் சத்தமா கதைக்காத... அவனுகள்ற கொணம் தெரியும்தானே. அவருக்கு ஒடம்பு நோகும். கரியபவளத்தை அரச்சி சாராயத்தோட முட்டையையும் அடிச்சி குடுத்தா வருத்தத்த எடுக்கும். நான் போய் கிட்டுணன் பரிசாதியாரிட ஊட்ட போய் வாங்கித்து வாறன். நீ மஞ்சளையும் உப்பையும் அரச்சி வை. நல்லெண்ணையையும் சூடாக்கி வை. ஒத்தணம் குடுப்பம்." சொல்லி விட்டு கிழவி அரிகேன் லாந்தருடன் வெளியேறினாள்.

அம்மாக்காறி சொன்னதையெல்லாம் சரசுவதி செய்தாள். அரைமணி நேரம் கடந்து கிழவி வந்தாள். வந்த உடன் கரியபவளத்தை அம்மியில் வைத்து அரைத்து நன்கு மாவாகியதும் அதை ஒரு சிறிய பாத்திரத்தில் போட்டு சாராயத்தை ஊற்றி நன்கு கலக்கினாள். பின் முட்டையை உடைத்து வெள்ளைக் கருவை மாத்திரம் எடுத்து சாராயம் கரியபவளம் கலந்த கலவையுடன் வெள்ளைக்கருவையும் நன்கு கலக்கிய பிறகு சரசுவதியிடம் கொடுத்தாள். வாங்கிய சரசுவதி தனது புருஷனிடம் பருக கொடுத்தாள். வாங்க முடியாமல் முடங்கினான். தலையை தன் கையால் தூக்கி மடி மீது வைத்து அவனுக்கு குடிக்க கொடுத்தாள். குடித்தான்! தூரத்தில் இரையல் ஏதோ கேட்டது. சரசுவதியும் கிழவியும் செவியை கூர்மையாக்கினார்கள். உடனடியாக இனம் காண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியவில்லை. சூடடிக்கப் போன போடியாரின் உழவு இயந்திரமா? மனது முடிவு கொண்டது. விநாடிகள் கடந்து போக மனது மறுத்தது. சத்தம் நெருங்கி கேட்டது. ஏழெட்டு வாகனங்களின் தொடர்ச்சியான இரையல்...

மிக மிக நெருக்கமாக வாகனங்களின் சத்தம்... அதைத் தொடர்ந்து யாரோ வீட்டைச் சுற்றி ஓடும் சத்தம். அந்நிய மொழியில் கட்டளையிடும் குரல். கூடவே சொந்த மொழிச் சத்தங்களும். கிழவியும் சரசுவதியும் ஆளாளுக்கு விபரீதம் புரியாமல் ஆச்சரியமாய் பார்த்துக் கொண்டார்கள்.

வீட்டு வாசலிலும் நடமாட்டம். திறந்த கதவு வழியாய் உருவங்களும் தெரிந்தது. சரசுவதி எட்டிப் பார்த்தாள்.

தலை வளர்த்து, கறுப்பு நிற களிசானும் அதே நிற தொள தொளப்பான சேர்ட்டும் கொண்ட ஒருவன் துவக்குடன் கால்களை அகட்டி அசட்டையாய் நின்றான்.

சரசுவதியின் மனதுக்குள் ஏதோ பகீரென பற்றிக் கொண்டது.

“எங்கடி உண்ட புரிசன்?”

சரசுவதியை பார்த்து வெறியாய் கத்தினான்...

“என்னத்துக்கு கேக்கி...”

மிகுதி வரவில்லை. சரசுவதி அழுதாள்...

“எங்களுக்கு அவன் வேணும். அவன நாங்க வெளங்க வேணும்...”

“அவரு இஞ்ச இல்ல மய்யோரிச் சேனைக்கு காவலுக்கு பெயித்தாரு.”

“காவலுக்கு பெயித்தானா? ஆருக்கு விசுக்கோத்துக்கால உடுறா? அன்னா படுக்கிறது ஆரு?”

“அது அப்பரு!”

“கொப்பரா? வாடா வெட்டைக்கு!”

அவன் அழைத்தது சரசுவதியின் புரிசனுக்கு கேட்டது. முயற்சி செய்தான். அவனால் அசையக்கூட முடியவில்லை.

“அவர இப்பதான் பொடியனுகள் அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள்.”

“பறவள்ளா... வாடா வெட்டைக்கு.”

“அவரு எழும்ப மாட்டாரு... எழும்ப அவரால ஏலா?”

சரசுவதி ஓடிப்போய் புருஷன் அருகில் அமர்ந்து கொண்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பச்சை நிற உடுப்புப் போட்ட அரசபடை அதிகாரி ஒருவன் வாசலில் நிற்பவன் பக்கம் நெருங்கினான். "றஷ்த்தவாதி இன்னவத...?" மெதுவாய் கேட்டான்.

"ஓவ் மாத்தையா... அத்துள புதிய கறனுவா." திக்கி திக்கி சொன்னான்.

மிக குறுகிய காலத்தில் கற்றுக் கொண்ட சிங்களம் போலும். உச்சரிப்பில் பிழை விட்டான்.

"புதி...றஷ்த்தவாதி புதியகறுணுவா... ஹா...ஹா..." கேட்டு விட்டு சிங்கள அதிகாரி சிரித்தான். சிரித்து விட்டு, கடுமையான குரலில் "எலியட்ட அறங்கெனவா" என்றான்.

வாசலில் நின்றவன் வீட்டின் உள்ளே போய் படுத்திருந்தவனை பிடித்து வெளியே கொண்டு வந்தான்...

கிழவி ஓடி வந்தாள். "மெனேய்...மெனேய்... இப்பத்தான் அவனுகள் உங்களுக்கு சப்போட்டாம் எண்டு அடிச்சிப் போட்டு கொண்டு போட்டவனுகள். நீங்களும் இப்பிடி இந்த ஐயாமாரோட வந்து அநியாயம் செஞ்சா எப்படி மெனேய்?" கிழவி கேட்டாள்.

சரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு கறுப்பு சேர்ட் போட்ட இன்னொருவன் கிழவியை நெருங்கினான்.

"இவனில எங்களுக்கு சந்தேகம். இவன நாங்க வெளங்க வேணும். அவனுகளோட இவனுக்கு பழக்கம் இரிக்கி. கொழும்புல இருந்து இந்த ஏரியாவுக்கு புதிசா ஒரு கொமாண்டர் வாறாரு. அவரு வரக்குள்ள இஞ்ச ஒரு பயங்கரவாதியும் இரிக்கப் போடாது. மறுகா எங்களுக்குத்தான் கெட்ட பேரு. நாங்க இவன வெளங்க வேணும்." நெருங்கினவன் கிழவியிடம் சொன்னான்.

– சொல்லிய மறுகணமே வாசலில் கிடந்த சரசுவதியின் புருஷனின் காலை அவன் பிடிக்க- உள்ளேயிருந்து வந்தவன் கைகளை பிடிக்க இருவருமாக அவனை தூக்கிக் கொண்டு போய் ராணுவ வண்டிக்குள் எறிந்தார்கள்.

கிழவி பேச முடியாமல் திகைத்து நின்றாள்... சரசுவதிக்கு இடுப்பு வலி எடுத்தது. வயிற்றைப் பிடித்துக் கொண்டு திண்ணையில் சரிந்தாள்.

வாகனங்கள் வேகமாய் புறப்பட்டு போயின... இருள்தான் ஆனாலும் புளுதி பரவுவதை உணர முடிந்தது.

❑

செந்தாமரை - 1992



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"போரின் பகைப்புலம் அறியாது
போர்ப்பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ — அவரே ஈழம் இன்னமும்
எரிந்துகொண்டிருக்க முதற்காரணி என்பேன்."**



# என்ட அல்லாஹ்!

இலேசான கிறுகிறுப்பு பார்வை வேறு இருட்டிக் கொண்டு வந்தது. சத்தம் கூட தெளிவாக கேட்பதாக இல்லை. சாக்கடையைச் சுற்றிப்பறக்கின்ற ஈக்கள் உண்டாக்குகின்ற சத்தத்தை போன்று ஒரே இரைச்சல்.

தொடர்ந்தும் நின்றால் குப்புறப் புரட்டப்படுவோம் என்கின்ற ஐயம் தங்கராசா ஹாஜியாருக்கு தோன்றிற்று. சில்லரை வியாபாரிகள் கூவிக்கூவி விற்கின்றார்கள். தங்கராசா ஹாஜியார் கடைக்குத்தான் யாரும் வரவில்லை. ஐந்து மணித்தியாலமாக நிற்கின்றார். மூன்று நான்கு பேர்களுடன் முற்றுப் பெறுகின்ற மொத்த வியாபாரம் அவருடையது; பன்னிரெண்டு மணியாயிற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அம்பாறையில் இருந்து வெங்காயம் வாங்கவருகின்ற வியாபாரிகள் யாரும் வரவில்லை.

சுவரை வலக்கையால் முட்டுக்கொடுத்துக் கொண்டு வெங்காய மூடையில் குந்திக்கொண்டார். முப்பது அந்தர் வெங்காயமும் வியாபாரம் ஆகாமல் ஒரு நாள் முடங்குமானால் ஈரம் வற்றி ஒரு அந்தர் எடை குறையும். நாள் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் கையைக் கடிக்கும்.

வெற்று வயிறு கறுபுறுவென சத்தம் உண்டாக்கிற்று. செத்தல் மிளகாயானால் தண்ணீரைத் தெளித்துத் தெளித்து எடை குறையாமல் பண்ணலாம். நேற்று பிடுங்கிய வெங்காயத்தை எதுவுமே செய்ய முடியாது. மூட்டையாகக்கூட வைக்கமுடியாது. பச்சை வெங்காயம் மூடையுடன் இருக்குமானால் சூடுபிடித்து ஒரே இரவுக்குள் அழுகிநாற்றமடிக்கும்.

இப்படியான நேரங்களில் சில்லரை வியாபாரம் தேவலாம் என்று தோன்றும். ஐந்தோ பத்தோ வருமானம் குறைவாக வந்தாலும் கையைக் கடிக்காது. கண்ணை மூக்கைப் பார்த்து எடை பிடிக்கலாம். பத்து கிலோவுக்கு ஒரு கிலோ நிகர லாபம் சும்மா கிடைக்கும். தங்கராசா ஹாஜியார் ஒன்றும் அப்படிப்பட்டவர் இல்லை என்பது களுதாவளை, தேத்தாத்தீவுக்குக்கூடத் தெரியும். மக்காவுக்குப் போவதற்கு முன்பு அப்படி இப்படியென்று சின்னச் சின்ன சில்லறைத் தனங்கள் செய்ததுண்டுதான். தராசின் தட்டின் கீழ் பழப்புளி, காந்தம் ஒட்டுவது; தராசின் முள் அடியில் விரலை விடுவது என்று சில வியாபாரத்தனங்களைச் செய்தவர்தான். ஆனால் இப்போதெல்லாம் அப்படியெதுவும் கிடையாது.

“ஒழைக்கிறதுதாண்டா ஒப்பாய் ஒடம்புல ஒட்டும்”

வார்த்தைக்கு வார்த்தை யாரிடமாவது சொல்லிக்கொள்வார். பத்து வருடமாயிற்று மக்காவுக்குப் போய் வந்து. போன வருடம் கூட மக்காவுக்குப் போகப்புறப்பட்டு முடியாமல் போய்விட்டது.

“என்னடாவாப்பா அத்துல்லா! என்னட்ட செல்லிரிக்கலாமெலுவா நீ. கேட்டா இல்லெண்டா செல்லப்போறன். மயண்டைக்க ஊட்டுப்பக்கம் வாகண்டையோ இருவது இரிக்கி. தாறன் மறுகணித்தா.”

சந்தையில் மூட்டை தூக்கும் அப்துல்லாவின் சொந்தக்காரப் பெண் ஒருத்திக்கு கலியாணம் செய்வதில் சிரமம் இருப்பது தெரிந்தது. மக்கா பயணத்திற்காக வைத்திருந்த பணத்தைத் தூக்கி அப்துல்லாவிடம் கொடுத்துவிட்டார். மக்கா பயணத்திற்கு செலவாகும் பணத்தை ஏழைப்பெண்ணின் கல்யாணத்திற்கு பயன்படுத்துவது புண்ணியமாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்ன காசியாரு. ஒரு சாங்கமாய் குந்தித்து இரிக்காய்? சொகம்கெகம் இல்லையா?"
இரையலாய் எதிர்க்க சத்தம் கேட்டது. உற்றுப்பார்த்தார் சந்தைத் தூண்கள் சுற்றிற்று.

"ஆரடாப்பா சரிவா? தலசுத்துதுடாப்பா! மார்கெட்டு நேச்சர் சரியான சவுப்பா இரிக்கி. ஒரு ஹறாம் குட்டியையும் காணல்ல... இந்த சிங்கள வள்ளா ஒருவனாவது நேத்தே செல்லித்து போயிரிக்கலாம் எலுவா. சும்மா தட்டிய தொறந்து வெச்சித்து இரிக்கன்"

"என்ன காசியாரு நீ ஒரு மயிரும் தெரியாத ஆளாய் இரிக்காய் விடியம் மல்வத்தையில் வைச்சி முப்பது பேர ஜீப்போட கௌப்பித்தானுகள் எலுவா. அந்த உம்மாட மக்கள் காரதீவுக்குள்ள அறியானம் செய்யிறானுகளாம். வசாருக்குள்ள எல்லாக் கடையையும் மூடிப்போட்டானுகள். வசார்ல ஒரு குருவி இல்ல. கடய மூடித்து கெதிய்யா ஊட்டபோய்சேருபாப்பம்."

தங்கராசா ஹாஜியாருக்கு கிறுகிறுப்பு சட்டென்று நின்றது. எல்லா பொருளும், விரையும் மனிதர்களும் - மூடப்படும் கடைகளும் துலக்கமாய்த் தெரிந்தது.

கொல்லும் தூரத்தில் ரவைகள் சடுதியாய் தீர்க்கப்பட்டு அடங்கும் ஓசை கேட்டு அடங்கிற்று.

சந்தை சலனமற்று சிலகணம் ஸ்தம்பித்தது. மறுகணம் உசாராயிற்று. நால்திசையும் வாசலாக சனம் சிதறிற்று. காய்கறியும் சிதறிற்று. ஒரேயொரு நிமிடத்தில் சந்தை வெற்றிடமாயிற்று.

இரண்டு மாடுகள் வேகமாய் சந்தையுள் நுழைந்தன. பரமசந்தோஷம் அவைகளுக்கு. தேவையான அளவு தின்று, தின்பன மீது மூத்திரமும் பெய்து, சாணமும்போடலாம். இன்று விரட்டுவார் யாரும் இல்லை. வேகமாய் நுழையும் அதன் தோரணையில் சுதந்திரம், வெறி, ஆசை அத்தனையும் இருந்தது.

தங்கராசா ஹாஜியார் எத்தனை நிமிடத்தில் தட்டிகளை மாட்டிவிட்டு வீதிக்கு வந்தார் என்று அவரால் நினைத்துப்பார்க்கும் அளவுக்கு மூளை செயற்படுவதாக இல்லை. தப்பித்தல், உயிர்காத்தல் எப்படி என்பதை மாத்திரமே மூளை யோசித்தது. அவசரமாய் விரையும் வாகனங்கள் எதுவும் அவரை ஏற்றிக் கொள்கிற சில விநாடிகளையும் விரயம் செய்ய முடியாதிருந்தது. அவரவர் உயிர் அவரவருக்கு முக்கியம்.

உடலின் சகல பாகங்களும் உதறிற்று. இதயம் எகிறிக் குதித்தது. மறுபடி மிக நெருக்கத்தில் மிக நீளமாய் வேட்டுகள் செலவாகும் சத்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழுபட்டது. எதிர்க்கக் கிளை விரிந்து உயரமாய் நின்றிருந்த அரசமரத்தின் பின்பக்கம் பதுங்கச் சொல்லி மூளை கட்டளை போட, பதுங்கிக் கொண்டார். பதுங்கிக் கொண்ட அதேகணத்தில் அரசமரத்தின் கிளையில் இருந்து திடீர் திடீரென இரண்டு தடவை எதுவோ விழுந்தது. ஒரு கணம் அதிர்ந்து போனார். சுதாரித்துக்கொண்டு உற்றுப் பார்க்க, தெரிந்தது உயிரற்று இரத்தமாய் கிடக்கும் காகமும் சிதைந்த மீன்தலையும்.
இரை உண்ணும்போதில் கொலை என்பது கொடுமை!

"அல்லாவே...!"
மனசுக்குள் உரக்கக்கூவி அண்ணாந்து பார்க்க - சிதைந்த அரசம் இலைகள் தன்னிச்சையாய் பூமி நோக்கி வந்து கொண்டு இருந்தன.

வாகனம் எதுவோ இரையும் சத்தம் கேட்டது. தலையை மெல்ல வெளியே நீட்டி அதேவேகத்துடன் அமுக்கிக்கொண்டார். ஊத்தைப் பச்சை வாகனம்!

"ஹறாம் குட்டிகள் களுவாஞ்சிக்குடியில் இருந்து வாறானுகள்போல...!"

ஒவ்வொன்றாய் குறைந்த வேகத்துடன் மெது மெதுவாய் மரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தன. ஒவ்வொரு வாகனமும் உறுமி உறுமி நகர இதயம்மேலும் மேலும் வேகம் எடுத்து இயங்கியது. கடைசியாய் ஒரு கவச வாகனமும் கடந்தது. வியர்வை முதுகுப் பக்கத்தை முழுதாய் நனைத்திருந்தது. ஹாஜியார் கணக்குப் பண்ணிக் கொண்டார், மொத்தம் பதின்மூன்று வாகனம்!

"வம்புல பொறந்த உம்மாடமக்கள் ஒருவனும் ஏத்தமாட்டான் எண்டுதானுகளே..." தான் கைகாட்டியும் நிறுத்தாமல்போன வாகனக்காரர்களுக்கு வாய்விட்டே தன்பாட்டுக்குத் திட்டிக்கொண்டு அரசமரத்தின் முன்பக்கம் வந்து வீதியில் நின்றுகொண்டு இருதிசையையும் பார்த்தார். நடமாட்டம் எதுவுமில்லை. மறுபடி அரசமரத்தைப்பார்த்தார்.
எங்கோ வெறித்த பார்வையுடன் பிள்ளையார் கல்.
ஹாஜியாருக்கு பிள்ளையாரைப் பார்த்து மண்டையில் குட்டவேண்டும் போல் இருந்தது.

"டங்கு டங்கு..." என்று ஐந்து தடவை இரண்டு கைகளாலும் இரண்டு பக்கமண்டையிலும் குட்டிக் கொண்டார். களுதாவளைக்கு வெங்காயம் வாங்கப் போகின்ற பொழுதுகளில் 'களுதாவளைப் பிள்ளையார்' கோவிலில் குட்டிக்கொள்ளும் ஆட்களைப்பார்ப்பதுண்டு. பிள்ளையாரை வணங்கும் முறை இதுதான் என்பதில் அவருக்கு ஐயம் இல்லை.

"தார்றோட்டால போறத உட கெறவல் றோட்டால போறதுதான் உத்தமம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாசமறுவானுகள் திரும்பி கிரிம்பி வருவானுகள்."
மனசு சொல்லி அவர் முடிவெடுக்கும் முன்பே பெருத்த அதிர்வுடன் எதுவோ வெடித்து சத்தம் உண்டாக்கிற்று. பின்னணியில் தொடர்ச்சியாய் வேட்டு.

தார்வீதியைவிட்டு கிழக்கு பக்கமாய் ஓட முள்கம்பி வேலி சாறனுடன் சேர்த்து தசையை பிய்த்து இழுத்தது. நிதானந்தவறி குப்புற விழ வாய்நிறைய புழுதி மணல் நிறைந்து கொண்டது. எழுந்து மறுபடி ஓட எத்தனித்தபோதே கால் இடறி குப்புறபுறட்டிற்று. எழுந்து திரும்பி பார்க்க மிகப்பெரிய காளான் வடிவத்தில் வானத்தில் புகை எழுந்தது. 'ஓடு ஓடு' என்று மூளை விரட்டிற்று. யாரோ வீட்டில் இருந்து நாயொன்று உறுமிற்று. எழுந்து ஓட செருப்பு அறுந்து இழுபட்டது. செருப்பை உதறிவிட்டு ஓட நாய் விரட்டிற்று.

****

அங்க பதுங்கி இங்க பதுங்கி ஓடியும் ஒளிந்தும் கல்முனையில் இருந்து மருதமுனைக்கு வர மூன்று மணித்தியாலம் எடுத்தது தங்கராசா ஹாஜியாருக்கு.

"கடக்கர பள்ளிக்கு நேத்திக்கடன் வச்சனான். எண்டஅல்லா கொண்டந்து உட்டுத்தாரு..."

"என்னது ஒங்கட கால்ல இருந்து எரத்தம் வழியிது... எண்ட அல்லோவ்..." தங்கராசா ஹாஜியாரின் மனைவி நஸீமா பதறினாள்.

"இரியிங்க... இரியிங்க... ஹறாமுல பொறந்ததுகள் என்னவோ செஞ்சி போயித்தானுகள்... எண்டப்பே எனக்கி பயமா இரிக்கி வாப்பா..."

"ஆ...சீ. சும்மா என்னத்துக்கு கொழ்றா? வாய பொத்திச்சு கெட. ஓடியரக்குள்ள உழுந்துத்தன். லாம்பெண்ணை ஒள்ளம் எடுத்துக்கு வா! லாம்பெண்ணய தேச்சா அசடு புடிச்சிரும். மரமஞ்சள் இருந்தா ஒள்ளம் ஊறவை. கம்பியும் கிழிச்சித்து. இவன் முசுதப்பா எங்க?"

"திண்றான். காயத்த காட்டுங்க..."

நஸீமாவின் அழுகை அடங்கிற்று.

"தின்றானா? இந்த ஊத்திலையா?"

காயத்தைக் காட்டினார். ஆழமான கிழியல்தான்.

"முசுதப்பா..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"..."

"முசுதப்பா..."

"ஓவ்..."

"எங்க இரிக்காய்?"

"இஞ்ச... சோறு தின்றன்."

"சோறு தின்றயா? என்னடா ஓப்பாய் இது ஊத்துக் கெட்ட நேரத்தில... ஒழைக்கிற நேரத்தில ஒழைக்க ஒணும் தின்ற நேரத்தில தின்னோணும் எண்டு அல்லா செல்லியிருக்கார்ரா வாப்பா... நீ ஊத்துக்கெட்ட நேரத்திலையெல்லாம் திண்டா மார்க்கத்துக்கு அடுக்குமா வயது வந்த புள்ளக்கி ஒள்ளமெண்டாலும் லோசின இருக்கிறல்லையா? மார்க்கெற்றுக்கு வராம எங்க போன நீ?"

"உம்மோவ்... வெறும் சோத்த திண்றங்கா. ஒள்ளம் வந்து ஆணம் ஊத்தன்..." அடுக்களையில் இருந்து சத்தம் பலமாய் வந்தது.

"ஊத்தி தின்றுமேனேய். வாப்பாக்கு கால்ல காயம். லாம்பெண்ண போட்டு தேய்க்கிறன். தொட்டா கறியில நாறும்..."

வீதியில் வாகனங்கள் இரையத் தொடங்கிற்று. சனம் கூட நடமாடத் தொடங்கிவிட்டது போலும். சலசலப்பு கேட்டது. விசாரிப்புகள். எண்ணிக்கைகள். தேசக் கணக்கெடுப்புகள் எல்லாம் களைகட்டத் தொடங்கிற்று. வீட்டுக்குள் இருந்துகொண்டே வீதியில் இன்னதுதான் நடக்கும் என்று ஊகிக்க முடியும். தங்கராசா ஹாஜியார் ஊகித்துக் கொண்டார்.

"என்ன வாப்பா கால்ல காயம்? உழுந்தித்தியா?"

முஸ்தபா ஈரவாயை சாறனால் துடைத்துக் கொண்டு கேட்டான்.

"அதொண்டும் இல்ல. எங்க போனநீ மாறகட்டுக்கு வராம?"

"பந்தடிக்க!"

"என்னடா வாப்பா இது. பதினேழு வயது புள்ள விசினச பாக்காம ஹறாமா திரிஞ்சா மார்க்கத்துக்கு அடுக்குமா?"

முஸ்தபா சாரனை உதறி உடுத்திக் கொண்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“களுதாவளைக்கு பொயித்து வாறியா?”
ஹாஜியார் கேட்க - முஸ்தபா வெருண்டு அவரை நோக்கினான்.

“எனகொண்ணா!”

மொட்டையாய் மறுத்தான். ஒருவகை பீதி படீரென அவன் முகத்தில் பரவிக் கொண்டது.

“புள்ளய ஏன் அங்க போகச்செல்றயள். எசக்ககாறனுகள் களுதாவளையில குமிஞ்சிபோய் கொடக்கானுகள். நேத்தும் ஆமிக்காறனுகள் றவுண்டப்பு செஞ்சி ஆக்கள புடிச்சிப் போனஎண்டு நீங்கலுவோ சென்ன.”

வெங்காயம் மூட்டையா கெடக்கு. மயண்டக்க மாக்கெற்றுக்குப் போய் சொரியப் போடவேணும். அப்புடியே உட்டா நாளைக்கு சூடு புடிச்சி அழுகிப்போயிரும். களுதாவளைக்கு நான் இப்ப போனா ஆரு சொரியப் போடுறது...?”

“நாளைக்கு நீங்களே போனா என்ன...?”

“என்ன நம்பி வெங்காயத்த தந்தவனுகள் எலுவா? நாம காசக் குடுத்தாலுவா அவனுகளும் சோத்த கீத்த ஆக்கிதின்ன ஏலும். எனக்கு நெஞ்சிக்குள்ளையும் ஒரு சாங்கமா இரிக்கி. ஒரு வெங்காயம் கூட இண்டைக்கு யாவாரம் நடக்கல்ல. மார்க்கற்ட்டு நேச்சர் சரியான சவுப்பு. அம்பது அந்தருகளும் நாளைக்கு ஒருஅந்தர் தண்ணி வற்றும். ஒரு நாளைக்கு நானூத்தம்பது ரூபா நமக்குத்தான் நட்டம். நம்மட நட்டம் நம்மளோட. அவனுகளுக்கு காசைக் குடுக்கத்தானே வேணும் பாவம். ஒள்ளம் தண்ணி எடுத்துவா நெஞ்சுக்குள்ள அடைக்கிது...”

நஸீமா தண்ணீர் எடுக்க உள்ளே போக முஸ்தபா அப்படியே நின்று கொண்டிருந்தான்.

“வஸி ஓடுல்ல வாப்பா. நான் எப்படி போறது?”

“நீலாவணையில இருந்து வஸி ஓடும். சக்கில்ல நீலாவணைக்கு போய் அங்க இருந்து வஸிலை போ! அலுமாரி றாக்கயில ஆயிரத்தி ஐநூறு இரிக்கி. எடு! நாளக்கி வாறனாம் எண்டு கணவதித்த செல்லு. மாக்கட்டு சரியான சவுப்பு. இண்டைக்கு இவ்வளவையும் வெச்சிக்க செல்லு. சொச்சத்த மறுகா நான் கொண்டு வாறனாம் எண்டு செல்லன் என்ன. ஒண்ட அடையாள காட்ட மறக்காம எடுத்துப் போடா ஓப்பாய். மறுகணி அது பெரிய ஓசரியா போயிரும்.”

முஸ்தபா பணத்தை எடுத்துக் கொண்டு சைக்கிளை உருட்டியபடி அரைமனதுடன் வீதிக்கு வந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆட்கள் நடமாடினார்கள். ஒன்றிரண்டு கடைகள் திறந்திருந்தது. சிலகடைகள் ஒற்றைப்பலகையுடன் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தன. சைக்கிள்கள் மாத்திரம்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாய் நகர்ந்து கொண்டிருந்தன. வாகனங்களின் இரையல் சத்தம் மாத்திரம் கேட்டது. வாகனங்களைக்காணவில்லை.

சைக்கிளை மிதித்தான் முஸ்தபா.

அண்டங்காக்கை ஒன்று பள்ளிவாசல் ஸ்பீக்கரில் அமர்ந்து கொண்டு வீதியை பிராக்குப்பார்த்தது. காற்று பலமாய்வீச அரிசி ஆலையில இருந்து உமி பறந்து வீதிக்கு வந்தது. அண்டங்காக்கை இறகை விரித்து காற்றில் சாய்ந்து விடாதபடி சமநிலை பண்ணிக்கொண்டு அப்படியே நின்றது.

****

"ஒங்கட வாப்பா எங்க?"
கணபதியின் வீட்டில் அவன் பத்து வயது மகன் மாத்திரமே நின்றான்.

"ஆரு?"

பையன் விழித்தான்.

"வாப்பா?"

"ஆரு?"

"உங்கட அப்பா!"
பையன் புன்னகைத்தான்.
"அவரு வெங்காயக் காலைக்குள்ள பொயித்தாரு."

"அம்மா?"

"அவவு நெல்லுக்குத்த பொயித்தாவு!"

"வெங்காயக்கால எங்க இரிக்கி?"
எப்போதோ வாப்பாவுடன் வந்தது. இப்போது மறந்து போயிருந்தது முஸ்தபாவுக்கு.

"சவக்காலக்கி கிட்ட!"

"சவக்கால எங்க இரிக்கி?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எங்கட காலைக்கி கிட்டத்தான்!"

"வாவன் போவம். காசிகுடுக்கவேணும்."

"எனகொண்ணாப்பா அங்கபேய் இரிக்கி. அம்மா வந்தா ஏசிவாவு."
பையன் அசையமாட்டான் என்பது முஸ்தபாவுக்கு புரிந்து போனது. வேறு யாரிடமாவது வழி கேட்டுப் போவது புத்தி என்றே தோன்றிற்று.

எதிர்க்க ஒருவர் வர வழி விசாரித்தான். வந்தவர் சொன்னார். அவர் சொன்ன வழி முழுவதும் மணலாக இருந்தது. இந்த சொரி மணலில் எப்படித்தான் வெங்காயம் விளைவிக்கின்றார்களோ? முஸ்தபா அதிசயித்துக் கொண்டே புதைந்து புதைந்து நடந்தான். வழியில் தென்பட்டவர்களிடமும் சரியான வழிதானா என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு நடந்தான்.

கடல் அலையின் ஓசை கிட்டத்தில் கேட்டது. சவக்காலை கூடத் தெரிந்தது. புதிதாக கிட்டத்தில் யாரோ செத்திருக்கின்றார்கள். வாடாத சவக்கட்டில் ஒன்று கவுண்டு போய்க்கிடந்தது. வெட்டிய இளநீர் கோம்பைகள். மண்குடங்கள் கூடக் கிடந்தது.

பார்வையை சுற்றிச் சுழலவிட கணபதி தென்பட்டான். ஒன்றிரண்டு தடவை சந்தையில் பார்த்ததுண்டு.

"அண்ணாச்சி!" முஸ்தபா கூவினான்.

மண்வெட்டியை வைத்துவிட்டு கணபதி சுற்றும் முற்றும் பார்த்தான். முஸ்தபாவை கணபதி காணவில்லை. கச்சையை இறுக்கி பின்பக்கமாய் தொங்கியதை இழுத்து அரைஞாண் கயிறுடன் இணைத்துவிட்டு மறுபடி நிலத்தைக் கொத்தினான்.

"அண்ணாச்சி...!" மறுபடி கூவினான்.

கணபதிக்கு அசூசையாக இருந்தது. மண்வெட்டியை ஓரமாய் வைத்துவிட்டு சாறனை உடுத்திக் கொண்டான். கொத்துவேலிவரை வந்து எட்டிப்பார்க்க முஸ்த்தபா புன்னகைத்தான்.

"என்னம்பி நீ வந்திருக்காய் காக்கா வரல்லயா?"

"வாப்பாவுக்கு ஒள்ளம் சொகம் இல்லை. வெங்காயமும் சொரியப் போடவேணுமாம் அதுதான் காசி கொண்டு நான் வந்தது."

முஸ்தபா காசை நீட்டினான். கணபதியின் முகம் புன்னகையாயிற்று. வாங்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்த்தை எண்ணிக்கொண்டு போகும் போதே கணபதியின் புன்னகை மெதுமெதுவாய் அடங்கி எண்ணி முடிய முகம் சுருங்கிற்று.

“என்ன ஆயிரத்தி ஐநூறுதான் இரிக்கி?”

“வசாரில என்னவோ பிரச்சன எண்டு யாவாரிமாரு வரல்லையாம்.”

“அதுக்கு?”
கணபதியின் குரல் இறுகிற்று.

“மறுகணி சொச்சத்த கொண்டு தாறாராம்.”

“என்ன புழுத்தின வேல இது. நாங்க வெங்காயத்தை புடுங்கிகட்டிக்குடுத்தா பூழலியாரு அவற்ர வேலய பாத்துத்து திரியிறாரா?”
அவசியமா இந்த கோபத் தழும்பல் என்று கணபதிக்கு புரியாமல் இருந்தது

“ஏன் அண்ணாச்சி இப்படிக் கதைக்கிறாய்?”
முஸ்தபா கவலைப்பட்டுக் கொண்டான்.

“கதைக்காம...”
பேச்சை முறித்தான்.

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் எங்கோ குடுகுடுத்தது. குடுகுடுத்த திசையை கணபதி பார்த்தான். மண்ணெண்ணெய் புகை காற்றில் கலந்தது.

“பசள தந்தவன் வெத வெங்காயம் தந்தவனுக் கெல்லாம் என்ன பணியாரத்த குடுக்கிறது...”

“ஒங்களுக்கென்ன நீங்கதொப்பிய பெரட்டிப் போட்டு போயிருவியள்...”

“எங்க தொப்பி பெரட்டுன நாங்கள்?”

முஸ்தபா வார்த்தை கூட மென்மை இழந்தது.

“என்ன கணபதி?”
அடுத்த வெங்காயத் தோட்டத்திலிருந்து சிவலிங்கம் எட்டிப்பார்த்தான்.

“இந்த தங்கராசா காக்கா வெங்காயம் வாங்கி பொயித்து வெறும் ஆயிரத்து ஐநூறு அனுப்பியிரிக்காண்டாப்பா.”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆங்... நான் என்னவோ எண்டு நெனச்சன்."
கொத்து வேலிக்குள் சிவலிங்கத்தின் தலை சுவாரஸ்யம் இல்லாமல் முடங்கிக் கொண்டது.

"சும்மா தேவல்லாத கத கதக்க வேணாம். நான் வாப்பாட்டசெல்றன். அவரே'ா கத..."
முஸ்தபா போய்க் கொண்டே இரைந்தான்.

****

ஊர் முழுதாய் இருட்டி விட்டது. வீதியில் நிசப்தம். ஆழ்ந்த நித்திரை போன்ற உறக்கம். வாகனம் எதுவும் வருவதாய் இல்லை. தூரத்தில்கூட வாகனம் இரையும் சத்தம்கூட கேட்கவில்லை. ஊருக்குள் மாத்திரம் ஏதேதோ சத்தம் கேட்டது.

"புள்ள குட்டிய பட்டினி போட்டுத்து குடிச்சித்திரியிறேடா பாதகா..."
பெண் ஒருத்தி புலம்பும் சத்தம் மெலிதாய் கேட்டது.

"எண்டம்மோவ்... எண்டம்மோவ்... பாதகன் கொல்றானே..."
இடை வெளிவிட்டு அதேபெண்ணின் குரல் பலமாய்க்கேட்டது. பின்னணியில் பிள்ளைகள் விசும்பும் சத்தம்....

முஸ்தபாவுக்கு லேசாய் பயம் வந்தது. பஸ் கிடைக்காது போனால் என்ன செய்வது? எதிர்க்க இருந்த வாசிக சாலைக்குள் சரசரப்பு கேட்டது. அது இருட்டிக்கிடந்தது. வாசிகசாலைதான் அது என்பது தோற்றத்தில்தான் அறியமுடிகிறது. கட்டாக்காலிமாடுகள் இரண்டு வாசிக சாலைக்குள் இருந்து வெளிவந்தது.

"சே...சைக்கிலிலையே வந்திருக்கலாம்."
சலித்துக் கொண்டு சரிந்துகிடந்த தொலைபேசிக்கம்பம் ஒன்றில் குந்திக்கொண்டான். தூரத்தில் குளத்து வெளியால் பிள்ளையார்கோவில் மெர்குரி வெளிச்சம் தெரிந்தது. தெருவோரமாய் ஒரு நாய் வேதனையால் முனங்கிக்கொண்டு. வாலை மடக்கி பின்னங்கால்களுக்குள் செருகிக்கொண்டு அவனைக் கடந்து ஓடிற்று...

மூன்று நான்கு அடிகள் இடைவெளிவிட்டு இன்னும் இரண்டு நாய்கள் முன்னைய நாயை விரட்டிப் போயின... ஓடுகின்ற நாயைவிட விரட்டுகின்ற நாய்கள் உருவத்தில் பெரிதாய் இருந்தன. வேகமாயும் ஓடின... கொஞ்சம் இடைவெளிவிட்டு இன்னோர் நாய் சுவாரஸ்யம் இல்லாமல் ஓடி அவனைக் கடந்தது... சில அடிகள் தாண்டி ஓட்டத்தை நிறுத்தி சடுதியாய் நின்றது. சிலகணம் அப்படி நின்று வந்தபாதையைத் திரும்பிப் பார்த்தது. மெதுவான வேகத்தில் திரும்ப ஓடி வந்து முஸ்தபா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வந்தது. எதிர்க்க இருந்த விளக்கு இல்லாத விளக்குக் கம்பத்தில் பின்னங்காலைத் தூக்கி முட்டுக்கொடுத்துக் கொண்டு சிறுநீர் கழித்தது. கழித்து முடிந்ததும் முஸ்த்தபாவை உற்றுப்பார்த்தது... பார்த் துக்கொண்டே உறுமியது.

"உஞ்சு... ஞ்சு... ஞ்சு... ஞ்சு..."
அதற்குபுரியும் பாசையில் முஸ்த்தபா அழைக்க வாலை ஆட்டிக்கொண்டு அவனை நெருங்கி வந்தது. முஸ்தபா பயந்தான்! நாய் அவனை முகர்ந்து பார்த்தது.

"ஆர்ராது நடு ஊத்தில...?"
யாரோ ஒரு குடிகாரர் உளறிக்கொண்டே அவனைத்தாண்டி இடறிப்போனார்... நாய் அவர் பின்னே ஓடிற்று...

"ச்தூ... போ...!"
அந்தக் குடிகாரர் நாயைப்பார்த்து துப்பினார். அது நாயின் வாயைக் கட்டும் மந்திரம் போலும். நாய் அவருக்குக் குரைத்தது...
குரைத்த நாய்க்கு காலை ஓங்க - ஓங்கிய காலை நாய் கவ்விப் பிடித்து இழுத்தது.

"எண்ட அம்மோவ்...!"
கூவிக்கொண்டே அவர் ஓடினார். நாய் விரட்டிற்று. அப்புறம் தூரத்தில் ஆள் விழுகின்ற சத்தம் கேட்டது. லேசாக புன்னகைத்துக் கொண்டான் முஸ்தபா.

இருட்டின் தொலைவில் மேற்குப் பக்கமாய் ஆற்றுக்கு அப்பால் சிறு சிறு வெளிச்சங்கள் தெரிந்தது. அது பழுகாமத்தில் ஏதாவது கோவிலாக இருக்கலாம்.

"டேய் ஆர்ரா நீ?"
இனம் தெரியாத ஒரு குரல். அதுவும் முரட்டுக் குரல். அசரீரி மாதிரிக் கேட்டது. முஸ்தபா அருண்டு போனான். கல்லைவிட்டு எழுந்து கொண்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். வாசிகசாலைக்குள் திரும்பவும் சரசரப்புக் கேட்டது. பின்பக்க வேலிக்குள் இருந்து இரண்டுபேர் வருவது தெரிந்தது. வாசிகசாலைக்குள் இருந்தும் யாரோ வருவதும் தெரிந்தது... முஸ்தபாவுக்கு நிலமை புரிந்து கொள்ள முடிந்தது.

"அது நான் முஸ்தபா...!"
குரல் தட்டுத் தடுமாறிற்று. நாக்கு வரண்டது.
மூன்று பேர் அவனைச்சுற்றி நின்று கொண்டார்கள். அவர்கள் துவக்கு வைத்திருக்கிறார்கள். கையைத் தூக்கவைத்து ஆடைகளை அவிழ்த்துப் பார்த்தார்கள்.

"என்ன செய்யிரா இஞ்ச?"
எவன் கேட்டான் என்று தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“வஸிக்கி நிக்கன்.”

“எவடம் நீ?”

“மருதமுனை!”

“இஞ்ச ஏன் வந்தநீ?”

“காசி குடுக்க!”

“ஆருக்கு?”

“கணவதிக்கு!”

“எந்தக் கணவதிக்கு?”
வேறொரு கரகரத்த முரட்டுக்குரல்...

“எந்த கணபதி?”
முஸ்தபாவுக்கு புரியாது வியர்த்தது.

“வெங்காயம் செய்யிற கணவதிக்கு!”

“டேய் நடடா!”
முன்னைய குரல்காரன் உறுமினான்...

“எ...ங்...க?”
முஸ்தபாவின் மண்டைக்குள் விறுவிறுத்தது. என்னவோ விபரீதம் என்று மூளை புலம்பிற்று.

“ஒன்ன விசாரிக்க வேணும்.”

“கணபதி அண்ணனிட்ட கேட்டுப் பாருங்க. நான் காசிகுடுக்கத்தான் வந்த.”

“எந்தக் கணவதிடா...?”
உறுமலின் வேகம் முஸ்தபாவின் மார்பினில் விழுந்த உதையில் தெரிந்தது. முஸ்தபா மல்லாந்து விழுந்தான்.

“எண்ட உம்மோவ்...”
இந்த ஈனஸ்வர ஓசை பலமாய் எழுந்ததால் சில வீடுகளில் எரிந்து கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குப்பி விளக்குகளை உடனடியாய் அணைய வைத்தது....

"எங்களுக்கு தெரியும்டா... வெங்காயம் வாங்கிறம், கத்தரிக்கா வாங்கிறம் எண்டு போட்டு ஊருக்குள்ள எங்க எங்க நாங்க இரிக்கம் எண்டு ஆமிக்கி சொல்றாக்கள் ஆரெண்டு எங்களுக்கு தெரியும்டா... ஒழும்புடா... ஒழும்பு...!"

"நான் அப்படி இல்லை... இண்டைக்கித்தான் மொதலாவந்த. கணவதி அண்ணனிட்டகேட்டுப் பாருங்க. எங்கட வாப்பா கூட பொடியனுகளுக்கு காசி குடுக்கிற. வேணும்டா கணவதி அண்ணனிட்ட கேட்டுப்பாருங்க."

"ஒழும்புடா... ஒழும்பி நட... கணவதி ஊட்டக் காட்டு."
முஸ்தபா தட்டுத்தடுமாறி எழுந்து நின்றான். எழும்பி நின்றவனின் முதுகில் ஒருவன் ஓடிவந்து உதைத்தான். முஸ்தபா தார்வீதியில் குப்புறவிழுந்து தேய்பட்டு சிறுதூரம் இழுபட்டான். முகத்தில் எங்கிருந்தோ இரத்தம் கசிந்தது...
அழுதான்...
யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.
சேர்ட்டை கொத்தாய் பிடித்து ஒருவன் நிமிர்த்த முஸ்தபா சிரமமாய் எழுந்தான். மறுபடி உதைத்தான் ஒருவன் பின்பக்கமாய். நிலைதடுமாறி குப்புற விழுகிறபோது எதிர்க்க போனவன் மார்பில் உதைக்க முஸ்தபா விழாது இருந்தான். வாய்க்குள் புதுவகை இதுவரை நுகராத வாடையை சுவைக்க முடிந்தது. லேசாய் உப்புக் கரிப்பது மாதிரியும் இருந்தது.
கணபதியின் வீட்டைக் காட்டும்வரை முஸ்தபா நிலத்தில் விழவே இல்லை. அப்புறம் சரிந்து மணலில் முகம் புதையவிழுந்து விட்டான்.

"கணவதி...!"
சிறு இடை வெளி.

"கணவதி...!"
பலமாய் ஒருவன் கணவதி வீட்டுவாசலில் நின்றுகூவினான். கணபதி வீடு மந்தமாய் உறங்கிக் கிடந்தது.

"கணவதி... கணவதி..."

"ஆர்ராது நடு ஊத்தில...?"
கணபதியின் குரல் எரிச்சலாய் வீட்டின் உள் கேட்டது.

"வெட்டைக்கு வா!"
வாசல்வளை தலையில் இடித்துவிடாதபடி கணபதி குனிந்து வந்தான். குப்பி விளக்கொன்றுடன் அவன் மனைவி நிமிர்ந்தே வந்தாள். அவள் நிறையவே குள்ளமாய் இருந்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆரது...?"

"இஞ்ச வா!"
ஒழுங்கைக்குள் இருந்து சத்தம் வந்தது. நெருங்கிப் போய் யார் என்பதை அடையாளம் கண்டுகொண்டு பவ்வியமாய் மார்புக்குக்குறுக்காய் கைகளைக் கட்டிக்கொண்டு,

"நான் ஆரோ குடிகாறனாக்கும் எண்டு நெனச்சிற்றன். பிழையா நினைக்காதிங்க தம்பி" என்றான் கணபதி.

"ஒனக்கு இவன தெரியுமா?"
குளிர்காற்று ஒழுங்கையால் போனது.

"ஆரு?"

"ஒரு மருதமுனை முக்கால்."

"ஒனக்கு காசி தர வந்தானாம் எண்டு சொல்றான்."
சுருண்டு முனங்கக் கூட முடியாது ஒழுங்கையில் சுருண்டுகிடக்கும் முஸ்தபாவை அப்போதுதான் கணபதி கண்டுகொண்டான். மௌனமாய் குனிந்து அவனை உற்றுப் பார்த்தான்.

"எண்ட கடவுளே எனக்கு காசி தர ஒருவனும் வரல்லப்பா. இப்படித்தான் கனக்க சி.ஐ.டி மாரு ஊருக்குள்ள திரியிறானுகள். நேத்தோ முந்தா நாளோகூட தேத்தாத்தீவில ரெண்டு சி.ஐ.டி.ய பொடியனுகள் புடிச்சவனுகளாம்."
சொல்லிக்கொண்டே இரண்டு எட்டுப்பின்வைத்தான் கணபதி. அவன் மனைவி எதுவும் புரியாது மௌனமாய்த் திகைத்துநின்றாள்.

கணபதி சொல்வது முஸ்தபாவுக்கு இரையலாய் கேட்டது. ஆயினும் புரிந்தது. முஸ்தபா மறுத்தான் அது அவனுக்கே புரியவில்லை. முனங்கக்கூட முடியாதுகிடந்தான்.

முஸ்தபாவை காலைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோனார்கள். பீதி படர்ந்த கணபதியின் மனைவி கணபதியை மந்தமாய்ப்பார்த்தாள். கணபதி புன்னகைத்துக்கொண்டே பாயில் சரிந்தான்.

தூக்கம் வரமறுத்தது. புலன்அலைந்தது. காது கூர்மையாய் எதையோ எதிர்பார்த்தது. நேரம்நீண்டது. அரைகுறைத் தூக்கம்... விழிப்பும் தூக்கமும் அற்ற மந்தமான மயக்க நிலை...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூரத்தில் ஒற்றை வேட்டுச்சத்தம். தீர்ந்து அடங்கிற்று. வளர்ப்பு நாய் ஓடி வந்து தாழ்வாரத்தில் பதுங்கிக்கொள்வதை உணரமுடிந்தது.

“ஆயிரத்திஐநூறு ரூபாய் கையோட கம்மாரிசு”
கணபதி மனசுக்குள் பேய்கூவிற்று.
திடுக்கிட்டு அவன் மனைவி கண்விழித்து கணபதியைப் பார்த்தாள்.
தாழ்வாரத்தில் பதுங்கிய வளர்ப்பு நாய் ஏனோ எழுந்து ஓடிற்று...
தூரத்தில் எங்கோ நின்று குரைக்கிற சத்தம் கொஞ்சம் இடைவெளி விட்டுக் கேட்டது.

❑

எக்ஸில் - 1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“உனக்கு நாடு இல்லை”
என்றவனை விட
“நமக்கு நாடே இல்லை”
என்று தூபமிட்டவன் எவனோ
அவனே என்னை
விரட்டியடித்தவன் என்பேன்.



# நானும் ஒகஸ்டீனாவும் ஒரு பந்தயக்குதிரையும்

அறிமுகம் ஒன்று:- நான்

நான் என்பது நான்! அதாவது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த அதே நான்...! நான் வேலை பார்ப்பது ஒரு குதிரைப் பண்ணையில். ‘மில்டன் சிட்டி’ யில் இருந்து ‘ஜார்ஜ் டவுன்’ போகும் வளைவுப் பாதையில் இருக்கிறதே சின்னதாக ஒரு மலை... அந்த மலையின் அந்தப் பக்கம் நான்கு மைல்கள் நடந்து போனால் அடிவாரம் வரும். அங்குதான் குதிரைப் பண்ணை இருக்கிறது. எனக்கு கொஞ்சம் கிறுக்குப் புத்தி. (தெரிந்திருக்கலாம்) விபரீதமான யோசனையெல்லாம் அடிக்கடி வருவதுண்டு. (மரணத்தை மகிழ்ந்து பார்ப்பது உட்பட) ஓர்நாள் இந்தக் குதிரைக்கெல்லாம் ஆறறிவு வந்து டானியலுக்கு ஐந்தறிவு வந்தால் எப்படி இருக்கும் என யோசனை வந்தது. விளைவு சிரிப்பு. சிரிப்பின் விளைவு ஒகஸ்டீனா அறிமுகம்.

அறிமுகம் இரண்டு:- ஒகஸ்டீனா

17ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் உலகப் புகழ்பெற்ற சிவப்பு அழகியும் கிரேக்க தேசத்து இளவரசியுமான ஃசோபியா இவளைப் போன்றுதான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்திருப்பாள் என்பது என் அபிப்பிராயம். தாய்மொழி ஆங்கிலம். அம்மா பிரஞ்சுக்காரி. ஆங்கிலம் தவிர்த்து தெரிந்த பாசை 'சூலு' அந்தப் பாசையில் கவிதைகள் கூட எழுதுவாளாம்.(?) வயது என்னைவிட இருபத்தி ஏழு மாதங்கள் குறைவானவள். இவளுக்கு 'பொணிடெயில்' மிகவும் எடுப்பாய் இருக்கும். குதிரையில் இவள் பயணிக்கும் போது பார்ப்பதற்கு அழகுணர்ச்சி அவசியம் தேவை.

அறிமுகம் மூன்று:- பந்தயக் குதிரை (வைற் லக்கி)

வயது ஐந்து. வெள்ளை நிறம். இதனுடைய வால் ஒகஸ்டீனாவின் கூந்தல் போன்று அல்லாது மிக நீண்டு சடைத்திருக்கும். ஆயினும் கூட அழகாய் தோன்றும். எத்தனை அழகு இருக்கோ- இந்தக் குதிரைக்கு அதே அளவு திமிரும் உண்டு. காரணம் ஒகஸ்டீனா மாத்திரமே இதில் சவாரி செய்வதனாலோ என்னவோ? இதுவரை பந்தயத் திடலில் ஓடாததால் உடலில் ஒருவகை சொல்லவொண்ணா மென்மை.

வண்ட விட கொஞ்சம் சின்னதா இருக்கும் அந்த கொசுவோட உருப்படி. வைற்லக்கியோட மூக்குக்கு கிட்ட போய் நாலஞ்சிதரம் வட்டம் போட்டுச்சி. தலய சிலுப்பிப் போட்டு ஒரு மாதிரியா மூக்கால வைற்லக்கி சீற, அந்தக் கொசு மேல எழும்பி காணாம போயிட்டுது எண்டு நான் நினைக்க- திரும்ப வந்து முதுகில குந்திச்சுது.

ஒரு முப்பது செக்கன் இருக்கும். அந்த கொசு அசையவே இல்லை. அதோட வயிறு நெறம்பும் வரைக்கும் ரெத்தம் உறிஞ்சி எடுக்கும். அதுவரைக்கும் அசையாது 'நச்' செண்டு ஒரு அடி. வாலாலதான்! 'வைற்லக்கி' யோட குறி தப்பயில்ல. உறுண்டு கொண்டு கொசு கீழே விழுந்திச்சி.

"ஹேய்...பாப்..."
கொசுவுக்கு இன்னும் கொஞ்சம் உயிரு இருந்திச்சி.

"ஹேய் பாப் இங்கே வா!"

உறுமல் சத்தத்த வச்சே தெரிஞ்சி போச்சு. டானியல் தான்! பண்ணக்கி சொந்தக்காரன். அறுபது அறுபத்தி அஞ்சு வயது இருக்கும். இந்த வயதிலையும் ஓடி ஆடி வேலை செய்வான். இவனுக்கு சொந்தம் எண்டு ஒகஸ்டீனாவைத் தவிர ஒருவரும் இல்லப்போல... நானும் காணயில்ல.

"விரைவாய் வா மனிதா!"
டானியல் உசார்படுத்த - கொள்ளுக்குழச்ச கைய கழுவாமலேயே அவனுக்கு கிட்ட ஓடிப்போய் நிண்டான். சாம்பல் நிற குதிர ஒண்டோட புடறி மயிர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத்தரிக்கோலால் வெட்டிக்கொண்டே-

“குதிரையுடன் நெருக்கமாய் உள்ளவன்- குதிரை வேகத்தில் இருக்க வேண்டும்” எண்டான்.

அவன் பகிடியாகத்தான் சொல்றான் எண்டு எனக்குத் தெரியும். எண்டாலும் எனக்கு என்னவோ கஸ்டமா இருக்கு.
“இன்று உனக்கு பண்ணையில் வேலையில்லை. ஒகஸ்டீனாவுடன் மில்டன் நகருக்குள் போய் வா! அவள் சில ஒப்பனைப் பொருட்கள் வாங்க வேண்டுமாம்.”

இப்பிடி என்னட்ட சொல்லிப்போட்டு ஜீப்போட திறப்ப குதிரைக்கு பின்னால நிண்ட ஒகஸ்டீனாட்ட எட்டிக் குடுத்தான். நான் சரியெண்டு மண்டய மண்டய ஆட்டிப் போட்டு பண்ண வீட்டுக்குப் பின்னால இருக்கிற ‘கிறீன் கவுஸ்’சுக்குள்ள போய் அங்க இருக்கிற பைப்ப திறந்து கைய கழுவ- எனக்குப் பின்னால என்னவோ அசையிற மாதிரி இருந்திச்சி. நான் திரும்பிப் பாத்தன். கைய நெஞ்சுக்கு குறுக்கா கட்டிக்கொண்டு என்ன பாத்துக் கொண்டு நிண்டாள் ஒகஸ்டீனா.
நான் லேசா சிரிச்சன். அவளும் லேசா சிரிச்சுப் போட்டு- “இன்று எப்படி இருக்கிறாய்” எண்டாள்.

“நேற்றயப் போலவே...நீ?”

“எல்லா நாட்களையும் விட..” எண்டு ஒரு மாதிரியாய் இழுத்தாள். நான் என்னோட இமய லேசா சுருக்கிக் கேள்வி மாதிரி அவள பாக்க-

“சந்தோசமாய் சொல்லவொண்ணா புத்துணர்வாய்” எண்டு சந்தோசமாய் சொல்லிப்போட்டு பயந்து போய் திரும்பிப் பார்த்தாள். டானியல் தூரத்தில் தொழுவத்தில் நிண்டான்.

கிழவன் இருக்கேக்க ஒகஸ்டீனாவோட கதைக்க கொஞ்ச நாளா பயம். கைய கழுவுற மாதிரி கழுவிக் கொண்டு “நீ மகிழ்வாய் இருக்க காரணம் என்ன?” எண்டன்.

“நீயும் நானும் எதிர்வரும் தனிமையும்” எண்டாள்.

என்ன அர்த்தத்தில் சொல்றாள் எண்டு எனக்கு விளங்கையில்லை. கைய வடிவா கழுவித் துரைச்சிப் போட்டு ஒண்டுமே கதைக்காம ஜீப்புக்குள்ள ஏறி இருந்தன். ஒகஸ்டீனா ஸ்ராட் பண்ணி ஓடினாள்.

இப்பிடி நானும் இவளும் நெருக்கமாகுவம் எண்டு நான் கனவுல கூட நினைச்சுக்கூட பாக்கயில்ல. மூணு மாதத்துக்கு முதல்- ஒகஸ்டீனாவும் கனவுலவாற தேவதையும் ஒண்டுதான் எனக்கு. பாக்கலாம். ரசிக்கலாம். கண்ண மூடி கலவி கூட பண்ணலாம் ஆனா தொட ஏலாது. ஒகஸ்டீனா எண்டால் கனவுக்கன்னி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவ்வளவுதான்!

'வைற்லக்கி'ல இருந்து ஒகஸ்டீனா இறங்கிப் போனதுக்குப் பிறகு அதோட முதுகக்கூட தொட்டுப் பாத்திருக்கிறன். அவ்வளவுதான். அதிகபச்சம் அவளால நான் அடஞ்ச சந்தோசம். மத்தப்படி அவள விதம் விதமா கற்பன பண்ணிப் பாக்கிறது. மடிசார்கட்டி ஸ்ரீரங்கத்து பாப்பாத்தி மாதிரி. சீல கட்டின என்னோட அம்மா மாதிரி. சுடிதார் போட்டு, பட்டுக்கட்டி, நான் அவளுக்கு தாலிகட்டி, அவள் எனக்கு சோறாக்கித் தந்து, புள்ள பெத்துத் தந்து, தமிழ் கதைச்சு, அவளோட இலங்கைக்கு போய், படுவான்கரையெல்லாம் சுத்திக்காட்டி அங்கேயே காலம் முழுக்க தங்கி நான் போடியாராகி அவள் போடியார் பொண்டாட்டியாகி... இப்பிடி விதம் விதமா கற்பன பண்ணி சந்தோசப்பட்டு காலம் கடத்தின காலம் பொயிட்டுது.

இப்பிடித்தான் ஒருநாள் குதிரையெல்லாம் குளிப்பாட்டி புல்லுப்பக்கம் மேயிறதுக்கு அனுப்பிப் போட்டு அதுகளோட சாணத்தையும் அள்ளி மடுவில கொண்டு கொட்டிப் போட்டு - லயத்தையும் நல்ல வடிவா சுத்தமா கழுவிப்போட்டு புல்லுக்கட்டுக்கு மேல ஏறி வசதியா மல்லாக்கப் படுத்துக் கொண்டு கனவு காணத் தொடங்கித்தன்...

புதுசா வித்தியாசமான கனவு ஒண்டும் இல்ல. பிருதிவிராஜன் கனவு. 'வைற்லக்கில நான் வாறன். தோள்வரைக்கும் வளர்ந்த சுருள் முடி. இப்ப இருக்கிற தாடிய விட இன்னும் கொஞ்ச வளர்ந்த தாடி. முறுக்கின மீச. இடுப்பில மட்டும் வேட்டி. சட்ட போடாத வெறும் உடம்பு. முறுக்கேறுன உடம்பு. இடையில் வாள் தொங்கிது. நான் வேகமா வைற்லக்கியில வாறன். ஒகஸ்டீனா ஆவலா என்ன பாக்கிறாள். நான் வாற வேகத்தில எனக்கு பின்னால புழுதி கிளம்புது. ஒகஸ்டீனா என்னப்பாத்து ஓடி வாறாள். டானியல் அவள ஓடிவந்து புடிக்கிறான். திமிறிப் போட்டு ஓடிவாறாள். ஓடி வந்தவள அலாக்கா தூக்கி எனக்கு முன்னால வைற்லக்கில வைச்சுக் கொண்டு பண்ணையில இருந்து தப்பிப் போறன்.

சோக்கான கற்பன சுகத்தில. சிங்கார மயக்கத்தில வாய் நிறைய புன்னகையோட கண் சொக்க கெறங்கிப் போய்- புல்லுக்கட்டுக்கு மேல கிடந்தன். மூடுன கண்ணுக்கு முன்னால நிழல் மாதிரி என்னவோ அசைந்திது. பயந்து போய் கண்ணைத் திறந்தன். ஒகஸ்டீனா எனக்கு முன்னால நிண்டாள். என்னப்பாத்து அவள் நட்பா சிரிச்சாள். நானும் சிரிச்சன்.

"குதிரைக்கு ஆறறிவு வந்தது போன்று வேறு ஏதேனும் இனிப்புக் கனா காண்கிறாயா?"

ஒரு மாதிரியா என்ன பாத்துக்கொண்டு இருந்தாள்.

முக்கால் தொடை தெரியிற மாதிரி காச்சட்டை போட்டிருந்தாள். அதக்கூட மேல்பக்கமா சுருட்டி விட்டிருந்தாள். உள்ளுக்க கறுப்பு 'பிறா' போட்டிருக்காள் போல... வெள்ள வெனியனுக்கு மேலால லேசா தெரிஞ்சிது. எனக்கு சங்கடமாயும் இருந்திச்சி.சந்தோசமாயும் இருந்திச்சி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“சொல்லேன் ஏதேனும் கனவு கண்டாயா?” கண்ண அகட்டிக் கேட்டாள். தலையை லேசாய் நான் ஆட்டினேன். இதோட அர்த்தம் ஓமா, இல்லையா எண்டு எனக்கே விளங்கையில்ல.

“எனக்கும் சொல்லு.”

நான் பேசாம நிண்டன். பச்ச புல்லொண்ட எடுத்து ரெண்டு துண்டா கடிச்சி கீழ போட்டன். அவள் எண்ட வயித்தில குத்தினாள். எனக்கு ஒரு மாதிரியா இருக்க தள்ளி நிண்டன்.

“முன்னேறு பாப்... டானியல் பண்ணையில் இல்லை.”

“நீ டானியலிடம் சொல்வாய். நான் மாட்டேன்.”

நான் சொல்ல பேசாமல் நிண்டாள். அழுவாள் மாதிரி இருந்திச்சி. கொஞ்ச நேரம் கண்ண இமைக்காம என்ன பாத்தாள். மறுகா ஒண்டும் பேசாம வீட்டுப்பக்கமா நடக்க துடங்கினாள். எனக்கு அவள பாக்க பாவமா இருந்திச்சி.

“ஒகஸ்டீனா”
நான் கூப்பிட்டேன்.

“ஒகஸ்டீனா”
பேசாம நடந்து கொண்டிருந்தாள்.

“நான் சொல்கிறேன்” எண்டு நான் சொல்ல எனக்கு கிட்ட ஓடி வந்து என்ன புல்லுக்கட்டுக்கு மேல தள்ளிப் போட்டுத்து லேசா கண்ணால மட்டும் சிரிச்சாள். ஆனா கண் கலங்கித்தான் இருந்திச்சி.

“எனக்கு சொல்... எனக்கு சொல்...” எண்டு ரெண்டு தரம் கேட்டாள். பிறகு

“என்ன கனவு” எண்டாள்.

“பிருதிவிராஜன் கனவு” எண்டன்.

“யார் கனவு?”

“பிருதிவிராஜன்”

“யார்?”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“பிருதிவிராஜன்”

“யார்? அது பாத்திரமா? இல்லை மனிதனா?”

சுவாரஸ்யமாகி கண்ணெல்லாம் அகட்டி கேட்டாள். கண் இமை வடிவா இருக்கிறதுக்கு போடுற ‘மஸ்கரா’ லேசா கரைஞ்சி இருந்திச்சி.

“நிஜ மனிதன், பாத்திரம், ஒரு ராஜா, எங்கள் இலக்கியத்தில் உள்ளது.”

“சொல்”
நான் சுவாரஸ்யம் அடைகின்றேன்.

“நீ இலக்கியம் அறிவாயா? நான் கூட ‘சூலு’ இலக்கியம் மற்றும் ஆங்கில இலக்கியமும் அறிவேன்.”

சொல்லிக்கொண்டே என்ன உரசிக் கொண்டு புல்லுக் கட்டுல இருந்தாள். அவளோட தொட எண்ட கையில லேசா பட்டிச்சி. குளிர்ர மாதிரியும் இருந்திச்சி. சுட்ட மாதிரியும் இருந்திச்சி.

“முன்னர் ஓர் காலத்தில் பாரத கண்டத்தின் வடதிசையில் கன்னோசி என்றோர் நாடு இருந்தது. அந்த தேசத்தை ஆண்ட ஜெயச்சந்திரன் என்கின்ற ராஜாவுக்கு சம்யுக்தை என்ற ஓர் மகள். அழகில் சிறந்த இளவரசி. அவள் மேல் பிருதிவிராஜா என்கின்ற ராஜபுத்திர வீரவம்சத்தில் வந்த இன்னோர் ராஜாவுக்கு காதல். காதலுக்கு ஜெயச்சந்திரன் தடைபோட, சம்யுக்தையை குதிரையில் வந்து கவர்ந்து சென்று மணம் முடித்தான் பிருதிவிராஜா.”

ஒரு அரைமணிநேரம் அவளுக்கு சுவாரஸ்யம் குறையாம கதையைச் சொன்னன். இடையில எதுவும் கேக்காம கதையக் கேட்டாள். பிறகு ஒரு ஐஞ்சு நிமிசம் அப்பிடியே அசையாம அப்பிடியே இருந்தாள். கொஞ்ச நேரம் கழிச்சி திடீரென்று என்ன ஒரு மாதிரியா பாத்துப்போட்டு...

“சரி. இந்த இலக்கியக் கனவில்... இப்பொழுது... ஜதார்த்தத்தில் யார் யார் எந்த எந்த பாத்திரம் ஏற்றார்கள்?” எண்டு கேட்டாள்.

“நீ சம்யுக்தை, அந்தக் குதிரை நமது அதிஸ்டவெள்ளை, நான் பிருதிவிராஜன், ஜெயச்சந்திரன்தான் உனது தாத்தா டானியல்”

நான் சொல்லி முடிச்ச உடன ஒண்டும் கதைக்கயுமில்ல, பேசயும் இல்ல. லயத்தை விட்டு ஓடிப்போய் ‘கிறீன் கவுஸ்’ சுக்குள்ள பூந்தித்தாள். அவள் எழும்பி போகேக்க அழுகிற சத்தம் வந்த மாதிரி இருந்திச்சி. அவள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழுகிறாளா எண்டு நிச்சயமா என்னால கண்டுபிடிக்க ஏலாம போயிட்டுது. எனக்கு பயம் புடிச்சித்து. தேவையில்லாம அவளிட்ட சொல்லிப்போட்டன். இண்டயோட வேல காலி. கட்டாயம் டானியலிட்ட சொல்லிப் போடுவாள். நான் ஒரு கூலி வேலக்காறன். குதிர கழுவுறவன், அதுவுமில்லாம கறுப்பன். நான் கனவு காணலாம். ஒரு வெள்ளக்காறிய நினைச்சு. அதுவும் இந்தப் பெரிய பண்ணக்கிம் முப்பத்தேழு குதிரைக்கும் சொந்தக்காரிய. டானியல் கிழவன் விசயத்தைக்கேட்டுப்போட்டு சிரிக்கிறானோ, அடிக்கப்போறானோ தெரியாது. எதுக்கும் டானியல் கிழவன் வரமுதல் நான் இஞ்ச இருந்து ஓட்டம் பிடிக்கிறது தான் நல்லது. எண்டு நான் யோசிச்சுக்கொண்டு இருக்கேக்க ஒகஸ்டீனா கைப்பா சிரிச்சுக்கொண்டு எனக்கு கிட்ட மறுகாயும் வந்து நிண்டாள். நான் ஒண்டும் பேசாம வைற்லக்கிய பாத்தன். அது வால வால ஆட்டிக்கொண்டு நிண்டிச்சி.

"நீ எப்போது அப்படி வருவாய்...? வந்து எப்போது நிஜமாகவே என்னை நீ கடத்திக்கொண்டு (கவர்ந்து) செல்வாய்?" எண்டு ஒரு ஆதங்கத்தோட கேட்டாள்.

"இல்லை. அது வெறும் கனவு"

"கனவாகவே இருக்கட்டும் அது. ஆயினும் என்னை எங்கேனும் இங்கிருந்து மீட்டுச்செல்லாயோ?" எண்டு கேட்டு எண்ட சேட்ட புடிச்சி உலுக்கினாள்.

நான் தெகைச்சிப் போய் நிக்க புல்லுக்கட்டுக்கு மேல சாய்ச்சிகொண்டு கேவிக் கேவி அழுதாள். கன நேரமா அழுதாள். வைற்லக்கி ஒரு மாதிரியா திரும்பி அவளப் பாத்திச்சி. பிறகு கனைச்சிது. எனக்கு ஒகஸ்டீனாவைப் பாக்க பாவமா இருந்திச்சி. பிறகு புல்லுக்கட்டுல சாய்ஞ்சி நிண்டுகொண்டே கண்ணை தொறைச்சாள். நான் அப்பயும் பேசாமத்தான் நிண்டன். அவளோட சட்டையில புல்லொண்டு ஒட்டிக்கொண்டிருந்திச்சி. அத எடுத்துக்கொண்டே "நீ நினைப்பது போன்று டானியல் ஒன்றும் என் பாட்டனார் இல்லை." எண்டு ஒரு மாதிரியான விரக்தியா சொன்னாள். எனக்கு ஒரே ஆச்சரியமா இருந்திச்சி.

"ஹேய் பாப்"

காத்து முகத்தில நல்லா பட்டிச்சி. ஓர வாக்கில திரும்பினன். ஒகஸ்டீனா நல்ல ஸ்டைலா ஜீப் ஓட்டிக்கொண்டு இருந்தாள்.

"பாப்... ஏதேனும் கனவு காண்கின்றாயா?"
நான் தலய ஆட்டினன்.

கலியாணம் முடிக்க முதல் இவளுக்கு ஒழுங்கா எண்ட பேர பாபு எண்டு உச்சரிக்க சொல்லிக் குடுக்கவேணும். டானியல் மாதிரி இவளும் "பாப்... பாப்" என்னுறது ஒரு சாங்கமாய் இருக்கி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பின் எதற்காய் மௌனமாய் இருக்கின்றாய்?"

"ஒன்றுமே இல்லை."

"வாயேன் நாம் இப்படியே ஓடிப்போய்விடலாம். இந்த வாகனத்தை இதே இடத்தில் நிறுத்திவிட்டு யாரிடமாவது உதவி கேட்டால் ரொறண்டோ நகருக்குள் கொண்டு போய் விடுவார்கள். நாம் அங்கு இலகுவில் தொலைந்துவிடலாம். டானியலுக்கு தெரியாமல்! உணவு விடுதியில் பாத்திரம் கழுவியோ, மலசலகூடம் துப்பரவு பண்ணியோ நாம் பிழைத்துக் கொள்வோம். ரொறண்டோ நகருக்குள் போய்விட்டால் நம்மை டானியலால் கண்டுபிடிக்க முடியாது. உனக்கு நான் குழந்தை பெற்று தருகின்றேன். தேவைக்கதிகமாய் காதல் புரிகின்றேன். வா ஓடிப்போயிடலாம்! டானியல் முட்டாள் நம்மைத் தேடட்டும். உனக்கு குழந்தை என்றால் பிரியம் இல்லையா?"
கேள்விக்குறியோட ஜீப்பையும் றோட்டோரமா நிப்பாட்டினாள்.

"இரண்டு வாரங்கள் பொறுமையா இரேன். நான் இப்போது பிரம்மச்சாரிகளுடன் தான் தங்கி இருக்கின்றேன். சிறிது நாட்கள் கொடுத்தாயேயானால் நாம் வாழ்வதற்கு ஒரு இடம் ஏற்பாடுபண்ணிவிட்டு உன்னை அழைத்துச் செல்கின்றேன். என் தேன் அல்லவா நீ!"
எண்டு நான் அவளுக்கு ஆதரவா சொல்ல எண்ட தோள்ள சாஞ்சி கொண்டு அமைதியா இருந்தாள். நான் அவளோட தலய லேசா தடவி விட்டன். அவளோட கண்ல இருந்து லேசா கண்ணீர் வந்திச்சி.

"டானியலின் கொடுமை தாங்க முடியவில்லை பாப். இரவாகிவிட்டால் மிருகம் மாதிரி இயங்க ஆரம்பித்துவிடுகின்றான் தப்பு வழியில் பிறந்த அந்த வேசிமகன். இத்தனை வயதாகியும் எப்படி இவனால்... நான் ஒரு மனிசி என்கின்ற எண்ணமே இரவானால் அவனுக்கு வரமாட்டேன் என்கின்றது. மூன்று நாட்கள் தவிர்த்து மற்றய நாட்கள் எல்லாம் நான் இறந்து விடுகின்றேன் பாப்."

குலுங்கிக் குலுங்கி அழுதாள். எனக்குக் கூட அடக்க முடியாம அழுகையா வந்திச்சி. அவுந்து கெடந்த அவளோட கூந்தல லேசா கோதிவிட்டன்.

"நன்றி அன்பானவனே!"
லேசா முணுமுணுத்தாள்.

எனக்கு இவளப் பாக்கப்பாக்க பாவமாய் இருந்திச்சி. இவ்வளவு சின்ன வயதில ஒரு பொம்புளப் புள்ளைக்கி இவ்வளவு கஸ்டம் வரப்போடாது. ஒகஸ்டீனா சரியான பாவம்!

முன்பெல்லாம் இவளப்பத்தி எனக்கு அவ்வளவு நல்ல அபிப்பிராயம் இல்ல. என்னவோ பெரிய அழகு ராணி என்ற நெனப்பு இவளுக்கு எண்டு மனசுக்குள்ள புழுங்கியவன்... வைற்லக்கி மாதிரி இவளுக்கும் திமிர் எண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிக்கடி நினப்பன்... அந்த நெனப்பு புல்லுக்கட்டுல அவள் சரிஞ்சுகொண்டு அழுகிறவர இருந்திச்சி. அதுக்குப்பிறகு இரக்கம் வரத் தொடங்கிட்டு. அந்த இரக்கம் வர அவள்ள இருந்த அவிப்பிராயம் மாறி காதல் வரத் தொடங்கிட்டு. அந்தச் சம்பவத்த இப்ப நெனச்சாலும் இதயத்தில நட்டுவாக்காலி நடக்கிறமாதிரி இருக்கும்.

"நீ நினைப்பது போன்று டானியல் ஒன்றும் என் பாட்டனார் இல்லை." எண்டு ஒரு மாதிரியான விரக்தியாச் சொன்னாள்.
எனக்கு ஒரே ஆச்சரியமாய் இருந்திச்சு.

"ஓகோ... காலம் கடந்து பிறந்தவளா நீ? அப்பா தாத்தா வயதில் இருக்கிறாரே என்று உனக்கு கவலை போலும் இல்லையா?"

"முட்டாள்"
எங்கேயோ பாத்துக்கொண்டு என்னத்தான் அப்படிச் சொன்னாள்.

"நீ நினைப்பது போன்று டானியல் எனக்கு தாத்தாவும் இல்லை. அப்பாவும் இல்லை."
உச்ச தொனியில் தொடங்கி மெல்ல முடிச்சாள்.
எனக்கு இன்னும் ஆச்சரியம். மெல்ல திரும்பி அவளப் பாத்தன். அப்படியெண்டா? "நீ வளர்ப்புப் பேத்தியா?" எண்டு கேக்க வேணும் போல இருந்திச்சி. எண்டாலும் கேக்காம நிண்டன்.

"எனக்கே தெரியவில்லை பாப்..."
லேசா அழுதாள். கொஞ்ச நேரம் பேசாம இருந்தாள்.

"டானியல் எனக்கு என்ன உறவு என்று தெரியவில்லை பாப். டானியலை பொறுத்தவரைக்கும் தசையும் அழகும் இளமையும் கொண்ட அற்புத இயந்திரம் நான். அவ்வளவே..."
ஒகஸ்டீனாவில லேசா கோவம் வந்திச்சி
"அப்படியெனில் நீ பணத்துக்காய் சுகம் கொடுக்கும் பெண்ணா?"
எண்டன் ஆச்சரியத்தோடயும் ஆத்திரத்தோடயும்.

"நீ என்னை தவறாகவே புரிந்து கொள்கிறாய் பாப். நான் சிறை பிடிக்கப்பட்ட மாதிரி... அடிமையாக்கப்பட்ட மாதிரி... வேறு வழி தெரியாது மல்லாக்கப்படுத்து இரவு தோறும் மிருகத்தின் வேட்கைக்கு இரையாகின்றேன்."

"டானியல் அப்படிப்பட்டவனா."

"........................................................"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீ எப்படி அப்படி ஆனாய்?"

"ஒரு டால்மேசன் நாயால"

"டால்மேசன் நாயா?"

"ஆமாம் வெள்ளை நிறத்தில் உயரமாய் உடல் எங்கும் கறுப்பு புள்ளி போட்டு இருக்குமே... அந்த உயர்வகை ஜாதி நாய் ஒன்றுதான் என் இந்த கொடிய வாழ்க்கைக்கு காரணம், என்றால் உனக்கு ஆச்சரியமாய் உள்ளது அல்லவா? ஆமாம் பாப் நாய் ஒன்றுதான் என் வாழ்வு சிதைய காரணம்." எண்டு சொல்லிப்போட்டு கொஞ்ச நேரம் பேசாம இருந்தாள்.

"என் துன்பத்தை யாரிடமாவும் சொல்ல வேண்டும் போல் இருக்கிறது. சொன்னால் பாப் கேட்குமா? பாப் எனக்கு ஆறுதல் சொல்லுமா? தயவு செய் என் நண்பா" நிமிர்ந்து அவளப்பாத்தன். அந்த பார்வையில் ஆதரவு தடவி இருந்தது. அவள் விளங்கிக் கொண்டாள்.

"நன்றி நண்பனே... நீ அறிவாயா? நான் இந்த நாட்டை சேர்ந்தவளே இல்லை. எனது சொந்த ஊர் தென் ஆபிரிக்காவில் உள்ள ஒரு சிறிய பட்டணம். எனது பாட்டனார் நூறு வருடங்களுக்கு முன் லண்டன் நகரில் இருந்து வந்து குடியேறியவராம். என் அம்மா அப்பாவுக்கு நான் ஒன்றுதான் வாரிசு என்று நினைத்திருந்தேன். ஆனால், அவர்களுக்கு ஒரு நாய்கூட வாரிசு என்பது எனக்குத் தெரியாது போனது. ஆமாம் பாப். எங்கள் வீட்டு நாய் பக்கத்து வீட்டு கறுப்பு இனத்தவருடைய ஆண் நாயுடன் கலவியில் ஈடுபட்டு விட்டது. இதைக் கண்ட என் முட்டாள் அப்பா என்ன செய்தார் தெரியுமா? பக்கத்து வீட்டு கறுப்பு இனத்தவனை அடித்தே கொன்றுவிட்டார். இப்படி ஒரு கொடுமை எங்கேனும் இருக்குமா என்று புரியவே இல்லை. கறுப்பு இனத்தவர் என்றால் அடிமைகள் என்று அர்த்தமா? உணர்ச்சி இல்லாதவர் என்று அர்த்தமா? அவர்களும் பதிலுக்குப் பழிவாங்கிவிட்டார்கள். அங்கு ஒரு தீவிரவாத இயக்கம் உள்ளது. போதை வஸ்து வியாபாரிகளை வீதியில் வைத்து உயிருடன் எரித்துவிடுவார்கள். இந்த இயக்கத்தின் பெயரைச் சொல்லி என் பெற்றோரை உயிருடன் வீதியில் வைத்து எரித்துவிட்டார்கள். நான் எப்படியோ தப்பித்தேன். அதுதான் யேசு எனக்கு செய்த கொடுமை..."

அவள் சொல்ல எனக்கு ஆச்சரியம் எண்டா ஆச்சரியம். இந்த ரெண்டு விசயமும் மூன்று வரிசத்துக்கு முதல் பேப்பரிலையும் ரெலிவிசனிலையும் செய்தியா படிச்சதும் பார்த்ததும் ஞாபகத்துக்கு வந்திச்சி.

"ஏன் பாப் மௌனமாய் உள்ளாய்? என் கதை உனக்கு இரக்கத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்டுபண்ணவில்லையா?"
சிரிச்சிக் கொண்டே கேட்டாள்.
எப்படி இவளாலை சிரிக்க முடியுது.

"எனது பெற்றோர்கள் உயிருடன் எரிக்கப்பட வேண்டியது நியதி- நியாயம்- அது பாவத்தின் சம்பளமும் கூட. நான் ஏன் தண்டிக்கப்படுகிறேன் என்பதுதான் எனக்குப் புரியவில்லை."

"நீ எப்படி டானியலிடம் மாட்டிக்கொண்டாய். தென் ஆபிரிக்காவில் இருந்து கொண்டு?"

"இல்லை பாப். நான் இந்த நாட்டுக்கு அகதியாய் ஓடிவந்தவள். என்னையும் கொன்று விடுவார்களோ என்று பயந்து இந்த நாட்டுக்குத் தப்பி ஓடி வந்தவள். இப்போது புரிகிறது அப்படி வந்தது தவறு என்று. அங்கேயே எரிந்து தொலைந்திருக்கலாம். டானியலுக்கு ஒரு கிராமிய நடன அரங்கம் ஜூர்ஜ்டவுனில் இருக்கிறதே தெரியுமா உனக்கு?"

"தெரியும் நான் கூட அங்குதான் வேலை பார்த்தேன். என்னை டானியலுக்கு மிகவும் பிடிக்கும் அதனால் இங்கு கூட்டி வந்தான். எதற்கு கேட்கிறாய்?"

"அங்குதான் டானியலிடம் மாட்டிக்கொண்டேன்."

"அங்கேயா? எப்படி?"

"நான் இந்த தேசத்துக்கு புதிது என்பதை புரிந்து கொண்டு ஏறக்குறைய கடத்திக்கொண்டு வந்தமாதிரி- மதுவை அளவுக்கு அதிகமாய் அருந்தவைத்து- கட்டாயப்படுத்தி- பயம்காட்டி இங்கு கொண்டுவந்துவிட்டான்."

"நம்ப முடியாமல் இருக்கின்றது. டானியல் மிக நல்லவன் அல்லவா?"

"இல்ல பாப் நீ டானியலைப்பற்றி தெரிந்து வைத்துக்கொள்ளவில்லை. அவன் மாபியா இயக்கத்தைச் சேர்ந்தவன். இத்தாலியில் இருந்து நாற்பது வருடங்களுக்கு முன் தப்பி ஓடி இங்கு வந்தவன். இத்தாலியக் காவலர்களின் கெடுபிடிக்குப் பயந்து இங்கு ஒளிந்து வாழ்கிறான். இப்போதும் கூட இரவில் சிலர் வந்துபோவார்கள். நீ இங்கு தங்காததால் உனக்குத் தெரிவதில்லை."

எண்டு சொல்லிப்போட்டு வைற்லக்கிய பாத்தாள். வைற்லக்கி ஒரு காலத்தூக்கி உதறிச்சிது. நான் அவளோட தோள்ள கைய வைச்சன். தலைய சரிச்சு கன்னத்த என்னோட புறங்கையில வைச்சாள். கன்னம் ஈரமா இருந்திச்சி. ஒகஸ்டீனாவை எப்படியும் காப்பாத்த வேணும் எண்டு என்ர மனசில எண்ணம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரத் தொடங்கிட்டுது.
ஒகஸ்டீனாவோட மில்டன் சிற்றிக்குள்ள போய் சாமான் எல்லாம் வாங்கிக்கொண்டு பண்ணக்க வரேக்க பொழுது லேசா சாஞ்சிகொண்டு இருந்திச்சி. கிறீன்கவுசுக்குக் கிட்ட ஜீப்ப நிப்பாட்டினாள். வைற்லக்கி கொள்ளுச் சாப்பிட்டுக்கொண்டு கிறீன்கவுஸ் மூலையில நிண்டிச்சி. அதப் பாக்க என்னவோ வித்தியாசமா இருந்திச்சி. ஒகஸ்டீனாவும் அத கவனிச்சிட்டாள் போல... ஓடிப்போய் கிட்டப் பாத்தாள். நானும் பாத்தன். சடையா நல்ல வடிவா இருக்கிற அதோட புடறி மயிர் ஒட்ட வெட்டி இருந்திச்சி. ஒகஸ்டீனா கவலையா அதோட புடறிய தடவ - டானியல் பின்பக்கம் இருந்து வந்தான்.

"தேனே... உனது அதிஸ்ட வெள்ளை நாளை பந்தயத் திடலில் ஓடப் போகிறது" எண்டான் டானியல். ஒகஸ்டீனாவோட தோள்ள கை போட்டுக்கொண்டு.

"ஹேய் பாப்... இன்று போய் நாளை வா! நாளை நாங்கள் யாருமே பண்ணையில் இருக்கப் போவதில்லை. பண்ணையை பத்திரமாய் பாத்துக் கொள்"
எண்டு என்னட்ட சொல்லிப்போட்டு ஒகஸ்டீனாவை தோளுக்கால கை போட்டு வீட்டுக்குள்ள கூட்டிப் போனான். எதேச்சையா திரும்பிப் பாக்கிற மாதிரி ஒகஸ்டீனா என்ன பாவமா பாத்தாள்.
டானியல வெட்டிக் கொல்ல வேணும் போல ஆத்திரம் வந்திச்சி. மனசுக்குள்ளயே கறுவிக்கொண்டு பஸ் புடிச்சி வீட்டுக்குப் போக மலைக்கு அந்தப் பக்கம் நடக்கத் தொடங்கினன்.
ராவு முழுக்க நித்திர வரயில்ல... ஒகஸ்டீனாவ டானியல் இப்ப என்னென்ன செய்வான் எண்டு கற்பன பண்ணிப்பாக்க பயம் பயமாவும் பாவமாவும் வந்திச்சி. விடியப் பண்ணக்கி போய் சேரேக்க ஒம்பது மணியாயிட்டுது. ஒருவரும் இருக்க மாட்டாங்க எண்டு நெனச்சு போன எனக்கு ஒரே ஆச்சரியம். ஒகஸ்டீனா வாசல்லேயே நிண்டாள். என்னக் கண்ட உடன ஓடிவந்து எனக்கு கிட்ட நிண்டு கண்ணால சிரிச்சாள். இவள பாக்க மனசுக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு. எவ்வளவு மென்ம இவளோட சிரிப்புல.

"நீ பந்தயத் திடலுக்குப் போகவில்லையா?"

"இல்லை. உடம்புக்கு முடியவில்லை என்று மறுத்துவிட்டேன். இன்று உன்னுடன் தனிமையில் இருக்க வேண்டும் என்று இரவே திட்டமிட்டுவிட்டேன்."
சிரிச்சாள். இண்டக்கி மாதிரி இவளோட முகத்தில் நான் எப்பையுமே சந்தோசத்த பாக்கயில்ல.

"ஏன் நீ தாமதித்து வந்தாய்?"
சிரிச்சுக் கொண்டு ஆனா கோவமா கேட்டாள்.

"நீ இருப்பாய் என்று எனக்குத் தெரியாதே."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வா பாப்! நான் உனக்கு உதவுகிறேன். இருவருமாய் லயத்தை துப்பரவு பண்ணிவிட்டு அந்த மலையடிவாரம் வரை உல்லாசமாய் போய் வருவோம்"

என்னோட சேந்து எல்லா வேலையும் செஞ்சு தந்தாள். எத்தனை பரிவான புள்ள இவள்.

"பாப் உனக்கு நான் ஒரு 'சூலு' மொழிக் கவிதை ஒன்று படித்துக் காட்டட்டுமா?"

எண்ட கழுத்துக்குள்ளால ரெண்டு கையயும் போட்டு இறுக்கிக் கொண்டு கேட்டாள். அவளோட வாயில இருந்து ஏதோ ஒரு நல்ல வாசம் வந்திச்சி. அவளோட உதடு எண்ட வாய்க்கு கிட்ட இருக்கிறதால கிஸ் பண்ண வேணும் போல இருந்திச்சி, ஆனா பண்ணயில்ல.

"எனக்கு 'சூலு' பாசை தெரியாதே."
நான் சொல்ல சிரிச்சாள்.

"நான் சூலு பாசையில் சொல்லவில்லை. உனக்கு புரியும்படியாய் மொழி பெயர்த்துச் சொல்கின்றேன்."

"சரி படித்துக்காட்டு."

புல்லுக்கட்டுல போய் இருந்தாள். நான் அவளுக்கு முன்னால நிண்டன். என்ன இழுத்து அவளுக்கு பக்கத்தில இருத்தி தோள்ள சாஞ்சு கொண்டு கவித சொன்னாள்.

**சூரியன் இறந்து விட்டான்**
**அவன் இன்னும் ஏமாற்றவில்லை**
**எண்ணத் தோன்றுகின்றது**

**காத்திருப்பின் அர்த்தம்**
**அர்த்தமற்றதாகவே போய் விடக் கூடும் என்று**
**இருட்டு சொல்லிற்று**

**கல் ஒன்றை வீச**
**ஊனமான நிலா**
**உடைந்து சிதறியது........... ஓடை நீரில்**
**நான் நம்பிக்கை இழக்கவில்லை.**
**அண்ணாந்து பார்க்கின்றேன்**
**நட்சத்திரங்கள் புன்னகைத்துக் கொள்கின்றன**
**வலுத்தவன் உடைந்து சிதறியதில்**
**முழுதாய் இருட்டிற்று.**
**நம்பிக்கை இன்னமும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பகல் நேர வெளவால் வடிவில்.**
**ஒற்றை ரோசாப் பூவும்**
**ஒவ்வொரு இதழ்களாய்**
**ஓடை நீரில் உதிர்ந்து ஓடிற்று**
**காம்பு மாத்திரமே என் கையில்...**
**அவன் வருகை**
**இன்னமும் என்னால் நம்பப்படுகிறது.**

**மறுபடி மறுபடிவரும்**
**மாலைப் பொழுதில்**
**ஒற்றை ரோசாப் பூவும்**
**ஓடைக் கரையும்**
**என் காதலும்**
**உயிர்ப்புடனேயே இருக்கும்**
**சூரியன் இறந்து விட்ட போதிலும்**

“எப்படி உள்ளது பாப்?”

எனக்கு கருத்துச் சொல்ல தெரியல்ல... அதால பேசாமலேயே இருந்தன். ஆனா மனசுக்குள்ள என்னவோ கெடந்து அடிக்கிற மாதிரி பாரமா இருந்திச்சி.

“வாயேன் மலையடிவாரம் போய் வருவோம்.”

நான் சரியெண்டு போட்டு நடக்கத்தொடங்கினேன். எண்ட கைய புடிச்சிக் கொண்டு கொஞ்ச தூரம் நடந்து வந்தாள். மறுகா பருந்து மாதிரி கைய அகலமா விரிச்சிக் கொண்டு ஓடுனாள். புல்லுல மல்லாக்கா வானம் பாத்து படுத்தாள். மறுகா ஓடிவந்து எண்ட கைய புடிச்சிக் கொண்டு நடந்து வந்தாள். பாவம்! இந்தக் குழந்தைக்கு இவ்வளவு கஷ்டம் வர என்ன பாவம் பண்ணுனாளோ. நான் இவளுக்கு கனக்கயா அன்பு காட்ட வேணும். கல்யாணம் முடிச்சி கண்கலங்காம பாத்துக் கொள்ள வேணும்.

“பாப் இப்படி தரையில் அமர்ந்து கொள்ளேன்.”

புல்லு தரய காட்டினாள். நான் கட்டுப்பட்டு புல்லுத்தரயில இருந்தன். அவளும் எனக்கு கிட்ட இருந்து கொண்டு மடியில தலய வச்சு படுத்தாள்.

“பாப் உனக்கு சிரமம் இல்லையா?”
தலய ஆட்டினாள்.

“என் தலையை தடவிக்கொடேன்.”
தடவிக்கொடுத்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏதேனும் கவிதை பாடேன்"

"உனக்கு புரியும் படியாய் கவிதை பாட எனக்கு போதிய படிப்பறிவு கிடையாதே"

"இல்லை பாப் உன் மொழியில்... உனக்குத் தெரிந்த கவிதை பாடு. பாடும்போது என்னை இறுக்க அணைத்துக்கொண்டு மார்பில் தலை வைத்துக்கொண்டு பாடு..."

**அந்த நேரமும் நின்மையல் ஏறுதடி**
**குறவள்ளி! சிறுகள்ளி!**
**இந்த நேரத்திலே மலை வாரத்திலே நதி**
**யோரத்திலே யுனைக் கூடி நின்றன்**
**வீரத் தமிழ் சொல்லின் சாரத்திலே**
**மன மிக்க மகிழ்ச்சி கொண்டாடி**
**குழல் பாரத்திலே இதழீரத்திலே முலையோரத்திலே**
**யன்பு சூடி– நெஞ்சம்**
**ஆரத் தழுவி யமர நிலை பெற்றதன்**
**பயனையின்று காண்பேன்.**

நான் பாடி முடிய அழுதாள். நான் இறுக்கமா கட்டிப் புடிச்சன். தேம்பி தேம்பி அழுதாள்.

"பாப் நான் உனக்கு வேண்டுமா?"
அவள விலத்தி முகத்த பாத்தன். என்னோட விரசம் அவளுக்கு விளங்கிட்டுது போல.

"என்னை எடுத்துக் கொள் பாப்"
சொல்லிக் கொண்டே புல்வெளியில என்னில அந்த வெள்ளைக்கொடி படந்திச்சி.

**தீட்டிய வார்த்தைகளை தூரவிட்டு**
**நுனி நாவால்**
**இமை நுனியால்**
**முலை முளையால்**
**இதழால்**
**என் உடல் மீட்டினாய்**

**இருளின் வெளியில் எங்கோ புதைந்திருந்த**
**கறுப்பின் வண்ணங்கள் கிளர்ந்தன**
**..........................................**
**இன்று,**
**எது இந்த மாய அழகு?**
**சென்று,**
**எங்கு பரந்தது உயிருடன் காதல்**
**உறைந்த நம் நிலம்?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த மதுக் கிண்ணத்துள்ளா?

குருதி சுக்கிலம் செம்மவு
தோய்ந்த குறி
எல்லாக் கடவுளையும் துவசம் செய்து
எழுகிற போது
பழமை வீரம் உலர்ந்து போகிறது

நிலவும் பாிதியும் இரவும்
கூடும் அழகே அழகு
நம் மொழியில் செறிந்த
விரசம் வாழும் உலகே உலகு.

மார்புக் குவட்டின் வியர்வைத் துளிப்பின்
உப்புக் காிப்பில் துளிர்க்கும் முறுவலில்
இறுகிய படிமம்
இணைகரம்
மூடிய கண்களுள் மஞ்சல் பாலைவனத்தில்
காற்று வரைகிற கோலங்கள்.

முதுகு வழியா வேர்வ ஓடி கீழே விழுகிற உணர்வு மட்டும் இருந்திச்சி. மத்தப்படி புத்தி முழுவதும் சுடாத நெருப்பு சுவாலைக்குள்ள தியானம் செய்து கொண்டு இருந்திச்சி. உடலும் மனமும் பிரம சுகத்த கண்டதும் மெல்லச் சரிஞ்சு உடுப்ப எடுத்து அவள போத்திவிட்டன். உடுப்ப நெஞ்சோடு சேத்து அணச்சிக் கொண்டு நிமிர்ந்து இருந்தாள். புல்லு நுனி குத்தி ஒகஸ்டீனாவோட முதுகு முழுவதும் புள்ளி புள்ளியா ரெத்தம் கண்டி சிவந்து தெரிஞ்சிது. டானியல் நாய வெட்டிக் கொல்ல வேணும்.
"ஒகஸ்டீனா இன்று முன்னதாகவே வீட்டுக்குப் போக வேண்டும். வா பண்ணைக்கு போகலாம்." எண்டன் மல்லாக்காப் படுத்துக்கொண்டே.

"பாப் என்னை இன்று அழைத்துச் சென்றுவிடேன். இரவு வரும் என்பதை நினைத்தால் திகிலாய் இருக்கிறது"

"இன்று முன்னதாக போவதற்கு காரணமே நமக்கு ஒரு வீடு தேடுவதற்காகத்தான். இன்று ஒரு நாள் பொறுத்துக்கொள் நாளை நிச்சயம் உன்னை அழைத்துப்போகிறேன். இனியும் உன்னை நான் அந்தக் கொடியவனிடம் விட்டுவிடமாட்டேன்." நடந்துகொண்டே சொன்னேன்.

பண்ணக்குள்ள நடந்து போக கொஞ்ச நேரம் எடுத்திச்சி. அங்க போனா வெறி பிடிச்சவன் மாதிரி கத்திக்கொண்டு நிண்டான். கெட்ட கெட்ட வாத்தையால வைறலக்கிய திட்டினான். வைறலக்கி வழமைக்கு மாறா தலய தொங்கப்போட்டுக்கொண்டு நிண்டுச்சி. முதல் இருக்கிற அதோட திமிர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொஞ்சமுமில்ல அதில.

"என்னை ஏமாற்றுகின்றாயா பேயே?...
ஏன் பேயே என்னை ஏமாற்றினாய்."
பெரிய இரும்புக் கம்பியால வைற்லக்கியை அடிச்சான். அது கனச்சிது.
ஒகஸ்டீனாவுக்குக் கோவம் வந்திட்டுது.

"ஏய் டானியல் அதையேன் இம்சிக்கின்றாய்?"

"இந்தப் பேய் என்னை ஏமாற்றிவிட்டது. பந்தயத்திடலில் ஓட முடியாது என்று அமர்ந்து விட்டது. ஓடித் தோற்று இருந்தாலும் கூட கவலை இல்லை. எனக்கு எத்தனை அவமானம் இந்தப் பேயால்"
எண்டு சொல்லிக்கொண்டே என்னையும் ஒகஸ்டீனாவையும் ஒரு மாதிரியா பாத்தான் டானியல்.

"ஏய் ஒகஸ்டீனா இவனுடன் நீ எங்கே இந்தப் பக்கம். அதுவும் மலையடிவார பக்கமாய் இருந்து வருகின்றாய்?"
ஒகஸ்டீனா பேசாம நிண்டாள் எனக்கு திக்கு திக்கு எண்டு இருந்தது.

"நீயும் என்னை ஏமாற்றுகின்றாயா பெண் நாயே?"
ஆத்திரமா கேட்டு ஒகஸ்டீனாவோட கழுத்த வலக்கையால இறுக்கிப் புடிச்சான். எனக்கு பே அறஞ்ச மாதிரி இருந்திச்சி. அவன தடுக்க வேணும் போல உணர்வு வர டானியல் என்ன நெனச்சானோ ஒகஸ்டீனாவை கழுத்தில இருந்த கைய எடுத்து அவளோட தோளுக்கால போட்டு அவனோட அணைச்சுக் கொண்டான்.
என்னப் பாத்து

"ஹேய் பாப் நீ இப்போது போய்விட்டு நாளை வந்துவிடு."
எண்டான்.

வீட்டுக்கு வந்து என்னால ஒண்டுமே செய்ய முடியல்ல. உடம்பெல்லாம் மல்லிகைப்பூ மணக்கிற மாதிரி இருந்திச்சி. ஒகஸ்டீனாவோட வெறும் உடம்பு பட்ட இடத்தையெல்லாம் தொட்டு தொட்டுப் பாத்தன். கனவு கனவா வந்திச்சி. கனவோடு சேந்து கவலையும் வந்திச்சி.

ஒகஸ்டீனாவோடகழுத்த டானியல் புடிச்ச முற அவ்வளவு நல்லா இல்ல... எனக்கும் அவளுக்கும் இருக்கிற தொடர்பு தெரிஞ்சி போயிட்டுதோ தெரியல்ல... தெரிஞ்சா என்ன செய்வான்? அடிச்சிப் போட்டு தொரத்தி விடுவானோ? இல்லாட்டி இதெல்லாம் சகசம் தானே எண்டு லேசா எடுத்துக் கொள்ளுவானா? டானியல் வெள்ளக்காறன் தானே. அப்பிடித்தான் எடுத்துக்கொள்ளுவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடியப் பண்ணைக்குப் போகேக்கை லேசான பதட்டம் இருக்கத்தான் செய்தது. ஏழு மணிக்கெல்லாம் போய் சேந்திட்டன். என்னவோ தெரியல்ல பண்ணய பாக்க பயமா இருந்திச்சி. ஒகஸ்டீனாவை பாக்க வேணும்போல ஒரே ஆவலா இருந்தது. இரவு கொடுமப்படுத்தினானா எண்டு கேட்டு ஆறுதல் சொல்ல வேணும். இண்டைக்கு ஒகஸ்டீனாவை கூட்டித்து ஓடிர வேணும். இண்டைக்குத்தான் கடைசி நாள் இந்த பண்ணக்கி வாறதா இருக்க வேணும். தயங்கி தயங்கி போய் வீட்ட எட்டிப் பாத்தன்.

"ஹேய் பாப் இங்கே வா"

டானியல் லயத்துக்குள்ள நிண்டு கூப்பிட்டான். அவன பாக்க சரியான வித்தியாசமா இருந்தான். வைற்லக்கி முடங்கிப் போய் நிண்டிச்சி. அதோட உடம்பெல்லாம் காயம். ரத்தம் வழிஞ்சு கொண்டும் இருந்திச்சி. கிட்டப் போனன். டானியல் கையில சின்னதா ஒரு துவக்கு வச்சிருந்தான்.

"எனக்கு துரோகம் செய்பவரை பிடிக்காது பாப். நீ வீட்டுக்குள் போய் இரு. உன்னுடன் பேச வேண்டும். இந்த குதிரையை கொன்றுவிட்டு வருகிறேன்" எண்டான்.

எனக்கு பயம் புடிச்சித்து வைற்லக்கிய கொல்ல போறானா? இத எப்படியாவது தடுக்க வேணுமே. ஒகஸ்டீனாட்ட சொல்லி எப்படியும் தடுக்க வேணும். ஒகஸ்டீனாட்ட சொல்ல வீட்டுக்குள்ள ஓடிப்போய்

"ஒகஸ்டீனா..........ஒகஸ்டீனா........."
எண்டு கத்தினன். அவள காணயில்ல... வீட்டுக்குள்ள ஒவ்வொரு அறையா தேடுனன். காணவில்ல அவள. கிறீன் கவுசுக்குள்ளயும் போய் பாத்தன். அங்கயும் அவள் இல்ல. ஜீப் வேற வெளிய நிக்கிது. எங்க போய் இருப்பாள் இவள். பதட்டத்தோட அவளோட அறைக்குள்ள ஓடிப் போனன். அறைக்குள்ளயும் அவள் இல்ல. அவளோட கட்டில்ல என்னவோ சிவப்பா தெரிய உற்றுப் பாத்தன். அது ரத்தம். திட்டுத் திட்டா கட்டில் தலவாணி எல்லாத்திலையும் ரத்தம். அப்பிடி எண்டால் ஒகஸ்டீனாவை... எண்ட கடவுளே... என்ன கொடுமை இது.

தல சுத்தி மயக்கம் வாற மாதிரி இருந்திச்சி. நான் இந்த இடத்தவிட்டு ஓடுறதா? இல்லாட்டி என்னையும் என்னெண்டான செய்யட்டும் எண்டு போட்டு இவடத்தேயே இருக்கிறதா?
லயத்துக்குள்ள துவக்கு வெடிக்கிற சத்தம்... வைற்லக்கி ஈனமா கனச்சிது...

கவிதை உதவி :- சுப்பிரமணியபாரதி
உ.சேரன்
கரஷோக்கி இக்வான்


'மூகரம்' ஆனி - 1997

❑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரூபம்

உடலை மயானத்தில் சுடுவதற்கு முன்பாக மனதை தியானத்தில் சுட்டாகவேண்டும்! மனதைச் சுட்டு இங்கு ஸ்த்திரம் எதுவென்பதை தெளிந்ததாக வேண்டும். வெறும் மயக்கங்கள் மாத்திரமே உள்ள மாமூல் வாழ்க்கையில் மாற்றம் தேவை...

நிஜம் தேவை...

ஸ்த்திரம் எதுவென்னும் உண்மை உணர்வுக்குத் தேவை. இங்கு ஸ்த்திரம் எது? மண், மலை, மரம், செடி, பெண், காதல், குழந்தை, இச்சை, வேலை, காமம், காசு, ப்றஷ் மீன், றால், நண்டு, இவற்றில் நிலை எது? நிஜம் எது?

இவ்வளவுக்காகவும் தானா இந்த உடல்? இவ்வளவும் நுகரத்தானா இந்த உடலில் உணர்ச்சி? இவ்வளவில் உண்டாகும் ஆசைதானா துன்பங்களின் துவக்கம்?

ஆசை அறுமீன்கள் ஆசை அறுமீன்கள்...

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள் ஈசனோடும் ஆசை வேண்டாமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈசன்பால் ஆசையும் துன்பமாயின், ஈசனும் ஸ்த்திரம் இல்லையா?
எதுதான் ஸ்த்திரம்?
புரிந்து கொள்வேனா? என்னால் முடியுமா?

தியானம் என்னால் சாத்தியமா? மனதை அடக்கி சுவாசக்கூண்டில் பிரணவத்தை நிரப்ப முடியுமா? இருபத்தி மூன்று வயதுக்கு முடியக்கூடியதா? மென் பொருளில் பெண் சுகத்தீண்டல் உணருகின்ற விவஸ்த்தை கெட்ட வாலிபத்துக்கு ஒத்துவருமா? மூர்க்கமும் மூளை நிரம்ப விரோதமுமாய் விடிந்தும் காசு தேடும் வில்லங்கவாதிக்கு இயலக்கூடியதா? ஒத்துவருமா?

வரும்... வரவேண்டும்.
வருந்தி வருந்தி வரவழைக்க வேண்டும்...
ப்ரமம் கண்டு ஸ்த்திரம் அறிந்தவனே சத்புருஷன். அவனே பாக்கியவான்!

நான் இப்போது என்னவாய், எதுவாய் இருக்கிறேன்? எதுவாகவும் இல்லை... பூச்சியம் அல்லது சூனியம் ஆக என்னவாகவும் எதுவாகவும் இல்லாமல் இருப்பதை உணர முடிகிறது... போகட்டும்... இப்போது நான் எதுவாகவும் போகட்டும்... ஆனால், அடுத்த பொழுதுகளில் சத்புருஷனாக வேண்டும். ப்ரமத்துக்குள் சகலதும் அடக்கம். ப்ரமம் என்பது என்ன? ப்ரமம் ஸ்த்திரமா, நிலையா, நிஜமா?

இமை மெதுமெதுவாய் தானாக மூடிற்று... பரந்த நீலம்... மேகம், நிலவு, சூரியன், நட்சத்திரங்கள் அற்ற பரந்த நீலம்... உடலின் சுமை இல்லாமல் போக உதிர்ந்த இறக்கையாய் இலகுவாய் ஆனது... சுற்றி இருந்தவை எல்லாம் ஒவ்வொன்றாய் உணர்வு தொலைந்தது... மயக்கம் அல்ல- தூக்கமும் அல்ல தெளிவு இருந்தது... பரந்த நீலத்தின் ஊடாக, மூடிய இமையை கடந்தும் பார்க்க முடிந்தது...

"பாபு..."

"..........."

"பாபூ..."

நீலத்துள் எங்கோ என் பெயர் பரந்து ஒலித்தது...
இதமாய் மென்மையாய், பெண் குரலாய் ஒலித்தது...

"டோய் பாபு..."

உடல் துணுக்குற்றது... மறுபடி சகலதும் ஞாபகத்துக்கு வந்தது... கடை, சாமான், காசு, மீன், ஓடியோ, வீடியோ எல்லாமும் ஞாபகத்துக்கு வந்தது...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இமை மெதுமெதுவாய் சிரமப்பட்டு திறக்க எத்தனித்தது... வினாடிகள் கடக்க லேசாய் திறந்தது. கோடை வெளிச்சம் கண்களை கூசப்பண்ணிற்று... கூச்சம் கொஞ்சம் கொஞ்சமாய் கலைய எதிர்க்க நிற்பவள் புலனானாள்.
அழகாய் புன்னகைப்பது தெரிந்தது.

“கடையில விஸ்னஸ்ஸைக் கவனிக்காமல் கண்ணை மூடிற்று என்ன நிஷ்ட்டையே?”

கேள்வி நிஜம்தான். ஆனால் இது கிண்டல். எதிர்க்க இருப்பவனை தன் உணர்வின்றி சீண்டி விடுகின்ற கிண்டல். சிரிக்க முடியாத, அதே நேரம் வேதனையும் படமுடியாத சமநிலைக் கிண்டல்.

“ம்... நிஷ்டைதான்!”

“கடைக்கு சனம் வராத நேரத்தில நிஷ்டையே?”
அவள் புருவம் மெல்ல மேலெழுந்தது. போலியாய் ஆச்சரியம் பார்வையில் திரண்டது.

“ஓம் அப்படித்தான்!”
நான் சொல்ல நிலம் பார்த்து புன்னகைக்கின்றான்.

அவள் மனதுக்குள் என்னைப் பற்றிய தாழ்மட்ட அபிப்பிராயம் மெதுவாய் ஊர்ந்து படர்கிறது...

“நம்பலாமா?”
நான் எதையோ அவளுள் திணிப்பதாய் உணர்ந்து கொண்டிருக்கிறாள்.

“எத நம்பலாமா எண்டு கேக்கிறாய்?”

“உன்னுடைய எல்லாத்தையும்”

“என்னுடைய எல்லாத்தையும் எண்டால்?”

“”முதலாவது உன்னோட எழுத்து... பிறகு, அதில நீ சொல்லுகிற விசயம். விசயம் எண்ணேக்க- நீ சொல்ற தத்துவம், நடைமுறைக்கு ஒத்துவராத வாழ்க்கை முறை. இப்ப கடைக்கு சனம் வராத நேரத்தில தியானம் செய்யிற்று. இது எல்லாம் உன்னோடவயதுக்கு சரிப்படுமா? நம்பக்கூடிய மாதிரியா இருக்கு?”

இவள் முழுதாய் தீர்மானமாய் ஒவ்வொன்றாய் அடுக்கி எடுத்து வந்திருக்கிறாள். இது விமர்சனமா? இல்லை- விமர்சனப் போர்வையில் தாக்குதலா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கோ இருந்து கொண்டு முகம் தெரியாத ஒருவன் எழுதி எழுதி தாக்குவதை விட இது வலிமை மிக்கது... வலி மிக்கது... தோற்றால் 'ஈகோ' ஹிம்சிக்கும். ஹிம்சை வலியாய் பிரஸ்தாபிக்கும். எழுத முனைகின்ற போதெல்லாம் வலிக்கும்.

"நம்ப முடியாது எண்டு சொல்ல உனக்கு உரிமை இருக்கு. ஆனா, பொய் எண்டு சொல்ல ஏலாது... என்ர வயதுக்கு சாத்தியப்படாது எண்டும் நீ சொல்ல ஏலாது. நம்பிக்கை, உண்மை, சாத்தியம் இது மூணும் ஒரே மாதிரி இருந்தாலும் வேற வேற ஒவ்வொண்டுக்கும் இடையில பெரிய பெரிய இடைவெளி இருக்கு"

"அது என்னவோ எனக்குத்தெரியா. ஆனா, நம்பிக்கையில்ல எண்டு சொன்னா என்னப் பொறுத்தவரைக்கும் பொய்தான். கொஞ்சம் உன்ர மீசைய தொட்டுப்பாரு. இன்னும் அது முத்தியிருக்காது. அது முத்தி நரைக்க வேணும்... அப்பதான் மனசும் முத்தும். ஆனா உன்ர பேச்சும், எழுத்தும் ஏதோ மனசு முத்தின ஆக்கள் மாதிரி, மனம், தியானம், மந்திரம் எல்லாம் 'பிறக்டீஷ்' எடுத்த ஆக்கள் மாதிரி..."

"ஏன் நான் எடுக்க ஏலாதே...?"

மௌனமானாள்... சுற்றிவர பார்வை அழகாய் அசைத்து கொடுப்புக்குள் நாக்கை துளைத்து ஒரு விதமாய் புன்னகைத்தாள்...
"என்னை விட மூன்று வயது குறைந்தவன் நீ" என்பதாய் அந்த புன்னகைக்கு அர்த்தம் போலும். இங்கு எல்லோருமே இப்படித்தான் வயது குறைந்தவன் எது சொன்னாலும் நம்புவதே இல்லை...

"என்னால முடிஞ்சிருக்குது. நான் கூட இப்ப சன்னியாசிதான்!"

மௌனமாய் நின்றவள் நான் சொன்னதைக் கேட்டு திடீரென சிரித்தாள். கேவலமாய் என்னைப் பார்த்துச் சிரிப்பதாய் எனக்கு தோன்றிற்று...ஆனால் அவள் அதைக் காட்டிக்கொள்ளாது சிரித்தாள். இமை அசைக்காது அவள் சிரிப்பை ரசித்தேன்... அந்த நிலையிலும் பெண்ணின் சிரிப்பை ரசிக்க முடிகிறது... அது கவிதை!

"சன்னியாசி எண்டால் காவி? கமண்டலம்? உருத்திராக்கம், திருநீறு ஒண்டையும் காணயில்லை..." கிண்டலாய்க் கேட்டாள். சற்று இடைவெளி விட்டு "சன்னியாசி ஆக ஆசைய அறுக்க வேணும் பாபு" என்றாள். ஒரு குழந்தையிடம் சொல்வது போல்.

எனக்கு இப்போதுதான் சிரிப்பு வந்தது. ஆனால், சிரிக்கவில்லை... முகம் இறுகியே கிடந்தது...

"ஜடா முடியை கேக்கயில்ல...? உலகத்தில எந்த சன்னியாசி ஆசைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறுத்திருக்கான்...? எல்லா சன்னியாசிக்கும் ஆசை இருக்கு. சன்னியாசத்தில ஆசை இருக்கிறதாலதான் சன்னியாசி போறான்... அதுவும் ஆசைதான். காவி, கமண்டலத்தோட வந்தால்த்தான் சன்னியாசியா? அப்பிடி இல்லாம வந்தால் இல்லையா? காவியோட வந்துதான் தத்துவம் சொல்ல வேணுமா? பேண்ட சேர்ட் போட்டுவந்து தத்துவம் சொன்னால் நம்பமாட்டியளா? ஒவ்வொரு மனிசனுக்கும் தான் சார்ந்திருக்கிறதில் சமூகத்தோட அங்கீகாரம் வேணும் எண்டு நினைக்கிறான். காவி கமண்டலத்தோட அலையிறதும் ஒரு அங்கீகாரத்துக்குதான். சமூகம் தன்னை ஒரு சன்னியாசி எண்டு அங்கீகரிக்க வேணும் என்ற ஆசையாலதான். சன்னியாசம் என்றது தன்னோட தேவைக்காக இல்ல. ப்ரமத்தோட சேவைக்காக எண்டு வேதம் சொல்லுது. என்னப் பொறுத்தவரைக்கும் சன்னியாசம் என்றது தேடலுக்காக. தானா எரியிற தீபம், அது எத்தின வயதிலையும் எரியலாம். யாரும் ஏற்றி விட முடியாத தீபம். அதே மாதிரி அணைக்கவும் முடியாத தீபம். உடம்பு மட்டுமில்ல, ஆன்மா அழிஞ்சாலும் அழியாத தீபம்தான் ஞானம்... ஞானத்துக்கும் ஆசைக்கும் சம்பந்தமில்லை..."

அவள் விக்கித்து நின்றிருந்தாள். கண்கள் லேசாய் சிவந்திருந்தது. கோடை வெயில் உஷ்ணத்தாலும் பரப்பி விட்டிருந்தது. ஆனாலும் வியர்வையில்லை. நேற்றைய மழையின் எச்சம் பூமியில் இன்னும் இருக்க வேண்டும்... கண்ணாடி வழியாய் பார்க்கின்ற போது ஈரமண் தெரிந்தது...

"தத்துவம் எண்டால் என்ன பாபு"

இவளிடம் இப்போது அடக்கம் இருந்தது... கேள்வி பரிசோதிப்பதாயும் இருந்தது. ஆரம்ப கேள்விகளில் அடித்து முடித்த பின் இப்போது இப்படி கேட்பது புதிராயும் தோன்றிற்று.

"இது தெரியாமலே இவ்வளவு நேரமும் என்னோட சண்டை பிடிச்சனீ?"

"தெரியும்... ஆனா... எதுக்கும் நீ சொல்லன்..."

"உண்மை எண்டு நினைக்கிற பொய்யும்- பொய் எண்டு நினைக்கிற உண்மையும்!"

"அப்பிடி எண்டால் உண்மைதான் தத்துவமா?"

"ஏறக்குறைய... ஆனா உண்மைய விட உண்மை"

அவள் என் அருகில் கதிரை ஒன்றை எடுத்து வந்து அமர்ந்து கொண்டாள். அவள் முகத்தில், பார்வையில் ஏதோ தேடல் இருப்பதாய் எனக்குத் தோன்றிற்று...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“அப்பிடி எண்டால் இங்க உண்மைய விட உண்மை எது?”

“தேட வேணும்”

“தேடினா கிடைக்குமா?”

“கிடைக்கும்”

“உனக்கு கிடைச்சிதா?”

“கிடைக்கிறது... கிடைக்கும்”

“இப்ப எத தேடுறாய்”

“ஸ்த்திரத்த... நிலைய... பெரிய, மிகப்பெரிய உண்மைய, ஆசைய அறுத்தால் துன்பம் இல்ல எண்டு சொல்றாங்கள். ப்ரமம்தான் ஸ்த்திரம். ப்ரமத்த அறிஞ்சவன்தான் சத்புருஷன். சத்புருஷனுக்கு கவலையில்லை எண்டு வேதம் சொல்லுது. அத்வேதம் ப்ரமம்தான் சிவன் எண்டும் சொல்லுது. ஆனா ‘திருமூலர்’ சிவனோடயும் ஆசை வைக்காத எண்டு சொல்றார். அவரோட பார்வையில நாமளும் பார்த்தால் ப்ரமமும் துன்பத்துக்குக் காரணமாகும். அப்படி எண்டால் ப்ரமமும் நிலையில்லை. ஜதார்த்தம் என்னெண்டால் ஆறு அறிவு உள்ளவன் எல்லாருக்கும் ஆசை இருக்கும்... எதுவா இருந்தாலும்... அது பொம்புளையாயும் இருக்கலாம். குரங்காயும் இருக்கலாம்... சிவனாயும் இருக்கலாம்... ஆசை எண்டு வந்திட்டால் ஏதோ ஒரு ரூபத்தில துன்பமும் வரும்... என்னோட முடிவு மனிசன் சாகிற வரைக்கும். அதாவது ஆறறிவு உள்ள மனிசன் சாகிற வரைக்கும் அவனுக்கு ஆசை இருக்கும்... கூட துன்பமும் இருக்கும்.”
மெதுவாய் அவள் உடல் நடுங்குவது எனக்குத் தெரிந்தது... கண் சிவந்து ஜலம் கசியும் போல் இருந்தது...

இவளை நான் பயம் காட்டுகின்றேனா? எனக்கு சமனாக அமரவைத்து ஏன் இவளுடன் பேசுகின்றேன். கேள்விகளுக்கு வெறும் புன்னகையுடன் அனுப்பி வைத்திருக்கலாம். தானாக தெரிந்து கொள்ளட்டும். அல்லது தெரிந்து கொள்ளாமலேயே போகட்டும். ஏன் பேசினேன்? நான் முழுமையில்லையோ? அரைக்குடமா? அதனால்தான் தழும்பலா? தழும்பல் இவளை மூழ்கடித்து மூச்சுத்திணற வைத்திருக்குமா? பாவம்! இந்தக் குழந்தை பாவம்! அதற்கு அதன் பாஷையிலேயே சொல்லியிருக்க வேண்டும். அல்லது நேற்று மீன் வாங்க வந்தவனுக்கு சொன்னது போல் சொல்லி இருக்க வேண்டும்.

ஒவ்வொன்றும் தனித்தனி விசித்திரம். விதம்விதமாய் கேட்கும். விதம் விதமாய் புரிந்து கொள்ளும் விதம் விதமாய் கற்பனை பண்ணி கணக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டு வைத்திருக்கும். தனது கணக்கு நிஜத்துடன் ஒத்துவராத போது விழி விரித்து விசித்திரம் காட்டும். நிஜத்தை நம்ப மறுக்கும்...

"அண்ணா...!"

செதில் தட்டிய மீனை ஓரமாய் வைத்து விட்டு நிதானமாய் நிமிர்ந்து பார்த்தேன். என்னை அழைத்தவன் என்னை விட பத்து வயதாவது அதிகமாக இருப்பான் என்று என்னால் ஊகிக்க முடிந்தது. அனைவரையும் 'அண்ணை' என்பது ஒரு மரியாதை நாடகம். காரியம் சாதிக்கும் சாமர்த்திய நாடகம். அவனது அழைப்புக்கு நான் செவி சாய்க்கின்றேன் என்பதை புரிந்து கொண்டான்.

"உங்களிட்ட ஒரு விசயம் கேக்கவேணும்."

"இந்த மீன் 'ப்றஷா', இல்லாட்டி 'புறோஸினா'?"

"அது இல்ல..."

"பின்ன..."

"செந்தாமரையில கதை எழுதுற சக்கரவர்த்தி நீங்களே...?"
சீலா மீனின் முதுகு முள்ளில கத்தி அறுகி நின்றது...

"யார் சொன்ன...?"

றப்பர் கத்தியாலை தூக்கி கத்தியின் பின் பக்கம் அடிக்க முள் வெட்டப்பட்டது. மறுபடி அடிக்க மீன் துண்டாயிற்று. இரத்தம் சிதறி எதிர்ச்சுவரில் அப்பிற்று. மௌனமாய் சுவரில் சிதறிய ரத்தத்தை பார்த்து நின்றான். ஈரத்துணியால் அதை துடைத்து எடுக்க நீளமாய் சிவப்பு இழுபட்டது.

"யார் சொன்ன?"
மறுபடி கேட்டேன்...

"ஆனா நான் நம்பவில்லை..."
காட்டிக்கொடுத்தவனை. காட்டிக்கொடுப்பதில் இவனுக்கு அவ்வளவு உடன்பாடில்லைப் போலும்...

"சரி..."

"நீங்கதான் கதை எழுதுற சக்கரவர்த்தி என்றத என்னால நம்ப முடியல்ல..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஏன்?"

"ஓராளால ஒண்டுதான் ஏலும். அதுதான் உண்மை. மீன் வெட்டுற நீங்கள் சக்கரவர்த்தி இல்லாம இருக்க வேணும்.இல்லாட்டி சக்கரவர்த்திக்கு மீன் வெட்டத் தெரியாம இருக்க வேணும்... எழுதுற ஆக்கள் எல்லாம் மென்மையாகவும் பாக்கிறதுக்கு அமைதியாகவும் இருப்பினம். உங்களப் பாத்தா இயக்கக்காறன் மாதிரி இருக்கு..."

"சரி..."

அவனை முழுமையாய் ஒதுக்கி விட்டு மீன் வெட்டுவதில் கவனத்தை திருப்பினேன்...

இதற்கு எதையுமே புரிய வைக்க முடியாது. கிருஷ்ண அவதாரத்தை இதற்கு சொன்னால் புரியாது. மனிதனில் பல வித ரூபம்தான் கிருஷ்ணவதார தத்துவம் என்றால் நம்பமறுக்கும். அது ஒவ்வொரு பிறப்பென்று மறுத்து பதில் சொல்லும்.

எதிரி பலமானவனாய் இருந்தால் மறைந்திருந்து தாக்கு! சமமானவனாய் இருந்தால் நேரடியாய் மோது! பலம் இழந்தவனாய் இருந்தால் மன்னிப்பு வழங்கு! அல்லது, "இன்று போய் நாளை வா" என்று சொல்.

இடத்துக்கு ஏதுவாய் நீ மாறு. பிள்ளைக்கு அப்பாவாய் இரு. மனைவிக்கு புருஷனாய் இரு. அயலவனுக்கு நண்பனாய் இரு. விரோதிக்கு எதிரியாய் இரு. இதுதான் வாழ்வியல் தத்துவம். ஒன்றாய் இருந்தால் முடியாது.

எழுத்து ஞானம், அனுபவம் அடித்து அடித்து கற்றுக்கொடுத்த ஞானம். மீன் வெட்டுதல் தொழில்... எனக்கென்று எழுதப்பட்ட தொழில். மொட்டைக் கிழவனின் இளம் மனைவியை ரசித்தால் மீனுடன் சேர்த்து விரல் அறுபடும்... பார்க்கத்தியால் மீன் தலை வெட்டுகின்ற பொழுதுகளில் மெல்லுணர்வு விழித்து காதலோ கவிதையோ மூளைக்குப் போனால் விரல் துண்டாகி எதிர்க்க கிடந்து துடிக்கும்... மீன் வெட்டுவதும் தியானம்... மனதை அடக்கி, அலையவிடாமல் ஒன்றில் நிலைப்பித்தல்...

அந்தந்த நேரத்தில் அது அதுவாக இரு.
களத்தில் சத்திரியனாய் இரு.
சபையில் சாணக்கியனாய் இரு.

**அவனுக்கு விளக்கமாய் சொல்லியிருக்கலாம். சொல்லவில்லை. நேற்றைய பக்குவம் இன்று இல்லாமல் போனதெப்படி? இல்லை- இது பக்குவம் இன்மையல்ல... கற்பித்தல். தெரிந்ததை, கற்றதை இன்னொருத்தர்க்கு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வித்தல். இன்னொரு இடத்திற் போய் தெரியாது விழித்தலை தடுத்தல்...

“பாபு...!”

“.......”

“பாபூ...”

அவன் பலமாய் அழைக்க மேய்ந்த கவனம் சிதறியது. தேய்ந்த கவனம் மீண்டும் அவனில் நிலைத்தது...

“உன்னட்ட இன்னொரு விசயம் கேக்கவேணும்”

“கேளேன்”

“நீ எழுதுற சில விசயம் உண்மையாவே என்னால ஏற்றுக்கொள்ள ஏலாம இருக்கு”

“எந்த விசயம்?”

“ஒரு நாள், அதுவும் ரெண்டோ மூணு மணித்தியாலமோதான் கதைக்க ஒருத்திக்காக இன்னொருத்தி தன் புருஷன பங்கு போட ஓம் எண்டு சொல்றது... சே... ஏற்றுக்கொள்ள முடியாது... எவ்வளவு அசிங்கமா இருக்கு”
நாறிப்போன மீனைப் பார்ப்பதுபோல் அவள் முகம் அஷ்ட கோணலாய் நெளிந்தது...

இது தமிழ் பெண்களுக்கு மாத்திரமே உரிய அருவருப்பு நெளிப்பு. மற்றவர்களும் நெளிகின்றார்களே என்று தானும் நெளிக்கிற பம்மாத்து நெளிப்பு. நெளிக்காது போனால் தூரத்தில் வீசப்படுவோமோ என்கின்ற பயத்தில் எல்லாப் பெண்களும் போலியாகவே போனார்கள்.

“என்ன பாபு ஒண்டும் பேசாமல் நிக்கிறாய் சொல்லன்”

“எதச் சொல்ல...”

“புருஷனோட பழய காதலிய தன்னோட சக்களத்தியா ரெண்டு மணித்தியாலத்தில மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளமுடியுமா?”

“நீ ஏன் அந்த உறவ சக்களத்தி எண்டு அசிங்கமா உருவம் பண்றாய்? விட்டுக்குடுத்து வாழ்றது தர்மம்... அது பெரிய சந்தோசமும் கூட... வாழ்க்கை என்றது என்னப் பொறுத்த வரைக்கும் பிச்சை... யாரோ நமக்கு கிள்ளிக் குடுத்த பிச்சை... அதில கொஞ்சத்தை இன்னொராளுக்கு கொஞ்சத்தை குடுக்கிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழை இல்லை. பாவம் இல்லை... நீ சொல்றமாதிரி இது அசிங்கமும் இல்லை"

"பாவம் இல்லாம இருக்கலாம்... பிழையும் அசிங்கமும் இருக்கு... ஒரு பொம்புளைக்கு ரெண்டு புருஷன் இருக்கிறதும்... ஒரு ஆம்புளைக்கு ரெண்டு பொஞ்சாதி இருக்கிறதும் நம்மளோட கல்ச்சருக்கு பிழை. அசிங்கம்"

"கல்ச்சர் என்றது ஒவ்வொரு மனுசனுக்கு உணர்வோட இயல்புலையே இருக்க வேண்டிய விசயம். நம்மளோட கல்ச்சர் அப்படியா? அங்கவஸ்திரத்த பட்டுல பளபளப்பா போட்டுத்து உள்ளாடையை ஊத்தையாப் போடுற மாதிரி... நீ இப்ப ரகுவத்தானே லவ் பண்றா? சின்சியராத்தான் லவ் பண்றதாய் சொல்றா. ஆனா ஒரு காலத்தில என்னோட நீ உரசி உரசி நடக்கல்லையா? 'ஐ வோன்ட் பிஸிக்கல் யூனியன்' எண்டு என்னட்ட கேக்கல்லையா? இப்ப கூட உன்ர மனதுக்குள்ள இன்னொரு எதிர்ப்பால் உடம்பு மேல விகாரமான எண்ணம் இல்ல எண்டு சொல்லுபாப்பம்? ஆனா நீ ரகுவத்தான் கலியாணம் முடிக்கப் போறா. ரகுவ முடிக்க ஏலாட்டி வேற யாரையாவது முடிப்பாய்... நான் பத்தினி, என்னில கனபேர் சுத்தினவைய... ஆனா தான் கணக்கெடுக்கிறதே இல்லை எண்டுதான் சொல்லுவாய்... அவன் நம்புவான். உன்ன தலையில தூக்கி வைச்சி பெருமையா கதைப்பான். ஆனா நீ எவ்வளவு சுத்துமாத்துப் பண்ணியிருக்காய் எண்டு உனக்குத்தான் தெரியும். நாம எல்லாரும்போல்... நம்மளோட கல்ச்சர் போல்... இது எல்லாருக்கும் தெரியும்... ஆனா நடிக்கறம்... நாமள் சுத்தம்... நம்மளோட கல்ச்சர் சுத்தம் எண்டு தம்பட்டம் அடிக்கிறம். நம்மளையே நாம மடையன் ஆக்கிறம். ஏன் அப்படிச் செய்யிறம் எண்டு தெரியல்ல. உன்னைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். ஆனா நம்ம கல்ச்சரை பற்றி என்னட்டையே சொல்றாய் ஏன்...? கல்ச்சர் கட்டுப்பாடு, சம்பிரதாயம் இது எல்லாத்தையும் விட மனிசனோட உணர்ச்சியும் உணர்வும் பெரிசு. அதுக்கு சக்தியும் அதிகம். ஒவ்வொரு தனி மனிசனுக்கும் இது தெரியும். கூட்டமா சேரேக்கதான் நம்புறது இல்ல. ஏற்றுக்கொள்றதில்லை. ஏன்...?"

அவள் முகத்தில் ஈ ஒன்று உட்கார, விரட்டினாள். மெதுவாய் திரும்பி பின் பக்கத்தை பார்த்தாள். சில வினாடி கடந்ததும் மறுபடி என் முகத்தைப் பார்த்தாள். அவள் மனதுக்குள் உண்டான இம்சையை முகத்தில் பார்க்க முடிந்தது.

"தனி ஒரு ஆள் உண்மையைச் சொன்னால் சனம் ஏற்றுக்கொள்ளாது. உண்மையாத்தான் சொல்றாள் எண்டு சனத்துக்கு தெரியும்தான். இருந்தாலும் ஏற்றுக்கொள்ளாது. கல்லெடுத்து எறியும். அது முடியாட்டி, கதைக்கும். கண்ட மாதிரி எல்லாம் கதைக்கும். என்ன மட்டுமில்ல என்னோட பிறப்பு, வளர்ப்பு எல்லாத்தையும் அசிங்க அசிங்கமா கதைக்கும். இந்த அசிங்கம் எனக்கு எதுக்கு? எல்லாரையும் போல நாமளும் இருந்தா பிரச்சனை இல்ல. உறுதியா இருந்து உடைஞ்சு போறத்தவிட வளைஞ்சி குடுத்து வாழ்றதுதான் நம்மளோட சமூகத்துக்கு நல்லது."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயலாமை என்பது இவளுக்கு மட்டுமல்ல ஆண் பெண் வேறுபாடு இல்லாமல் எங்கும் பரவிப் போனது. இது கல்ச்சர் கற்றுக் கொடுத்த இயலாமை. எதிர்த்துப் போவதைவிட அள்ளுண்டு போவதே இங்கு வாடிக்கையாகிவிட்டது.

இவளில் குற்றமோ குறையோ காணமுடியாது. இதுதான் நாம். இப்படித்தான் நமது பண்பாடு. என்று கற்றுக்கொடுக்கப்பட்டுவிட்டது. இவளது பிள்ளைக்கும் இதுவே கற்றுக்கொடுக்கப்படும். அதுவும் அலையும். நாலு பேருக்கு தெரியாத மாதிரி அலையும். அலைந்துவிட்டு பண்பாடு, பத்தினி, கற்பு பற்றிப் பேசும். போற்றும். இதில் மாற்றம் கிடையாது.

“அப்ப காலம் பூரா இப்பிடி போலியாகவேதானா?”

“வேறவழி?”

“உன்ர புருஷனிட்ட பொய் சொல்லி வாழேக்க உறுத்தாதா?”

“தெரியாது.”

“எது தெரியாது?”

“உறுத்துமா? உறுத்தாதா எண்டு தெரியாது.”

“நான் சொல்லட்டா?”

“ம்…”

“உறுத்தாது. நம்மளோட ஆக்கள் ஒருத்தருக்குமே உறுத்தாது. எல்லோரும் இப்படித்தான் எண்டு எல்லோருக்கும் தெரியும். அதால உறுத்தாது. இது இயல்பு. சகஜம் எண்டு எல்லோருக்கும் தெரியும். அதால உனக்கு மட்டுமில்ல ஒருவருக்குமே உறுத்தாது. கூச்சம் இல்லாம பொய் சொன்னா உறுத்தாது. பாவத்துக்கு துணிஞ்சவனுக்கு நண்பனே இல்ல என்ற மாதிரி.”

“ப்ளீஸ் பாபு. கதைக்காத எனக்கு என்னமோ பயமாக் கிடக்கு.”

“ஏன்…?”

“என்ன நீ பயம் காட்டுகிறாய். குழப்புறாய். கொஞ்ச நேரத்துக்கு முதல் நான் நிதானமாத்தான் இருந்தன். ஆனா இப்ப இல்ல. மனதுக்குள்ள என்னமோ குறுகுறுக்குது. வாழ்க்கையில சந்தோசத்த இழக்கப்போறனோ எண்டு பயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருது."

இவளுக்கு ஸ்த்திரம் எது என்று புரியும். ஸ்த்திரம் அற்றவைகளில் வைத்த பற்று இவளை இம்சிக்கும். காலம் முழுவதும் இம்சிக்கும். ஆறறிவு உள்ள அனைத்துக்கும் பற்றுதல் இருக்கும். அழிந்து இல்லாது போகும் வரை ஆசை இருக்கும். வலி இருக்கும்.

அவள் நடந்துகொண்டிருப்பது கண்ணாடி வழியாய்த் தெரிந்தது. மெலிந்த தேகமும் அகன்ற பிருஷ்டமும் இவளுக்கு தனி அழகு.

'றொக்' இசையைப் பலமாய்ப் பாடிக்கொண்டு திறந்த ஜீப் ஒன்று அவளைக் கடந்து வேகமாய்ப் போனது. நின்று அவசரமாய் ஆசையாய் அதைப் பார்த்தாள். தூரத்தில் போய் அது மறைந்துவிட்ட பின்னரும்.

❑

மஞ்சரி - 1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நீங்கள் அறிந்ததுண்டா
பேனாகூட
சரியாய்ப் பிடிக்கத் தெரியாத
என்கைகளில்
எறிகுண்டுகள் திணிக்கப்பட்டதை...?"



# ஆடு, புலி, புல்லுக்கட்டு

சடசடத்த ஒலியுடன் கிளைகள் ஒடிந்து விழும். ஐந்நூறு ஆண்டு கால போதிமரம் உடைந்து சிதறும். பசும் கிளிகளும் குயில்களும் மைனாக்களும் இன்ன பிற பட்சி சாதிகளும் உடல் கருகியும் பொசுங்கியும் இறக்கைகள் சிதறியும் செத்துச் சிதறும்.

வெள்ளைவெளேரென அழகாய் அமைதியாய் இருக்கும் இந்த 'போஹா' சிதறிய கற்குவியலாய்ச் சின்னாபின்னமாய் உதிர்ந்து குவியும். தேரோக்களையும் பிக்குகளையும் இடிபாட்டிற்குள் இருந்து கை, கால், தலை, இதயம் என்று தனித்தனியாய் மீட்டெடுக்க மூன்று நாட்கள் வரை செல்லலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிஸ்டலாபச்சீட்டுக்காரன்- றம்புட்டான்காரன்- பிக்பாக்கட்காரன்- நடைபாதைவியாபாரி- பிச்சைக்காரன்- பயணி இன்ன பிற மக்கள்.

4:15

பஸ்நிலையம் நிரம்பி- நெருசலில் பிதுங்கும். குறைந்தது மூவாயிரம் நான்காயிரம் பேராவது கூடியிருக்கும் நேரம்! திட்டமிட்டபடி- கட்டளைப்படி நாளை இதே நேரம்...

இந்த வழமை நாளை ஏது? எங்கெங்கோ மூலைக்கிராமத்தில்- மூலைவீட்டில் எல்லாம் மார்பில் அடித்து அடித்து ஒப்பாரி வைப்பார்கள்.

அப்பனை இழந்த குழந்தை- கணவனை இழந்த மனைவி- தலைவனை இழந்த குடும்பம் அழுகை ஓசை திசை தோறும் தெறிக்கும்.

இவ்விடம் இரத்தச் சதுப்பு நிலமாய் கணப்பொழுதில் மாறிடும். முழு உடலாய் யாருமே இறக்கமாட்டார்கள். கையும் காலும் தலையும் ஈரலும் இதயமும் தனித்தனியாய்க் கிடக்க சிதைந்து சாவார்கள்.

சிதறி- சிறு கோடாய் ஓடி- ஓடையாய்மாறி சாக்கடையில் கலக்கும் மனிஷ இரத்தம். தெருநாய் மனிஷ இரத்தம் நக்கி சுவைத்துப்பார்க்கும்.

பேயும் நரியும் இடுகாட்டுக்குள்ளும் சுடுகாட்டுக்குள்ளும் 'கூய்...' போட்டுக்கொள்ளும்.

இறந்தவன் இறந்துபோக- அரையும் குறையுமாய் இழுத்துக்கோ பறிச்சுக்கோ எனக் கிடப்பவனும் - கையையோ கண்ணையோ அல்லது இருதயத்தையோ ஈரலையோ இழந்தவனும் குடல் மட்டும் வயிறு பிளந்து வெளித்தள்ள- உயிருடன் உள்ளவனும்...

ஓலம் இவ்விடத்தே ஈனசுரமாய் கசிந்து கசிந்து... எதிர் ஒலிக்கும்.
ஊளித்தீ போன்றதொரு பிரளயம்

எழுநூற்றி ஐம்பது பேர் முதற்கொண்டு ஆயிரம் பேர் வரைக்கும் கொல்லப்படவேண்டும். கும்பல் கும்பலாய் உயிர் பறிக்கப்படவேண்டும். பலவந்தமாய் இயற்கைக்குப் புறம்பாய் மனிஷ தர்மங்களுக்கு விரோதமாய் உயிர்த்திருட்டு செய்ய வேண்டும்.

இது கொடுமையல்லவா? மகா பாவமல்லவா? எத்தனை கோடி ஜென்மங்கள் எடுத்து பாவத்தை தொலைப்பது? இக்கொடும்பாவ கட்டளைக்கு எப்படி நான் உடன்பட்டேன். கடவுளே... பகவானே... எனைக்காப்பாய். இப்பாவக் கட்டளைக்கு என்னை உட்படுத்தாது எனைத்தடுத்தாட் கொள்ளாயோ... தெய்வமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெய்வமே... எனைத் தடுத்தாட்கொள்ளாயோ... தடுத்தா...

அர்ச்ஜுனா!

போர் புரிதலும் நாட்டைக் காப்பதும் மீட்பதும் சத்திரியன் கடமை. நீ உன் கடமையைச் செய்யாது ஒதுங்கும் பட்சத்தில் பழி உன்னை வந்தடையும். யுத்தம் இடல் உன்கடமை. பலனைப்பற்றி கவலைகொள்ளாதே. பலன் என்னும் அழிவுக்கு நானே பொறுப்பானவன்.

'கிணீர்...' ரென ஒலியை உண்டாக்கிக்கொண்டு நெளிந்த அலுமினியப் பாத்திரத்தில் ரூவாய் நாணயம் உருண்டோடியது. சிந்தனை மெல்லக்கலைய எதிர்க்க அவள் தெரிந்தாள். என்னைப் பார்த்து புன்னகைத்துவிட்டு நகர்ந்தாள்.

எல்லா நாளும் இதே நேரம் போஹராவுக்கு வரும் சிறுமி. புத்தரைக் கும்பிட வரும் இச்சிறுமிக்கு என் வேசம் புரியாது. எத்தனை இரக்கம் தான் என் மீது.

"பிறவி ஊமையான இவனுக்கு எத்தொழில் செய்து பிழைப்பதற்கும் முடியாத காரணத்தால் இவனுக்கு தான தர்மங்கள் பண்ணுங்கள்"

கெந்தலப்பிட்டிய விதானையாரின் கையொப்பத்துடன் என் கழுத்தில் தொங்கும் பிச்சைக்கார அட்டையைப் பார்த்து- என் வேசம் தெரியாது முதல் முதலாய் தானம் பண்ணிய சிறுமி. நாள் தோறும் பொய்யனுக்கு ஈகையிடும் சிறுமியைக் கூடக் கொன்றுவிடுவேன். நாளை இதே நேரம் இந்த இடத்தில் தான் எங்கேனும் நிற்பாள்.

இவள் எனக்கோ என் இனத்துக்கோ என்ன துரோகம் பண்ணியிருக்கக் கூடும்? வேற்றினம் என்கிற ஒன்றைத்தவிர இவளது பாவம் தான் என்ன? பருவ வயதைக் கூட எட்டாத இந்தச் சிறுமியும் கொல்லப்பட வேண்டிய தேவையோ அதிலுள்ள நியாய தர்மங்கள் தான் என்ன? இவளைக் குறி வைத்துத் தாக்கவில்லை. தாக்கப்படும் இடத்தில் இவளும் இருக்கப் போகிறாள். ஆதலால் இவளும் சிதைந்து சாவது என்பது தவிர்க்க முடியாதது.

'மஹோ... அம்மே...'
அவள் தான் சத்தமிட்டுக் குப்புற விழுந்தாள். அதிர்ந்து பார்த்தேன். இடைவெளிவிட்டு ஒருத்தன் வேகமாய் ஓடி மறைந்தான் சங்கிலித்திருடன்.

பாத்திரத்தினுள் கிடந்த காசைப் பொறுக்கி பையுள் போட்டுக்கொண்டே சிறுமியை வேகமாய் நெருங்கினேன். செயின் இறுக்கி அறுபட்டதில் கழுத்தோரமாய் இரத்தம் கசிந்தது. முழங்கால் முழங்கையிலும் கூட சிராய்ப்பும் இரத்தமும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கீழே கிடந்தவளை நிமிர்த்தி தடவி தூசு தட்டிவிட லேசாய் கிறுகிறுப்பு வந்தது. இரத்தம் பார்க்கப் பயம் வந்தது. படபடப்புடன் கூடிய மயக்கம் வந்தது. மண்டையின் உட்புறமாய் வியர்த்தது. அவ்விடத்தே நான் மெல்ல அமர்ந்தேன்.

என்னால் எப்படி முடியப் போகிறது? இல்லை. என்னால் முடியவே முடியாது...

அர்ஜுனா!

இரத்தம் பார்த்து மயங்காத மனமும்- சாவு பார்த்து கலங்காத கண்களும் கொலைகளுக்கஞ்சாத நெஞ்சமும் உடையோனே எழுந்திரு... சத்திரிய இலக்கணத்தை இழிவு நிலைக்கு உள்ளாக்காது - எழுந்து போர் செய்!

தலையை நிமிர்த்தி கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தேன்... சன நெரிசலுக்கும்- வாகன விரைதலுக்கும் அப்பால்- ஓரமாய் குமார் நிண்டுகொண்டு இருந்தான். அலுமினியப் பாத்திரத்தை கமக்கட்டுக்குள் இறுக்கிக்கொண்டு நெருங்கிப் போனேன். நான் வருவதுகண்டு முன்னோக்கி நடக்கத் தொடங்கி னான்.

குமார் சாமர்த்தியசாலி. அசாத்திய ஒற்றன். பத்துவருடங்களுக்கு மேலாய் யாராலும் இன்னாரென அடையாளம் காணப்படாது சூழலுடன் ஒன்றிப்போன- போகும் சாணக்கியன்.

முதலில் அவனைப்பார்த்த அன்றே விபரீதமாய் இருந்தான். கோட்டையில் ரெயின் நின்றதும்- கரியமிலக் காற்று முகத்தில் லேசாய் அப்பிற்று. கசகசத்த முகத்தை துடைத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தேன். விறைப்பாய் மெலிந்த தேகத்துடன் எதிர்க்க ஒருத்தன் நிற்பது கண்டு- சி.ஐ.டி. யோவென நினைத்துத் திகைக்க- 'சைனைட்' நினைப்பு மனசுக்குப் போனது.

'அர்ஜுன்' என்றான்.
மனசு லேசாகி சொல்லப்பட்ட குமார் இவனென புரிந்து சிரித்தேன். அவன் சிரிக்க மறுத்தான். மறுபடி 'சைனைட்' மூளைக்குப் போனது.

'நான் குமார்'
எனக்கு முதுகுகாட்டிச் சொல்லிக்கொண்டே நடக்கத்தொடங்கினான். நம்பிக்கை வந்தது. அவனைப் பின் தொடர்ந்து இடைவெளிவிட்டு நானும் நடந்தேன். அவனைப் பின் தொடர்வது என்கடமை. கேள்விகள் எதுவுமின்றி அவன் பின் இரண்டு மணி நேரம் தொடர்ந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூளை இடங்களைப் பதிவு செய்யத் தொடங்கியது.
போஹா சந்தி
விகாரை...
பஸ் நிலையம்
இன்டிக்கா போஸ்ட் ஆபீஸ் -
பீப்பிள்ஸ் பார்க்
ஐந்து இலாம்படிச் சந்தி...

ஆறு முறை இவ்விடத்தே சுற்றி முடிய நெருங்கி வந்து விலாசம் கொடுத்தான்.

'நாலு பெடியள் சுவிஸ் போக நிக்கிறாங்கள். பார்த்து...'
கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு தொலைந்து போனான்.
முன்னோக்கி போகும் குமாரைப் பின்தொடர்ந்தேன்...

போஹாச் சந்தியில் இருந்து ஐந்து இலாம்புச் சந்திவரை முன்னோக்கி நகர்ந்தவன் ஆட்டுப்பட்டித் தெருவுக்குள் புகுந்து மூத்திர முடக்கில் ஒதுங்கி நின்றான். என் கழுத்தில் கிடந்த பிச்சைக்கார அடையாள மட்டையைக் கழட்டி அவனிடம் கொடுத்தேன். தோள் பையுள் புகுத்திக்கொண்டான் குமார்.

"நேற்று இரவு மண்டி வந்திது... நாளைக்கு கட்டாயம் முடிச்சிட வேணும்" நடந்துகொண்டே சொன்னான்... நான் சுரத்தில்லாமல் பின் நடந்தேன்.

"எந்தப் பிரச்சனையும் இல்லத்தானே."

"இல்ல"

"லொறி எடுக்கிறதில"

"இல்ல... முதல்லயே சொல்லிற்றன். பிரச்சின இல்ல. லொறி கிடைக்கும்."

குமார் முன்னேயும் நான் பின்னேயும் தொடர்ந்து நடந்தோம்.
சிலாபத்தில இருந்து

"காருண்"ன "கெந்தல"யில கொண்டு வந்து வைச்சிருக்கன். களனி பாலத்தால கொண்டுவர ஏலாது. பாலத்தில ரெண்டு பக்கமும் செக்கிங். மட்டக்குளி காக்காத் தீவில கொண்டு வந்து வைக்கவேணும். அதால முகத்துவார பக்கம் தோணியில் வைச்சித்தான் கொண்டுவர வேணும்.

நாளைக்கு பதினொரு மணிக்கு முகத்துவாரம் மாரியம்மன் கோவிலடியில நிக்கிறன். அந்த இடத்துக்கு லொறியோட வந்தாச்சரி... மூத்திர



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடக்கால் திரும்பி- செக்கடித் தெரு போய் மைலன் தியேட்டர் மூலையில் இருக்கும் தேனீர் கடைக்குள் போய் "பை"யை கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு தொலைந்து போனான் குமார். கொச்சிக்கடை சத்திரம் தாண்டி இருக்கும் வாளிக்கிணற்றில குளிக்க நடந்தேன்.

"என்ன அண்ண, எப்ப பிளைட்டாம்?"
நாள் தோறும் அறைக்குப் போனதும் இதே கேள்வி.
யாராச்சும் ஒருத்தர் கேட்பார்கள். இன்று வசந்தன் கேட்டான்.
"நாளைக்கு"
பொய் சொன்னேன்.

"நாளைக்கா?"
வசந்தனுக்கு அதிர்ச்சியா சந்தோசமா தெரியவில்லை.

"ம்.. சிங்கப்பூருக்கு"

"அண்ண குமார நம்பாதீங்கோ... நாங்க எல்லாரும் சிங்கப்பூர் மலேசியா எண்டு ஆறுமாதம் அலைஞ்சுபோட்டு வந்தனாங்கள்."

"பாப்பம் இந்தா சாப்பாடு. செக்கடித்தெருவில எடுத்த நான். எங்க மத்தவங்கள்?"

"எதுக்கண்ண நீங்க வாங்கி வந்தனியள். அவங்கள் லிபர்டி பிளாசாவுக்கு கீதாகுமாரசிங்காவோட சலூனுக்கு போட்டாங்கள்."

"எதுக்கு அங்க?"

"வேற எதுக்கு சரக்கடிக்கத்தான்! சுதனோட அக்கா சுவிஸ்ல இருந்து காசு அனுப்பினவ. அத எடுத்துக்கொண்டு போட்டாங்கள்."

"நீ ஏன் போகையில்ல...?"

"போக விருப்பம்தான். என்னவோ உறுத்தலா இருந்திச்சி.
ஏலா எண்டு சொல்லிப் போட்டு படுத்திட்டன்."
தெளிவாய் இருந்தான் வசந்தன்.

சோற்று பார்சல்களை அறை மூலையில் வைத்துவிட்டு ஆடைகளைக் கூட மாற்றாது மல்லாக்கப் படுத்து முகட்டை வெறித்தேன். மனசு இருட்டிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாவம் இந்த பையன்கள். வசந்தன், ரவி, இளங்கோ, சுதன் எத்தனையோ கனவுகளையும் லட்சியங்களையும் சுமந்து திரிவார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து தப்பி வந்ததே பெரும்பாடு. அடைக்கலம் தரும் ஏதேனும் ஓர் நாட்டுக்கு போய்ச் சேருவது அதைவிடப் பெரும்பாடு. இவையெல்லாவற்றையும் விட நாளை இவர்கள் எதிர் நோக்கப் போகும் பிரச்சனைகள் சொல்லி மாளாதவைகளாக இருக்கும்.

நான் தவறவிட்ட தடயங்களை வைத்து நான் யார்- எந்த இடத்தை சேர்ந்தவன்- எங்கே தங்கியிருந்தேன் என்பவற்றை எப்படியும் கண்டுபிடித்துவிடுவார்கள்.

எதுவுமே அறியாது விழிவிழியென விழிக்கும் இவர்கள் நாலாம் மாடியில் இரத்தப் பூச்சு அறையில் இரத்தம் சொட்ட சொட்ட...

"கனடா போகவந்தவன் இப்ப சிங்கப்பூர் போட்டான்"
என்பதை தவிர வேறு என்ன சொல்ல முடியும் இவர்களால் என்னைப்பற்றி.

நேற்று ராசன் கேட்டான்

"ஏன் அண்ண... உங்க குடும்பத்திலதான் ஒருத்தரும் இல்ல எண்டு சொல்லுறியள். பேசாம இயக்கத்தில சேந்திருக்கலாம்தானே... எதுக்கண்ண வெளிநாடெல்லாம் போய்... நீங்கள்- யாருக்கு உழைச்சிக் குடுக்கப் போறியள்? அவங்களுக்குத்தான் அக்கா, தங்கச்சி எண்டு ஏகப்பட்ட பிரச்சினைகள். உங்களுக்கு அப்பிடியே..."
சிரித்துவிட்டு அவனது சாறனுக்கு சோப்புப் போட்டேன். ஓடிவந்து பறித்தெடுத்தான்.

"வேண்டாம் அண்ண... உங்கட உடுப்ப மட்டும் தோய்ங்க. டீ போட்டுத்தாறியல் சரி... இந்த வேலயளும் செய்ய வேணுமே... நேற்று இளங்கோ குடிச்சிப் போட்டு சத்தி எடுக்க நீங்கதானாமே அள்ளினது எண்டு சொன்னார்கள். ஏன் அண்ண இப்பிடியெல்லாம் செய்யறியள்?"
புன்னகைத்தேன்! என்னால் என்னென்னவோ கொடுமையெல்லாம் அனுபவிக்கப் போகும் இவர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும் 'இவைகளைத் தவிர' உறுத்தும் என் மனது எப்படிப் புரியும் இவர்களுக்கு.

"இல்ல எண்ட தம்பிமார் மாதிரி இரிக்கியள். அதுதான்"

"உங்களுக்கு எத்தின தம்பி? ரெண்டல்லே..."

"ம்... ரெண்டு தம்பியும், ஒரு அண்ணனும் ஒரு அக்காவும்"

"எல்லாரையும் தான் கொண்டவங்கள்?"
ராசன் கேட்க நான் இறுகிப் போனேன்.
அந்த நாள்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த நாளுக்கு அப்புறம்தான் நான் இறுகிப்போனேன். பள்ளிவிட்டு தோணியில் ஏறி ஆற்றைக் கடந்து ஓடி என் ஊருக்கு போனபோது கொக்கட்டிச்சோலை இரத்தம் கொட்டிய சோலையாகியல்லவா கிடந்தது.

வெள்ளைக்காரன் கூட இடிக்காது திரும்பிப் போன தான்தோன்றி ஈஸ்வரர் கோவில் தடயம் கூட இல்லாது தரைமட்டமாகிக் கிடந்தது. நான் தவழ்ந்து ஆடி, பாடி வளர்ந்த தெருக்கள்... அம்மா, அப்பா கூடப் பிறந்தவர்கள். மாமன், மச்சான், சித்தப்பா உட்பட முப்பத்தி ஏழுபேர்கள் என் ஊரவர்கள். அயலவர்கள் எண்ணூற்றி பதின்மூன்று பேர். ஆயிரத்தி இருநூறுபேர் மட்டுமே வாழுகின்ற கொக்கட்டிச் சோலையில எண்ணூற்றி ஐம்பது பேரை வெட்டியும் சுட்டும் எப்படியோ கொன்று குவித்துவிட்டார்கள். அடையாளம் தெரியாது ஊர் சிவந்து கிடந்தது. அன்றுதான் நான் இறுகிப்போனேன். அதற்கு அப்புறம்தான் மரத்தது மனது. பாளம்பாளமாய் பிளந்த நிலத்தில் இன்று லேசாய் தூறல் விழ லேசாய் சிலிர்த்தது மனசு.

அமோனியா வாடை குப்பென்று அடித்தது.

கபூர்க்காவுக்கு என்னை பார்த்த உடனேயே கண்கலங்க தொடங்கிற்று. என் தலை தடவி, தோளோடு அணைத்துக் கொண்டார்.

"இசுமயிலு டெலிபோன் செஞ்சாந்தம்பி காத்தான்குடியில இருந்து... நீங்க கொழும்புக்கு வாறயளாம் எண்டும் ஒங்களுக்கு ஐநூறு மூட்ட யூரியாவும் லொறியும் வேணும் எண்டு... ஆயத்தமா வெச்சிருக்கன் தம்பி..."
சொல்லிக்கொண்டே காக்கா லொறித் திறப்பை நீட்டினார். வாங்கிக்கொண்டேன்.

"ைறவர் இல்லாம எப்பிடித் தம்பி ஊருக்கு கொண்டு போகப் போறயள்... வேணும் எண்டா நம்மட ைறவர கூட்டித்து போங்க தம்பி"
கபூர் காக்கா ரொம்பவும் அக்கறையுடன் கேட்க- நான் மறுத்தேன்.

"இல்ல காக்கா நான் கொண்டு போவன். காசு எவ்வளவு எண்டு சொன்னா...?"
காக்கா என்கை பிடித்து கண்கலங்கினார்.

"இந்த வாழக்க போடியார் போட்ட பிச்ச தம்பி. ஒங்க வாப்பா இல்லாட்டி நான் இப்பயும் முட்டாசிதான் தம்பி யாவாரம் செஞ்சித்து இரிந்திரிப்பன். ரெண்டு பொஞ்சாதி பதினொரு புள்ள ஒங்க வாப்பாட்ட ஒரு நாள் செல்லிக் கொளறுனன் தம்பி. அறுநூறு மூட்ட நெல்ல நம்பிக் குடுத்தாரு. எனக்கு விசுவாசம் இரிக்கி தம்பி. என்ன கயித்த காலமோ... ஹறாமுல பொறந்ததுகள் குடும்பத்தோட அழிச்சிப் போட்டானுகள். நீங்க கொண்டு போங்க தம்பி. வெள்ளாம வெளஞ்ச ஒடன யூரியாவுக்கு பதிலா நெல்லா குடுங்க தம்பி. லொறிய காத்தான்குடியில ஊட்ட கொண்டு உட்டயல் எண்டா போதும்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கபூர் காக்காவை நினைவு தெரிந்த காலம் தொட்டே எனக்கு தெரியும். காத்தான்குடியில் இருந்து கலர்கலராய் மிட்டாய் கொண்டுவந்து வியாபாரம் செய்தவர். அப்பாவின் உதவியால் நெல் வியாபாரியாகி கொழும்பில் கடை, ஐந்து லொறி காத்தான்குடியில் சொத்து என்ற ஏகப்பட்டவைகள். அப்பா சாகின்றவரை ஊரில் பிரச்சினை ஆரம்பிக்கும்வரை வீட்டுக்கு அடிக்கடி வந்து தனது நன்றியை தெரிவித்து செல்பவர். அப்பாவால் வாழ்வு பெற்றவர் இன்று என்னால் அழிந்து உருக்குலைந்து போகப்போகின்றார். அப்பாவுக்கும் எனக்கும் இடையில் எத்தனை வேறுபாடு. நன்றி விசுவாசத்திற்காய் ஐநூறு சாக்கு யூரியாவும் லொறியையும் தந்தனுப்பும் மனிதனுக்கு நான் செலுத்தப்போகும் பிரதி உபகாரம்தான் என்ன?

சித்திரவதை-
சொத்து பறிமுதல்
சிறை அல்லது மரணம்.

சிதைந்து சிதறிக்கிடக்கும் லொறியின் இலக்கத்தை வைத்து இது இன்னாருடையது என்பதை ஆறு மணிக்கு முன்பாய் பிடித்துவிடுவார்கள். அப்புறம் என்ன? முதலில் இரத்த மூட்டையாக்குவார்கள். பின்னர்தான் கேள்வி கேட்பார்கள். விழிவிழியென விழிக்கும் கபூர்காக்கா என்ன சொல்வார்?

உனக்கும் இத்தனைபேரின் கொடிய சாவுக்கும் என்ன சம்பந்தம் என்றால் என்ன சொல்வார். என்மேல் சாபம் இடுவதைத் தவிர அவரால் என்ன சொல்ல முடியும்?

பாவம் கபூர்காக்கா. மிட்டாய் வியாபாரியாகவே அவர் இருந்திருக்கலாம். இப்போதுகூட இது எதுவுமே நடக்காமல் தடுக்கலாம் குமார் மட்டுமே இடையில் இருப்பவன். குமாரைக் கொன்றுவிட்டால் ...? கொன்றுவிட்டு நாள்தோறும் போடும் பிச்சைக்கார வேசத்தையே வழமையாக்கிவிட்டால்?

குமார் இறுகிய முகத்துடன் நின்றான். முகத்துவாரம் மாரியம்மன் கோவில் முன் நின்றான். அவன் முகம் எப்போதுமே அப்படித்தான் வேற்றுக் கிரகவாசியின் இயல்புடையோன் போல் அவன் செயற்பாடுகள். சிரித்தல் உணர்ச்சி என்பதே இல்லாது இருப்பவன். எத்தனை கொடுமைகளை அனுபவித்தானோ.

லொறியை அவன் அருகே நிறுத்த ஏறிக்கொண்டு சைகை காட்டினான். அதன்படி ஓட்டினேன்.

“ஏன் லேட் நான் பயந்திட்டன். இரவும் போன் வந்தது. கட்டாயம் இண்டைக்கு முடிச்சிடச்சொல்லி.”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"காக்கா நல்லா தெரிந்தவரு குடும்பக்கதை கதைக்கத் தொடங்கித்தாரு. சரி...'காருண்' எங்க?"

"மட்டக்குளி போறவழியில சந்தியில திரும்பி நேரா"
ஓட்டினேன்.

"இனித்தான் கேன்ல வைக்க வேணுமா? இல்லாட்டி வச்சே இருக்கா?"

"இல்ல இரவே நான் இறுக்கிட்டன். மொத்தம் பதின்மூணு கிலோவுக்கு மேல... கண்போடம் மட்டும் எட்டுக் கிலோ. ஜல்டின் ஐஞ்சுகிலோதான். டாலுவினும் கொஞ்சம் லேசா மிக்ஸ் பண்ணியிருக்கன். ஒண்டுக்கு ஆறா டிக்னேட்டர் வச்சிருக்கன்."
பேசுவதை நிறுத்திவிட்டு மெதுவாக ஓட்டும்படி குமார் சைகை காட்டினான்.

பிரதீபா மண்டபம் தாண்டி சேர்ந்தாண்டி, தெருவோரமாய் மீன் விற்பவர்களை தாண்டி ஓரமாய் லொறியை நிறுத்தினேன். அவன் சைகைப்படி அவன் மட்டும் லொறியை விட்டு இறங்கிக் கொண்டே என்னை இறங்க வேண்டாம் என்றுவிட்டு மீன் வியாபாரிகளுடன் சிங்களத்தில் பேரம் பேசினான். ஐந்து நிமிட பேரத்தின் முடிவில் இரண்டு கூடை மீன் லொறியின் பின்புறம் யூரியா மூட்டையின் மேல் ஏற்றிவிட்டு பெருவிரலை உயர்த்திக் காட்டினான். அப்புறம் தொலைந்து போனான் பாவி.

ஆயிரம் பேரின் வாழ்க்கை இப்போது என்கையில். நான் நினைத்தால் போதும்
பாழ்வெளியில்...
கடல் முற்றத்தில்...
ஆற்றின் கரையில்...
புல் கூட கருகாவண்ணம் என்னால் முடியும்.

அர்ஜுனா!

நீ உன் போர் கருவியை நழுவ விட்டாலும், இவர்களை நீ கொல்லாது போனாலும், வேறு ஏதேனும் வழியில் நான் இவர்களை கொன்றே தீர்வேன். இவர்கள் எல்லோரையும் நான் ஏற்கனவே கொன்றாகிவிட்டது. உடலை கீழே விழுத்த மட்டுமே நீ. போ. போய் அவர்கள் உடல்களை கீழே விழுத்து.

லொறியை ஸ்ராட் பண்ணத்தொடங்கினேன்.

'முகரம்' - 1997



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனசு

பனி கொட்டலும்- கொட்டிய பனிகொள்ளலும்- அப்புறமாய் உஷ்ணம் பட்டு உருகலும் வேடிக்கையா? இல்லையேல் எதுவேனும் தத்துவக் குறியீடா?

“சொல்லு; என்ட பிரச்சனைக்கு ஒரு முடிவு சொல்லு... ப்ளீஸ்... உன்னால முடியும். நீ கதை எழுதுறவன். கதையில எவ்வளவோ பிரச்சனைக்கு நீ லேசா முடிவு எடுக்கிறாய். உன்னை நம்பித்தான் வந்திருக்கிறன். உன்னால முடியும் என்ர வாழ்க்கைக்கு ஒரு முடிவு சொல்லு...”

கண்ணாடி ஜன்னலில் இருந்த என் பார்வையைத் திருப்பி சீதாராமனைப் பார்த்தேன். அவன் பார்வை வெறித்துக் கிடந்தது. நிலைகுற்றி என்னையே அவை வெறித்தன...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஒளிபடைத்த கண்ணினாய் வா...வா...வா...
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா...வா...வா..."
சீதாராமனின் அப்பா இவனைப் பார்த்து எப்போதேனும் இப்படிப் பாடியிருக்கக்கூடும். கைபிடித்து களுதாவளைப் பிள்ளையார் கோவிலுக்கோ களுவாஞ்சிக்குடி கடைத் தெருவுக்கோ அழைத்துப்போய் வேடிக்கை காட்டியிருக்கலாம்.

"அன்னா போகுது பாரு... அதன் கப்பல்."

"கடலுக்குள்ள, அங்க தூரத்தில் ஆரு ரோட்டுப் போட்டது?"

"உஹூம்... அது தண்ணியில ஓடுறது நீராவிக் கப்பல் அது."

"அது எங்க போகுது?"

"சிங்கப்பூருக்கு."
சின்னக்காலத்தில் அப்பனும் பிள்ளையுமாய் ஊர்க் கடற்கரையில் நின்று பேசியிருக்கக்கூடும்.
நெஞ்சம் நிறைந்த கனவுகளோடு தூரத்து நிலவைக் காட்டிச் சோறு கொடுத்திருக்கக்கூடும், இவன் அம்மா. இந்த ஒளியிழந்த கண்களையும் உறுதி இழந்த நெஞ்சினையும் இவன் அப்பாவோ அம்மாவோ பார்க்கக்கூடுமாயின், அவர்களால் என்ன பேசத் தோன்றும்.

"என்ன மண்ணாங்கட்டிய யோசிக்கிறாய்? எனக்கொரு முடிவு சொல்லு. ஒரு புத்திஜீவியான உன்னால் முடிவு சொல்ல ஏலாதே...?"
சீதாராமன் பார்வையை மாற்றாது அப்படியே வெறித்துக்கொண்டு என்னை விரட்டினான். விழி ஓரங்களைச் சுற்றியிருந்த கறுப்பு அரை வளையங்கள் மாத்திரம் அகன்றும், சில சமயம் சுருங்கியும் கொண்டன...

"உன்னோட வாழ்க்கை நீயாக உருவாக்கின பிரச்சினை. நீதான் முடிவு எடுக்கவேணும். நல்லா இருந்தால் மறுக்கவும்தான் என்னால முடியும்."

சீதாராமன் இமைகளை இறுக மூடிக்கொண்டான். மௌனித்திருந்தான்.
மௌனம் மிக அழகான, அர்த்தமான, அற்புதமான மொழி! ஆயினும் எந்த ஒரு பொழுதிலும் மௌனம் பிரச்சினைகளை தீர்த்ததில்லை. தீர்க்கப் போவதும் இல்லை.
மௌனம் தொடர்ந்தது.
சிறு அசைவுகூட இல்லாது ஜடமாய் இருந்தான்.

"சீதா..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"..."

"சீத்தா..."

"ம்...ஆங்..."
முனகலாக அடித்தொண்டைக்குள் சத்தம் அசைந்தது... இமை மூடியேதான் கிடந்தது.

"கண்ணைத்திற... கண்ணைத் திறந்து என்னப்பாரு."

"வேணாம். நான் கண் திறக்கவேணாம். சுகம் இல்லாத வாழ்க்கைய என்னால அனுபவிக்க முடியாது. ஐம் கோயிங் டு டை."
கண்ணைத் திறக்க மறுத்தான்.

"பயித்தியம். உளறாத. செத்திட்டால்... பிரச்சினைக்கு முடிவு அதுதானா? வாழவேணும். இன்பமோ துன்பமோ அனுபவிக்க வேணும். அதுதான் வாழ்க்கை."
கண்களைத் திறந்தான். கண்கள் சிவந்து கிடந்தன. பார்வை நிலத்தை நோக்கிற்று. இடது கால் பெரிவிரலை, வலக்கால் குதியால் மிதித்தான். மெல்லிய நீர் படலம், விழியில் திரண்டது. வினாடிகள் கடந்து போக, திரண்ட நீர் விழியின் கீழ் ஓரமாய் சேர்ந்தது. விழிப்படலத்தின் கொள் அளவு காணாததால் நீர் வெளித்தள்ளப்பட்டது.

"ஆண் அழுவது வீரமோ?"

"வீரன் என்பவன் யார்?"

"இறுகிய மனதுடன் எப்போதும் கல்லாக இருப்பானே, அவனா? இன்பத்திலும் துன்பத்திலும்- வெற்றியிலும் தோல்வியிலும்- நல்லதிலும் கெட்டதிலும் இறுகிய மனதுடன் கல்லாக இருப்பானே, அவனா வீரன்? ஆமெனில் இன்பத்தில் மகிழ்பவனும் கெட்டதில் கவலை கொள்பவனும் யார்? அவன் ஒரு சராசரி மனிதன்! உணர்ச்சிகளுக்கு கட்டுப்பட்ட சராசரி மனிதன். சீதாராமன் உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்ட சராசரி மனிதன். அவனால் அழவும் சிரிக்கவுமே முடிகின்றது... இங்கு மௌனம் என்பது தற்காலிகமாய் தப்பித்தலுக்கு மாத்திரமே பயன்படுகின்ற மொழி. ஜடமாய் அசையாது இருத்தல் கூட நிரந்தரமாய் முடியாது...அது வீரனால் கூட முடியாதது. தவசிகளால் முடியக்கூடியது. இங்கு தவசிகள் கிடையாது. வீரர்கள் கிடையாது. மனிதர்கள். சராசரி மனிதர்கள்... சகலரும் அப்படியே..."

"எது வாழ்க்கை? எங்கேயோ குடிச்சுப் போட்டு விடியச்சாமம் ரெண்டு மணிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவனோ ஒரு ஆம்புளையோட வாற பொஞ்சாதியோட எப்படி வாழ முடியும், சொல்லு பாப்பம்?"
ஜன்னல் வழியாய் பார்த்துக்கொண்டே சீதாராமன் கேட்டான். அவன் பார்வை வேறு திசையில்... அவன் முகத்தை சங்கடம் இன்றி பார்க்க முடிந்தது.
என் உதட்டைக் காட்டிலும் கருமையாய் இருந்தன அவன் உதடுகள். அதிகமாய் புகைக்கின்றானோ? இடது காதில் துவாரம் மட்டும் கறுப்பு நிறத்தில் ஏதோ வடு மாதிரி காணப்பட்டது. கடுக்கனைக் காணவில்லை.
தலைமுடியில் இடைவெளிகள் அதிகம் தெரிந்தது. நரை கூட ஏகமாய் பரவிக் கிடந்தது. முப்பது வயதுக்குள் முதுமையா?
இது முதுமையா? இல்லை. இது வெம்பல்.

"சொல்லுடாப்பா. எப்படி வாழ ஏலும்?"
என்னைப் பார்ப்பதை தவிர்க்க விரும்புகிறான் போலும். கொட்டும் பனியை தொடர்ந்து வெறித்தான்.

"ஏன் முடியாது? முடியும். முடியிது. அந்த வகையான கலாசாரம்- பண்பாடுகளைக் கொண்ட சனத்தால அப்படி வாழ முடியும். வாழுதுகள். அதுகளோட வாழ்க்கை அப்படித்தான்."

"எனக்கு பிடிக்கையில்லை... என்ன பண்பாடும் கலாசாரமும்?"

"அதெப்படி; நீ அப்படிச் சொல்ல ஏலும்?"
என் குரலை இறுக்க, முகமும் இறுகிக் கொண்டது. என் ஆத்திரம் அவனால் உணரப்பட்டது... திடீரென என்னை நோக்கினான். என்னை பார்த்த வண்ணமே தரை பார்த்து மௌனித்தான்.

"உன்ர அம்மா அப்பாவோ இல்லாட்டி சொந்தக்காறங்களோ பார்த்துக் கட்டிவைச்ச கலியாணமா இது? நீயாகக் கட்டிக்கொண்டது. எத்தின தரம் வேணாம்டா வேணாம்டா எண்டு சொல்லியிருப்பன்... கேட்டியா? உடம்புத் திமிர்! இப்ப அடங்கிட்டுத்தானே..."
என் கோபம் நியாயம் என்பதை சீதாராமன் ஏற்றுக்கொள்கின்றான் என்பதை அவன் முகத்தை வைத்துக் கணிப்பிட்டேன்.

பாவி... எப்படியெல்லாம் ஆடினான். இப்போது இரத்தம் சுட்டுப்போக புத்தி தெளிகின்றது.

கடவுள் மனிதனுக்கு இரண்டு வழிகளை காட்டுகின்றான். ஒன்று பூந்தோட்டம். மற்றயது வாசல் மட்டும் அழகாய் உள்ள குகைப் பொறி. பூந்தோட்டமா, குகைப்பொறியா வேண்டும் என்பதை தீர்மானிப்பது மனிதனின் புத்தி. இந்த சீதாராமனின் பாழாய்ப்போன புத்தி குகைப் பொறியைத் தெரிந்தெடுத்து உள்ளே நுழைந்துவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"தெரியல்ல மச்சான்... உண்மையில என்ர வாழ்க்கை இப்படி நாசம் கெட்டுப் போகும் எண்டு நான் முதல்ல நினைச்சுக்கூடப் பார்க்கையில்ல."
சீதாராமன் வேதனைப்பட்டுக் கொண்டான்.

"நீ ஆசைப்பட்ட வாழ்க்கை இதுதானே?"
நான் கேட்க, கை இரண்டையும் உயரத் தூக்கி தலைக்கு மேலாகப் பிடித்துக் கொண்டான். வியப்பாய் இருந்தது அவன் செய்கை.

இரண்டு கைகளையும் மெல்ல மெல்ல பதித்துக்கொண்டே வந்தான். வந்து, கன்னத்துக்கு அருகே நிறுத்திக் கொண்டான். என் கண்களை நேராய் இமை சிமிட்டாது பார்த்தான். வளர்த்த நாயை விட்டுப் பிரியப் போகின்றோம் என்பதை மணந்து கொண்ட நாய் ஒரு வகையாய் பார்க்குமே... அதே மாதிரி ஈனம் கலந்த வெறிச்சென்ற பார்வை. கைகள் இரண்டும் அகல விரிந்தன. வேகமாய் ஒடுங்கி ஒரே நேரத்தில் அவன் கன்னத்தை படபடவென தாக்கின... சீதாராமனின் செய்கைக்கு அர்த்தம் புரிந்தது.

இது உச்ச வலியின் செயற்பாடு; சுயதவறின் உண்மையை உணர்தல், சுயமாய் தன்னை தண்டிக்க, கேவலப்படுத்த எல்லாராலுமா முடிகின்றது? சீதாராமனைப்போல் எல்லாராலும் முடியும்; இவனைப்போலவே எல்லோரும் உச்சவலியை உணர்கின்ற போது...

அடித்துக்கொண்டே இருந்தான். நான் தடுக்கவில்லை. வெறுமனே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அன்றைய அந்த முகம் எங்கே? அந்தப் பார்வை இப்போது எங்கே? அந்த பேச்சு எங்கே? அந்த திமிர், கர்வம் எல்லாம் எங்கே?

"பயித்தியக்காரத்தனமான சுத்த பம்மாத்து கல்ச்சர், நம்மளோட கல்ச்சர். இந்த தமிழிச்சிகள் தலையைக் குனியிறதும், ஓடுறதும், வெக்கப்படுறதும், வோஷ்ரூம் போகக்கூட அவையளுக்கு ஆம்புள வேணும். ச்சி சுத்தப் பம்மாத்து. கார்பேஜ்! சோஷலாப் பழகவேணும். வேறுபாடு பார்க்காமல் தோள்ள கைபோட்டு திரியவேணும். ஒண்டா இருந்து தண்ணி அடிக்கவேணும். ஒரு சிகரட்ட புருஷனும் பொஞ்சாதியும் பாதி பாதியா பத்தவேணும்... பார்ட்டியில கட்டிப்புடிச்சு டான்ஸ் ஆடவேணும்..."

ஆசை ஆசையாய் கனவு கண்டு தேடிக் கண்டுபிடித்துக் கட்டிக்கொண்ட வாழ்க்கை. அத்தனையும் நான்கைந்து ஆண்டுக்குள் வெறுத்துவிட்டது. உள்ளத்தை சுட்டுவிட்டது.

தொடர்ந்து அறைவதற்கு கைகள் வலுவிழந்தன. அடியின் வேகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறைந்து மெது மெதுவாய் கன்னத்தை தாக்கிற்று. கைகள் முற்றாக வலுவிழந்தன.
கைகள் அசைவற்று, மூட்டெலும்பு கழன்றுவிட்ட மாதிரி சும்மா கிடந்தன...

"சீதா..."
மெல்லிய வருடலாய் அழைத்தேன்.

உடலில் சிறு அசைவு மாத்திரம் தென்பட்டது. அவன் தலையை நிமிர்த்தினேன். நேராய் நிற்க மறுத்தது... கண்கள் இறுக மூடிக்கிடந்தன.

"ஏதாவது சாப்புடுறியா?"

"..."

"பியர்?"

"தா"
அவசரமாய் விழி திறந்தான்.

ஒரு போத்தல் பியரை உடைத்துக் கொடுத்தேன் ஒரு முடர் குடித்துவிட்டு, போத்தலை எட்ட வைத்தான். இடப்பக்கக் கன்னமேடு மெல்ல மேல் எழுந்தது. கசப்பாய் இடப்பக்க உதடு மாத்திரம் புன்னகைத்தது.

"ஹொட் ட்றிங் இல்லையா?"

"இல்ல... நான் ஹொட் ட்றிங் பாவிக்கிறது இல்லை."

"க்ளவ்டியா இப்ப எங்க?"

"அங்கதான், மொன்றியல்ல..."

"வரேக்க சொல்லிட்டே வந்தனீ?"

"இல்ல சொல்லயில்லை... சும்மா நிண்டவாக்கில பஸ் எடுத்து வந்திட்டன். என்னத்துக்குச் சொல்லவேணும்? வேணாம் எண்டு போட்டு வந்தநான். ஏன் அவளிட்ட சொல்ல வேணும்?"
பியரை எடுத்து மடமடவென்று அரைப்போத்தல் காலியாகும் வரை குடித்தான்.

"பிழைதான் மச்சான். யோசிக்காமல் கல்யாணம் கட்டினது பிழைதான். ஒரு புருஷன் குடிச்சால் குடிக்காத எண்டு பொஞ்சாதி சொல்ல வேணும். பறிச்சிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடிக்கிற பொம்புளையோட எப்படிடா வாழுறது? அசிங்கமான பழக்க வழக்கமுள்ள பொஞ்சாதியோட குடும்பம் நடத்திறது எவ்வளவு கொடுமை எண்டு எனக்கு இப்பத்தான் தெரியுது."

சொல்லிவிட்டு மறுபடி முழு பியரையும் உறிஞ்சினான். உறிஞ்சி முடிய காலிப் போத்தலை என்னிடம் நீட்ட, வாங்கிக்கொண்டேன். இன்னும் ஒரு முழுப்போத்தலைக் கொடுக்க, வாங்கி ஓரமாய் வைத்தவிட்டுக் கன்னத்தைத் தடவினான்.

அறையின் தாக்கம் கன்னத்தில் வலியை உண்டாக்குகின்றது போலும்.

"வலிக்கிறதா?"

"'ம்...! நீ பியர் குடிக்கயில்லையா?"

"வேணாம் நீ குடி!"

"எனக்கொரு முடிவு சொல்லன்"

"நீதான் முடிவு எடுக்கவேணும்"

"நான் ஊருக்கு போகட்டா?"

"போய்...?"

"தெரியல்ல... ஆனா போகவேணும் போல இருக்கு"

"உன்ர பிள்ளை?"

"வெள்ளைக்காறிக்குப் பிறந்தது. எப்பிடியும் அது பிழைச்சுக் கொள்ளும்!"

"தப்பி ஓடப் போறாய். அப்பிடித்தானே..."

"உயிரியல் விதி! என்னால் எதிர்த்தாக்குதல் நடத்த ஏலாது பலயீனமா இருக்கு. தப்பி ஓடத்தான் வேணும்."

"ஓடு"

மறுப்பேன் என்று எதிர்பார்த்தானோ என்னவோ தெரியவில்லை, அதிர்ந்து என்னைப் பார்த்தான். பார்த்துக்கொண்டே ஜக்கட் பையுள் எதையோ தேடினான். ஒவ்வொரு பையாய் துழாவினான். கிடைக்கவில்லை போலும்.

"சிகரட் இருந்தால் தா!"


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெட்டியுடன் கொடுத்தேன். லைட்டர் வைத்திருந்தான். ஒன்றை உருவி பற்றவைத்துக்கொண்டான். புகையை வெளியே விட்டுக்கொண்டே சிரித்தான்.

“என்னட்ட சிகரட் இல்லாட்டி க்ளவ்டியாட்ட கேட்டால் தருவாள். ஆனா திரும்பக் குடுத்திட வேணும். இல்லாட்டித் திட்டுவாள். வாழ்க்கை பண்ட மாற்று என்றது என்ர வாழ்க்கைதான். கட்டில் ஒண்டைத் தவிர மற்ற எல்லாமே வேறவேறதான்! பிள்ளையைக்கூட அவள் ஒரு நாள் - நான் ஒரு நாள் பார்த்துக்கொள்ளவேணும். என்ர ரேண்ல பிள்ளைக்குச் சுகம் இல்லெண்டால்கூட கிட்ட வரமாட்டாள். அவலட்ஷணமாகப் படுத்துக்கிடப்பாள். என்ன வாழ்க்கை சொல்லு... தனியா சம்பாதிச்சு, தனியாச் சாப்பிட ஒரு குடும்பம் வேணுமா? நித்திரையைக்கூட தனித்தனியாகக் கொள்ளலாம். ஆனால் ஒரு தேவைக்காக மட்டும் ஒரே கட்டில்ல படுக்கவேண்டி இருக்கு. அது மட்டுந்தான் வாழ்க்கையா? அதுக்கு மட்டுந்தானா குடும்பம்? எனக்கு வெறுத்துப்போச்சு.”
ரொம்பவும் அடிபட்டு நொந்துவிட்டான்.

குகைப் பொறிக்குள் இருந்த சகல ஜந்துகளும் இவனைத் தீண்டிவிட்டன. விஷம் முழுதாய் பரவிவிட்டது. இப்பொழுது மீட்சி தேவைப்படுகின்றது.

பலமாய், இறுக்கமாய் என்னில் கேள்வி எழுகின்றது. இவன் பிரச்சனைக்கு ஒரே தீர்வு. இவன் சொல்வது போல, தப்பித்து ஓடவே தீர்வு.

ஸ்நேகிதன் என்கின்ற நெருக்கம். ஒரு பக்க சார்பாய் நான் நினைத்துக் கொள்ளலில் ஏதேனும் பிழை இருப்பதாய் தெரியவில்லை.

இது மனித இயல்பு. வேண்டப்பட்டவர்களுக்கு சார்பாய் இருத்தல் இயல்பு.

அப்படியாயின் சீதாராமனின் பிள்ள? எனக்கு இன்னும் கொஞ்சம் வேண்டப்பட்ட உயிர். ஸ்நேகிதன் பிள்ளை என்கின்ற சின்ன நெருக்கம். மடியில் தூக்கி வைத்து, முத்தமிட்டு நடைபழக்கிய சில மணிநேர நெருக்கம்.

“இவன் அப்பன் அம்மாவை விட்டுட்டு ஓடிட்டான்” என்று அந்த பிள்ளையை பார்த்து எந்தப் பிள்ளையும் பள்ளியில் கிண்டப்போவதில்லை. ஆனால்-

“என்னுடைய அப்பா இவர். உன்னுடைய அப்பா யார்?”
என்று கேட்கக் கூடும்.

பிள்ளை விழிக்கும். அம்மாவிடம் கேட்கும். அந்த நேரம் அம்மா போதையில் கிடக்கக்கூடும். இல்லையேல் வேறு பிற புருஷனுடன் சல்லாபித்துக் கொண்டிருக்கக்கூடும். பிள்ளை தன்னிடம் கேட்கும். விடை தெரியாது திகைக்கும். ஆக ஆக மனது வக்கிரம் கொள்ளும். கேட்க, பார்க்க நாதி அற்று அலையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்கிரமம் பண்ணும். குற்றம் புரியும்.

ஆக மொத்தம், என் ஸ்நேகிதன் மூலமாய் இந்தச் சமூகம் ஒரு விரோதியை பெற்றுக் கொள்ளப்போகின்றது.

வேண்டாமே இது! இதை தவிர்க்க முடியாதா? வேண்டும். தடுத்தாக வேண்டும்!

நிமிர்ந்து பார்த்தேன். சீதாராமன் கண்களை மூடி இருந்தான்.

"சீதா"

"..."

"சீதாராமா"

"..."

"நித்திரையா? உள்ள வந்து கட்டில்ல படன்."

சரிந்து சோபாவுக்குள் முடங்கிக்கொண்டான்.

"பாவம் சீதாராமன்"

தவறுவது மனித இயல்பு. ஆசைப்படுவது பாவம் இல்லை. இவைகளால் அழிந்துபோவது கொடுமை. மகா கொடுமை.

தூக்கம் வரமறுத்தது. எண்ணங்கள், கவலைகள், ஆர்ப்பரித்துக்கொண்டே இருந்தன.

சீதாராமன், க்ளவ்டியா, இவர்கள் பிள்ளை மாறிமாறி வந்தார்கள். ஒன்றாகச் சேர்ந்தும் வந்தார்கள். நேரம் எப்படியும் ஒரு மணியை கடந்திருக்கலாம். இனி தூக்கம் வருமா?

"மச்சான் டேய்!"

கால்மாட்டில் சத்தம் மெல்லிதாய் கேட்டது.

கண்களைத் திறந்து பார்த்தேன். கால்மாட்டில், கட்டில் விளிம்பில் சீதாராமன் இருப்பது இருளில் தெரிந்தது.

"என்ன நித்திரை வரயில்லையா? பசிக்கிதா? என்னமும் சாப்பாடு செய்து தரட்டா?"

எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

"மொன்றியலுக்கு இப்ப பஸ் கிடைக்குமா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு வகை அயர்ச்சி அவன் வார்த்தைகளில் காணப்பட்டது. அதன் அர்த்தம் புரிந்து கொள்ள சிரமமாய் இருந்தது.

"ஏன் கேட்கிறாய்?"

"நான் மொன்றியலுக்குப் போகவேணும்."

"ஏன்?"

"ப்ளீஸ், கோ ஸ்ரேஷன்ல என்னைக் கொண்டுபோய் விடு. நான் மொன்றியலுக்கு போகவேணும்."

"ஏன்?"

"....."

மௌனமாய் தலை குனிந்தான். அது இயல்பாய் இருந்தது. சீதாராமன் கூட இயல்பாய் இருந்தான்.

❑

நான்காவது பரிமாணம் - 1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"போரின் பகைப்புலம் அறியாது
போர்ப்பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ – அவரே ஈழம் இன்னமும்
எரிந்துகொண்டிருக்க முதற்காரணி என்பேன்."



# பிசாசுகளின் வாக்குமூலம்

மிதப்பு நிலை...

கத்தரிப்பூ வர்ணக்கலவையின் ஒளி வெள்ளம். ஒளிவெள்ளம் மெல்லவும் கலையாவண்ணம் மிதந்தேன்.
உதிர்ந்த இறகு போன்றும் - நீரில் மூழ்கும் தகட்டுத் துண்டுபோன்றும் மிதந்தேன்.
புலன் எட்டும் திசையெங்கும் கூசும் ஒளியின் கசிவு.
காற்றில் கலைந்து - பின் சேர்ந்து மேகமும் அதிராது மிதந்தேன்.
எதுவுமே இல்லை. என்வசம் எதுவுமே இல்லை.

துவக்கு
காசு
அதிகாரம்
ஆடை
உணர்ச்சி
உயிர் என்று எதுவுமே இல்லை என்னிடம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழப்புக்கு இத்தனை சுகம் உண்டா?

மிதந்தேன்..

மிதத்தல் முடிய தீர்ப்பு நிலையம் வரும் போலும்.

விசாரிப்பார்கள். விசாரிப்பின் முடிவில் தேவர்களின் ஸ்நேகமா? எண்ணை கொப்பராவா என்பது முடிவாகும். சொர்க்கம் என்பது நிச்சயம் எனக்குக் கிடையாது. பாவங்களை பட்டியல் போட்டு எப்படியும் ஏழெட்டு நரக தண்டனை தீர்த்து விடுவார்கள்.

கொலை:
கொள்ளை:
ஆட்கடத்தல்:
பாலியல் வன்முறை:

இனத்துரோகம். சித்திர குப்தன் பட்டியல் போடுவான். சீ... போடுவார். அவரிடம் "நான் ஆரெண்டுதெரியுமாடா?" என்று அதிகாரம் எல்லாம் காட்ட முடியாது. காட்டவும் கூடாது. தருகின்ற தண்டனையை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உர்ர்ர்...ரென்ற பேரிரைச்சலுடன் எனைக்கலைத்து விட்டு வேகமாய் எதுவோ பறந்து கொண்டிருந்தது. ஒரு கணம் துணுக்குற்று - கலைந்த நான் மறுபடி இணைந்து புள்ளியாய் தூரத்தே போகும் அதைப் பார்த்தேன்.

மயில்வாகனம்...முருகன் அதில்...சீச்சீ..இது பிரமை அது சட்லைற்.

எத்தனை காலம் இப்படி மிதக்க நேரிடுமோ? இப்படியே மிதத்தல் தொடருமாயின் மரணம் சுகமானதே. பாவத்தின் சம்பளம் மரணம் என்கிறார்களே அப்படியாயின் மரணம் தண்டனையா? அப்படி உணரமுடியவில்லையே.. புவிவாழ்வில் இத்தனை சுகானுபவம் கண்டதில்லையே இந்த ஆத்மா. உடல் இழந்தால்தான் ஆத்மாவிற்கு சுகம் உண்டா? ஆத்ம திருப்தி ஆத்ம திருப்தி என்கிறார்களே அது பொய்யா? உடல் இழந்த பின்தானே இவ்வாத்மா திருப்தி என்பதைக் கண்டது.

சே.. இது முன்னமே தெரிந்திருந்தால் எப்போதோ செத்துத் தொலைந்திருக்கலாம். எத்தனையோ கொடூரம் நிகழாது இருந்திருக்கலாம்.

மிதப்பு நிலை சீரற்று இருந்தது கூடியும் குறைந்தும் சிலகணம் அசையாதும் இருந்தது. பூமி தெரியவில்லை. காற்று மண்டலம் கடந்து கனநேரம் ஆனாதாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓம்ம்ம்... போன்றதோர் சங்கின் வயிற்றில் கேட்குமே அப்படியோர் வெற்றிரைச்சல். மிதப்பு நிலை முற்றாய் நின்றது.

லேசாய் பதட்டம் பரவியது. அடுத்தது என்னவோ என்கின்ற படபடப்பு. திக்திக்கென்றிருந்தது.

இயமரைப் பார்க்கலாம். சித்திரகுப்தனாரைப் பார்க்கலாம். தவறுகளை நாமாகவே முன்னமே சொல்லி கொஞ்ச தண்டனையை மட்டும் அனுபவித்துவிட்டு - முத்தி அடைந்து சிவனாரையும் பார்க்கலாம். ரம்பா, ஊர்வசி ஐயய்யோ... கிளு கிளுப்பாக கூட இருக்கிறது.

ஊதா நிறத்தின் ஊர்வலம் மெல்ல மெல்ல கலைந்தது. செந்நிறம் படர்ந்து என்னை மூடிக்கொள்கிறது. காற்று மாதிரி எதுவோ என்னை தாக்க வேகமாக வருகிறது. வந்தது என்னை கலைத்து சிதைத்தது. நான் சிதைந்து சின்னாபின்னமானேன். முயன்றேன். நான் ஒன்றாகி உருவம் கொள்ள முடியவில்லை. நெடுநேரம் அது என்னை சிதைத்து சிதைத்து சீரழித்தது.

கீழ் நோக்கி - பூமி நோக்கி கணப்பொழுதில் அது என்னை அமுக்கி விட நிலத்தில் இருந்து மூன்றடி உயரத்தில் உருவம் கொண்டு நின்றேன். பூமியை தொடமுடியவில்லை.

பூமியில் நடப்பவையாவும் தெரிந்தது.
துவக்கு சிறுவர்கள்
துவக்கு மிருகங்கள்
துவக்குக்கு பயந்த குருட்டுச் சனங்கள்.
வீரவணக்கம் செலுத்தப்படும் என் உடல்.
சகலமும் தெரிந்தது. என்னைத்தான் யாருக்கும் தெரியவில்லை.

உன்னி எம்பினேன். வேகமாய் மேல் எழுந்து கீழ் மேகத்தின் உயரம்வரை சென்றுவிட்டு, மேல் செல்ல முடியாது கீழ் வந்தேன். ஆத்ம திருப்தி என்னவென்பது தெரியாது மேல் எம்மியும் வேகமாய் கீழ் அமுக்கப்பட்டும் - மேலும் கீழுமாய் அவதியுற்று அல்லாடினேன். சாந்தியடையாத ஆத்மா அவதியுற்று அலைந்தது.

உக்கியா...உக்கியா... ஊ ஊ ஊ...
வாய்குவித்துக் கூவினேன். இருள் கவிழ்ந்து. நான் பிசாசானேன்
சுடுகாட்டுக்கு பறந்தேன். சாம்பல் மேட்டுக்குவியலில் காற்றடித்தது. அடித்த காற்றில் கலைந்த சாம்பலில் குளித்தேன்.
சுகம்...சுகம்..உக்கியா உக்கியா ஊ..ஊ..

இடுகாட்டு சிலுவையில் தலை கீழாய் தொங்கினேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுகம் சுகம் உக்கியா உக்கியா ஊ..ஊ..

களைப்பில்லை... சோர்வில்லை. பசியில்லை. ஆனாலும் பதட்டம் இருந்தது உருவம் துடித்துக் கொண்டிருந்தது.

எங்கேனும் ஓரிடத்தில் ஓய்ந்திருக்க வேண்டும் போல் தோன்றுகிறது.
பாய்ந்து பாய்ந்து பறந்தேன். ஓரிடமும் பிடிக்கவில்லை. எங்கேனும் ஓர் புளியமரம் கிடைக்குமாயின்... புளியமரத்தில் மட்டுமேனோ ஆவலாய் இருந்தேன். பட்டென ஞாபகம் வந்தது. வேதக்கோயில் அடிவளவில் இருக்கும் கிழட்டுப்புளியமரம். பட்டென பறந்தேன். பறந்தநான் உச்சாணிக் கொம்பில் ஒய்யாரமாய் தொங்கினேன். அசைவு கண்டு வௌவால் ஒன்று தூக்கம் கலைந்து பறந்தது.
சுகம்...சுகம்..உக்கியா..உக்கியா..
ஊ. ஊ...

"டேய் ஆர்ரா நீ?"
முரட்டுச் சத்தம். பிசாசான பின்னும் பயம் எனக்குப் போகவில்லை. பயந்தேன். அடிமரக்கிளை ஆடியது. உற்றுப்பார்த்தேன். இன்னோர் பிசாசு.

"இது எண்ட இடம். ஆர்ரா நீ?"

"நான் பிசாசு"

"நானும் அதுதாண்டா. நீ எந்த இயக்கம்டா?"
அப்பிசாசு என்னருகே மிதந்து வந்தது. அதன் முகம் மிகக்கொடூரமாய் இருந்தது.

"நான் ஒரு இயக்கமும் இல்ல..."
நடுங்கியது என்குரல்.

"நீ இயக்கக்காறன்தான் எனக்கு தெரியும்."
நான் எதுவும் பேசாது மௌனமாய் இருந்தேன்.

"இது எண்ட இடம். நீ இங்க இருக்காத போ.."

"நான் புதுசு. வேற இடம் ஒண்டும் எனக்கு தெரியாது.?"

"இப்ப நீ போறயா? இல்லையா?"
உறுமிக்கொண்டே வாய்குவித்து என்முகத்தில் ஊதியது. பச்சைப் புகையும் வெடுக்கு நாற்றமும் நெருப்பும் வந்தது அதன் வாயில் இருந்து.
எனக்கு அருவருப்பும் மயக்கமும் வந்தது. மனசுக்குள் "பிசாசு" என திட்டிக்கொண்டு கிறுகிறுத்து தூரத்தே பறந்துபோனேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லாடி அல்லாடி அலைய கவலைவந்தது. வீணாகத் தற்கொலை பண்ணி தொலைந்து விட்டோமோ என்று. இயற்கையாய் சாவு வரும் வரைக்கும் உயிர் வாழ்ந்து இருக்கலாம்.

கும்மிருட்டு. திசைகெட்டு அலைந்தேன்.
தனிமை... தனிமை...
உக்கியா...உக்கியா...ஊ ஊ...
உக்கியா...உக்கியா...ஊ ஊ...
உக்கியா...உக்கியா...ஊ ஊ...
உக்கியா...உக்கியா...ஊ ஊ...

எக்கச்செக்கமாய்: கிட்டத்தில் எங்கோ நடுநிசிப் பிசாசுகள் கூய் போட்டு, கூய் போட்டு கொட்டமடித்துக் கொண்டிருக்கும் சத்தம் சந்தோசமாய்க் கேட்டது. ஓசை வந்த திசை நோக்கி வேகமாய்ப் பறந்தேன். வைரவன் கோயில் இலுப்பை மரம் கிளைகட்டி இருந்தது. எக்கச்செக்கம் பிசாசுகள் கிளைகள் தோறும் கொட்டமடித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. ஒரே சந்தோசம் ஆகிவிட்டதெனக்கு. நெருங்கிப்போக - பிசாசொன்று எனைக் கண்டுகொண்டு, மிதந்து என்னருகே வந்தது. எனக்கு சந்தோசமாயும் பயமாயும் இருந்தது. நெருங்கி நெருங்கி அது என்கிட்ட வர பயமில்லாது போய் வெறும் சந்தோசம் மட்டுமே இருந்தது. ஏனென்றால் அது ரஞ்சன். என்னைக் கட்டிப்பிடித்தான். புகையாய் பின்னிக் கொண்டோம்.

"என்ன மச்சான் உன்னையும் தட்டிப் போட்டானுகளா?"
கவலையாய்க் கேட்டான் ரஞ்சன்.

ரஞ்சன் பாவம். என்னுடன்தான் இந்தியாவில் பயிற்சி எடுத்தவன். நாட்டுக்குப்போறன் என்றுவிட்டு கடல்கடந்தவன்தான். மூன்று மாதத்தால் தட்டிப்போட்டான்கள் என்று படகு வழியாய் வேதாரணியம் வந்தது சேதி. சிலநாட்கள் கவலைப்பட்டு மறந்துபோனேன். மறுபடியும் பத்து வருடம் கடந்து பிசாசாய் அவனை சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவே இல்லை. மறுபடியும் கவலையாயும் சந்தோசமாயும் இருந்தது. கவலையாலோ சந்தோசத்தாலோ அழுதேன். கண்ணீர் வரவில்லை. பிசாசுகளுக்கு கண்ணீர் இல்லைபோலும்.

என்னை அணைத்துக் கொண்டே மரக்கிளைக்குக் கூட்டிப்போனான். பிசாசுகள் என்னைச் சூழ்ந்துகொண்டு கூய் போட்டு ஆரவாரித்தன. சூ... என்று வாய் குவித்து ஊதினான். சூ சத்தம் கேட்டு எல்லாப் பிசாசுகளும் அமைதியாய் கிளைகளில் அடங்கின. ரஞ்சன் தான் இந்தப் பிசாசுகளுக்கெல்லாம் லீடர்போல. அவன் செய்கைக்குக் கட்டுப்படுகின்றனவே. வளைந்த கிளையில் இருந்த பிசாசொன்று என்னை விநோதமாய்ப் பார்த்தது. அதை எங்கோ பார்த்த ஞாபகம். கண்ணுக்குக் கறுப்புத் துணி கட்டினால் யார் என்று கண்டுபிடித்துவிடலாம் போல் தெரிந்தது. அந்தப் பிசாசைப் பார்க்க ஏதோ ஞாபகம் வருவதுபோன்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறது.

"அண்ண...அண்ண... என்ன விட்றுங்கோ அண்ண... உங்க கால புடிச்சி கெஞ்சிறன் அண்ணா... துவக்கக் காட்டி காசு கேட்டா எப்படி அண்ண இல்ல எண்டு சொல்றது... அதுதான் ஒரு புணயல் மாட்ட வித்து காசு குடுத்தனான். சத்தியமா நான் அவங்கட இயக்கம் இல்ல..."
உயிர்ப்பிச்சை கேட்டு முழங்காலில் நிண்டவனை மார்பில் உதைத்து மல்லாக்க வீழ்த்தினேன். கையும், கண்ணும் கட்டப்பட்டவனை மண்டையில் சுட மூளை வெளிவந்தது.

"இவன்தான் ...இவன்தான் என்ன மண்டையில போட்டவன். இவன நான் சும்மா விடமாட்டன்"

அப்பிசாசு என்னை நோக்கி வேகமாக வந்தது. நான் பயந்து நடுங்கினேன். செய்த பாவத்தால் வரும்பயன் நினைத்து நொந்தேன். புளியமர பிசாசுகள் மாதிரி இவைகளும் என்னை துரத்திவிடுமோ? நான் எங்கு போவேன். எனக்கு என்ன தெரியும் பிசாசுகளின் உலகம்? எனை நொந்து அதுகளை சோகமாய்ப் பார்த்தேன். ரஞ்சன் வேகமாய் அமைதியாய் அப்பிசாசைப் பார்த்தான். அது அடங்கி வேறுஎங்கோ பார்த்தது.

"நாம மனிசனுகள் இல்ல.. அந்த கெட்டசென்மங்களுக்குத்தான் கோபம், தாபம், துவக்கு எல்லாம். நமக்கு அது ஒண்டும் இல்ல. நம்மட உலகம் வேற... நமக்கும் குத்த வேணும், பழிவாங்க வேணும், சுடவேணும் எண்டால் பிசாசுக்கும் மனிசனுக்கும் என்ன வித்தியாசம்? உனக்கு இன்னும் மனிசப்புத்தி விட்டுப்போகல்ல என்ன..."

ரஞ்சன் அமைதியாய்ச் சொல்ல மற்றப் பிசாசுகளும் அதனிடம் போய் சமாதானம் பேசின... நான் சோகமாய் ரஞ்சனை ஒட்டி மிதந்து நின்றேன். என்னை தடவிக் கொடுத்த ரஞ்சன் அது அருகே என்னை மிதந்து கூட்டிப் போனான். அது என்னை ஸ்சினேகமாகப் பார்த்து சிரித்தது. சே... பிசாசுகளுக்குத்தான் எத்தனை பெரிய மனசு. எல்லாப் பிசாசுகளும் என்னைச் சந்தோசமாய் வரவேற்றன...

"இங்க இருக்கிற எங்க எல்லாருக்குள்ளயும் கனக்கக் கனக்க கதையிருக்கு. நாங்க எல்லாரும் பிசாசாகினதுக்கு தமிழும், ஈழமும், துவக்கும், யுத்தமும் தான் காரணம். உனக்கும் அதுதான் காரணம் என்று எங்க எல்லாருக்கும் விளங்குது. இருந்தாலும் நாம எல்லாரும் ஒண்டா இருக்கிறதால உன்னோட கதைய எங்க எல்லாருக்கும் சொல்லு. பிறகு நாங்க எல்லோரும் ஏன் பிசாசானம் எண்டு உனக்கு சொல்றம்."

"சொல்லு மச்சான் உன்ன ஏன் தட்டினவங்கள்" ரஞ்சன் சொல்ல நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேசாமல் இருந்தேன்.

"உன்ன அறிமுகப்படுத்து மச்சான்: உன்ன ஏன் தட்டினவங்கள்?"

"என்ன ஒருவரும் தட்டயில்ல."

"பின்ன...?"

"நானாத்தான்!"

"நீயாத்தான் எண்டால்?"

"நானே எனக்கு வச்சித்தன் மண்டையில."

"ஏன்?"

"இயக்கம் புடிக்கல்ல!"

"புடிக்கல்ல எண்டால், சாகிறதா?"
றஞ்சன் வேதனையாயும் கோபமாயும் சொன்னான்.

"இப்படியான வேலை செய்ய மனச்சாட்சி இடம் கொடுக்காததாலதானே தற்கொலை பண்ணினனான்."

"அது சரிதான் மச்சான். அந்த எளிய செம்மங்கள் செய்யிறத விட நீ செத்து வந்தது பெரிய விஷயம். நீ சந்திச்சியோ என்னவோ தெரியாது. வேதக் கோயில் புளியமரத்தில ஒரு நரகல் இருக்கு. களுவாஞ்சிக்குடி கணபதிப்பிள்ள மாஸ்ரர் வீட்டில நல்லா அடிச்சிற்று அந்த புளியமரத்தடியில கொஞ்சத்த தாட்டு வச்சித்து கொஞ்சத்தோட வெளிநாடு கிளம்பேக்க விஷயம் தெரிந்து தட்டிப்போட்டாங்கள். பொழுதுபட்ட நேரம் அலுப்பாயிருக்க சும்மா சுத்தித்து வருவம் எண்டு போறன். அவன் கழுத்து நிறைய தங்கச் சங்கிலியோட சக்கிள்ல போறான். கணபதிப்பிள்ள மாஸ்ரர் அவன காட்டி ஆரோ ஒரு பொடியனிட்ட சொல்றாரு 'அவன் போட்டு போறது எண்ட மகளின்ர சங்கிலி தம்பி' எண்டு."

"அவருக்கு எப்படி இருந்திருக்கும் மனநில அந்த நேரத்தில செத்தபிறகும் அந்த நரகலுக்கு காசாச விட்டுப்போகல்ல. புளியமரத்தடியில தாட்டுவச்ச நகைக்கும் காசுக்கும் காவல் இருக்குது. கொஞ்சம் சீனியர் பிசாசு. கனக்க விஷயம் தெரியும் அதுக்கு. கிட்டப்போனா புகை அடிக்கும்."
றஞ்சன் சொல்ல - நானும் விரட்டப்பட்டதைச் சொன்னேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சரி சரி அது போகட்டும். இதுகள் எல்லாம் காத்துக் கொண்டு இருக்குதுகள் வெளிச்சம் வரமுதல் உன்னை அறிமுகப்படுத்து."
சொல்லி விட்டு கிளையொன்றில் சாய்ந்து உீக்காந்து கொண்டது. அதுகள் எல்லாவற்றையும் ஸ்சினேகமாய்ப் பார்த்து புன்னகைத்து விட்டு என்னை அறிமுகப்படுத்தலானேன்.

"எண்டபேர் றெஜினோல்ட். உண்மையான பேர் பெரியதம்பி. றெஜினோல்ட் என்று பெயர் வைச்சது தேவன் மாஸ்ரர். மாஸ்ரர் என்றால் படிப்பிக்கிற மாஸ்ரர் இல்ல எண்டு உங்களுக்குத் தெரியும்தானே. உண்மையில நான் ஏன் இயக்கத்துக்குப் போனேன் எண்டு இண்டவரைக்கும் எனக்கு விளங்கயில்ல. கொலையும் கொடுமையும் கொள்ளையும் தான் இயக்கம் எண்டு இருந்திட்டன். தமிழும் ஈழமும் எண்டு சொல்லி சொல்லி எத்தனையாயிரம் கொடுமை நடந்திட்டுது.

இப்பிடித்தான் ஒருசமயம் நாங்க யாழ்ப்பாணத்தில இருந்து படுவான்கரைக்கு நடந்து போய்க் கொண்டு இருந்தம். மொத்தம் நாற்பது பேர். ஆனையிறவு கேம்புக்குப் பின்னால கடந்து - கடற்கர ஓரமா முல்லத்தீவு போய்- முல்லத்தீவுல இருந்து நிலாவெளி - நிலாவெளியில இருந்து மூதூர் சேர்ந்து-மூதூரில இருந்து வாகர. அங்கயிருந்து புலிபாஞ்சகல் - புலிபாஞ்சகல்லில இருந்து படுவான்கர இதுதான் எங்களோட அந்தக்கால நடைபாத வழி. நாற்பது பேரும் ஆளாளுக்கு ஐம்பது கிலோவுக்கு மேல பாரத்தோட ஈழமீட்பு(?) பயணம் போய்க்கொண்டிருக்கிறோம். வாகரையில் இருந்து புலிபாஞ்சகல் போறவழியில உப்பகந்த எண்டு ஒரு சிங்கள ஊரிருக்கு எப்பவும் ராவிலதான் அந்த ஊர் தாண்டிப்போவம். ஏனெண்டு மறந்து போயிற்றுது அந்தமுறை நாங்க பொழுது படமுதல் அந்த ஊரக்கடக்க கொஞ்சச்சனம் எங்களக் கண்டுத்துகள். அதுகள் எங்கேயோ போயிற்று ட்றக்டரில வந்து கொண்டிருந்துதுகள். எங்கள தூரத்தில கண்டவுடனேயே பதறத் துடங்கிட்டுதுகள். ட்றக்டர மறிச்சு எல்லாச் சனத்தையும் இறங்கச் சொல்லி கண்ண மூடச்சொன்னம் அதுகளுக்கு விளங்கிற்றுது. எங்கட பயம் எங்களுக்கு. கஸ்ரப்பட்டு கண்டு பிடிச்ச ரகசியப்பாதையது. அது சிங்களச் சனத்துக்கு தெரிஞ்சா பிறகு என்ன நடக்கும் எண்டு தெரியும்தானே.

சனம் குய்யா முய்யா எண்டு கத்தத் தொடங்கிற்றுதுகள். கிழடுகட்ட, பொம்பிள, குஞ்சுகுரால் எண்டு மொத்தம் முப்பத்திமூணு உருப்படி. துவக்கால சுட்டா ஊருக்குள்ள சத்தம் கேட்கும் அந்த இடத்திலயும் வைத்து ஒண்டும் செய்ய ஏலாது சனத்தையெல்லாம் சாய்ச்சிக் கொண்டு ஒரு அஞ்சாறு கட்ட கடந்து போய் எல்லாரையும் முழங்காலில நிப்பாட்டிப்போட்டு மொட்டையடிக்கிற கத்தியால - இருந்தது ஒரு கத்திதான். அந்தச் சனத்திற்கு தப்பியோடக் கூடத் தெரியல... தெரியல எண்டு இல்ல ஓடஏலாது. நாற்பதுபேர் துவக்கோட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளச்சி நிக்கிறம். முதல்ல நான்தான் கத்தியெடுத்து முழங்காலில நிண்ட ஒருவண்ட தலைமயிரப் புடிச்சு நிமித்தினன். என்னவோ சொன்னான். எனக்கது கேட்கயில்ல தமிழ்...தமிழ் எண்டு மட்டும்தான் காதுக்குள்ள கேட்டுது. கத்திப் புடிய பெருவிரலால அமுக்க அவன் குனிஞ்சு எண்ட காலப் புடிச்சான். கண்ணிலயிருந்து தண்ணி வழிய என்ன பாத்தான். எனக்குப் பாவம் வரயில்ல நச்... குரல் வளையில இருந்து காற்றும் "அவக்" எண்டொரு சத்தமும் பிறகு ரத்தமும் வந்தது. முப்பத்திரெண்டும் இப்பிடியே சரிய - மிஞ்சினது ஆறுமாதக் கைக்குழந்தை ஒன்று மட்டுந்தான். அந்தக் குழந்தையோட அம்மாட கை புள்ளய விடவேயில்ல அது வீல்வீல் எண்டு கத்திக்கொண்டேயிருந் திச்சு. உயிர் போனபிறகும் அந்தப் பொம்பிளையிட கால் மண்ண உதைச்சுக் கொண்டே கிடந்திது. அந்த புள்ளயிட கையப்புடிச்சு இழுத்துத் தூக்கி அத ஒருமாதிரியாப் பார்த்து சிரிச்சான் ராசன்.

"இதக் கொண்டுபோய் தமிழனா வளத்து சிங்களவனக் கொல்ல வைக்க வேணும்"
எண்டு சொன்ன ராசனில எனக்கு கோபம் வந்திட்டுது. பின்ன என்ன. இவன் பெரியவனாகி சிங்களவனக் கொல்ல பதினஞ்சு பதினாறு வரிசம் எடுக்கும். அதுவரைக்கும் எங்களுக்கு தமிழீழம் கிடைக்காமலா இருக்கும். தேவன் மாஸ்ரர் இந்தியாவில வச்சி சொன்னவர் எப்படியும் அடுத்த பொங்கல் தமிழீழத்தில பொங்கலாமெண்டு அந்தப் பொடியன ராசனிட்ட இருந்து பறிச்சி எடுத்தன். ஒருத்தருக்கும் விளங்கயில்ல நான் என்ன செய்யப்போறன் எண்டு. காலப்புடிச்சி தலைகிழாத் தூக்கி- பக்கத்தல இருந்த பால மரத்தில தலைய ஓங்கி அடிக்க மண்டை நொருங்கி செத்துப்போச்சுது. கொஞ்சம் மூளையும் கனக்க ரத்தமும் அடிமரத்தில ஒட்டியிருந்திச்சு. செத்தபிள்ளய பத்தைக்குள்ள தூக்கியெறிஞ்சி போட்டு- கொண்டுவந்த சாமானத் தூக்கிக் கொண்டு நடக்கத் தொடங்கித்தன். படுவான்கரைக்கு போய் பொறுப்பாளரிட்ட சொன்னன். என்ன நல்லாப் பாராட்டினாரு.

"இப்படித்தான் இடர்வரும் தடைகளை உடைத்தெறிய வேண்டும்."
எண்டு எல்லாரையும் கூப்பிட்டுச் சொல்லி - என்னோட பெருமையையும் சொல்லி இப்படித்தான் நீங்களும் செய்ய வேண்டும் எண்டு கட்டள வேறு போட்டாரு.

யாழ்ப்பாணத்தில இருந்து கனக்கச் சாமான் கொண்டுவந்தம் தானே. அதுகள வச்சி ஏதாவது செய்ய வெணும் போல இருந்திச்சு. பொறுப்பாளரிட்ட கேட்டன்.

"நீதான் பெரிய ஆளாச்சே. தேவையான ஆட்களக் கூட்டிற்று முப்பத்தொன்பதாம் கொளனிக்குள்ள பூரன்." எண்டாரு.

யாழ்ப்பாணத்தில இருந்து வந்தம்தானே நாற்பது பேரும் அதோட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்க்குள்ள துணிய அடச்சிட்டு - கையையும் காலையும் கட்டிப் போட்டுத்து பொறுப்பாளர பின்னி எடுத்திட்டாங்கள். பொடியனுகளுக்கும் விளங்கையில்லை. பொறுப்பாளருக்கும் விளங்கையில்லை. இது எல்லாம் ஏன் நடக்கிறது எண்டு. பகல்ல கொண்டு போய் புதைக்க ஏலாது. பகல் எண்டால் சனம் கண்டு என்னமும் கேக்கும். குகை எண்டு முதல் சொன்னன்தானே அதுக்குள்ள சவத்த தூக்கி பொடியனுகள் போட்டிருந்தானுகள். அண்டு முழுக்க சரியான அடைமழை வேறு. இருட்டின பிறகு குகைக்குள்ள போய் வாய்க்குள்ள இருந்த துணிய எடுக்க "அவ் அவ்" எண்டு வாய்க்குள்ளால காத்து வந்திது. அந்த ஆள் இன்னும் சாகயில்லை. மூக்குக்குள்ள ரத்தம் காஞ்சி மூக்க அடச்சி இருந்திச்சி. பொடியனுகள கூப்பிட்டு தூக்கித்து வரச்சொன்னன்.

தூக்கிற்று வரேக்க அவனுகளுக்கு விளங்கிற்று ஆள் இன்னும் சாகயில்லை எண்டு. என்னட்ட சாடமாடயா சொன்னானுகள். நான் கண்டு கொள்ளயில்லை. திருப்பி என்னமும் கதைச்சால் தமக்கும் இதுதான் கதி எண்டு தெரியாதா என்ன?

மடுவ வெட்டி ஆள உள்ள போட்டு மண்ண போட உடம்பு கொஞ்சம் லேசா அசஞ்சிது. இன்னும் அள்ளிப் போட அடங்கிற்று. இந்த சம்பவத்துக்குப் பிறகு அந்த ஏரியா முழுக்க நம்மட ஆச்சிதான்.

ஆத்துக்கு இந்தப் பக்கம் செய்து செய்து அலுத்துப்போயிற்றுது. எழுவான் கரைப்பக்கம் என்னமும் செய்ய வேணும் போல இருந்திச்சி. படுவான்கரைப்பக்கம் செய்யிற மாதிரி அவ்வளவு லேசான விசயம் இல்ல எழுவான்கரையில செய்யிறது. அதுவும் இல்லாம சோனிமாருக்கு ஜிகாத் இருக்கு. அவனுகள் எப்பவும் வாளோடையும் துவக்கோடையும் திரிவானுகள்.

ஆத்தக் கடந்து கடற்கரை ஓரமா மீராவோடைக் குள்ள பூந்திட்டம். இது எப்படியோ கல்லடியில ஆமிக்கும் காத்தான்குடியில இருக்கிற ஜிகாத்துக்கும் தெரிஞ்சிட்டுது. எங்கள றவுண்டப் செய்திட்டாங்கள் எண்டு எங்களுக்கு விளங்கித்து. தப்பி ஓடத் துவங்கிட்டம். அந்த நேரம் பாத்து குறுக்க வந்து விழுந்திது ஒரு சீதேவி.

வலைவாடியில இருக்கிற புரிசனுக்கு சோறு கொண்டு குடுத்திட்டு வருகிது போல. நிறமாத புள்ளத்தாச்சி. குறுக்கால வயிற்ற ஒரு போடு. வயிற்றுக்குள்ள இருந்த புள்ள பொளுக்கெண்டு மண்ணில விழுந்திச்சி. முதலுக்கு மோசமில்ல. எல்லாரும் தப்பி ஓடிட்டம்.

இப்பிடி ஒண்டில்ல ரெண்டில்ல... இந்த இயக்கம் புடிக்காம வேற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கத்துக்கு போனன். இந்தியன் ஆமியோட சேந்து காத்தான்குடியில கனக்கயா கொள்ளையடிச்சன். முஸ்லீம் பொட்டையளுக்கு முலைபுடிச்சன். கடைகள் பத்தவெச்சன் தமிழ் பொடியனுகள துரத்தி துரத்தி புடிச்சி பயிற்சி குடுத்து துவக்கும் குடுத்தன். இந்தியன் ஆமியும் புடிக்காம வேற இயக்கத்துக்கு போய் அம்பிளாந்துறை சந்தியில வச்சி ஹாஜிமார கொண்டு குவிச்சன் அதுதான் ஆகப்பெரிய கொடுமை. என்னால சொல்ல ஏலாம இருக்கு எனக்கு என்னவோ செய்யிது"

நான் அழ ஆரம்பித்து விட்டேன். சில பிசாசுகள் கொட்டாவி விட்டுக்கொண்டு இருந்தன. இன்னும் சில தூங்க ஆரம்பித்துவிட்டன. வெளிச்சம் வேறு வர ஆரம்பித்து விட்டது. உச்சாணிக் கொம்பில் இருந்த சில பிசாசுகள் வெளிச்சம் பட கரைய ஆரம்பித்துவிட்டன.

"இந்த சின்ன சின்ன விசயங்களுக்காகவா செத்துப் போன நீ"
சாதாரணமாய் ரஞ்சன் கேட்டான்.
அழுத நான் விநோதமாய் அவனைப் பார்த்தேன்.

"இதவிட பயங்கரமான விசயம் எல்லாம் இதுகளிட்ட இருக்கு. இதுகளோட ஒப்பிட்டா உன்ர வாக்குமூலம் தூசு. நாள ராவைக்கு இதுகள சொல்ல சொல்ரன் கேளு"

அவன் சொல்லி முடிய- கிளைகளை ஊடுருவி சூரிய ஒளி அவனில்பட கரையலானான். என்னிலும் வெளிச்சம் பட நானும் கரையலானேன்.


❑

எக்ஸில் - 1999



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முதிர்கன்னி

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன்: மரத்தில் தொங்கும் பிணத்தை கீழே வீழ்த்தி தோளில் சுமந்துகொண்டு முன்னேறினான். இதனைப் பார்த்த வேதாளம் எள்ளி நகையாடியது. அதனைச் சட்டை செய்யாது முன்னேறினான் விக்கிரமாதித்தன். வேதாளம் எக்காளமாய்ச் சிரித்தது.

“நில்... விக்கிரமாதித்தா நில்!”
விக்கிரமாதித்தன் காதில் வாங்கிக்கொண்டதாய் இல்லை.

“இப்படி எத்தனை காலத்துக்குத்தான் பிணத்தைக் காதல் கொள்வாய்? உயிர் உள்ளவற்றில் உனக்கு அக்கறை இல்லையா? பிணத்துக்கும் எனக்கும் தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பந்தம்.”

வேதாளத்தின் பேச்சில் ஏதோ நெருடிற்று. விக்கிரமாதித்தன் நிதானித்து தலையை மாத்திரம் லேசாய் திருப்பி: பின் பார்த்தான். வேதாளம்: ஒய்யாரமாய் முருங்கை மரத்தில்- வளைந்த கிளை ஒன்றில் சாய்ந்திருந்தது. அதன் வால் நீளமாய்த் தரையைத் தொட்டிருந்தது.

“விக்கிரமாதித்தா...! உனக்கோர் பெண்ணின் கதையொன்று சொல்லப் போகிறேன். அவள் வாழ்வில் ஏற்பட்ட வாழ்வியல் துயரச் சிக்கலின் முடிச்சை: நீதான் அவிழ்க்க வேண்டும். அல்லாது போனால் உன் தலை சுக்குநூறாக வெடித்துச்சிதறும்.”

வேதாளம் சொல்ல விக்கிரமாதித்தன் முகத்தில் சலனங்கள் ஏதுமின்றி நிதானமாய் இருந்தது. ஆயினும் லேசாய் மனதில் சலிப்புத் தட்டிற்று. இத்தனை காலமாய் எத்தனை கதை கேட்டாயிற்று. கேட்டு பதிலும் சொல்லியாயிற்று.

விக்கிரமாதித்தனை மீண்டும் ஏமாற்றி: பிணத்தைப் பறித்துக் கொள்ளலாம் என்று வேதாளத்துக்குப் புரிந்துவிட்டது போலும். கொடுப்புக்குள் புன்னகைத்துக்கொண்டு கதை சொல்லத் தொடங்கிற்று.

“யாழ்ப்பாணம்: யாழ்ப்பாணம் என்றோர் குபேரப் பட்டணம். வளம் கொழிக்காது போனாலும் செல்வம் கொழிக்கும் செல்வந்த நகரம். அங்கு குமரவேல் என்கின்ற ஏழை உபாத்தியாயருக்கு அமுதா என்கின்ற ஆரணங்கு மகள். அழகில் சிறந்தவள். அறிவிலுந்தான். முப்பதைத்தாண்டி முதிர் கன்னியென்றும் அவளோர் பழமுதிர்ச்சோலை.”

வேதாளத்துக்கு விக்கல் வந்துவிட்டது போலும். கதையை நிறுத்திவிட்டு உச்சாணிக் கொம்பில் போய் உட்கார்ந்து கொண்டது. விக்கிரமாதித்தன் சுவாரஸ்யம் ஆகிவிட்டவன் போன்று மீதிக்கதை கேட்க மரத்தை அண்ணாந்து பார்த்தான். வேதாளம் வேறெங்கோ வெறித்தது. கும்மிருட்டு என்றபோதிலும் வேதாளம் வெள்ளை நிறம் என்பதால் விக்கிரமாதித்தனுக்கு அது தெரிந்தது.

லேசாய்க் கோபம் வந்தது அவனுக்கு.

“ஏய் வேதாளமே கீழ்க்கிளைக்கு வா. வந்து மீதிக்கதை சொல். என் கருமங்களை நிறைவேற்றி விட்டு அந்தப்புரம் செல்ல வேண்டும். சேடிகள் எல்லாம் என்னைக்காணாது திண்டாடப் போகின்றார்கள்.”

வேதாளம் கீழ் இறங்கி வந்தது.

“அங்கே பார் விக்கிரமாதித்தா”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அது காட்டிய திசையில் சிதை எரிந்து கொண்டிருந்தது. எதுவும் புரியாது வெறுமையாய் வேதாளத்தைப் பார்த்தான் விக்கிரமாதித்தன்.

"சிதையொளியில் பார் விக்கிரமாதித்தா. காஞ்சின மரத்தடியில்."
பார்த்தான். ஆமாம்! யாரோ அங்கு முக்காடு போட்டு அமர்ந்திருப்பது தெரிந்தது. அதிர்ந்த விக்கிரமாதித்தன் பிணத்தைக் கீழே போட்டுவிட்டு உறைவாளை வேகமாய் உருவினான்.

"வேண்டாம் விக்கிரமாதித்தா. வாளை உறையுள் போடு. அவள் தான் அமுதா."
வேதாளம் சொல்ல வாளை உறையுள் செருகிவிட்டு அவளருகே நெருங்கிச் சென்றான். நெருங்கி அவன்வர; அவள் எழுந்து நின்றாள். சிதையொளியில் அவள் உருவம் தெரிய அதிர்ந்து போனான் விக்கிரமாதித்தன்.

"ஏய் வேதாளமே..."
அதிவேகமாய் அவளில் ஆத்திரம்.
ஒளியும் காற்றும் கலந்த வேகத்தில்- முருங்கை மரம் விட்டு கரைந்து நகர்ந்த வேதாளம், காஞ்சின மரக்கிளையில் குந்திற்று.
அவள் மிகப் பயந்தவளாய் மரத்தை ஒட்டி ஒதுங்கி நின்றாள்.

"ஏய் வேதாளமே நீ என்னைச் சீண்டிப் பார்க்கிறாயா? இப்பெண்ணென்ன பூலோகவாசியா? பின்னிச் சடைந்த கூந்தலும் ஒய்யாரமாய் நிமிர்ந்த முலையும், புதிரான ஆடையும் வாடையும் கொண்ட இப் பெண்ணென்ன பூலோகவாசியா? என்னை ஏமாற்றி பிணத்தைப் பறிக்க சதி செய்கின்றாய்."
சொல்லிக் கொண்டே நகர்ந்த விக்கிரமாதித்தன் பிணத்தைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு நகரத்தொடங்கினான்.

"நில் விக்கிரமாதித்தா!"
நிற்கவில்லை.

"இத்தனை காலமாய் நீ என்னைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா? நீ நினைப்பது தவறு விக்கிரமாதித்தா. அவள் ஒன்றும் வேற்றுக்கிரக தேவதையோ என்னால் உருவாக்கப்பட்ட மாயப்பிசாசோ கிடையாது. தசையும் உணர்ச்சியும் கொண்ட இவ்லோகத்துப் பெண்தான். ஆனால், இக்காலத்தைச் சேர்ந்தவள் அல்ல."
வேதாளம் சொல்ல விக்கிரமாதித்தன் நடப்பதை நிறுத்தினான்.

"அமுதா இரண்டாயிரம் ஆண்டு காலத்துக்குப் பிற்பட்டவள். ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி தொண்ணூற்றி எட்டாம் ஆண்டைச் சேர்ந்தவள். உன்னையவள் சந்தித்திருக்கின்றாள். நீ மிகவும் சிக்கலான பிரச்சனைகளின் முடிச்சை இலகுவாய் அவிழ்த்து விடுவதால்- தன் வாழ்வில் நிகழ்ந்த சிக்கல்களுக்கு விடைதேடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலப்பயணம் செய்து இங்கு வந்திருக்கின்றாள்."

வேதாளத்தின் குரலில் கசிவு தென்பட்டது. விக்கிரமாதித்தனுக்கு கவலையாய் போனது, இத்தனை காலம் பழகிய வேதாளத்தைத் தப்பாக நினைத்துவிட்டோமே என்று! பிணத்தைக் கீழே போட்டுவிட்டு அப் பெண்ணின் அருகே போனான். சிதையொளியில் மீண்டும் அவள் தோற்றம் பார்த்தான்.
சொக்கிப் போனான். கன்னத்தில் கைவைத்து அதிசயித்துக் கொண்டான்.
என்னே அழகு. என்னே உடல்...
எத்தனை நாழியானாலும் பார்க்கச் சலிக்காத தோற்றம்.
வேதாளத்தின் திசை பார்த்து கைகாட்டி

"அது சொல்வது உண்மைதானா?"
என்பது போன்றதொரு பார்வை பார்த்தான் விக்கிரமாதித்தன். சிறுசிறு அசைவாய் அவள் மேலும் கீழுமாய் தலையசைத்தாள்.
விக்கிரமாதித்தன் நம்பித்தான் போனான்.

"சொல் பெண்ணே... சொல்... உன் கதை சொல்... உன் வாழ்வுக்கோர் வழி சொல்கிறேன்."
உருகினான் விக்கிரமாதித்தன்.

"எங்கட அப்பாவுக்கு நான்தான் மூத்தபிள்ளை... எனக்கிப்ப முப்பத்தியாறு வயது..."
அமுதாவுக்குள் ஏதோ சங்கடம். தயங்கினாள்.

"ஏன் தயக்கம் சொல் அமுதா."

"நால் திசை தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி பார்ப்பனச் சிட்டர்கள்
பல்லாரெடுத்தேந்தி பூப்புனை கன்னிப் புனிதனோடு என்றென்னை
காப்பு நான் கட்டக் கனாக் கண்டேன் தோழி நான்.
இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றவொன் தம்மை உடையவன் நாரண் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழி நான்."
உள்ளூரச் சிரிப்பெழுந்தது. ஆண்டாளுக்கு ஹிஸ்டீரியா. பின்னென்ன, கண்ணுக்குத் தெரியாத ஏதோ அமானுஷ்ய சமாச்சாரத்தை நினைத்து கனவு காண்பதும்- கிருஷ்ணன் தாலிகட்ட வருவான் என்பதுவும் சமயங்களில் முலைகளைக் கூட தடவி விடுவானாமே கிருஷ்ணன்.
சுத்த பேத்தலான விசயம்.

சில சமயம் கிருஷ்ணன் பற்றிய கனவு வடிகாலாகக்கூட இருக்கலாம். அந்த நூற்றாண்டில் கூட முதிர்கன்னிகள் இருந்திருக்கலாம். ஆண் துணை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதுவும் கிடைக்காத போதில் நாரணன் நம்பி நீயாவது என் இச்சையைத் தீர்க்காயோ என்று ஏங்கியிருக்கலாம். யார் கண்டா? ஆண்டாள் கூட அக்காலத்தில் மாப்பிள்ளை கிடைக்காது வெந்து தணியாது இருந்திருக்கலாம்.
அபத்த சமுதாயம்.

“சும்மா ரூமுக்குள்ளேயே அடஞ்சி கிடக்கிறியள். எங்காவது போகவேணும் எண்டால் சொல்லுங்கோ. கூட்டிப் போறன்.”
என்று குலசிங்கம் கேட்க பட்டென வாயில வந்தது சிறிரங்கம்தான். ஆட்டோ பிடித்து கூட்டிப்போனான்.
“இந்தா, இந்த இடத்தில வச்சித்தான் கிருஷ்ணன் ஆண்டாளுக்கு தாலி கட்டினான் தெரிமோ?”
பிராமண வழிகாட்டி விவரித்தார்.

“ஆண்டாளுக்கு நடக்கக்கூட தெம்பு இல்ல... பட்டர் தோள்ள வச்சி வில்லிபுரத்தில இருந்து தூக்கிண்டு வந்தார். கிருஷ்ணன் சொல்லிட்டான். இந்த லக்கினத்தில... இந்த நாழிகையில... இந்த நட்சத்திரத்தில உனக்கும் எனக்கும் கல்யாணம்னு. எத்தின வருச காத்திருப்பு. ஆண்டாளுக்குப் பொறுக்க முடியல...”

இதுக்கு மேல் பொறுக்க என்னால் முடியவில்லை. விறுவிறுவென நடந்து பிரகாரத்துக்கு வெளியே வந்து விட்டேன்.
அந்த ஆளுக்குக் காசைக் கொடுத்துவிட்டு வந்து,

“சாமி கும்பிடலையா?”
என்றான் குலசிங்கம்.

“ரூமிற்குப் போவம்”

“வேற எங்கேயும் போகவேணும் எண்டால் சொல்லுங்கோ.”

“வேற எங்கேயும் எண்டால்?”
எனக்கு எரிச்சல் வந்தது.

“இங்க முக்கொம்பு எண்டு ஒரு லவ்வர்ஸ் பார்க் இருக்கு.”
கொடுப்புக்குள் புன்னகைத்துக் கொண்டான். புன்னகைத்துக்கொண்டே கோபுரத்தை அண்ணார்ந்து பார்த்தான். எனக்கு இன்னும் எரிச்சல் வந்தது.

“அங்க நாங்கள் எதுக்கு...? இல்லை... நான் ரூமுக்கு போகவேணும். தலை வலிக்குது... வயிறு வேற வலிக்குது...”
நான் சொல்ல- எதுவும் பேசாது ஆட்டோ கூட்டி வந்தான். குலசிங்கத்தின் போக்கு ஒரு வாரமாய் அவ்வளவு நல்லதாய் இல்லை. காவேரி பாலத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடந்து ஆட்டோ குலுங்க- தோளில் சரிந்து முழங்கையால் மார்பில் உரசினாள். எதார்த்தமானதா அல்லது தூண்டிலா என்று புரியவில்லை.

"தம்பி இண்டைக்கும் காலையில் போன் பண்ணினவன். எப்ப பிளைட் எண்டு கேட்டு"
எதிர் திசையில் கடகடந்த வாகனங்கள் விரைந்தன... நான் வெளியே பார்த்துச் சொன்னேன். மலை மீது உச்சிப்பிள்ளையார் கோவில் புளுதிக்கப்பால் தெரிந்தது.

"போகலாம் என்ன அவசரம்?"
சுரத்தில்லாத பதில்- நான் லேசாய் நொருங்கிப் போனேன்.

"ஆறு மாசம் ஆகுது திருச்சிக்கு வந்து இந்த புளுதியும் வெக்கையும் எனக்கு ஒத்து வருகுதில்லை..."
லொஜ்ஜிக்கு வரும் வரைக்கும் குலசிங்கம் எதுவும் பேசவில்லை.அறைக்கு வந்ததும் கட்டில் விளிம்பில் வசதியில்லாமல் உட்கார்ந்து கொண்டு என்னைப் பார்த்தான்...

சும்மா சொல்லக்கூடாது இருபத்தி எட்டு வயதிற்குரிய லட்சணங்களுடன்தான் இருக்கிறான். தம்பி ஏற்பாடு பண்ணின ஏஜென்சி அவனுடன் ஒன்றாக இருந்தவனாம், கிட்டத்தட்ட அவனோட வயதுதான் இவனுக்கும். கனடா போக திருச்சி வந்து ஆறுமாசம் ஆயிற்று.. குலசிங்கம் கனடாவுக்கு என்னை கொண்டு செல்வதற்கோ அல்லது அனுப்பிவிடுவதற்கான எந்த வித ஆயத்தமும் செய்பவராய் தெரியவில்லை.
ஆத்திரம் வரும்- சண்டைபோட வேண்டும் என்று தோன்றும், ஆயினும் முடியவில்லை. இவன் முகம் பார்க்க 'சே' என்று தோன்றும்.

"இண்டைக்கு அவரும் கதைச்சவர்."
லேசாய் வெட்கம் வந்தது.
என்னை அவன் வெறுமையாய் பார்த்தான்.

"மெட்ராசால போக ஏலாது. கல்கத்தா இல்லாட்டி காட்மாண்டுதான்.
ஏர்போர்ட்- செட் பண்ண வேணும்."

"செட் பண்ண வேண்டியது தானே."

"செட் பண்ணத் தைரியம் இல்லாம இருக்கு."
நாக்கைக் கடித்துக்கொண்டான். இவன் பேச்சு தடம் தப்பியிருந்தது.
என் இமைகளைச் சுருக்கிக்கொண்டேன்.

"விளங்கயில்லையா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"என்னோட பொண்சாதியோட பாஸ்போட்டில்தான் உங்களைக் கூட்டிப் போகப்போறன்."
நகம் கடித்தான்.

"பொண்சாதி எண்டு கூட்டிப்போறது எண்டால்"
இடதுகால் பெருவிரல் நகத்தை வலது குதிக்காலால் மிதித்து முக்கினான்.

"ஒரு நாளாவது என்னோட நீங்கள்"
முடிக்காது கடித்த நகத்தைத் துப்பினான்.
படுக்கைக்கு அழைக்கிறான்.
இது தைரியமா- பேடித்தனமா என்று புரியவில்லை.

இவன் அழைப்பு விடக்கூடும் என்று முன்னமே எனக்குப் புரிந்ததோ என்னமோ- எனக்கு அதிர்ச்சியாயும் இல்லை. அவன் மீது ஆத்திரமும் வரவில்லை. நம்பப்பட்டவன் நாய் போன்று சகலத்திலும் வாய்வைக்க முற்படுகின்றான் என்கிற போதுதான் சற்று வேதனையாயிற்று.

நான் இன்னொருத்தரைக் கல்யாணம் முடிப்பதற்காக நிச்சயிக்கப்பட்டவள். பாவம் அந்த மனுஷன். ஏற்கனவே பொண்டாட்டியையும் பிள்ளையையும் குண்டுக்கு பலி கொடுத்தவர். ஐந்து வருடத்திற்கு முன் கொழும்பு வங்கியில் வெடித்த லொறிக் குண்டு அந்தப் பொம்பளைக்கும் பிள்ளைக்கும் எமனாகிப் போனது. உலகத்தில் எங்கு வாழ்ந்தால் என்ன? குண்டு வெடித்தது அதுவும் இலங்கையில் சாகவேண்டும் என்று விதி போலும்.

இதில் வேடிக்கையான வேதனை- ஒருத்தியோட சாவில் எனக்கு வாழ்வு கிடைக்கிறது என்பதுதான். அவருக்கு எவ்வளவு பெரிய மனசு. ஏற்கனவே கல்யாணம் முடித்தவராக இருந்தால் என்ன? பதின்மூன்று வயது கூடியவராக இருந்தால் என்ன? என் கதையெல்லாம் தெரிந்தும் என்னைக் கல்யாணம் முடிக்க சம்மதித்தாரே அவருக்கு எவ்வளவு பெரிய மனசு.

நமது சமுதாயத்தில் மாப்பிள்ளை என்பது என்ன சும்மாவா? அது எவ்வளவு பெரிய விஷயம்? ஆண்பிள்ளை எனில் ஆணவமான விஷயம்தான். வத்தலோ தொத்தலோ மாப்பிள்ளை எனில் பிரமாண்டம்தான்.

முன்னெல்லாம் சின்னத்தம்பி மாமா என்னை மடியில் தூக்கி வைச்சுக்கொண்டு "அந்தோ வாரான் ராசகுமாரன் குதிரையில, எங்கட அமுதாவையா ராசகுமாரன் கல்யாணம் முடிக்கப் போறான்." என்று மேகமூட்டத்தைக் காட்டி அது போடும் கோலங்களைக் காட்டிச் சொல்லும் போதெல்லாம் நம்பித்தான் போனேன். இராசகுமாரன்தான் என்னைக் கவர்ந்து செல்லப்போகிறான் என்று அந்த மேகம் போட்ட கோலத்திற்கும் மாமாவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசைக்கும் ரொம்ப வித்தியாசம் இல்லை.

பாவம் மாமா இராசகுமாரர்களுக்குப் பதிலாய் இரண்டு சொத்தைகளை அல்லவா பெத்துப் போட்டிருந்தார். மாமாவிற்கு பயம் இல்லை. அப்பாவிற்கோ வழியில்லை. எனக்கு எது என்று இருக்கிறது? மாப்பிள்ளை என்று எதைக் காட்டினாலும் சரி வானத்தில் இராசகுமாரனைக் காட்டிய மாமாவால் தரையில் ஒரு சேவகனைக்கூடக் காட்ட முடியவில்லை.

எப்படி குமரவேல் லூசன்களை கட்டிக் கொடுக்கிறது? 28வயது, நாலு வயது குறைய எண்டாலும் பரவாயில்லை. இப்பவும் பாயில மூத்திரம் பேயறாங்க. நேற்று ஆரோ கல்லால எறிஞ்சு போட்டானுங்களாம் என்று ரெண்டு பேரும் அழுதுட்டு வறாங்க.

“பெடியன்கள் குண்டு கட்டி இவன்களை கொழும்புக்கு அனுப்பினாக்கூட மண்ணுக்குப் புண்ணியமாப் போகும்.” மாமா எங்கே? வெறித்துச் சொல்லும் போதெல்லாம் அப்பாவின் இயலாமை நசிந்துகொள்ளும்.

நான் மறுபடி கனவுகளில் லயித்துப்போவேன். ஆண்டாளுக்கு ஒரு கிருஷ்ணன் என்றால் எனக்கு ஒரு சிவன் இல்லாமலா?
கனவு சோக்கான விசயம்.
ஊரில் உள்ள ஆண்களை எல்லாம்...
எவளும் சண்டைக்கு வரப்போவதில்லை. இருந்தும்- தேவி சண்டை போட்டாளா? அல்லது அதுக்கு நிகராய் வேறு ஏதேனும் அஸ்திரம் பயன்படுத்தினாளா என்றுதான் புரியவில்லை. தேவிக்கும் என் வயதுதான். பத்தாவது படிக்கும் போது ஓடிப்போனவள். அப்புறம் குழந்தை, புருஷன் என்று இரண்டு வருடங்களுக்குப் பிறகு திரும்பி வந்தபோது பெரிய மனுஷி போலத்தான் இருந்தாள். எனக்கு ரொம்பவும் ஆச்சரியம். என் வயதுக்காரியால் கூட பிள்ளை பெற்றுக்கொள்ள முடியுமா? கல்யாணம் செய்துகொள்ள முடியுமா? என்கின்றபோது தேவிக்கு முடிந்திருந்தது எப்படி என்றுதான் புரியவில்லை. எனக்கு புத்திசாலித்தனம் போதவில்லை.

தேவி என் பால்ய சிநேகிதிதான். அந்த சிநேகிதம்தான் அவள் பிள்ளை என்னுடன் ஒட்டிக்கொண்டதற்குக் காரணமோ என்னவோ? வினோதன் சிரிக்கும்போதும் அழும்போதும்- ஏன், அவன் என் முகத்தில் சூச்சா அடிக்கும்போது கூட தேவியைக்காட்டிலும் நான் தான் சிலிர்த்துக்கொள்வேன். தூங்கும் நேரத்தைத்தவிர ஏறக்குறைய அவன் என்னுடன்தான் பன்னிரண்டு வயதுவரை கால்களை, கால்விரல்களை தலைமயிரை தடவித்தடவி அதன் வளர்ச்சி பார்த்து புளகாங்கிதம் படும்போது கூட எனக்கு ஒரு மகன் இப்படி வேண்டும் என்று ஏன் நான் ஆசைப்படவில்லை என்று புரியவில்லை. என் மகன் என்று நம்பிப்போனேனோ என்னவோ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பள்ளிக்கூடம் விட்டு ஒரு மணிக்கெல்லாம் வந்துவிடுவான். அன்று வரவில்லை. மாலையாயிற்று அவன் வரவில்லை. எதிர்வீடு தானே எட்டிப் பார்த்தேன். நடமாட்டம் தெரிந்தது. பத்து வருடமாய் என்னிடம் தானே வளர்கிறான். இப்படி ஒருநாள்கூட நடந்ததில்லையே ஆறுமணியானால் ஊரடங்கு சட்டம் வந்துவிடுமே அதற்குப் பிறகு நாளைக் காலைதான் பார்க்கமுடியும். பதட்டமாக இருந்தது. இனியும் என்னால் பொறுக்க முடியவில்லை.

தேவி வீட்டிற்கு போனேன்.

என்னை அவள் அசாதாரணமாய்ப் பார்த்தாள். ஐந்தொன்றைப் பார்க்கின்ற தொனி புரியாது கூசினேன்.

"ஏன் இன்டைக்கு வினோதன் வீட்டை வரல்லை? ஏதும் சுகமில்லையா?"
வீட்டிற்குள் எட்டிப்பார்த்தேன். வாசலை மறைத்து தேவி நின்றிருந்தாள். அவள் பின்னே வினோதன் ஓரவிழியால் என்னைப் பார்த்து மறுகி நின்றான்.

"வாடா கண்ணா"
என்றேன் கை நீட்டி. அவன் தேவியின் முதுகைப் பார்த்தான்.
தேவி அவனை வைத்து கதவை மூடிவிட்டு படியிறங்கி வெளியே வந்தாள்.

"அமுதா அவன் சின்னப்பிள்ளை இல்ல"
தேவி பீடிகையாக இழுக்க நான் மௌனமாக நின்றிருந்தேன்.

"பார்க்கிறவையள் ஒரு மாதிரி பேசினம். அவன் வளர்ந்திட்டான்தானே... புத்தி தெரிகிற வயது தானே... நீ மடியில் தூக்கிவைச்சுக்கிறதும், கொஞ்சுறதும், கட்டிப்பிடிக்கிறதும்- இதால அவன்ர மனம் வக்கிரமடைஞ்சிடும். உன்ர அற்ப சுகத்துக்கு அவன வச்சுத்தேய்க்கிறது அவ்வளவு நல்லம் இல்ல அமுதா... நீ பேசாம கிழவனோ கட்டையோ பார்த்துக் கட்டுறதுதான் நல்லது. சின்னப்பிள்ளையை வைச்சு தேய்க்கிறதுல அப்படி என்ன சுகம்?"
மலத்தை மிதித்ததைப் போன்ற அருவருப்பு.

சே... ஏன் இப்படி என் சமூகம் உள்ளது? கல்யாணம் முடிக்காத பெண் எல்லாம் ஆண் சுகத்திற்காய் ஏங்கிக் கிடக்கின்றார்களா? பன்னிரண்டு வயது சிறுவனை- காலாகாலத்தில் கல்யாணம் ஆகியிருந்தால் என் மகனை ஒத்தவனிடம் நான் என்ன காமத்தை அனுபவித்துவிட முடியும்? மடியில் தூக்கிவைத்துக்கொள்வதன் மூலம்தான் என்ன காமத்தை தீர்த்துக்கொள்ளமுடியும்?

இந்த தேவிக்காகவேனும் ஒரு கல்யாணம் முடிக்க வேணும். ஒன்பதாம் வகுப்பு படிக்கும் போதே நானும் ஓடியிருக்கலாம். புத்திசாலித்தனம் போதவில்லை. திரிகோணமலையில் இருந்து வந்து- எங்கள் வீட்டில் தங்கிப் படித்துக்கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேசன் அண்ணனுக்கு என் மீது சரியான விருப்பம். அந்த விருப்பம் தான் காதல் என்று அந்த வயதிற்குப் புரிபடவில்லை. புரிந்திருந்தால் அப்போதே அவருடன் ஓடிப்போய் பதின்மூன்று வயது பிள்ளைக்கு அம்மாவாக இருக்கலாம்.

நேசன் அண்ணன் ஒருநாள் கணக்குப்பாடம் சொல்லித் தரும்போது முதுகை தடவித் தடவிச் சொல்லித்தந்தார். கொஞ்சநேரம் செல்ல-

"அமுதா உம்மை நான் கல்யாணம் முடிக்கட்டே...?"

உம்மேல எனக்குச் சரியான விருப்பம் என்று சொல்லிக்கொண்டே முதுகிலிருந்த கையை எடுத்து என் மார்பு மீது வைக்க நான் பயந்து அதிர்ந்தேன். அந்தக் கணமே அப்பா நேசன் அண்ணனின் முதுகில் கைவைத்தார். மிக மோசமாகப் போட்டு அடித்தார். ஏன் என்று அப்போது புரியவில்லை. அடிவாங்கிக்கொண்டே அப்பாவிடம் ஏதோ சொல்ல வந்தார். நேசன் அண்ணனை அப்பா கேட்பதாயில்லை. தொடர்ந்து அப்பா போட்டு அவரை மிதிக்க அவர் ஊருக்குப் போய்விட்டார். அப்போதே அவர் பின்னே நானும் ஓடிப்போயிருக்கலாம். போகவில்லை. போகத்தெரியவில்லை... புத்திசாலியாய் இருந்திருந்தால் பருவ வயதில் பிள்ளை இருந்திருக்கும்.

ஒரு பெண்ணிற்கு ஆண் அவசியம் தேவை. உடம்பு, மனசு இரண்டிற்கும் இல்லாது போனாலும் தேவிகளுக்காகவேனும்- அவர்கள் பேச்சிலிருந்து விடுபடவேனும் அவசியம் திருமணம் தேவை. அம்மா இருந்தாலாவது சொல்லிப்பார்க்கலாம். அப்பாவிடம் போய் எப்படி...?

எனக்கு முப்பத்தி நான்கு வயதாயிற்றே... கல்யாணம் கட்டிவை என்று அப்பாவிடம் போய் எப்படி கேக்கமுடியும். எனக்கு வயதாகிவிட்டது என்று அப்பாவிற்கு தெரியாதா என்ன? அம்மாவின் பதினைந்தாவது வயதில் நான் பிறந்தேனாம். எனக்கு அந்த வயதில் பிள்ளை இருந்திருந்தால் என் பிள்ளைக்குக் கூட பிள்ளை பிறந்திருக்கும்.

தேவியிடம் மறுபேச்சு எதுவும் பேசப் பிடிக்கவில்லை. அவமானம் பெரிதாய் உறுத்தியது. தற்கொலை செய்தால் என்ன என்றுகூட தோன்றியது. சே... வயது முப்பத்திரண்டு என் பாவமா? மாப்பிள்ளை வாங்க வசதியற்று இருப்பது ஒரு குற்றமா?

அவமானப்பட மனசு வலித்தது. ஆயினும் அழத்தோன்றவில்லை. வீட்டிற்கு வந்து வீழ்ந்து படுத்துவிட்டேன். இருட்டிவிட்டிருந்தது.

"என்ன பிள்ளை ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?"
அப்பா ஒப்புக்கு கேட்டாரா இல்லை அக்கறையுடன் கேட்டாரா என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளங்கவில்லை. அவருக்கு முதுகைக் காட்டிப் புரண்டு படுத்தேன்.

மௌனமாய் அறையை விட்டு மணிமண்டபத்திற்குள் விளக்கைக் கொளுத்தி வைத்தார். கிட்டத்தில் நாய்கள் குரைக்கின்ற சத்தம் தொடர்ச்சியாய் கேட்கத் தொடங்க கொளுத்திய விளக்கை அப்பா சட்டென அணைத்திருக்க வேண்டும். மண்டபம் இருண்டு கிடந்தது.

புரியாத மொழிச்சத்தம் வாசல் வழியேயும் சன்னல் வழியேயும் கேட்டது. படுக்கையை விட்டு எழுந்து பார்த்தேன். மண்டபத்துக்குள் நான்கு சிப்பாய்கள் அசாதாரணமாய் நின்றிருந்தார்கள். திக்கென்றது நெஞ்சுக்குள். அப்பாவை மூன்று சிப்பாய்கள் வெளியே இழுத்துப் போக- நான் வேகமாய் விரைந்து

"அவர ஒண்டும் செய்யாதீங்கோ"
என அழுது கொண்டே அவர்களின் காலைப் பிடித்தேன். பின்பக்கமாய் வந்த ஒருவன் முதுகுப் பக்கமாய் என்னை இறுக்கிப் பிடித்து அணைத்து அறைக்குள் கொண்டுபோனான்.

புரிந்து போனது எனக்கு. என்ன நடக்கப் போகிறது என்று-- பேய் அறைந்தது போன்று பயந்து நான் அறையின் மூலையில் ஒதுங்கினேன். துவக்கைத் தூக்கி அறை மூலையில் போட்டுவிட்டு அவன் நிர்வாணமானான்.

கூசிக் குறுகினேன் நான்.

இறுகிய முகத்துடன் அவன் என்னை நெருங்க கடலெண்ணை வாடை குப்பென்று அடித்தது. என்னை இறுக்கிப்பிடித்து மேலாடை கிழித்து மார்பைக் கடித்தான். அவன் வாயிலிருந்து வந்த பீடிவாடை வேறு அருவருப்பாய் இருந்தது. சுவரோடு என்னைச் சாத்தினான். நான் திமிறினேன். பலம் போதவில்லை. ஒரு கையாலும் கால்களாலும் என்கீழாடைகளை கிழித்துக் களைந்தான். நானும் நிர்வாணமானேன். தப்பித்துப் போகவும் வழியில்லை . எதிர்த் தாக்குதலுக்கும் இயலவில்லை. உயிரில் விதி பொய்த்துப்போனது. தரையில் என்னை வேகமாய்ச் சரித்தான். நான் அடங்கி சடமானேன். அரை மணிக்கு மேலாய் வெறிநாய் என்னை கடித்துக் குதறியது. நான் சின்னாபின்னமானேன் .

இடைக்கிடை ஈனசுரமாய் அப்பாவின் குரல் வெளியே கேட்டது.

வெறி அடங்கியதும் அந்த வெறிநாய் ஆடைகளை அணிந்துகொண்டது. செய்வதறியாது நான் மல்லாக்கவே கிடந்தேன். ஆடைகளை அணிந்தவன் என்னை இறுக்கமாய்ப் பார்த்தான். கிழிந்த என் துணிகளை கொண்டுவந்து என் நிர்வாணத்தை மறைத்தான். அப்புறம் என் தலைநிமிர்த்தி என் அருகே அமர்ந்து அவன் மடிமீது வைத்து தலைகோதிவிட்டான். அவன் செயல் புரியாது விழித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிர்ந்தேன். அவசரமாய் எழுந்துகொள்ள முயற்சிக்க தொடைகள் இடம் தர இயலவில்லை. உயிர்போக வலித்தது. ஆயினும் எழுந்து நின்று அவன் மூஞ்சியில் துப்பினேன். துவக்கைத் தூக்கியவன் என் காலடியில் வைத்துவிட்டு மண்டியிட்டு அழுதான்.

"என்ன கொன்றுடுங்க... நான் பாவி.... என்னோட இனத்தவளையே...."
இன்னும் இன்னும் திகைத்தேன். ஆத்திரம் வேறு தலைக்கேறியது.

"... காமம் புத்திய மறைச்சிடுத்து தாயே... இந்தா இந்த டிகரை அமுக்கு...நாப்பத்திரண்டு புல்லட்டும் என்னய கொல்லட்டும்"
முழங்காலில் நின்று கொண்டே கையிரண்டையும் தலையில் வைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தான்... பாவமாக இருந்தது அவனைப்பார்க்க இந்திரிய சுகம் அடங்கி களைப்பில் இருந்தவனைப் பார்க்கப் பரிதாபம் வந்தது.

அவசர அவசரமாய் சட்டைப்பையில்இருந்து பேனாவும் ஒரு துண்டுக்காகிதமும் எடுத்து எதையோ எழுதி என்னிடம் கொடுத்தான்.

"இது என்னோட விலாசம்... என்னோட நாட்டுக்கு வாங்க... உங்களையே கல்யாணம் பண்ணிக்கிறன். பாவத்துக்கு பரிகாரம் வேண்டும்."
முறித்து முறித்து பேசிவிட்டு வேக வேகமாய் அறையைவிட்டு வெளியேறினான்.

எனக்கு வலியிலும் சிரிப்பு வந்தது. எத்தனை தமிழச்சிக்கு விலாசம் கொடுத்தவனோ...? போக்கிரிப்பயல்.

கால்கள் நடுங்கியது.... தொடைகளுக்கு இடையில் புண்ணாய் எரிந்தது மெது மெதுவாய் நடந்து வெளியே வந்தேன். நாய்கள் கூட குரைக்கக் காணோம். ஊரெங்கும் இருட்டிக்கிடந்தது. அப்பாவைக் காணோம். என்ன ஆயிற்று அவருக்கு? இதயம் தொண்டைவரை வந்து போனது. மல்லிகைப் பந்தலின் கீழ் கருப்பாய் எதுவோ தெரிய உற்றுப்பார்த்தேன் அது அப்பா. அப்பா இறந்திருந்தார். கொலையாகி அப்பா இறந்து போனார்.

இனி எனக்கு யார் இருக்கிறார்கள்? மாமாவும் இரண்டு கிறுக்கு மகன்களையும் தவிர..

"அமுதா நீங்கள் எங்களோடையே எங்களோட வீட்டுக்கு வாங்கோ"
மாமாவின் லூசுப்பிள்ளை வாயில் இருந்து விரலை எடுக்காமல் சொன்னது. மாமா அடித்து விரட்டினார் அவனை.

ஊர் கூடி துக்கம் விசாரித்தது. துக்கத்தை விசாரிக்க வந்தவர்களைக் காட்டிலும் என்னை விசாரிக்க வந்தவர்களே அதிகம். என்னையே உற்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உற்றுப் பார்த்தார்கள். விதவிதமாய் வக்கணையாய் விசாரித்தார்கள். அப்பா இறந்த துக்கத்தைக் காட்டிலும் நான் அநாதையான துக்கத்தைக் காட்டிலும் கற்பழிக்கப்பட்ட துக்கத்தைக் காட்டிலும் இன்னும் ஏதோ ஒரு இனம் புரியாத துக்கம் என்னை அமுக்கியது... இவர்களின் பார்வையின் பாரம் தாங்காது அழுகை குமுறியது.

தேவி வந்தாள் நான் எதுவும் பேசவில்லை. அவள் மகன் வரவில்லை. அவன் வர இவள் விரும்பியிருக்க மாட்டாள். தூரத்தில் இருந்தே என்னை வினோதமாகப் பார்த்தாள். நேற்று அப்படி பேசியிருக்க வேண்டாமோ என்று தோன்றியிருக்குமோ என்னவோ அவளுக்கு.

நெருங்கி வந்தாள்

“சொறி அமுதா...”

“..............................”
நான் மௌனித்திருக்க விலகிப் போனாள்

ஆணின் பரிசம் என்ன சுகம் கொடுக்கும் என்று நான் ஒரு விபத்தில் புரிந்து கொண்டேன் தேவி என்று அவளிடம் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. தோன்றிய நேரம் தூரத்தில் தேவி சென்றிருந்தாள்.

துக்கம் முடிந்து உறவுச்சனம் அடங்கிய மூன்றாம் இரவுப் பொழுதில் இயக்கத்துக் குழந்தைகள் வந்திருந்தார்கள். துவக்கை தோளில் கொழுவிக் கொண்டு தங்களுக்குள் குசுகுசுத்துக்கொண்டும் வயதில் கூடிய ஒருத்தரை மாஸ்டர் மாஸ்டர் என்றும் பேசிக் கொண்டும் இருந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு நெருங்கிவந்தார்கள் மாஸ்டர் என்பவர் எட்டத்தில் நின்றிருந்தார். அவரை எங்கேயோ பார்த்ததாய் ஞாபகம்.
“அக்கா... எங்களோட நீங்க வந்திடுங்கோ..”
சிறுவர்கள் அழைத்தார்கள்.

“எதுக்கு”
புரியாதது போன்று கேட்டேன்.

“இந்த நாய்களை நாம கொல்ல வேணாமா? இன்னும் எத்தின பேரை இந்த வெறி நாய்கள் கற்பழிக்கப் போறாங்களோ... அதுக்கு முதல் நாம இந்த நாய்களை கொல்ல வேணும் அக்கா.. உங்களுக்கு நடந்தது இன்னொரு அக்காவுக்கு நடக்கக் கூடாது. அக்கா நீங்கள் வந்தால் தான் உங்களப்பார்த்து கனக்க அக்காக்கள் போராட வருவினம்”
நியாயம் கலந்த ஆவேசம் அவர்கள் வார்த்தையில். அவர்கள் எவ்வளவோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேட்டும் நான் மறுத்து விட்டேன். வேண்டா வெறுப்பாய் சலிப்புடன் வீட்டை விட்டு வெளியேறிப் போனார்கள். அந்த மாஸ்டர் என்பவரின் முகம் ஞாபகத்துக்கு வந்தது... ஆனால் யார் என்று அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை.

இவர்கள் வந்துபோய் மூன்றாம் நாளில் ஒரு அதிசயம் நடந்தது. கனவில் கூட நினைத்துப்பாத்திராத விசயம். ஐந்து வருடங்களுக்கு முன் இயக்கத்துக்கு ஓடிப்போன தம்பி, இயக்கமும் இயக்கமும் போட்ட சண்டையில் செத்துப் போய்விட்டதாக நினைத்து அவனுக்கு திவசம் கூட பண்ணினோம். ஏறக்குறைய அவனை மறந்துவிட்ட நிலையில் அவனிடம் இருந்து ஒரு கடிதம். அதுவும் கனடாவில் இருந்து நம்ப முடியவில்லை. ஆயினும் உண்மை. யார் யார் தாலியை அறுத்துப்போனானோ தெரியவில்லை . அது முக்கியமில்லை. எனக்கொரு நம்பிக்கை ஒளிக்கீற்று நமக்கு துணையிருக்கிறது என்கிற ஓர் ஆறுதல்.

தோளில் கையொன்று அமுக்க அதிர்ந்தேன் குலசிங்கம் எனக்கு நெருக்கமாய் உரசிக்கொண்டு அமர்ந்தான். அவன் ஆசைக்கு நான் எப்படியும் சம்மதிப்பேன் என்று முழு நம்பிக்கை போலும். ஏஜென்சிக்காரன் அல்லவா எத்தனை பெண்களைப் பார்த்திருப்பான்.

கொஞ்சம் விலகி அமர்ந்தேன். அவன் தரை பார்த்தான். இவன் ஆசைக்கு உடன்படாவிட்டால் கனடா என்பது கனவாகிக்கூடப் போகும்.

ஏற்கனவே சேதாரம் ஆனவள் தானே... இன்னொரு தரம் சோரம் போனால் மூழ்கியா போய்விடும்? கெடுக்கப்பட்டதற்கும் கெட்டுப்போவதற்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா? மனதறிந்து யாரோ ஒருவனுடன் படுக்கையை பகிர்வது அவ்வளவு சாதாரண விசயமா? காதலிப்பவனா? ஸ்நேகிதனா? கல்யாணம் கட்டப் போகிறவனா? பாதகமில்லை இவன் யார்?

இவனுக்கும் இந்த சிப்பாய்க்கும் என்ன வித்தியாசம் அஸ்திரங்கள் வேறு வேறாயினும் குறி ஒன்றுதான். அவனிடம் அதிகாரம் இருந்ததால் பலாத்காரம் பண்ண முடிந்தது. இவனிடம் அது இல்லை.. பிடி இருக்கிறது...! இவனால் மட்டுமே என் எதிர்காலம் முடிவெடுக்கப்படும் என்கிற பிடி... புரியவில்லை. இது எந்த ஊர் நியாயம்?

குலசிங்கம் திரும்பவும் அருகே அமர்ந்தான். நான் விலத்தவில்லை. என் தோள் மீது தலை வைத்து பிடரியை முகர்ந்தான். கூசியது. நுனி நாக்கால் காது மடல் தொட்டான். கிறக்கம் வந்தது. இடது கையால் இடுப்பு வளைத்தான். மயங்கிப்போ என்று உடம்பு சொன்னது. மனசு மூன்றாம் நபரானது. நான் கிறங்கி அவனுள் சொக்கிச் சரிந்தேன்.

எப்போது இருட்டியது என்று புரியவில்லை. உடம்பு அசதி. நீண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் குலசிங்கத்தின் நெஞ்சில் முகம் புதைத்துத் தூங்கியிருக்கிறேன். குலசிங்கத்தின் முகம் வியர்த்திருப்பது இருட்டிலும் தெரிந்தது. அவிழ்ந்து கிடந்த என் ஆடையால் அவன் முகம் துடைத்துவிட்டேன். விழித்துக்கொண்டு அவசரமாய் எழுந்தான். அவன் முகம் பார்த்தேன். தலை குனிந்து நெடுநேரம் தரை பார்த்திருந்தான்.

"என்னை நீங்கள் பிழையா நினைக்கிறியளே"
குனிந்த தலை நிமிரவில்லை. அப்பாவியாய் கேட்டான்.

"எதுக்கு"
நானும் அப்பாவியாய் கேட்டேன்.

"உங்களத்தான்..."

"இதில என்ன இருக்கு நானும் தானே..."
ப்றா குக்கை மாட்டிக்கொண்டேன்.

"உங்களிட்டை ஒரு விசயம் சொல்ல வேணும் போல இருக்கு.."

"சொல்லுங்கோ"

"உங்களை நான் கலியாணம் முடிக்கட்டே?"
அவன் பட்டென கேட்க- நான் அதிர்ந்தேன்.

"அது எப்படி? என்னை கல்யாணம் முடிக்க வேற ஆள் இருக்கு. அது மட்டுமில்லாம நீங்க ஏற்கனவே கல்யாணம் முடிச்சு ரெண்டு பிள்ளை வேற இருக்கு. இப்ப நடந்தது ஒரு விபத்து... விருப்பம் இல்லாத மாதிரி இருந்தாலும்- நானும் சம்மதிச்சித்தான் நடந்த விசயம். தேவை எண்டால் இன்னும் நாலு நாள் சம்மதிக்கிறேன்... கல்யாணம் கத்திரிக்காய் என்ற பேச்செல்லாம்வேணாம்"
நான் சொல்ல மௌனமாய் இருந்தான். கண்கள் லேசாய் அவனுக்குக் கலங்கியது. தொண்டையைத் தடவினான். மங்கிய வெளிச்சத்தில் அவன் அழகாய் இருந்தான்.

"அது ஒண்டும் எனக்கு தெரியாது. நீங்க எனக்கு வேணும்"
அவனுக்கு தொண்டை கட்டிக்கொண்டது.

"நீங்க என்னை விட ஐந்து வயது குறஞ்ச ஆள் குலசிங்கம்... வயதுக்கு மூத்த பொம்ளைங்களோட தொடர்ந்து செக்ஸ் வெச்சிருக்கிறது பிழை எண்டு உங்களுக்கு தெரியாதே..."

"அது ஒண்டும் எனக்குத் தெரியாது நீங்க எனக்கு வேணும்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏக்கமாய் இருந்தான் சிறு துளிர் கண்ணீர் அவன் கண்களில் தெரிந்தது. பாவமாய் இருந்தான்.
நான் அவனில் பாவப்பட்டேன்...

“எப்படிச் சாத்தியமாகும் குலசிங்கம்?”
லேசாய் சலனப்பட்டேன்.

“நீங்க ஓம் என்று சொல்லுங்கோ மத்ததை நான் பார்த்துக் கொள்றன்.”
அவன் சொல்ல என் மனம் முழுதாய் சலனத்தில் மூழ்கியது.

ஊவென்ற பேரிரைச்சலுடன் காற்றடித்தது. சுடலைச் சாம்பல் எங்கும் பறக்க விக்கிரமாதித்தனின் குதிரை கனைத்தது. அமுதா பயந்து ஒடுங்கினாள். வேதாளம் காற்றில் கலைந்து பின் உருவம் கொண்டது. விக்கிரமாதித்தன் மட்டும் அசைவற்று நின்றிருந்தான்.

தூக்கம் கலைந்த இரண்டு பிசாசுகள் மூலையில் நின்ற மரம் ஒன்றில் இருந்து கூய் போட்டு விட்டு எங்கோ பறந்து போயின...
விக்கிரமாதித்தன் வேதாளத்தை அண்ணார்ந்து பார்த்தான் பின் அதே வேகத்தில் அமுதாவைப் பார்த்தான்.

“இக்கதையில் அப்படி சிக்கல் எதுவும் இருப்பதாய் தெரியவில்லையே பெண்ணே. நீதான் அந்த குலசிங்கத்தை மணம் முடிக்க சம்மதித்து விட்டாயே அப்புறமென்ன...? இரண்டாம் தாரமாய் இருப்பதில் நிறைய இன்பங்கள் உள்ளது தெரியுமா? அவர்களுக்குத்தான் காதல் மனைவி, ஆசை நாயகி என்றெல்லாம் பேர் உண்டு. முன்னவளைக் காட்டிலும் பின்னவளில் தான் ஒருத்தருக்குக் காதலும் காமமும் மேலிடும். நீ அவனுடனேயே வாழலாம்...”
விக்கிரமாதித்தன் சொன்னான்.
அமுதா வேதாளத்தைப் பார்த்தாள். அது விக்கிரமாதித்தனை சோகமாய்ப் பார்த்தது.

“அவள் உனக்கு முழுக் கதையையும் சொல்லவில்லை விக்கிரமாதித்தா”
வேதாளத்தின் குரலில் பிசிறு தட்டியது.

காஞ்சினம் பழம் ஒன்று கீழ் விழ- அமுதா பயந்து விக்கிரமாதித்தனை உரசி நின்றாள். நெருங்கி நின்ற அமுதாவை அப்படியா என்பது போல் ஓர் ஓரப்பார்வை பார்த்தான் விக்கிரமாதித்தன்.

“அவன் என்னை கல்யாணம் முடிக்கிறான் எண்டு சொல்லி ஏமாத்திப் போட்டான்” நான் ஏஜென்சிக்காரன். கனடாவில ஆறுமாதம், இந்தியாவில் ஆறுமாதம் இருக்கிறன். இந்தியாவில் இருக்கிற ஆறு மாதமும் உன்னோடு இருக்கிறன் கனடாவுக்குப் போனா அவளுடன் இருக்கிறன் எண்டு சொல்லிப்போட்டுப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போனவன்தான் ஒரு வருசமா எந்த தொடர்பும் இல்லை. எங்க இருக்கான் என்ன செய்யிறான் எண்டு ஒண்டும் தெரியாது. கடசியா இப்ப என்னோட தம்பியும் என்னை வெறுத்திட்டான். கல்யாணம் முடிக்கிறதா இருந்தவரும் இந்த விசயம் தெரிஞ்சு ஏலா எண்டு சொல்லிப்போட்டாரு. எனக்கு என்ன செய்வது எண்டு ஒண்டுமே விளங்கவில்லை."
அமுதா அழுதாள்!
விக்கிரமாதித்தனுக்குப் பாவமாய் போனது.

கிட்டத்தில் ஏதோ சரசரப்புக் கேட்க விக்கிரமாதித்தன் இலுப்பை மரத்தை உற்று நோக்கினான். மரத்தின் பின்னே மூன்று பிசாசுகள் ஒட்டுக்கேட்டுக்கொண்டு நிற்பது கண்டு கோபம் வந்தது... உறைவாளை உருவினான்... பிசாசுகள் பயந்தன... வால் இழுபட எங்கோ ஓடி மறைந்தன. வேதாளம் கன்னத்தில் கைவைத்து அதே கிளையில் சோகமாய் சாய்ந்திருந்தது.

"சரி பெண்ணே, அந்த பாதகன் போகட்டும். உன்னை மானபங்கம் செய்த சிப்பாய் உன்னைக் கல்யாணம் செய்வதாய் சொல்லிச் சென்றான் என்றாயே... அவனிடம் செல்லலாம் அல்லவா?"
விக்கிரமாதித்தனுக்கு எப்படி ஞாபகம் வந்ததோ தெரியவில்லை. அவள் முகம் பிரகாசம் ஆனது.
அமுதா வேதனையாய் சிரித்தாள்.

"போனேன்... அவனக்கூட தேடிப்போனேன்... பாவி... இடுப்புக்குக் கீழே அவனுக்கு ஒண்டும் இல்லை... கண்ணி வெடியில் மாட்டி ரெண்டு காலும் இல்லாம இருக்கான்... கால் இல்லாட்டியெண்டாலும் பரவாயில்லை... அவன் கூட ஏற்கனவே கல்யாணம் முடிச்சவன். அவனோட பொஞ்சாதியும் அம்மாவும் தலையில அடிச்சி அடிச்சி அழுகிறார்கள்... நான் என்ன செய்ய...?"
அமுதாவால் அழுகையை அடக்க முடியவில்லை. விக்கிரமாதித்தனுக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று புரியவில்லை... அவனுக்கு கூட பலமாய் தலை சுற்றியது.

"சொல் விக்கிரமாதித்தா சொல்... இப்பெண்ணின் வாழ்வுக்கோர் வழிசொல்... சொல்லிவிட்டு உன் விருப்பப்படி நீ பிணத்தை கொண்டு செல்லலாம்."
வேதாளம் சொல்லியது.

விக்கிரமாதித்தனுக்கு எதுவும் புரியவில்லை. மிகப்பெரிய சிக்கலில் மாட்டிக்கொண்டோம் என்பது மட்டும் புரிந்தது அவனுக்கு.

"இன்னும் சில கணப்பொழுதுகள்தான் விக்கிரமாதித்தா... நீ விடைபகிராது போனால்- உன் தலை... சுக்கு நூறாக... ஞாபகம் இருக்கட்டும்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விக்கிரமாதித்தன் மண்டைக்குள் ஜிவ்வென்று எதுவோ ஏறிற்று... இன்றுடன் நம் கதை முடியப்போகிறதோ? அப்படியென்றால், என் சாம்ராஜியத்தை யார் ஆள்வது? என் அந்தப்புரத்தில் உள்ள முப்பத்தி ஏழு தேசத்துப் பெண்களையும் என் போகங்களையும் யார் சுவைப்பது? பேய்களின் நடமாட்டம் அதிகரித்திருந்தது... ஏன் என்று தெரியவில்லை அர்த்த சாமம் முடியபோகிறது என்பதாலோ என்னவோ...

"இன்னும் சில கணப்பொழுதுகள் தான் விக்கிரமாதித்தா... அப்புறம் உன் தலை வெடித்துச் சிதறிவிடும்."
வேதாளம் உறுமியது.

விக்கிரமாதித்தனுக்கு வியர்த்தது. அமுதா பயந்தாள். வேதனையில் நொந்தாள். நம்மால் வீணாக ஒரு உயிர் போகப்போகிறதே... அதுவும் தலை வெடித்துச் சிதறப் போகிறதே... வேதாளத்தின் சாபத்தை எப்படியும் நிறுத்தியாக வேண்டுமே.

விக்கிரமாதித்தன் யோசித்தான்.
கணப் பொழுதில் பொறி தட்டியது.

வேதாளத்திடம் கெஞ்சிக் கேட்டு, விக்கிரமாதித்தனின் சாபத்தை தடுக்க அமுதா காஞ்சின மரத்தை அண்ணாந்து பார்த்தாள். விக்கிரமாதித்தன், அருகே நின்ற அமுதாவை இறுக்க அணைத்தான். அமுதா அதிர்ந்தாள். அவளை தூக்கி தோளில் கிடத்தி குதிரையில் ஏறினான் விக்கிரமாதித்தன்.

அமுதா என்ன நடக்கிறது என்பதை ஊகிக்கும் முன்னே குதிரை அந்தப்புரம் நோக்கி வேகம் எடுத்தது...
புளுதி மண்டலம் கிளம்பியது...
பிணத்தைத் தூக்கிக்கொண்டு வேதாளம் மீண்டும்...


❑

காலம் - 1998



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இறகுகள்

தத்துவ வாழ்க்கையில் விரோதமும் இல்லை. ஸ்நேகமும் இல்லை. அதில் புரிந்து கொள்ளல் மாத்திரமே உண்டு! புரிந்துகொண்டு உள் எடுத்தல் அல்லது புறம் தள்ளல்... சக்கரக்கட்டி புறந்தள்ளப்பட்டு விட்டாள். எந்த ஒரு அகாலப் பொழுதிலும் கூட எனக்கவள் விரோதியாகப்பட்டாள். ஆயினும் கூட எனக்கும் அவளுக்குமிடையிலான உறவு முறிக்கப்பட்டு பதின்நான்கு நாட்களும் ஐந்து மணித்தியாலங்களும் இருபத்திரெண்டு நிமிடங்களும் ஆகிவிட்டது.

“உன்னோட உறவு என்னோட சிந்தனைப் போக்குக்கு தோதுப்படாது. இந்தக் கணத்தில் இருந்து உனக்கும் எனக்குமான உறவு இனி எந்த ஒரு பொழுதிலும் தொடரப்போறதில்லை... தொடரக்கூடாது!”
என்று பூர்வாங்க ரீதியாக சக்கரக்கட்டியிடம் நான் அறிக்கை மாதிரி அறுதியிட்டுச் சொல்லி பத்து நாட்களும் ஒரு மணித்தியாலமும் ஆகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரம் இப்போது சரியாக பின்னிரவு 2.05.

நான் கொஞ்சம் அப்படித்தான்... சகலமும் இராக்கால அகாலப் பொழுதுகளில்தான்! முடிவு எடுத்தல், எழுதல், சிந்தித்தல், படித்தல், போன் பேசல், தொழில் பார்த்தல் என்று சகலமும் வண்ணான் பொண்ணுக்கு போகும் ஊத்தில்தான்!

தூக்கமும் கனாக்காணலும் பகலில்!

முரண்பட்டு இருக்க வேண்டும் என்பதற்காக நான் ஒன்றும் அப்படி வாழ்க்கையை மாற்றி அமைக்கவில்லை. வாழ்க்கை அப்படி மாறிக்கொண்டது. கூடச் சேர்ந்து நானும் மாறிவிட்டேன். வாழ்க்கை என்பது ஒருபோதும் நம் மேல் கருணை கொண்டு மாறப் போவதில்லை. நாம் நாம்தான் மாறிக்கொள்ள வேண்டும்.

வாழ்க்கைக்கு ஏதுவாய்...! பருவ காலங்களுக்காக உருமாறும் மரங்களைப் போல நாம்தான் மாறிக்கொள்ள வேண்டும்!

ஐப்பசி வந்தால் உதிர்வதற்கு ஆயத்தம் பண்ணு.
மார்கழிக்கு முன்னதாய் முழுதாய் உதிர்ந்துவிடு.
தைக்குப் பின் விறைத்துப் போய் இறப்பாய் நில்.
சித்திரை கடந்தால் உயிர்த்து துளிர்த்துக்கொள்.
ஆனியில் கர்வமாய் தலை விரித்து கிளை அசைத்து ஆடி விடு.

காலம் மாறுகின்றது கூட நீயும் நானும் மாறிக்கொள்கின்றோம். அவ்வளவே...

முரண்பட்டு இருக்க முடியும்தான்! காலம் பற்றி கவலை இல்லாது பருவகாலம் பற்றி பயம் இல்லாது ஊசி இலை மரங்கள் மாதிரி கர்வத்துடன் விறைப்பாய் நிற்க முடியும்தான்! மரணம் என்கின்ற ஒன்று வராதவரைக்கும், அல்லது வருகின்றவரைக்கும் விறைப்பாய் முரண்பட்டு இருக்க முடியும்தான்! ஆனால், முரண்பட்டு, முரண்கொண்டு கூட்டம் கூட்டமாய் இருக்க முடியுமா என்பதுதான் என் கவலை எல்லாம்.

"ஏன் முடியாது? முடியும். முரணான சிந்தனை கொண்ட கூட்டத்துடன் நான் கூடிக் குலாவுவேன்"
என்கின்ற என் சிந்தனைப் போக்கு அடிபட்டு போய்விட்டது.
எதற்கும் முரணாய்ப் போய் முட்டிக் கொள்கின்ற வயது... முட்டிக்கொண்டது! மிஞ்சியது என்ன? முறிந்த இறகுகள் தானே...?(!)

"உனக்கெதுக்கு கூட்டம்? ஒத்த இறக்கைய கொண்ட கூட்டமா இருந்தாலும் சரி முரணான இறக்கைய கொண்ட கூட்டமா இருந்தாலும் சரி உனக்கெதுக்கு கூட்டம்? உன்னால தனியா பறக்க முடியாதா? தனியா பற... தைரியம் இருக்கும்னா தனியா பற... அப்பதான் பூமியில இருக்கிறவா உன்ன உற்று உற்று கவனிப்பா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படியென்னாத்தான் மனுஷனோட மனசில உனக்கு சாகா வரம் கிடைக்கும்."

"சொல்லடி சிவசக்தி
என்னை சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்.
வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே!
அப்படின்னு நீ சிவசக்திய கேக்க வேணாமோ? வல்லமைய கேளு... உனக்குள்ளார அழியிற சுடர் மிகு அறிவ பாதுகாத்துக்க... சுடர் மிகு அறிவோட வல்லமைய கலந்திட்டியென்னாத்தான் மேல...மேல... பறக்க முடியும். றெக்கை முறிஞ்ச வேதனையில லிக்கர ஊத்தி சுடர்மிகு அறிவை அணைச்சிக்காத... முறிஞ்சது றெக்கைதானே. ஆத்மா இல்லியே? ஆத்மாவ பத்திரப்படுத்திக்க றெக்க சரியானதும் தனியாப் பற..."

தொலைவில் இருக்கின்ற ஆஸானிடம் தொலைபேசியில் என் புலம்பலைச் சொல்ல அவர்தான் அதற்கு இப்படிச் சொன்னார்.

சக்கரக்கட்டிக்கும் எனக்கும் இடையிலான உறவு எப்போவோ முறியும் என்று எப்போதோ தெரிந்து போனதுதான்! ஆனால் என் சிறகுகளும் முறியும் என்பதை என் தீர்க்க தரிசனம் கண்டு கொள்ளவே இல்லை.

"உயர உயர பறக்க வேண்டிய நீ எதுக்கிடாப்பா நொண்டிக் குதிரையோட சகவாசம் வைத்திருக்கிறாய்?" என்று நவீனன் அடிக்கடி என்னிடம் கேட்பார்.

"நொண்டிக் குதிரையுடன் மூணு மாசம் நீ நடந்தியெண்டால் மூணாவது மாதம் நீயும் நொண்டத்தான் வேணும்."

இப்படிக் கூட அடிக்கடி சொல்வார். நொண்டிக் குதிரையாக இருந்தால் என்ன, அதுவும் குதிரைதானே என்பதுதான் என் எண்ணமாக இருந்தது. அது என்னடாவென்றால் என்னைப் பின்னங்காலால் நெண்டியல்லவா தள்ளிவிட்டது.

சக்கரக்கட்டி நொண்டிக்குதிரை என்று எனக்கு அண்மையில்தான் தெரிந்தது. முரணான இறக்கை என்று கொஞ்சக் காலம் முன்னால் தெரிந்தது. அதற்கு முன்னரெல்லாம் ஒத்த இறக்கையை கொண்ட பறவை என்றே புத்தி கணக்குப் பண்ணி வைத்திருந்தது.

என்னுடைய கருத்துக்கள் விரிவடைகின்றதா? அல்லது சக்கரக்கட்டியின் கருத்துக்கள் சிந்தி சிதறி மாறுகின்றதா என்று தெரியவில்லை. நிலையான கருத்துக்களை கொண்டவன் மனிதன் அல்ல- அவன் பயித்தியக்காரன். கருத்துக்களை மாற்றி மாற்றிக் கொள்பவனே மனிதன்!

கருத்துக்களை மாற்றிக் கொள்வது யார்? நானா, சக்கரக்கட்டியா?
நிலையான கருத்துக்களை கொண்ட பயித்தியம் எது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பெல்லாம் கற்பு விசயத்தில் சக்கரக்கட்டி படு கறார். (இப்பவும்தான் யார் இல்லை என்று சொல்வது?) அவளுடைய கற்பு நெருப்பு மாதிரி. கிட்டப் போனால் பொசுக்கும்.

"உலகத்தில் இருக்கிற பொம்பிளையல்ல கற்ப கெட்டியாப் பாதுகாக்கிறது யார்? தமிழ்ப்பெண்கள்தான்!" என்று அடித்துச் சொல்வாள்.

"இந்த தமிழிச்சிக்குள்ளயெல்லாம் மகா, மகா கற்புக்கரசி யார்?" என்று யாரேனும் கேட்டால் நெஞ்சை நிமிர்த்தி கர்வமாய் "நான்" என்பாள்.

"எப்படி நம்புறது? கண்ணகி மாதிரி, சீதைமாதிரி இல்லாட்டிப்போனா அருந்ததி மாதிரி நீ கற்பில சிறந்தவள் என்பதை நிரூபிக்க ஏலுமே?" என்று ஒரு சந்தர்ப்பத்தில் கேட்டுவிட்டேன்.

சக்கரக்கட்டிக்கு ரொம்பவும் கோபம் வந்துவிட்டது. அவங்க எல்லாம் வெறும் "கிறியெட்டிவ் கறக்டர்" என்று ஆவேசமாய் மிக யதார்த்தமாய் சொன்னாள்.

இந்தக் கண்ணகி, சீதை, அருந்ததி எல்லாம் வெறும் கற்பனைப் பாத்திரங்கள் என்று முதன்முதலாய் (நான் அறிந்தவரை) சொன்ன தமிழ் பெண் சக்கரக்கட்டியாகத்தான் இருக்கவேண்டும்.

"கற்பு என்றதே மிகப் பெரிய கற்பனைதான். உனக்கது தெரியுமா?" என்று நான் சொன்னதை சக்கரக்கட்டி நம்புவதாய் இல்லை. மறுத்தாள். நான் மடத்தனமா கதைப்பதாகவும் எனக்கு பழங்கதைகள் தெரியாது என்றும் அத்தோடு புத்துலகத்தைப் பற்றியும் தெரியாது என்றும் வெறும் கனவுலகில் வாழுகின்ற இ(க)லக்கியவாதி என்றும் வாதிட்டாள்.

அதுமட்டுமல்லாது கற்பு என்பது 'பிசிக்கலா'கவும் உண்மையான விசயம் என்றாள்.
எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆனால் காட்டிக்கொள்ளவில்லை.

"அப்படி எண்டால் சக்கரக்கட்டி, கற்பு என்றது வெறும் உடம்பு சம்பந்தப்பட்டது தானா?" என்று உண்மையாகவே எதுவும் அறியாதவனாகவே கேட்டேன். சக்கரக்கட்டி நீண்ட நேரம் யோசித்தாள்.

எனது தோற்றம் முரட்டுத்தனமாகவும் பார்வையில் தீட்ஷண்யமும் இருப்பினும்கூட நான் ஒரு அப்பாவி என்றும் என்னை இலகுவாக ஏமாற்ற முடியும் என்றும் சக்கரக்கட்டியினுடைய நீண்டகால எண்ணம்.

"மட்டக்களப்பான் மடையன். மூன்று ஊத்தும் சோறு தின்ற மடையன். அரிசையும் தயிரையும் திண்டு திண்டு அவன்ட மண்டைக்குள்ள சக்குப் புடிச்சித்து. அவன ஏமாத்திறது லேசி. அவனுக்கு நாமதான் ராசா. 'இதுதாண்டா தம்பி யாழ்ப்பாணிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்மளப்பத்தின அபிப்பிராயம். யாழ்ப்பாணியோட உறவு வெறும் பொருளுக்காகத் தான். நம்மளோட அவன் ஒட்டுறான் எண்டால் நம்மட்ட என்னத்தையோ வறுகப்போறான் எண்டுதான் அர்த்தம். நான் கம்யூனிஸ்ட் இல்ல. ஆனா யாழ்ப்பாணியோட உறவ கம்யூனிஸ்ட்டோட பார்வையிலதான் பாப்பன். நீ அவனுகளோட சவகாசம் வைச்சிருக்கிறது நல்லது இல்ல. மறகா ஒரு காலத்தில நீ கொளறிக்கொண்டு திரிவாய் அப்பதான் தெரியும்."

இயக்கத்துக்குப் பின்னால் வால் பிடித்தக்கொண்டு திரிந்த காலத்தில அப்பா, அடிக்கடி இப்படிச் சொல்வார்.

சக்கரக்கட்டிகூட சுத்தமான யாழ்ப்பாணத்து மண். அப்பா சொல்வது மாதிரி இயல்புகொண்ட சுத்தமான மண் வாசனை மனம்.

நான் மூன்று வேளையும் சோறு தின்பவன்தான். (இப்பவும்) காலையில் சோறும் தயிரும் வாழைப்பழமும் சீனியும் வேண்டும். மத்தியானம் சுண்டல், பொரியல், குழம்பு, கடையல், சொதியுடன் சோறு வேண்டும். இரவில் மதியத்தானையும் விடியத்தானையும் சேர்த்து வேண்டும். ஆனால் என்னாலும் முடியும். சீட்டுப் பிடிக்க முடியும். ஆள் கடத்த முடியும். கோயில் கட்ட முடியும். இயக்கம் ஆரம்பிக்க முடியும்... இவை எல்லாம் செய்கின்ற புத்திசாலியாய் இருப்பதைவிட மூன்று வேளையும் சோறு தின்கின்ற மடையனாக இருந்துவிட்டுப் போகின்றேன்.

வாழ்க்கை என்பதே ஆளை ஆள் ஏமாற்றவும் ஏமாறவும்தானே என்பது வேறு விசயம்.

நான் ஏமாந்தவனாகவே காட்டிக்கொண்டேன்.

"அப்படியெண்டால் சக்கரக்கட்டி, உண்மையிலேயே கற்பு எண்டால் என்ன?" என்றேன். அது என்னமோ தெரியவில்லை. என்னுடைய பெரிய கோளாறு... எதைப்பற்றி என்றாலும் பலரது விளக்கத்தையும் அறிந்துகொள்ள நினைப்பது. அந்தப் பொழுதுகளில் என்னை ஏமாளியாகக் காட்டிக்கொண்டு அவர்கள் கொடுக்கின்ற விளக்கத்தைக் கிரகிப்பது மகா சுவாரசியம்!

சக்கரக்கட்டிக்கு பேரானந்தம். தன்னை ரொம்ப பெரிய மனுஷியாகவும் அறிவிலும் அனுபவத்திலும் மெத்த முத்தியவளாகவும் பாவனை காட்டிக்கொண்டு சொன்னாள்.

"கற்பு என்றது சுத்தம். பெண்ணோட சுத்தம். ஒன்றுக்கு மேற்படாத ஆணோட உறவும் உடல் உறவும் கொள்ளாம இருக்கிறதுதான் கற்பு!"

பிரமாதம்! புல்லரித்துப் போனது எனக்கு.

கற்றுக் கொடுக்கப்படுகின்ற இயலே கற்பியல்! இதில் பணிவு, அடக்கம், ஒழுக்கம், கண்ணியம், கடமை, கட்டுப்பாடு, வாய்மை, நேர்மை, வாக்கு இன்னும் ஏகப்பட்டவைகளுடன் ஒன்றுக்கு மேற்படாத உடற்கலவியும் இதனுள் அடக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொண்ணூற்றி ஒன்பது வீதமானவைகளை ஓரத்தே ஒதுக்கி விட்டு இடுப்புக்குக் கீழே சுத்தமாக இருப்பதே 'கற்பு' என்கின்ற ஒரு வீதத்தை ஏன் தூக்கிப் பிடிக்கின்றார்கள்?

சிந்தனையில் மாற்றந் தேவை!
சக்கரக்கட்டியை சீண்ட வேண்டும் போல் உணர்வு வந்தது...

"நீ கற்புள்ள பொம்புளதானே...?"

"ஓம்!"

"மழை பெய்யவை பாப்பம்?"

"உனக்கென்ன பைத்தியமா, நான் எப்படி மழை பெய்ய வைக்கிறது?"

"நீ சொன்னா மழை பெய்யும் எண்டுதானே வள்ளுவர் சொன்னார்."
சக்கரக்கட்டிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

குங்குமத்தையும் சந்தனத்தையும் ஒன்றாக குழைத்தால் வருமே ஒரு நிறம்... அந்த நிறம்தான் சக்கரக்கட்டி. அவளுக்கு கோபம் அதிகமானதும் கலவையில் அதிகமாய் குங்குமத்தை கொட்டியது மாதிரி நிறத்துக்கு போனது அவள் முகம்.

"வள்ளுவன் சரியான ஆணாதிக்கவாதி. எங்களை எல்லாம் முடக்கி வைக்க எழுதின குறளுகளுள் ஒண்டுதான் இந்த மழை விசயமும். அவன் ஆம்புளதானே அப்படித்தான் எழுதுவான். அந்த காலத்திலையும் சரி எந்த எழுத்தாள ராஸ்கல் பூமியில் இருந்து யதார்த்தத்தை எழுதியிருக்கான்?"

சக்கரக்கட்டி சொன்னதைப் பார்த்தால் என்மீதும் ஏறிப் பாய்ந்த மாதிரியும் இருந்தது...

சக்கரக்கட்டி ரொம்பவும் யதார்த்தமான பெண்... என்ன, கற்பு விசயத்தில்தான் என்னுடன் கொஞ்சம் முரண்பாடு! மனதால் என்னுடைய கருத்துக்கு முரண்பாடு இல்லை என்பது அப்புறமாய் தெரிந்தது...

"சரி, சக்கரக்கட்டி உன்ன கல்யாணம் முடிக்கப் போறவன்! நீ கற்புள்ளவள் தானா எண்டு கேட்டால், நீ எப்படி நிரூபிப்பாய்?"

"கற்ப நிரூபிக்க ஏலாது... என்ன எனக்குத்தான் தெரியும். ஆறு வருஷமா ஒராளத்தான் லவ் பண்றன். என்ன எனக்குத்தான் தெரியும்!"

"இந்த வாழ்க்கையில் மிகப் பெரிய பொய் எது தெரியுமா? என்னை எனக்குத் தெரியும்! என்பதுதான். இங்கு யார் இருக்கின்றார் தன்னை அறிந்தவர்? ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடுகு அளவுக்கேனும் தன்னை அறிந்தவர் உண்டா? கிடையவே கிடையாது.”

“நான் யோக்கியமானவள்” என்று சொல்லாதவள் இங்கு எவள் இருக்கின்றாள். சக்கரக்கட்டியில் குற்றம் சொல்ல? பலமான ஆணின் குறுக்கிடல் இல்லாத வரைக்கும் எல்லா பெண்ணும் இடுப்புக்கு கீழே சுத்தமாகத்தான் இருக்க முடியும்! பத்தினியாகவும் கற்புடனும் பத்திரமாகவும் இருக்க முடியும்தான்!

முன்னரெல்லாம் சக்கரக்கட்டியுடன் கதைக்க முயன்றால் பொழுது போவதே தெரியாது. படு சுவாரஸ்யமாக கதைத்துக் கொண்டே போகலாம். இப்போது எல்லாம் அந்த சுவாரஸ்யமே இல்லை.

“அவுத்துப் போடாத வரைக்கும்தான் பொம்புள சுவாரஸ்யம். ஆச்சரியம் எல்லாம். அவுத்துட்டா அப்பறம் ஒரு மண்ணும் கிடையாது.”
ஆஸான் அடிக்கடி சொல்வார்... அதனால்தானோ என்னவோ தெரியவில்லை. ஆறுமாதம் முன்பிருந்த சுவாரஸ்யம், ஆச்சரியம் எல்லாம் சக்கரக்கட்டியின் பால் இப்போது கிடையாது...

கதைப்பது, பேசுவது, கொள்கை என்று பீற்றுவது, கற்பு என்று உளறுவது எல்லாம் சும்மா ஒரு பம்மாத்துக்கு.

இவையாவும், சக்கரக்கட்டியை பொறுத்தவரைக்கும் ஒரு வகையான கௌரவத்துக்கும், சமூக மதிப்புக்கும்தான்!

இந்த வகையில் வெள்ளைக்காரிச்சிகள் யோக்கியம்! நம்மவளுகள் ஒழுங்காக அனுபவித்ததும் இல்லை. பண்பாடு, பழக்கவழக்கம், மரபு என்று பீற்றுகின்ற அளவுக்கு அதை பாதுகாப்பதும் இல்லை.

மகா கொடுமையான விசயம்! சக்கரக்கட்டி மூலமாக எனக்கு அதிகம் அறிமுகம் கிடைத்திருக்கின்றது... வொண்டலா, ரெக்ஸோனா, மிஸ் மில்குவைற், இப்படி ஏகப்பட்ட அறிமுகங்கள்... எல்லாம் விதம்விதமான வழுவழுப்பு சமாச்சாரங்கள்.

இவர்களின் அபிமான அணிகலன் என்னவென்றால் ‘சல் சல்’ என சத்தம் எழுப்பும் கால் கொலுசுகள்.

காலில் அதை கட்டிக் கொண்டு நடப்பதில்... அப்பாடா எத்தனை நெளிப்பு!
ஒரு நாள் கேட்டுவிட்டேன்

“ஏன் சலங்கைய கால்ல கட்டிக்கொண்டு உழவு மாடு மாதிரி அலையிறியல்?” எல்லோரும் சிரித்தார்கள்.

“நீங்கள் மட்டக்களப்புத்தானே. அதுதான் மாடும் சலங்கையும் எண்டு கதைக்கிறியள். இது சலங்கை இல்லை... கொலுசு! இது எங்களோட பாரம்பரிய அணிகலன்” என்று எவளோ ஒரு வழுவழுப்பு சொன்னது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"உங்களோட பாரம்பரியம் விபச்சாரமோ...?"
வழுவழுப்புக்கெல்லாம் கோபம் வந்துவிட்டது...

"ஏன் அப்படி சொல்லுறீர்...?"

"இல்ல இந்த சலங்கையை... சே... கொலுச கட்டிற்று தையும் தக்கா எண்டு நீங்கள் நடந்து போகேக்கை, என்னப் பாரு... என்னப் பாரு... எண்டு சத்தம் செய்யிற மாதிரி இருக்கு... அது என்னமோ அந்த கொலுசோட சத்தம், பொம்புள ஆம்புளைக்கு விடுக்கிற அழைப்பு மாதிரி இருக்கு..."
எல்லா வழு வழுப்புக்களும் கொலுசை உடனேயே கழற்றி வீசிவிட்டன. ஆனால் ஒரே ஒருத்தி மாத்திரம் கொலுசை வீசாமல் சத்தம் எழுப்புகின்ற மணியை கழற்றி வீசிவிட்டு,

"இப்போ எப்படி?" என்றாள்.
அவள்தான் வெல்லக்குட்டான்.
சக்கரக்கட்டி மூலமாக எனக்கு கிடைத்த இன்னொரு பனங்கட்டி!
நம்ம கதையின் இரண்டாவது கதாநாயகி...
வெல்லக்குட்டானை சக்கரக்கட்டி எனக்கு அறிமுகப்படுத்தும் போது வெல்லக்குட்டானின் பிரதாபங்களை முதலில் பிரஸ்தாபித்தாள்.

வெல்லக்குட்டான் பிரபல்யமான இயக்கமொன்றின் மாஜி தோழி என்றும் இதர தோழிகளுக்கு சமயங்களில் கற்பு பற்றி வகுப்பு நடத்துவதாகவும் இவளது சொல்லை எந்த ஒரு தோழியும் மீறியது இல்லை என்றும் "எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் உங்களை நீங்கள் இழக்கக்கூடாது" என்றும் (உடல்களை- கற்பு) சக தோழிகளுக்கு கட்டளை பிறப்பித்திருந்தாள் என்றும், வெல்லக்குட்டானை பற்றி சக்கரக்கட்டி கதை கதையாக கதைத்தாள்.

வெல்லக்குட்டானில் கர்வம் மிகப் பெரிதாய் ஒளி வீசியது. மழுங்கிய அறிவும் கலங்கிய மனமுமே வெல்லக்குட்டான் என்பதை நான் அப்போதே அறிந்து விட்டேன்.

இவளை நான் அறிந்ததை அறிந்து விட்டாளோ என்னமோ தெரியவில்லை. எனக்கு தெரியாத இலக்கியவாதிகளை பற்றியும், அவர்கள் எழுதிய படைப்புக்களைப் பற்றியும் சும்மா சும்மா கதைக்கக் தொடங்கிவிட்டாள். என்னுடைய கதை, கவிதைகளைக் கூட விழுந்து விழுந்து படித்தாள். சமயங்களில் விவாதிக்கவும் விமர்சிக்கவும் கூட செய்தாள்.

"ஒரு இலக்கியவாதிக்கு கிடைக்கக்கூடிய மிகப் பெரிய சந்தோஷம் எது தெரியுமா?" என்று ஒரு தடவை கேட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அக்டமி எவோர்ட்" என்றேன்.

இல்லை என்று மறுத்து விட்டு,

"இலக்கியம் தெரிந்த மனைவியுடன் இலக்கியக்கூட்டத்துக்கு போவது!" என்றாள்.

எங்கோ உதைத்தது. இது என்னமோ தவறுக்கான முதற்புள்ளி என்பதாய் எனக்குப் பட்டது.

வெல்லக்குட்டானும் நானும் எங்கேனும் போகும் பொழுதுகளில் யாரேனும் தெரிந்த பையன்கள் இருவரையும் இணைத்து கிண்டல் பண்ணினால் வெல்லக்குட்டான் புல்லரித்து பூரித்துப்போவாள்.

எந்த சந்தர்ப்பத்தில் அல்ல, இவள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தன்னை இழக்கக் கூடியவள் என்றும் தன்னை இழப்பதற்காகவே சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடியவள் என்றும் எனக்கு விளங்கிப்போனது.

என்னதான் இருப்பினும் வெல்லக்குட்டானின் மனம் ஒரு பணங்குட்டான்தான்...! அந்தளவு தித்திப்பு...! ரொம்பவும் இளகிய மனம் படைத்தவள். யார், எது கேட்கினும் அவளிடம் மறுப்பே கிடையாது. வாய்க்குள் இருப்பினும்கூட, விரலை விட்டு அதை தோண்டி எடுத்துக் கொடுப்பாள்.

"நல்ல மனம் உள்ள பொம்புளையவ எப்ப பாத்தாலும் வயிறு பொருத்துத்தான் இருப்பாளவ...! அப்படியென்று வெற்றி வேந்தன் (அவருதாங்க நம்ம யூதாஸின் முத்தத்தோட ஹீரோ) அடிக்கடி சொல்வார். அவர் சொல்லிவிட்டால் என்ன, உண்மையாகிவிடுமா? இந்த விசயத்தில் நான் அவருடன் முரண்பட்டவன். அதை நான் ஏற்றுக் கொண்டதே இல்லை."

கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அப்படியென்றால் பிள்ளைத்தாச்சியாகாமல் இருப்பவள் எல்லாம் நல்ல மனம் படைத்தவர்கள் இல்லையா?

அதென்னமோ, யாருக்குமே இல்லாத மாதிரி எனக்கொரு வித்தியாசமான (கெட்ட) ராசி! சகலதையும் துர் அதிஷ்டவசமாய் கண்டு அனுபவித்துவிடுவது.

ஒரு நாள் காலையில் எட்டு மணியிருக்கும். நான் நித்திரைக்குக்கூட போகாத நேரம். வெல்லக்குட்டான் என்னைத் தேடி வந்திருந்தாள். அவளைப் பார்க்க பேய் அறைந்தவள் மாதிரி இருந்தாள். முகம் வெளிறி, கண்கள் உள்ளே போய் மஞ்சள் காமாலைகாரி மாதிரி வெப்புத்தனமாய் காணப்பட்டாள்.

**"என்ன விசயம், சுகம் கிகம் இல்லையா?" என்று அக்கறையாகக் கேட்டேன்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“டேட் பிந்துது...” என்றாள், ஒரு வகை பதட்டமாய்...

என்ன ஆச்சரியமடா! திகதி பிந்துமா? கொஞ்ச நேரம் முன்புகூட கலண்டர் பார்த்தேனே... அப்படி எதுவும் இல்லையே. நேரம் முந்தலாம் பிந்தலாம்... டேட் எப்படி பிந்தும்? குழம்பிப் போனேன்.

“இல்லையே டேட் சரியாகத்தான் இருக்கு. இஞ்சபாரு கலண்டர்...”
தினக்காட்டியை தூக்கி வந்து காட்டினேன்.

“நீ ஒரு மரமண்டை. மட்டக்கிளப்பான் என்றது சரிதான்!”
தலையில் அடித்துக் கொண்டாள்.
இன்னும் குழம்பினேன்.

“என்ர ப்பீரியட் டேட் பிந்துது” என்றாள்.

ஓகோ... இது பொம்புளைங்க சமாச்சாரம்... சரி டேட் பிந்தட்டும்... அதை ஏன் என்னிடம்...? மறுபடி குழம்பினேன்...

“சரி அதுக்கிப்ப என்ன?”
விபரீதம் புரியாததால் சாதாரணமாகவே கேட்டேன்.

“நான் பிரக்னன்டா இருக்கன்” என்றாள். கொஞ்சம் வெட்கத்துடன்.

இப்போது உண்மையாகவே பேய் அறைந்தமாதிரி இருந்தது எனக்கு. கல்யாணம் ஆகாத கன்னிப் பெண் அதுவும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன்னை இழக்கக் கூடாது என்றும்- கற்பு பற்றி விரிவுரை வழங்குபவளும் ஆன இவள் எப்படி கர்ப்பிணியானாள்? சூரியனை வேண்டி மாம்பழம் கீம்பழம் சாப்பிட்டிருப்பாளோ? அப்படியென்றால் இன்னொரு குருஷேத்திரத்திற்கும் இடம் உண்டோ? தாங்குமா இந்த பூமி? சே... இந்த கலிகாலம் முடிகின்ற காலத்தில் அப்படி எல்லாம் மாம்பழம் சாப்பிட்டு நடக்கக் கூடிய விஷயம் அல்ல இது. சில நேரம் ‘ரெஸ்ட’ டியூப்பாக இருக்கலாம்...

“நீ எப்படி...?”
தயங்கி இழுத்தேன்.

“உன்னைப் போலதான் ஒருவன், என்ர பெஸ்ட் ப்ரண்ட். கேட்டான்... பாவமா இருந்திது... ஓம் எண்டுத்தன்...”

யப்பா... நான் தப்பிச்சண்டா... சாமி! அய்யா, வெற்றிவேந்தன் அவர்களே. சும்மா சொல்லக்கூடாது, நீங்கள் பெரிய ஆள்தான்.

“என்ன வெல்லக்குட்டான் நீ, கற்பு பற்றி பெரிய வாதம் செய்யிற நீயா இப்பிடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிப்பு கொடுத்ததாகும்! பெண்ணை மதிக்கும் ஆணுக்கு அவளிடமும் மதிப்பில்லை... சுற்றியிருக்கின்ற மற்றவர்களிடமும் மதிப்பில்லை.

நம்ம தமிழிச்சிகளுக்கு ஆண் என்றால் எப்படித் தெரியுமா இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்... கூந்தலை சுற்றி தலையை சுவரில் மோதவைக்க வேண்டும். எதிர்த்தால் பிடறி வீங்க விளாச வேண்டும். தூசண வார்த்தை பேச வேண்டும். வீதியில் போகும் போது இடையையோ மார்பையோ தீண்ட வேண்டும்.

இப்படியெல்லாம் செய்கின்றவன்தானா ஆண்? இப்படி செய்தால்தான் பெண் நம்மை மதிப்பாளா? வேண்டாம்... இப்படியெல்லாம் செய்து 'ஆண்' என்னும் மதிப்பு இந்த பெண்களால் எனக்கு கிடைக்க வேண்டாம்!

"ஆம்புளையோட பெருந்தன்மையும் நல்ல மனசும் பொம்பளைங்களுக்கு கெடையாது தெரியுமா? பெண்ணுங்களைப் பத்தி ஆகா ஓகோன்னு எழுது... மேடையில பேசு... ஆனா, நெருங்க விடாத, விட்டாலும் தொட்டுக்கிறதோட நிறுத்திக்க... தோள்ள மாத்திரம் தூக்கி வைச்சி கூத்தடிக்காத... அது ஒரு வகையான ஜந்து. தோள்ள உட்கார்ந்துக்கிட்டு செவியக் கடிக்கும்..."

ஆஸான் முன்னொரு தடவை எனக்குச் சொன்னது. ஆஸான் என்ன சொல்வது. சுப்பிரமணியம் கூட (நம்ம புரடியூஸர்) அடிக்கடி சொல்வார்.

"மெனேய் தம்பி, உண்ட கொம்மையிர குடி இரிக்கேடா, அது தோளில ஏறி இருந்திட்டு செவியக் கடிக்கிற சாதிடா"
வெல்லக்குட்டான் செவியைக் கடித்தாள்.

வெல்லக்குட்டானை பற்றிய சகல சங்கதிகளும் சக்கரக்கட்டிக்கு கசிந்து விட்டது. நான் வெல்லக்குட்டானுடன் கதைக்கக் கூடாது என்றும் அவள் ஒரு தேவடியாள் என்றும் என்னிடம் சொன்னாள்.

அது எப்படி கதைக்காமல் இருக்க முடியும்? நீதானே அறிமுகப்படுத்தி ஆகா ஓகோ என்றெல்லாம் போற்றிப்பாடி விட்டு, இப்போது இப்படிச் சொன்னால் எப்படி? குணம், நலம், தரம், தகுதி, படிப்பு, பண்பாடு பார்த்தெல்லாம் நான் பழக்கம் வைப்பதில்லை. ஏதோ, பழகினால் பழகுவேன். இல்லையென்றால் என்பாட்டுக்கு நான் போவேன் என்றேன்.

**வெல்லக்குட்டானுக்கும் எனக்கும் இனி சகவாசம் இருக்குமெனில் சக்கரக்கட்டிக்கும் எனக்கும் ஜென்மப்பகை தோன்றும் என்பதில் உறுதி இருந்தது. என்ன செய்ய முடியும். வெல்லக்குட்டானில் எறும்பு ஊர்ந்து விட்டது என்பதற்காக வீசிவிடவா முடியும்?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒருத்திக்கு தெரியாமல் ஒருத்தியை வைத்துக் கொண்டேன். என்னதான் இருப்பினும், திருட்டுத் தனத்தில் ஒருவகை 'த்ரில்' இருக்கத்தான் செய்கின்றது.
"வெல்லக்குட்டான் உன்னட்ட வந்தாளாமே?"
சக்கரக்கட்டி கேட்க,

இல்லையே, யார் சொன்னா? அந்த தட்டுவாணியோட நான் கதைக்காமல் விட்டு எவ்வளவு காலம். நீ என்னிலை சந்தேகப்படுகிறாய்? என்று நான் உல்டா விடுவது, நிஜம் பிடிபட்டு அப்புறமாய் சக்கரக்கட்டியிடம் வாங்கிக் கட்டுவதும் அசடு வழிவதும் படு சுவாரஸ்யம்...!

என்னதான் பத்தினி, பதிவிரதை என்று காட்டுக் கத்தல் கத்தினாலும் ஆண் நெருக்கத்தால் மனதின் ஓரமாய் இருக்கின்ற அந்த ஆசை பெண்ணுக்கு விஸ்வரூபம் எடுப்பதை தடுக்க முடிவதில்லை.

"பூக்களை பறிக்காதீர்கள்"
என்ற பலகையை பார்த்த பின் உடனேயே பூவைப் பறித்து முகர்ந்து பார்ப்பதில் ஒருவகை மீறல் இருக்கின்றது. இந்த மீறலில் கர்வம் கலந்த உண்மை இருக்கிறது. நான் பறிப்பேன். யார் என்ன செய்யமுடியும். செய்யட்டும் பார்க்கலாம் என்பதில் மகா நேர்மை இருக்கிறது.

"சே... அது தப்பு, அவங்க கட்டுப்பாட்டை நாம மீறக் கூடாது. நேர்மையா நடக்க வேணும்"
என்றுவிட்டு, திருட்டுத்தனமாய் பூப்பறித்து கையுள் பொத்திவைத்து அப்புறமாய் முகர்ந்து பார்ப்பது மகா கேவலமான மீறல்... தைரியம் இல்லாத மீறல்... ஆசைகளை உணர்ச்சிகளை, இருட்டறைக்குள் நடித்துப் பார்க்கின்ற கோழைகளின் இயல்பு...
இந்த கோழைகளில் திருட்டு மீறல்தான் நம் தமிழிச்சிகளிடம்...
மீற வேண்டுமென்று தோன்றினால் மீறு... தாண்டிப் பாய்... எதிர்க்கவந்தால் எதிர்த்துப் போ... நான் அப்படித்தான். உன்னால என்ன செய்ய முடியுமோ செய்துக்கோ... என்கின்ற தைரியம் வேண்டும்...

தைரியம் இல்லை. சக்கரக்கட்டியிடமும் இல்லை... வெல்லக்குட்டானிடமும் இல்லை.

சக்கரக்கட்டி கேட்டாள் "ஏன் நீ இப்பதான் ஏஜ்ரேன் பண்ணிய புள்ளயல் மாதிரி, நான் என்னமும் உன்னைப் பார்த்துக் கேட்டால், கீழ பாத்து சிரிக்கிறனீ...?" என்று.

அது என் இயல்பு என்றும் கரடு முரடாக நான் இருந்தாலும் வார்த்தையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்மம் இருந்தாலும் கூட சில பெண் தன்மைகள் என்னிடம் உண்டு என்றும் அதாவது ஆண் என்கின்ற அலட்டல் இல்லாத ஆண் என்பதும் இத்தனை காலத்துக்கு நீ அறிந்ததில்லையோ என்றேன்.

சக்கரக்கட்டி சிரித்தாள். சக்கரக்கட்டி சிரித்தால் கன்னத்தில் குழி விழும். கண் இமை சுருங்கும். (போனஸ்ஸா இன்னும் ஒன்றும் நடக்கும். அதை எழுத முடியாது. அப்புறம் இது பச்சை இலக்கியமாகி விடும். அது சரி, இது எல்லாம் இலக்கியமா)

“சரி பெண் தன்மையுள்ள ஆம்புளையா இருந்து என்னைப்பத்தி சொல்லு பார்ப்பம்?” என்றாள்.

“மனதால் ஆம்புளத்தனமுள்ள பொம்புள நீ. எல்லா பொம்புளையலைப் போலவும் ஆரம்பத்திலை பொய்யையும் பிறகு உண்மையையும் சொல்லுற பொம்புளக் குணமுள்ள பொம்புள...”

“சரி ஆம்புள தனமா இருந்து சொல்லு பார்ப்பம்?”

“பொம்புளையிலை ரெண்டு வகை. ஒண்டு தெய்வம், மற்றது மிருகம் கலந்த தெய்வம்...”

“அப்பிடியெண்டால்...?”

“முதலாவது கை எடுத்துக் கும்பிட எண்ணம் வரும். ரெண்டாவது உடனேயே சாய்ச்சிட எண்ணம் வரும்!”

“நான் எத்தினியாவது...”
சக்கரக்கட்டிக்கு ரொம்பவும் ஆவலாக இருந்தது...

“ரெண்டாவது...”

நான் சொன்னதும் சக்கரக்கட்டி திக்குமுக்காடிப் போனதை கண்டு கொண்டேன். ஓர விழியால் என்னைப் பார்த்து புன்னகைத்தாள். அட வெக்கத்த பாரு...

“அப்படி எண்டால் ஏன் என்னை நீ இன்னும் சாய்க்கவில்லை?”
நெளிந்து கொண்டு கேட்டாள்.

“சந்தர்ப்பம் வரயில்லை”

“இல்லை, உன்னால முடியாது. நீதான் பொம்புளக் குணமுள்ள ஆம்புளயாச்சே...”
இவள் பேச்சில் என்னமோ சீண்டல் இருப்பதாய் நான் உணர்ந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஆண் என்ற அலட்டலுக்கும் பெண்தனம் உள்ள ஆம்புளைக்கும் வித்தியாசம் இருக்கு..."

"அதென்னமோ. ஆனா உன்னால முடியாது..."

"முடியும்...!"

"இல்லை..."

முடியும்!
முடிந்தது.
சக்கரக்கட்டியை மீற முடிந்தது.
மேத்தா எங்கேயோ சொல்லியிருந்தார்.

"உடுத்திக் கொண்டு இருக்கும் வரைக்கும் எவளுமே உண்மை பேசுவதில்லை" என்று.

உடுத்திக் கொள்ள முதல் என் முதுகைப் பார்த்து சக்கரக்கட்டி சொன்னாள் "ஐ லைக் யூ" என்று.

சிரிப்பு வந்தது... எவனையோ ஆறு வருடமாக காதலிக்கின்றாளாமே இந்தச் சக்கரக்கட்டி?

"இப்பவும் நீ கற்புள்ளவள்தானா?"

"தொண்ணூத்தி ஒன்பது வீதம் கற்போடதான் இருக்கன். உன்னோட கருத்தின்படி ஒரு வீதத்தைத்தான் நான் இழந்திருக்கிறன். இன்னும் தொண்ணூற்றி ஒன்பது வீதம் இருக்கே..."

"இப்போது முழுதாய் உடுத்தி இருந்தாள்..."
வெல்லக்குட்டானுக்கு கல்யாணம்!

எக்கச்செக்கமாய் கறுப்பு வண்ணம் பூசிய பணமும் இரண்டு வீடும் காரும் வைத்திருக்கும் முப்பத்து ஒரு வயதுக்காரன் மாப்பிள்ளை. தொழில் பிரயாண முகவர் (அதுதான் ஆள் கடத்திறவன்)

இங்கு அதிகம் தமிழர் நடமாடுகின்றார்கள் என்றால் அதற்கு காரணம் அவர்தானாம்.

"என்ர கல்யாணத்துக்கு வருவியே?" என்றாள் சக்கரக்கட்டி.

"அழைப்பு இருந்தா வருவன்" என்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சொல்லட்டுமே வேசி எண்டே சொல்லட்டுமே. யாரிட்டை வேசித்தனம் இல்ல... ஆம்புள பொம்புள வித்தியாசம் இல்லாம எல்லாரிட்டையும்தான் வேசித்தனம் இருக்கு. வேசி எண்டு சொல்லட்டும்... ஆனா விபச்சாரி எண்டு சொல்லாமல் பாத்துக்க..."

"அதென்ன வேசி வேற... விபச்சாரி வேறயா?"

"வேறதான்... வேசி உடம்பு சுகம். விபச்சாரி பொருள் சுகம்..."

"இப்ப உடம்பு திமிர்ல அலையலாம். ஆடி ஓஞ்சி ரெத்தம் எல்லாம் சுட்டுப் போன காலத்தில எனக்கெண்டு ஒரு துணை வேணாமா, என்னைச் சுத்தி ஒரு சமூக வட்டம் வேணாமா? அவனோட படுத்தவள், இவனிட்ட புள்ளய வாங்கினவள் எண்டு சமூகம் என்ன விரட்டேக்க நான் எங்க ஓடுறது? உன்னால எனக்கு ஆதரவு தர ஏலுமா? நீயும் நானுமா சேர்ந்து இந்த சமூகத்தில மாற்றங்காண ஏலுமா? சமூகத்துக்கு கட்டுப்படுறம் எண்டு சொல்லிப்போட்டு தெரியாமல் அனுபவிக்கிறதுதான் புத்திசாலித்தனம். களவொழுக்கம் இப்ப மட்டுமா இருக்கு அப்ப இருந்தே இருக்குத்தானே... அவையளோட சேர்ந்து ஆயிரத்தி ஒண்டா நானும் வாறன்... தனியா அடிபட்டுப் போக என்னால முடியாது. எனக்கு பூ விருப்பம்தான். கண்ட உடனேயே கண்ணை மூக்கப்பாத்து புடுங்கிப்போடுவன். 'பூக்களை பறிக்காதீர்கள்' என்ற பலகை இருந்தால் என்ன செய்ய முடியும்?"

"தெரியாமல்தான் பிடுங்க வேணும்... நாலு பேர் பாக்கிற மாதிரி பிடுங்கினால் அசிங்கம் ஆகாதா? நியாயம் கதைப்பான்! நாலு சனத்துக்கு முன்னால அசிங்கம் படுத்துவான்.. அந்த இடத்த விட்டு என்ன ஓட ஓட விரட்டுவான். எனக்கு பூ விருப்பம்தான். ஆனா தெரியாமல்தான் பிடுங்குவன்..."

சக்கரக்கட்டியின் பேச்சில் எள்ளளவேனும் குற்றம் காண முடியாது... முழுதாய் நியாயம் இருக்கிறது... வாதம் பண்ணி மடக்கலாம். ஜெயிக்கலாம்! வாதம் பண்ணி ஜெயிப்பது என்பது வெற்றியே அல்ல... அது மாயை... அது மாயை என்பது தோற்றவனுக்கும் தெரியும். மாயையில் எனக்கு உடன்பாடில்லை...

சமூக மாற்றம் என்பதோ புரட்சி என்பதோ தனி மனிதன் ஒருவனால்தான் உருவம் கொள்கின்றது. பின் படிப்படியாய் குழுக்குழுவாய் ஊடுருவி சமூகத்தை சேர்கின்றது... பசுமைப் புரட்சியோ, ஆயுதப் புரட்சியோ கம்யூனிஷப் புரட்சியோ யாவுமே இதற்குள் அடங்கும்... ஆனால் உடல் புரட்சி மாத்திரம் மாறுபடும். உடலின் உலகம் வேறு... அதன் பார்வை, திசைகள் வேறு... ஒவ்வொன்றும் ஒவ்வொரு மொழி பேசி, வெவ்வேறு உலகத்துக்குள் வாழும்... இங்கு புரட்சி என்பது தனி மனிதனால் சாத்தியப்படாது.

மாபெரும் படையில் ஒரே நேரம் எண்ணம் தோன்ற வேண்டும். தோன்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே நேரத்தில் புரட்சி வெடிக்க வேண்டும். கோடியாண்டுகால போலியை உடைக்க வேண்டும்.

"உறவு பொய், பாசம் பொய், காதல் பொய், திருமண பந்தம் பொய், கல்யாணம் எதுக்கு? சமூக அந்தஸ்த்துக்கு! செக்ஸ் கொடு! புள்ள பெத்துக் கொடு! சமைச்சிக் கொடு! பதிலுக்கு உனக்கு புள்ள கொடுக்கிறன். மனைவி எங்கிற சமூக மதிப்ப கொடுக்கிறன். உறவு பந்தம் எங்கிறதெல்லாம் ஒரு பண்ட மாற்று. அவ்வளவுதான்! வேணும்னா நீ உன்னோட அம்மா அப்பாவுக்கு பணம் அனுப்பாதை... அவாள் என்ன தெரியுமோ பண்ணுவா? உன்னோட இருக்கிற உறவ அறுத்துக்குவா... கடிதம் கூட போடமாட்டாள். புள்ள நம்மளவைச்சி காப்பாத்துவான். கொள்ளி போட ஒருத்தன் வேணும்னுதான் உன்ன வளக்கிறா. அக்கா தங்கச்சிங்க எல்லாரும் எதுக்கு உன்மேல் பாசமா இருக்கா? அவளுக்கு வரதட்சணை கொடுக்க நீ சம்பாதிச்சி கொடுப்பாண்ணுதான்! உன்ர உடம்பு மேல ஒருத்திக்கு ஆசை வந்திருச்சின்னா லவ் பண்ணுவாள். உறவு எங்கிறது பொய்பா... இங்க அனுபவிக்கிறது ஒண்ணுதான் மெய்! மெய்! உடம்பு திருப்திப்பட்டால் மனம் சந்தோஷப்படும். மனம் சந்தோஷப்பட்டால் ஆத்மாவுக்கு திருப்தி!!!"

ஆஸான் தொலைபேசியில் நேற்றிரவு சொன்னார்...

ஆஸான் ஒரு கொம்னிஸவாதி... தமிழ் பண்பாடு, சம்பிரதாயம், சடங்கு எல்லாவற்றையும் முழுமையாக ஒதுக்கி விட்டார். ஆனால் அவர் ஆன்மீக வாதி... முரணான விசயம்...!

கொம்னிஸ்டாக இருந்து கொண்டு எப்படி ஆன்மீகவாதியாக இருக்கின்றீர்கள் என்று யாரேனும் கேட்டால் சிரிப்பார்...

ஆன்மீகம் என்பது மதம் அல்ல. ஆன்மீகம் எந்த மதத்தை சார்ந்ததும் அல்ல... அது ஓர் மார்க்கம். ஆமாம் அது ஓர் வழி!' மெல்லிய அழகான அமைதியான ஓர் வழி! ஆன்மீகம் என்பது கடவுளைக் காணல் அல்ல... அது உண்மையை உணர்தல்! காதல், உறவு, குடும்பம் என்பதை பொய் என்று உணர்தல்...

சக்கரக்கட்டிக்கு நான் உண்மையை உணர வைக்க முடியாது. ஆன்மீகத்தை பற்றி சக்கரக்கட்டிக்கு எதுவுமே தெரியாது. யாரோ சக்கரக்கட்டிக்கு வேண்டப்பட்டவர்கள் மதம் மாறி விட்டார்களாம் என்று என்னிடம் வந்து கோபப்பட்டாள்.

வசதிகள் செய்து கொடுக்கின்றார்களாம் அந்த மதத்தில் என்று, மதம் மாறி விட்டார்களாம் என்றும் - அதை விட விபச்சாரம் பண்ணினால் இன்னும் வசதியாக இருக்கலாமே என்று புலம்பினாள்.

மதம் என்பது வசதிகளை வைத்துத்தான் தன் பக்கம் ஆக்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழுக்கின்றது. வாக்குகளுக்காக பணம் கொடுத்து மனிதர்களை தன் பக்கம் இழுக்கின்ற அரசியல் கட்சி மாதிரி!

அரசியலுக்கும் மதத்துக்கும் என்ன சம்பந்தம்? சம்பந்தம் எதுவும் இல்லை. ஆனால் ஒற்றுமை இருக்கின்றது. அரசியல்வாதிக்கும் மதவாதிக்கும் எந்த ஒரு மதவாதியும் ஆன்மீகவாதியாக முடியாது என்பது மாபெரும் உண்மை.

தன்னுடைய மதத்தை ஆகா ஓகோ என்று புகழ்பாடும் சக்கரக்கட்டி ஒரு நாள் முகம் கழுவாதவள் மாதிரி என்னிடம் வந்தாள்.

அவளில் ஏதோ மாற்றம் தெரிந்தது. விடியாத முகம். தான் ரொம்பவும் நாகரீகமாக இருப்பது போல் பாவனை காட்டினாள்...

"என்ன விசயம் ஒரு மாற்றம் தெரியுதே" என்றேன்.

"நான் மதம் மாறலாம் எண்டு நினைக்கிறன்" என்றாள்.

நெற்றியில் பொட்டு இல்லாதது, இதன் அர்த்தம் தானோ. பொட்டு மங்கலச் சின்னமா? மதச் சின்னமா?

"ஏன்"
எனக்கு ரொம்பவும் ஆச்சரியம்.

"நம்மளோட மதம் சரியான பழசு. அதில புதுமை இல்லை. செருப்பு கழட்ட வேணும், சீலை கட்ட வேணும், பொட்டு வைக்க வேணும், நாட்டுக்கு ஏத்தமாதிரி மொடனா மாற வேணும்."

இவளுக்கு என்ன ஆகிவிட்டது? ஏன் இப்படி ஆனாள்? அடிபட்டு, நொந்து, வலியால துடித்து, கடவுளே நீரே வழிகாட்டும். உமது பாதையில் நான் வருகின்றேன் என்று மதம் மாறினால் நியாயம் இருக்கின்றது. மண்டியிட்டு இறைவனுக்கு தோத்திரம் சொன்னால் சொன்னவரை வணங்கத் தோன்றும்... நாகரீகம் இல்லை என்றும் மதம் மாறுவார்களா இந்த உலகத்தில்...?

"வசதிக்கு ஆசைப்பட்டு மதம் மாறினால் அது விபச்சாரம். நாகரீகத்துக்கு ஆசைப்பட்டு மதம் மாறினால் என்ன?" என்றேன்.
அது என்னொட விருப்பம். என்னோட சுதந்திரம்.

"நீ மதம் மாறப் போறது எல்லாருக்கும் தெரியுமா?"

"தெரியும்."

"பத்துப் பேரோட படுக்கிறதும் கூட உன்னோட விருப்பந்தான். உன்னோட சுதந்திரம்தான். அதக்கூட எல்லாருக்கும் தெரிவிக்கலாமே..."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"இது சமூகக் குற்றம்."

"மதம் மாறுறது மதக் குற்றம்."

"என்னோட பழைய மதம் என்ன துரத்தாதே... வாழ முடியாத படிக்கு முடமாக்காதே..."

"முடமாக்குமெண்டால், விரட்டுமெண்டால்?"

"வேற என்ன செய்ய ஏலும்... குண்டு சட்டிக்குள்ள குதிரை ஓட்ட வேண்டியது தான்."

பரம பிதாவே...!
இந்த பாவிகளை மன்னியும்.
மனிதனை மன்னிக்கவும் தண்டிக்கவும் அரசனுக்கே உரிமை உண்டு!
மனிதர்களில் அரசன் எவனுமில்லை...
நீரே அரசன்.!

4

மனைவியாகப்பட்டவளின் மிகப் பெரிய பலஹீனம் என்ன தெரியுமா? புருஷன் தூரத்தில் இருக்கும் போது ஏங்குவதும் அருகில் இருக்கும் போது விரட்டுவதும்தான். புத்திசாலி புருஷனால் மாத்திரமே மனைவி என்னும் பெண்ணை அழகாக கையாள முடிகின்றது. அருகில் இருந்து கொண்டே விலத்தி நடப்பதும் விலத்தி இருந்துகொண்டே அருகில் இருக்கிறது போன்று பாவனை காட்டல் மூலமும் பெண்ணை அடக்க முடியும். அவள் இயல்பை முறியடிக்க முடியும். வெல்லக்குட்டானின் புருஷனால் இதை முறியடிக்க முடியவில்லை. அவன் ஒரு முட்டாள் புருஷன்.

இரண்டு மாதம் கொஞ்சுவதும் பத்துமாதம் மறந்து போவதும் அவனது தொழில் முறைச் சிக்கல். வெல்லக்குட்டானுக்கு சலிப்பு வந்துவிட்டது போலும் இந்த வாழ்க்கை.

"என்ன வாழ்க்கை இது? ச்சே... யாரைக்கட்டினாலும் ஏஜென்சிக்காரன கட்டவே கூடாது. காசுதான்... காசுதான்... வாழ்க்கையே இல்லையே. சுகம் இல்லையே."

வெல்லக்குட்டான் ரொம்பவும் பாவம். என்னால ஏதும் ஆறுதல் தேவைப்படுகின்றது போலும் இவளுக்கு. பணம், சம்பிரதாயம், சடங்கு, படிப்பு, இது எல்லாம் எந்த மனிதனுக்கும் சுகம் கொடுப்பதாய் இல்லை. அவையாவும் மனிதனுக்கு கௌரவம் கொடுக்கும். கௌரவம் வாழ்க்கையை எப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்தது? வாழ்க்கை சோபிக்க சுகம் வேண்டும். சுகத்தை உணர துக்கம் வேண்டும். துக்கமும் இல்லை, இவளுக்கு சுகமும் இல்லை.

"நீ தானே விரும்பிக் கட்டினது"
என்றேன்.

"நேற்றைய விருப்பம் இண்டைக்கு வெறுப்பா இருக்கே."

"சலிப்பா? வெறுப்பா?"

"சலிப்பு. அதால வந்த வெறுப்பு."
வெல்லக்குட்டான் இப்போது பேசவும் கற்றுக்கொண்டாள்.

இங்கு சலிக்காத விசயம் ஏதேனும் உண்டா என்ன? சலிப்பு வந்தால் ஒதுக்கி விட எந்த தமிழிச்சிக்கேனும் தெம்பு வரினும் கூட சலிச்சுப் போச்சு அதுதான், ஒதுக்கிட்ட அல்லது ஒதுங்கிட்டன் என்று சொல்ல தெனாவெட்டு இருக்கின்றதா?

"உனக்கு இந்த வாழ்க்கையில வெறுப்பெண்டால் என்ன செய்யப் போறாய்?"

"நீ ஒரு மர மண்ட, மட்டக்களப்பான் என்றது சரிதான்."

இந்த வெல்லக்குட்டான் எப்போதும் இப்படித்தான் நான் ஏதும் புரியாமல் விழித்தால் ஊர் சொல்லித் திட்டுவாள். 'மறுகா', 'கிறுக்கி' எண்டெல்லாம் உங்கட ஆக்கள்தான் கதைப்பினம். இப்பிடி கதைக்கிற நீங்கள் மடையர் தானே. என்று லேசாக கிண்டலும் அடித்தாள்.

"ஓமடியம்மா நான் மட்டக்களப்பான்தான். மடையன் தான். நான் ஒத்துக்கொள்றன். ஆனா எனக்கு உண்மையாவே விளங்கேல்லை, உனக்கு உன்ர வாழ்க்கையில, புருஷனில சலிப்பு வந்தால் என்ன செய்ய ஏலும் நான்? இது எல்லாம் குடும்ப வாழ்க்கையில சகஜம். அனுசரிச்சு வாழ பழக வேணும் எண்டு அட்வைஸ் பண்ணலாம். உன்னைப் போல உள்ள பொம்புளையலுக்கு அட்வைஸ் விட அதிரடி நடவடிக்கைதான் சரிவரும்."

"அது என்ன, என்னப்போல உள்ள பொம்புளையலுக்கு அதிரடி நடவடிக்கை...?"

"எதில வெறுப்பும் சலிப்பும் வந்திச்சோ அதில முழுத்திருப்தி கொடுக்கிறது."

"அப்படி எண்டால்?"

"உடம்பு ரீதியா என்னால உனக்கென்னவும் உதவி தேவைப்படுதா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெல்லக்குட்டான் வெறுப்பாய் என்னைப் பார்த்து முறைத்தாள். (சுத்த சினிமாத்தனம்) கோபம் கொண்டாள்.

“என்ன நீ, என்ன ‘செக்ஸ்’க்கு அலையிற பொம்புள எண்டு நினைச்சிட்டியே? புருஷன வச்சித்து இன்னொருவனோட படுக்கிறதுக்கு நான் என்ன தேவடியாளே? உன்ர மட்டக்களப்பு புத்திய காட்டிட்டாய் பாத்தியா? இவ்வளவு நாளும் என்ன நீ செக்ஸோடதான் பாத்திருக்காய் என்ன? அதுக்கு வேற ஆள பாரு. நான் யாழ்ப்பாணத்தாள். தமிழிச்சி. இஞ்ச உடம்பு திமிரில கன பேர் அலையிறாளவ. அவளுகளோட வைச்சிக்க உன்ர அதிரடி நடவடிக்கையை.”

வெல்லக்குட்டான் கத்திவிட்டு போய் விட்டாள். உறவை முறித்துக் கொண்டு போய்விட்டாள் என்பது ஊர்ஜிதம் ஆனது சந்தோஷமாய் இருந்தது. அதே அளவு துக்கமாயும் இருந்தது.

யாரிடமோ வெல்லக்குட்டான் சொன்னாளாம் நான்தான் அவளுக்கு இப்போத வில்லனாம் என்று. ஆயினும் நான் அவளுக்கு வில்லன் இல்லை.

“ஹீரோ எண்டு இங்க யார் இருக்கினம்? எல்லாரும் வில்லன்தான். எல்லாரும் ஹீரோதான். சந்தர்ப்பமும் சூழ்நிலையும் பாதகமாக அமைஞ்சால் வில்லன். சரியாக இருந்தால் ஹீரோ.”
ராம்நாத் அடிக்கடி சொல்லிக்கொள்வான்.

யாரோ அவனுக்குத் தெரிந்த ‘சோயா’ என்னும் பெட்டையை ஒரு பையன் காதலித்தானாம். காதல் ஜே, ஜே என்று போய்க் கொண்டிருக்கும் போது பெட்டை ‘பல்டி’ அடிக்க... பையன் பெட்டைக்கு தொல்லைகள் கொடுக்க... பையன் இப்போது சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் இருக்கிறானாம். வெளியே வந்து பெட்டையை பழிவாங்க போவதாக சபதம் வேறு செய்கின்றானாம். முன்னர் நாயகன். பின்னர் வில்லன்.

ஆனால் நான் ஒரு போதும் வில்லன் ஆகப் போவதில்லை. (ஏனோ இதுக்கு முன்னர் எல்லாம் ஹீரோவாக இருந்த நினைப்பு) என் வாழ்க்கைதான் தத்துவ வாழ்க்கை ஆயிற்றே. எனக்கு நண்பனும் இல்லை. விரோதியும் இல்லை. நானும் கூட யாருடனும் நண்பனும் இல்லை. விரோதியும் இல்லை. என் விசயத்தில் மாத்திரம் ராம்நாத்தின் தத்துவம் பொய்த்து விடும்.

எல்லா தத்துவங்களும் எல்லாக் காலங்களுக்கும் ஒத்துவருமா என்பது சந்தேகமான சமாச்சாரம். அதே மாதிரி எல்லா மனிதர்களுக்கும் ஒத்து வருமா என்பதும் சந்தேகம். ஒத்த இயல்புகளைக் கொண்ட உயிரினம் எல்லாம் கூட்டம் கூட்டமாய் குழுமும் என்பது ஒரு கருத்து. இது நம்பப்படுகின்றது. ஆயினும் மனிதன் எல்லாம் வகை வகையான இயல்புகளைக் கொண்ட தனிக் கூட்டத்தினன் என்று ஆஸான் சொல்வார். ஆஸானையும் நம்பித்தான் ஆகவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் சக்கரக்கட்டி வெல்லக்குட்டான் எல்லோரும் ஒரே குழுவாக இருப்பினும் தனித்தனி இயல்புகளைக் கொண்ட தனித்தனி கூட்டத்தினர். முரணான இறக்கைகளைக் கொண்ட வெவ்வேறு கூட்டத்துப் பறவைகள். ஆயினும் ஒன்றாகப் பறக்க முடிந்தது. எப்படி?

இந்த 'எப்படி' என்பதற்குள்தான் வாழ்க்கையின் சூட்சுமம் இருக்கிறது. ரொம்ப ஆழமாய் துழாவினால் கிடைக்கும். கிடைத்தது.

கவர்ச்சிதான் காரணம் என்றால் யாரும் நம்ப முடியாது. ஆனா அதுதான் உண்மை. ஆண், பெண் என்கின்ற வேற்றுமை உருவே தவிர வேறு எதுவும் இந்த உறவில் இல்லை.

நால்வகைக் குணம் காட்டி, நெளிந்து, தலைகுனிந்து சிரித்து தனக்குள் பேசிக் கொள்கின்ற பெண்ணில் ஆணுக்கு கிறக்கம்.

முறைத்து, வெருட்டி, ஆர்ப்பாட்டம் பண்ணி, அடாவடித்தனம் செய்ற ஆணில் பெண்ணுக்கு மயக்கம்.

மென்மையும் முரடும் எதிர் எதிர் முனை மின் காந்தங்கள்.

எட்ட நின்றால் ஸ்நேகம். தொட்டுப் பேசினால் காதல். கட்டிக்கொண்டால் கல்யாணம். அடிப்படை காமம் உறவில் செக்ஸ் இல்லை என்றால் அது சக்கரக்கட்டி தனம் அல்லது வெல்லக்குட்டான் தனம்.

இயல்புகள் ஒத்துவராத போது காமம் சலிக்கும். காமம் சலித்தால் சகலதும் உடையும். ஸ்நேகம் உடையும். காதல் உடையும். கல்யாணம் உடையும்.

இயல்புகள் ஒத்துவராததால் அனேகமான உறவுகள் என்னால் தள்ளிவைக்கப்பட்டது. இன்னும் அனேக உறவுகள் என்னை விலத்தி நடந்தது.

சக்கரக்கட்டிக்கு பானுப்பிரியா என்றால் சீவன். பானுப்பிரியாவின் தெலுங்கு (பழைய) மொழிமாற்றப் படங்களைக் கூட அவள் தவிர்ப்பதில்லை. 'என்ன கண் அவளுக்கு. அந்த மாதிரி உடம்பா சும்மா றப்பர் மாதிரி நெளிகிறாள்' என்றெல்லாம் அடிக்கடி பானுப்பிரியா பற்றி சிலாகித்துக்கொள்வாள்.

"இங்க டான்ஸ் ஆட பானுப்பிரியா வாறாளாம். வாறியே போவம்" எண்டு ஒரு நாள் வந்து கேட்டாள் சக்கரக்கட்டி.

"படத்தில ஆடுறதத்தான் பாக்கிறமே. நேரிலை வேற பார்க்க வேணுமா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“சும்மா போ... நேரிலை ஒரு றியலிட்டி இருக்கும்...”

“சினிமா என்றதே கற்பனை. இதுல சினிமாக்காறியோட றியலிட்டிவ்வ என்னத்த பாக்கிறது?”

“விருப்பம் இல்லெண்டால் விடன். அதுக்கேன் கனக்கயா கதைக்கிறாய்?” என்று என்னில கோபம் கொண்டாள் சக்கரக்கட்டி.

யாருடனோ எப்படியோ கஷ்டப்பட்டு பானுப்பிரியாவின் குலுக்கல் நடனத்தை பார்த்து விட்டாள் சக்கரக்கட்டி.

ஒரு நாள் முழுவதாய் பானுப்பிரியா பற்றிய கதையாகவே இருந்தது. போதாக் குறைக்கு அவள் தங்கியிருந்த அறைக்குப் போய் “ஓட்டோ கிராப்” கூட வாங்கினாளாம் என்று என்னிடம் காட்டி பெருமை பொங்கினாள்.

பானுப்பிரியாவின் கை எழுத்து அழகாகத்தான் இருந்தது. அவளுடைய கண் மாதிரியே குண்டு குண்டாக இருந்தது. இதை வைத்துக் கொண்டு இந்த சக்கரக்கட்டி என்ன செய்யப் போகின்றாளோ தெரியவில்லை. கேட்க வேண்டும் போல் இருந்தது. கேட்டால் அப்படி இப்படி என்று எதுவும் சொல்வாள். பிரபல்யங்களின் வெறும் கை எழுத்தால் என்னவாகும் என்று “ஓட்டோ கிராப்” வாங்குகின்ற யாருக்குத்தான் தெரியும்?

எழுதுவது போல் படிப்பது போல் இதுவும் சிலநேரம் ஆத்மாவைத் திருப்திப்படுத்தக் கூடுமோ? யார் கண்டது யார் யாருக்கு எது எதுவால் ஆத்ம திருப்தி கிடைக்கின்றது என்று!

அறிய வேண்டும். அறிய முயற்சி செய்தால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையாய் பதில் சொல்லும். ஒன்று ‘ஞாபகத்துக்கு’ என்று சொல்லும். இன்னொன்று ‘கலக்ஷன்’ என்று பெருமைப்படும். மற்றயது எல்லாரும் வாங்குகிறார்கள் அதுதான் நானும்... என்று இழுக்கும். வரிசைப்படுத்தினால் ஒன்றுக்கும் சரியான தெளிவான நிலையான கருத்து இல்லாது இருக்கும். பயித்தியக்காரக் கூட்டங்கள்.

பானுப்பிரியாவோட அண்ணனும் வந்திருந்தான். ஆள் அவ்வளவு வடிவு இல்லை. என்னவோ ஒரு படத்திலையும் நடிச்சானாம். வாக்குமூலமோ என்னவோ எண்டாங்கள்.

சக்கரக்கட்டியின் பேச்சு இம்சையாய் பட்டது.

நீ என்னென்ன சொன்னாலும் கவிதை என்பது பெண்ணை நெருங்கும் வரைதான் உண்மையாய் தெரியும். இயல்புகளுடன் ஒத்துவராத போது எங்கெங்கு தொட்டாலும் மயிர்க்கொட்டி புழுவின் தீண்டலாய் போகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"செந்தாழம் பூவுக்கு
முள் ஒன்றும் குறையில்லை
உள் ஒன்று வைத்தாலும்
உன் மீது குறையில்லை."

வைரமுத்து உளறியிருக்கின்றார். தூரக் கவர்ச்சிக்கு இது உண்மையாய் படும் என்பது உண்மைதான்.

இயல்புகள் ஒத்துவராத பெண்ணுடன் கலவி கூட வைத்துக் கொள்ளல் முடியாது. இயல்புகள் ஒத்துவராத இருவர் உடல் இணைந்தால் அது கூட விபச்சாரம்தான்.

கலவி கூட கவிதையானது. ஒத்த இயல்புகளை, குணாதிசயங்களைக் கொண்ட இருவரின் கலவி கவிதையானது. மற்றெல்லாம் விபச்சாரம். உடம்பு பசியில் அவசரமாய் இருட்டில் இணைகின்ற விபச்சாரம்.

"பானுப்பிரியாவுக்கு சாரி வடிவாய் இருக்குமா? இல்லாட்டி மொடன் டிறஸ் வடிவா இருக்குமா?"

கேட்ட சக்கரக்கட்டி மேல் ஆத்திரமும் அருவருப்பும் சம அளவில் வந்தது. ஒரு மனுஷியாகப்பட்டவளுக்கு எத்தனையோ கேள்வி எழலாம். வாழ்க்கை பற்றி உறவுகள் பற்றி, குடும்பம் பற்றி, சமூகம் பற்றி, கலை பற்றி, அரசியல் பற்றி. எவ்வளவோ சர்ச்சை எழலாம். பானுப்பிரியாவுக்கு எந்த ஆடை அழகென்று ஓர் சர்ச்சை இந்தப் பெண்ணிடம்.

"ஏன் சக்கரக்கட்டி நம்மட நாட்டில எவ்வளவோ பிள்ளையல் மாத்தி உடுக்க ஒரு உடுப்பில்லாமல் கூட அல்லாடுதுகள். கிளிநொச்சியில் ஒரே உடுப்ப ஒரே குடும்பம் மாத்தி மாத்தி உடுத்துதுகளாம். சனம் கற்காலத்துக்கே போய்க் கொண்டிருக்கு. இதுகளைப் பற்றியெல்லாம் உனக்கு கவலையில்லை. பானுப்பிரியாவுக்கு எந்த உடுப்பு வடிவா இருக்கும் என்றதா கவலை. அவளுக்கு எந்த உடுப்பு வடிவாய் இருந்தால் உனக்கென்ன?"

"அது அவைய அவைய செஞ்ச பாவக் கறுமம். அதுக்கு என்ன செய்ய ஏலும். எனக்கு பானுப்பிரியாதான் முக்கியம்."

ஈஸ்வரா... இது என்ன கொடுமை. இங்கு யார் பிழை விடுகின்றார்கள்? நீயா... அல்லது இந்த மானிடர்களா? யுத்த பூமி பாவக் கறுமங்களின் எச்சமா? முட்டாளாக இருப்பது பாவம் இல்லை. சிந்தனை வரட்சிகூட பாவம் இல்லை. சிந்திக்க மறுப்பது மகாபாவம். இறைவரே உன் மீது குற்றமில்லை. இது சிந்திக்க மறுப்பவர் குற்றம். சக்கரக்கட்டி மேல் கோபம் வர மறுத்தது.

"ஒரு மனுஷியா இருந்து ஐதார்த்தமா சிந்திக்க மாட்டியா? கஷ்டப்படுகிற சனத்த விட, காட்டிப் பிழைக்கிற ப்ராஸ்டிட்டியூட்தான் உனக்கு கண்ணுக்கு தெரியுதா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

“என்ன நீ பானுப்பிரியாவ ப்ராஸ்டிட்டியூட் எண்டே சொல்றாய்?”

“பொதுவாய் சொல்றன்...”

“என்ன பெரிய பொது”

“ச்சே... உன்னோட ஸ்நேகம் வச்சிருக்க... வேண்டாம்... எல்லாம் என்ர பிழை... உனக்கு விளங்காது... விடு...!”

“எத விட...? எது எனக்கு விளங்காது...?”

“எல்லாம்... மனிதம்... காதல், கலவி, உறவு ஒரு மண்ணும் உனக்கு விளங்காது...?”

“ஏன் எனக்கு விளங்காது. எனக்கு எல்லாம் விளங்கும்..”

“சரி விடு”

“விட ஏலாது...”

ஆனால் நான் விட்டுவிட்டேன். அவள் உறவை விட்டுவிட்டேன்.

சக்கரக்கட்டி புறம் தள்ளப்பட்டு விட்டாள். எந்த ஒரு அகாலப் பொழுதிலும் எனக்கவள் விரோதியாகப்பட்டாள். ஆயினும் கூட எனக்கும் அவளுக்குமான உறவு முறிக்கப்பட்டு பதின்நான்கு நாளும் ஐந்து மணித்தியாலங்களும் இருபத்திஇரண்டு நிமிடங்களும் ஆகிவிட்டது. இனி ஒருபோதும் அவளுக்கும் எனக்குமென உறவு...

பின் குறிப்பு-

நேற்று முன்தினம் தென்னமெரிக்காவுக்கு தேனிலவுக்குச் சென்றுவிட்டாள் கணவனுடன்.

❑

மஞ்சரி - 1993



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ...அதன் இரண்டாம் பாகமும்

மனிதம் முற்று முழுதாய் நாகரீகம் அடைந்து விட்டதாக ஐயம் திரிபுற நம்பப்பட்ட காலகட்டம். இக்காலகட்டத்தில் தான் தலைவன் துரோகியானதும் - எதிரி ஸ்நேகிக்கப்பட்டதும் இக்காலகட்டத்தில்தான்.
அரசியல் காய் நகர்வுகளினால் மனிதம் சில சமயம் காயம்பட்டாலும் பாரதூரமாய் எதுவும் ஆகிவிடவில்லை. மனித உரிமை அமைப்புகள் ஆங்காங்கே தோன்றியதைத் தவிர. அசுரர்கள் ரகமாய் மலிந்து மனிதத்தை நசுக்க முற்படும் பொழுதுகளில் மனித உரிமை அமைப்புகள் நசியும் மனிதத்தைக் காக்கத்தவறும் பட்சத்தில் கடவுள்கள் ஆயுதங்களுடன் அவதரிப்பர். அங்கும் இங்கும்-மூக்கிலும் மூலையிலும் - சந்திலும் பொந்திலும் - தூணிலும் துரும்பிலும் - குடிசையிலும் கூரையிலும் - எங்கும் எங்கும் ஆயுதம் தரித்த கடவுள்கள் ஏகமாய் அவதரித்தனர். இக்காலகட்டத்தில்தான் சித்தாந்திகளின் ஆசீர்வாதம் பெற்ற நான் நசியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனிதத்தை மீட்க ஆயுதம் அணிந்து அவதரித்தேன். அண்டம் கிடுகிடுங்க - ஆகாசம் நடுநடுங்க ஆயுத தாண்டவம் ஆர்ப்பரித்தது. ஒன்றாகி பலவாகி நூறாகி ஆயிரமாயிரமாகி அழிந்தொழிந்தனர். அரக்கர்கள்... ஆயினும் மானுடம் நசிவதை தடுத்திட முடியவில்லை.

ஆயுதம் மானுடத்தின் விரோதி - அது ஒருபோதும் மானுடத்துக்கு மீட்சி கொடுப்பதன்று. ஆயுதமும் மானுடமும் முரண்பாடானவை. தொடர்பு நிலையற்றவை. ஆயிரம் தாண்டிய உயிர்கள் அழிந்த பிற்பாடு தெளிவுநிலை அடைகிறது புத்தி. ஆயுதம் மானிடத்தை மீட்கும் என்பது முட்டாள்தனம்.

'துப்பாக்கி முனையில்தான் சுபீட்சம் பிறக்கும்' என்னும் அர்த்தத்தில் சித்தாந்திகள் சொன்னார்களே. சித்தாந்திகள் புத்திசாலிகள் அல்லவா. மேதாவிகளிடம்தானே சித்தாந்தமே பிறக்கிறது. என்னவோ துப்பாக்கி முனையில் உயிர் பறிக்கும் ரவைகள்தான் பிறக்கும் உயிர்களை கொல்வதைத் தவிர வேறு என்ன தெரியும் துப்பாக்கிக்கு?

மானுடம் மீட்க துப்பாக்கி என்பது எத்தனை பெரிய முட்டாள்தனம். அப்படியாயின் சித்தாந்திகள் புத்தியற்றவர்களா? அவர்கள் எப்படியோ போகட்டும். மானுடம் மீட்க ஆயுதம் அணிந்த நான் முட்டாளா புத்திசாலியா? சித்தாந்தி என உணர்கின்ற நேரத்தில் முட்டாளாகவும் - முட்டாள் என உணர்கின்ற நேரத்தில் மனிதனாகவும் தெளிவுறும் தத்துவார்த்தமா?

எது எப்படியோ முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌகரியம் இருக்கிறது. கேள்விகள் ஒரு போதும் இல்லை.

காத்தான்குடியைக் கொழுத்து - சரி
எல்லா சோனகனையும் துரத்து - சரி
மக்காவுக்கு போறவனை ஒரேயடியாய் மக்காவுக்கு அனுப்பு - சரி
தொழும் நேரம் வெட்டிக் கொல் - சரி

எல்லா பதில்களும் திருப்தி கொடுக்கும்.

நம் மொழி தமிழ், நாம் தமிழர்கள் - ஆமாம்!
அவன் மொழி தமிழ், ஆனால் சோனகன் - ஆமாம்!
நம்சாமி பிள்ளையார், அவன் சாமி அல்லாஹ் - ஆமாம்!
சோனகன் காட்டிக்கொடுக்கிறான். - ஆமாம்!

உண்மைதான் முட்டாளாக இருப்பதில் நிறைய சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது.

கொல் என்றால் கொல்லலாம். கொழுத்தென்றால் கொழுத்தலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரம்பாவின் தொடைகளையும் மந்தாராவின் முலைகளையும் மணிக்கணக்காய் விவாதிக்கலாம். ஐஸ்வரியாராய் முலைகள் சிலிக்கோன் ஜெல்லால் நிரப்பி செதுக்கப்பட்டதா, இல்லையா என்பதை அறிய வாராந்திரிகளை வாயும் தவறாமல் படிக்கலாம்.

டில்லிக்கு அந்தப் பக்கம் பஞ்சாப்பு
அங்க நான் பறிச்சன் றோசாப்பூ
துருவி வச்ச தேங்காய்ப் பூ
நெஞ்சில முளைக்கிது வாழைப்பூ
அக்கா பொண்ணு குஸ்பு
இரண்டுபேருமா பண்ணினம் தப்பு-அவ
திங்கிறா இப்போ மாங்காயோட உப்பு
ஜலக்கு ஜக்கா ஜலக்கு ஜக்கா
அடங் கொக்க மக்கா கொக்க மக்கா...

பாடல்களைக் காது குளிரக் கேட்டு ரசிக்கலாம். கோபம் வராமல் குமுதம் குட்டிக் கதைகளைப் படிக்கலாம். அதிகம் ஏன் மூன்றெழுத்து பூ நடிகையுடன் இத்தனை காலமாய் சரசம் புரிந்த நான்கெழுத்து சுந்தர இயக்குனர்: பூ நடிகையை கைகழுவிவிட்டு மூன்றெழுத்து தொடையழகியான ரம்ப நடிகையுடன் உல்லாச விடுதிகளில் கதை (!) டிஸ்கஸ் செய்கிறார்! என்கிற தின முரசின் கிசுகிசுக்களில் சம்பந்தப்பட்ட நடிகைகளை கண்டு பிடிப்பதற்காய் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளலாம்.

முட்டாளாக இருப்பதில் நிறையவும் சௌகரியம் இருக்கத்தான் செய்கிறது. சே... இப்போதெல்லாம் அநாவசியமென பிறர்க்கு படுகின்ற கேள்விகள் என்னுள் எழுவதும் - அதைக் கேட்பதுவும் பிறர்க்கு பிழையெனப்படுகின்றதோ என்னவோ. நான் தனித்துவிடப்படுவது போன்றும் - தப்பித்து ஓடுவது போன்றும் - இருள்சூழ்ந்த நிலத்தடியில் அடைக்கப்படுவது போன்றும் - என் மூளையை நாய் நக்குவது போன்றும் உண்டாகும் உணர்வலைகளை கட்டுப்படுத்திட முடியாது போகிறது. கொலைகள் அற்ற ஒரு வாரம் சுகமாய் இருந்தது. 'ஆயுதத்தோட ஆளக்காணல்லயே..' என்று கவலைப்பட்டு தேடிக்கொண்டிருப்பானுகள். தேடட்டும்.

"குடல வெள்ளாமைக்கு இல்லாட்டிக்கூட பரவாயில்ல எண்டு போட்டு சக்க கட்டுறத்துக்கு எண்டு கேட்ட ஒடனே மூட்ட மூட்டயா யூரியாவ தூக்கித்தரல்லயா தம்பி நாங்க? காத்தான்குடியில ஊடு பிள்ளயல் இருந்தாலும் வயவாய்க்கால் எல்லாம் ஆத்துக்கு இஞ்சால தானே.. நாங்க ஆரு மெனேய்? காசு கேட்டு நாங்க எப்ப இல்ல எண்டு செல்லிரிக்கம் செல்லுபாப்பம். அறுத்துப் போட்ட வெள்ளாமைய எரக்கமில்லாம கொழுத்திப் போட்டயே... வகித்துப் புள்ளத் தாச்சிய உயிரோட போட்டு பத்தவக்கிர மாதிரி எலவா நீ இந்த சூட்டக் கொழுத்தினது. நீ இப்படி செய்யலாமா?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிசிறு தட்டிய குரலில் அழுகின்ற கண்களுடன் பேசும் சின்னலெவ்வ காக்காவின் வெண்ணிற ஆடைகளில் எல்லாம் திட்டுத்திட்டாய் சாம்பல் அப்பியிருந்தது.

"எனக்கு இந்த விஷயம் தெரியாது காக்கா. நான் ஒரு கிழமையா..."
மனது உறுத்த தயங்கித் தயங்கிச் சொன்னேன்.

"நீ யாழ்பாணத்தில இருந்து எங்கட இனசனத்த தொரத்தி உட்டுத்தாய் அப்ப நான் அவ்வளவா கவலப்படல தம்பி. எண்பத்திநாலாம் ஆண்டு எங்கட ஆடுமாடு எல்லாத்தையும் பத்தாயிரத்துக்கு மேல பழுகாமப் பக்கம் சாச்சித்துப் போய் ஒரு கிலோ ஆட்டுறைச்சி ஒரு ரூபாக்கும் மாட்டுறச்சி அம்பது சதத்துக்கும் நீ விக்கெக்க நாங்க என்னமும் கதைச்சமா தம்பி. ஏன் நீ இப்பிடி செஞ்சி போட்டாய்? விளைஞ்ச வெள்ளாமய சாம்பலாக்கிப் போட்டாயே"
காக்கா கேட்கக் கேட்க மனது பாரமாய்ப் போகிறது எனக்கு. கண்கள் சிவந்தும் வீங்கியும் இருந்தது. நெடுநேரமாய் அழுதிருப்பார் போலும். எனக்கும் கூட மனது பாரமானதால் வெளிக்காட்டிக் கொள்ளாது அழுது கொள்கிறேன். கருகி சாம்பலாகிப் போன சூடுகளில் இருந்து புகை புகைந்து கொண்டு இருந்தது. காற்று சுழன்றடிக்க சாம்பலுடன் சேர்ந்து நெருப்புத் துகழ்களும் மேலெழுந்து பறந்து போயின. இந்தக் கொடுங்காரியத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதை எப்படிப் புரியவைப்பேன் சின்னலெவ்வைக் காக்காவுக்கு? காக்கா விறுவிறுவென எங்கோ வேகமாய்ப் போகிறார். இதுகளிடம் பேசி என்ன ஆகப்போகிறது என நினைத்திருப்பாரோ என்னவோ.

"வெள்ளாம போனாப்போகிது உசிரயாவது காப்பத்துவம்"
என நினைத்துக் கொண்டாரோ என்னவோ.

"இப்பல்லாம் நான் அப்படி இல்ல காக்கா"
என மனது சொல்லச் சொல்லியது. நான் சொன்னால் காக்கா என்ன நம்பவா போகின்றார். வலது தோளில் இயமன் தொங்குகின்றானே.
தோளில் தொங்குவதைக் கழற்றி இருகைகளாலும் பிடித்து முகத்துக்கு நேராக கொண்டுவந்து பார்க்கிறேன். ஜடம்! பாவம் இதற்கு என்ன தெரியும்?

விடியல் சூரியன் கொழுத்த ஆரம்பிக்கும் முன்னதாகவே பிரதேசம் எங்கும் வெகிர் அடித்துக் கொண்டிருந்தது. எத்தனை சூடுகள் எரிந்து சாம்பல் ஆகின என்று கணக்கெடுக்க முடியாதபடி கண் எட்டும் திசையெங்கும் புகைந்து கொண்டு இருந்தது.

எத்தனை தொழிலாளிகளின் உழைப்பு எத்தனை ஆயிரம் வயிறை நிரப்பப் போகும் நெல்மணிகள் எத்தனையோ இலட்சம் மனங்கள் எல்லாமும் ஒரு இரவுக்குள் சாம்பலாகிக்கிடக்கிறது களத்து இருட்டில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன்? நெஞ்செரியும் இந்தத் தீ ஏன்?
எந்த சாமியை எந்த பகவானை குளிர்விக்க இந்த வேள்வி?

“இந்த பொட்டணிக்காக்கா எங்க பொயித்தான் ஒரு கிழமையா? வரிசகாலமும் அதுவுமா? மூத்தவள் பள்ளிக்கு போட்டுப்போற சட்டைக்கு ரெண்டு யார் வெள்ளைப் பப்பிளின் வாங்கி.டலாம் எண்டால் இவனைக் காணல்லயே.. எண்ட கைச்சட்டயும் முதுகால பிரிஞ்சி பொயித்து. புளியந்தீவுக்கு போய் சீத்த வாங்கிறது எண்டால் லேசிப்பட்ட வேலயா?” பொட்டணிக் காக்காவை காணாது அம்மா சலித்துக் கொள்வாள்.

முன்னர் எல்லாம் காத்தான்குடியில் இருந்து பொட்டணியில் துணி புடவைகளை கட்டிக்கொண்டு இருபத்தி ஐந்து மைல்கள் சைக்கிளை ஓட்டிக்கொண்டு அவர்கள் வந்தால்தான் ஏழை அம்மாக்களுக்கு உடுதுணிகள். உடுபுடவைகளுக்காய் அம்மாக்கள் காத்திருக்க-எங்கே போனார்கள் இந்த பொட்டணிக்காக்காக்கள்?

துணிகளையும் சைக்கிளையும் கொன்றவர்கள் எடுத்துக்கொள்ள - மூளை சிதறிய காக்கா அரைகுறையாய் கிரான் குளக்காட்டுக்குள் புதைக்கப்பட்டது எப்படித் தெரியும்?
காத்திருந்து விட்டு அம்மா துணிவாங்க புளியந்தீவு போய் இருப்பாள். உம்மா இப்போதும் காத்திருப்பாளே.

மூணு போகம் வெளஞ்ச ஓடன... ஒண்ட
மூத்த மாமன் கொண்டோடி வருவான்
முன்னூறு சாக்கு நெல்லு
ஆராரோ ஆரிரரோ...
சித்தாண்டி சின்ன மாமன்
ஆண்டி முருகன் தீர்த்தம் கொண்டு
ஓடோடி வருவான்
ஆராரோ ஆரிரரோ...
பாழாப்போன பழுகாமத்தானோட
ஓடிப்போன உன்னோட மாமி
மூத்த மகன உனக்கு கட்டித்தர பாலையடி வட்டைக்க கிடக்க வயலோட உறுதிய
கொண்டோடி வருவான்
ஆராரோ ஆரிவரோ...
....
வட்டானையாரு வயலையெல்லாம் பாப்பாரு
கூத்தாடப் போன உன்னோட
அண்ணனார அண்ணாவியாரு பாப்பாரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பால நீ குடிச்சித்து படுத்துறங்காயோ என்னோட சோனகத்து முட்டாசே...

சோனகத்து முட்டாசைத்தவிர என்னை உவமிக்க வேறு பொருள் கிடைக்கவில்லை அம்மாவுக்கு.
முன்னூறு சாக்கு நெல்மூட்டையைக் காட்டிலும்
சித்தாண்டி முருகன் தீர்த்தத்தைக் காட்டிலும் பாலையடி வெட்டை வயலைக் காட்டிலும்
மாமி வீட்டு மகளைக்காட்டிலும்
கவர்ந்தது என்னவோ சோனத்து முட்டாசிதானே...

சோனகரும் நாங்களும் ஸ்நேகமாகத்தானே இருந்தோம். ஒன்றோடு ஒன்றாய்தானே இருந்தோம். ஒரு மொழிதானே பேசினோம். அவர்கள் அரபும் நாங்கள் சமஸ்கிருதமுமா பேசினோம். இல்லையே... ஒரே பள்ளியில்தானே படித்தோம். சரஸ்வதி பூசைக்கு, இக்பால் வேஸ்டி கட்டி... திருநீறு பூசி கைகூப்பி நின்று

“ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும் ஓய உணர்விக்கும் என் அம்மை” என்று நெஞ்சுருகத்தானே பாடுவான்.

என் புறம் கையில் அருவருப்பாய்த் தோன்றிய உண்ணிகள் உதிர்ந்து போக வேண்டி கல்முனைக் கடற்கரைப் பள்ளி வாசலுக்கு உப்பு தருவதாக நேர்த்திக் கடன் வைத்தாளே அம்மா.

நான் கூட றம்ழான் நோன்பின் இறுதி மாலையில் இக்பால் வீட்டு முற்றத்தில் இருக்கும் கடற்கரையில் நின்று தலையில் துணிகட்டி பிறை நிலா பார்த்திருக்கின்றேனே...

என்ன ஆயிற்று எங்களுக்கு?

கண்கள் கலங்கி வழிந்தன...

அடித்த காற்றில் கண்களுக்குள் சாம்பல் அப்பிக்கொள்ள கசக்கி எரிகிறது கண்கள்.

சாம்பலாகிப் போன கூடுகள் புகைந்து கொண்டிருக்க பற்றி எரிகிறது நெஞ்சம்.

யார்...யார்? யார் இட்ட தீ இது?
இதற்கோர் முற்றுப்புள்ளி வேண்டாமா?
இதுவே கடைசியாக இருக்கட்டுமே. இந்த துவக்கும் வேண்டாம். சித்தாந்திகளின் சித்தாந்தமும் வேண்டாம். சாந்தி வேண்டும். எரியும் தேசத்தில் புற்கள் முளைவிட வேண்டும். பூக்கள் பூத்திட வேண்டும். சாம்பல் மேடெல்லாம் மீண்டும் களத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேடாக வேண்டும்.

துவக்கையும் மூன்று மகசினையும் மேசையில் வைத்தேன். அவர்கள் எல்லோரும் விநோதமாய் என்னைப் பார்த்தார்கள். நான் இறுக்கமாய் நின்றிருந்தேன்.

“வாரும்... ஒரு கிழமையாய் எங்க போன நீர்?”
சுந்தர அம்மானின் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் போல் எனக்குத் தோன்றவில்லை.

“இயக்க கட்டுக்கோப்பை மீறுறதால என்ன விளைவு ஏற்படும் என்று உனக்குத் தெரியும்தானே..?”
சுந்தர அம்மானை வெறுப்பாய்ப் பார்த்தேன். ஒன்றரை வருடம் தான் யாழ்பாணத்தில் இருந்தார். ஒட்டிக்கொண்ட பிறதேச தமிழை அவரால் கழற்ற முடியவில்லை.

“முஸ்லீம் சனத்தின்ர சூட்டுக்கு ஆரு நெருப்பு வச்சது?”
கோபமாய்க் கேட்ட என்னை... விழிகளை மட்டும் உயர்த்தி மேற்பார்வை பார்த்து, இதமாய் ஒருவித வீரக்களிப்பாய் புன்னகைத்தார். பின் உடல் முழுவதும் அசைய தலையை மேலும் கீழுமாய் ஆட்டி உடல் மொழி பேசினார். அவரது உடல்மொழி எனக்குப் புரியவில்லை என நினைத்தாரோ என்னவோ

“நான்தான்! நேற்று இரவு. மொத்தம் ஐம்பத்திமூணு. எல்லாம் சாம்பல். அது சரி ஒரு கிழமையா எங்க போன நீர்?” என்றார் வாய் மொழியாய்.

“......”
சிறு விநாடி இடைவெளிக்குள் மௌனமாகி எனைப் பார்த்தார். பின்

“எத்தனை தரம் அவையளுக்கு கடிதம் அனுப்பினாங்கள். இந்தப் பக்கம் தொழில் செய்யப்போடாது எண்டு. இனி வரமாட்டாங்கள்.”
சொல்லி முடிக்கும்போது நிதானமாகி இருந்தார்.

“அதுக்கு நெல்லுச் சூட்டுக்கா நெருப்பு வைக்கிறது? நமக்கு மாதிரி அவனுகளுக்கும் இதுதான் பாரம்பரிய மண்.”
என்னில் ஆத்திரம் தணியவில்லை.

“போராட்டம் எண்டு வந்த பிறகு நெல் என்ன சோனி என்ன? நம்மளின்ர பாதைக்க குறுக்க வந்தால்..? அது என்ன ஒரு மாதிரியா கதைக்கிறீர். மேலிடத்தில் இருந்து இரண்டுபேர் வந்திருக்கினம்.. தெரியுமா உமக்கு”
சுந்தர அம்மான் சொல்ல நெஞ்சுக்குள் திக்கென்றது.

“எதுக்கு இப்ப. இஞ்ச... மேலிடத்தில இருந்து..”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

..... சுருக்கிக் கொண்டேன்.

“நம்மளோட வேகம் காணாமல் இருக்குதாம். வடக்கு மாதிரி கிழக்கில நடவடிக்கை அவ்வளவு திருப்தியா இல்லையாம். சோனிமாரோட நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி சில ஒப்புரேசன் செய்ய வேணுமாம்.”
சுந்தர அம்மான் சொல்லச் சொல்ல திகில் பற்றி எரிந்தது இதயத்துக்குள்.

சிங்களவன்: சிறுபான்மையான எம்மை இம்சிக்க - நமக்கு சிறுபான்மையான சோனகரை நாம் இம்சிப்பதா?
சிங்களவன் மோடன் எனில்: நாம் யார்?

யுத்தத்தை நாம் விரும்பவில்லை. யுத்தம் எம்மீது திணிக்கப்படும் போது.. நாம் ஆயுதம் ஏந்தி அதற்கு எதிராய் போராடாமல் இருப்போமாயின் அது எம் இனத்துக்கு செய்கின்ற துரோகமாகிவிடும். என நாளை ஒரு இஸ்லாமியர் குழந்தைகளின் கவச அரண்களுக்குள் இருந்து கொண்டு அறிக்கை விட ஆரம்பித்து விட்டால்..? தாங்குமா தாய் மண்? சாம்பலுக்குத்தான் தேசமா?

“முஸ்லீம் சனத்தோட இன்னும் இன்னும் பிரச்சனையை வளர்க்க நான் விரும்பவில்லை... எண்பத்திமூணுக்கு முதல் ஒழுங்காத்தானே இருந்தம். இப்ப என்ன வந்திட்டுது நமக்கு?”

“அப்ப நாமள் மடையரா இருந்திட்டம்.”
எட்டத்தில் சத்தம் கேட்டது. புதிய குரல். வடதிசையில் இருந்து கிழக்கை துரிதப்படுத்தவும் முஸ்லீம்களுக்கு ஒப்புரேசன் செய்வதற்காகவும் வந்தவர்களில் ஒருவர் போலும்.

சத்தம் கேட்டு - ஒரு மௌன இடைவெளியின் பின் இருவர் வந்து என் முன் நின்றனர். தலையை ஆட்டி: கண்களில் குரோதமும் உதட்டில் புன்னகையுமாய் அறிமுகமாக்கிக் கொண்டனர். அதே பாசையில் நானும் அறிமுகத்தை ஏற்றுக் கொண்டேன். பலத்த காற்று அடித்துக்கொண்டிருந்தது. தென்னை தலைவிரித்து ஆடுகின்ற சத்தம் பேயோசையாய்க் கேட்டது. இந்நேரம் எரிந்த சூடுகளின் சாம்பல் திசை கெட்டு பரவிப் பரந்து கொண்டிருக்கும் பிரதேசம் எங்கும்.

“மன்னார் பள்ளிவாசல் ஞாபகம் இருக்குத்தானே.. இவர்தான்!”
சுந்தர அம்மான் ஒருவரை காட்டி பெருமைப்பட்டுக் கொண்டார்.

அந்த ஒருவர்

“நீங்கள்தானாமே அம்பிளாந்துறை சந்தியில வச்சி மக்காவுக்குப் போன மௌலவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாரை...'' என்றார். நான் தலைகுனிந்து கொண்டேன். வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லை அதைத்தவிர.

''யாழ்ப்பாணத்தில இருந்து சோனகச் சனத்த துரத்தின நாளான வார வெள்ளிக்கிழமை இஷாத் தொழுகை முடிய கண்டனம் கலந்த அனுதாபக் கூட்டம் நடத்தப் போறாங்களாம். உங்களுக்கு காத்தான்குடியில இருக்கிற மூலை முடுக்கெல்லாம் நல்லாத் தெரியுமாமே..?''
அந்த ஒருவர் பேசிக்கொண்டே இருக்க தலை சுற்றுவது போன்றும் இதயம் எகிறிக் குதிப்பது போலும் இருந்தது.
நெடுநேரம் மௌனித்திருந்தேன். என் மௌனம் அவர்களை எதுவேனும் செய்திருக்க வேண்டும்.

''ஏன் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறீர்?''

''முஸ்லீம் சனத்தோட இனியும் பிரச்சனைப் பட்டுக்கொண்டிருக்க எனக்கு விருப்பம் இல்ல. அதுகள் நமக்கு என்ன செய்யுதுகள்?''
அவர் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்த்தார். என்மேல் வெறுப்பாரோ என்னவோ..

''நீர் விஷயம் எதுவும் தெரியாத ஆளா? அவங்களாலதானே யாழ்ப்பாணத்துக் குள்ள...
தமிழன காட்டிக் குடுக்கிறவன் பாடம் படிக்க வேணும்.''
சற்று கோபமாகத்தான் இருந்தார்.

''ஏன், சோனகன் மட்டும்தான் காட்டிக் கொடுத்தானா? யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கல்லயா?''
நான் கூட கோபமானேன்.
விழி விரித்தார்... புருவம் உயர்த்தினார்.

''யாழ்ப்பாணத்தான் காட்டிக் குடுக்கிறானா? ஆதாரம் இல்லாமல் கதைக்காதேயும்''
அவர் கேட்க வேறுதிசையில் நான் முகத்தை திருப்பிக்கொண்டேன்.
அவருக்கு புரையேறியது- கனநேரம் ஆடிப்போய் நிதானமானார்.

''அதுதான் அவங்களயெல்லாம் தட்டியாச்சே..''
சமாதானம் ஆனார். ஆனாலும் வியர்த்திருந்தார். சுந்தரத்தாருக்கு என்ன பேசுவது என்றோ எது செய்வது என்றோ எதுவும் தோன்றாது திணறிக் கொண்டிருந்தார். நான் நிதானமாய் சுவாசித்துக் கொண்டிருந்தேன். காலம் நல்லதாய்ப் போயிற்று த.செல்வாவிற்கு. நாங்கள் பிறந்த உடனே அவர் செத்துப்போனார். யார் கண்டது இன்றவர் இருந்திருப்பின் அவர் கூட துரோகியாக இருப்பார்...

''அதுமாதிரி காட்டி குடுக்கிற முஸ்லீம் சனத்த புடிச்சி வச்சி மண்டையில போட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டியது தானே. அத விட்டுப்போட்டு ஊரைவிட்டுத் துரத்தினதும், பள்ளிவாசலுக்குள் பூந்து வெட்டிக் கொல்லுறதும் என்ன வேலை? தமிழனுக்கு ஒரு நியாயம் சோனகருக்கு ஒரு நியாயமா? அல்பிரட் துரையப்பா காட்டிக் கொடுத்தான் எண்டு தானே கொண்டம். எல்லாக் கத்தோலிக்கரையும் ஏன் அப்பவே யாழ்ப்பாணத்த விட்டுத் துரத்தயில்ல? எனக்கு உங்களோடை இந்த யாழ்பாண இசம் என்ன எண்டு விளங்கயில்லை. எவ்வளவோ அநியாயம் நடந்தும் ஒரு சோனகரும் நாட்ட விட்டு ஓடயில்ல. ஏன் சிங்கள ஊருக்க கூட போகயில்ல. சுத்தி சுத்தி இந்த தமிழ் மண்ணுக்கதான் திரியுதுகள். ஆனா யாழ்பாண ஆக்கள் அப்படியா? அந்தக் காலத்திலேயே எரிச்சுப் போட்டான்கள் நூலகத்த எரிச்சுப்போட்டான்கள் என்று சொல்லி சொல்லி யாழ்ப்பாணத்த விட்டு ஓடிப்போய் எத்தினை பேர் யூரோப்பில பணக்காரர் ஆயிட்டாங்கள். இவ்வளவு பிரச்சனை நடந்தும் இன்னும் ஒரு சோனகனும் நாட்ட விட்டு ஓடயில்ல. நம்மள விட சோனகச்சனத்துக்குத் தான் தமிழ் மண்ணுல பற்று மாதிரி தெரியிது"

சொல்லி முடிக்கும் போது உடல் எங்கும் எனக்குக் கூட வியர்த்திருந்தது. அவர்கள் நான் சொல்வதை மிக நிதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நெடு விநாடி மௌனத்தின் பின் கொடுப்புக்குள் புன்னகைத்துக் கொண்டார்.

"நீர் வெளிநாட்டில இருக்கிற சனத்த குற்றம் சொல்லாதேயும். அவங்கள் தாற காசில தான் இண்டைக்கு சண்டையே நடக்கிறது.." என்றார்.
பெருவிடயம் ஒன்றை எனக்கு புரியவைத்து விட்டோம் என பெருமிதப்பட்டுக் கொள்கின்றார் என்பது அவர்களில் தெரிந்தது.

எனக்கு பலமாய் சிரிக்க வேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் புன்னகைத்துக் கொண்டேன்.

"வெளிநாட்டில இருக்கிறவன் காசு தரத்தானே வேணும், சண்டை நடத்துறதுக்கு. இலங்கையில சண்டை நடந்தால்தானே வெளிநாட்டில அவங்கள் பிழைப்பு நடத்த முடியும். இங்க சமாதானம் வந்திட்டால் அவயலோட சொகுசு வாழ்க்கை அங்க நாறிடுமே. ஒட்டுமொத்தமா எல்லாரையும் கப்பல் ஏத்தி விட்டுருவாங்கள் வெள்ளக்காரனுகள். இலங்கையில சண்டை முடிய வெளிநாட்டுத் தமிழன் விரும்ப மாட்டான். சண்டை நடத்த கட்டாயம் காசு தருவான்கள்தான்."

என்பேச்சு அவங்களை கோபப்படுத்தி விட்டதுபோலும். இதுவரையும் எதுவும் பேசாமல் நின்றிருந்த மற்ற ஒருவர் என்னை விரோதியாவும் விநோதமாயும் பார்த்தார்.

"நீர் என்ன எடுத்ததுக்கெல்லாம் விதண்டாவாதம் பேசிக்கொண்டு. நீர் சத்தியபிரமாணம் எடுத்தது ஞாபகம் இருக்கோ..."
அந்த ஆள் சொல்ல.. மண்டை விறைத்தது. மூளை பழையபடி கழுவப்பட்டு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிர்மலமாயிற்று. சத்தியப்பிரமாணம் ஞாபகம் இருக்கிறது. ஞாபகம் இருக்கிறது இருக்கிறது.

என் ஈ........
 தேசத்துக்காகவும்...........
..................தேசிய
....உயிரையும்............
...விடுதலை வேள்வியில்...
....என்னை நானே...
...உயிராயுதம்...
....தாகம்... தாயகம்!

விட்டுவிட்டு மண்டைக்குள் ஓங்காரம் ஒலித்தது. பிற சிந்தனைகள் எதுவும் என் மூளைக்குள் புகக்கூடாது. நான் என் தேசத்துக்காகவும் அதன் விடுதலைக்காகவும் படைக்கப்பட்டேன். என் உடல், உயிர் சகலமும் சகலமும் என் தேசத்துக்கே தேசத்துக்கே..
மூளை வியூகம் வகுக்கத் தொடங்கியது...




❑

எக்ஸில்-2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Sakkaravarththi vit au Canada.
Nous publions dix de ses nouvelles rédigés en langue tamoule qui critiquent sévèrement les cruautés de la guerre et défendent avec acharnement le droit de l'homme.

EXIL (Exil Idée Littérature)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிணங்களை ஒதுக்கி
முடியாத வேளையில்
மிதித்தே முன்னேறினேன்...

மனிதம் நசுங்கித் தொலைந்தது!



எக்ஸில் வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்